# சந்தானகுரவர் வரலாறு.

ஸ்ரீகண்டபரமசிவன் திருக்கைலாசமலையினடுவே சுத்தமாயாசொரூபமாகிய கல்லாலமர நிழலின்கண்ணே சுத்தவித்தியாமயமாகிய மந்திரசிங்காசனத்தின்மேலே தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருந்து, தம்முடைய மாணாக்கராகிய திருநந்திதேவருக்கு, சிவாகமங்கள் இருபத்தெட்டினுள் ஒன்றாகிய ரௌரவாகமத்திலே பாவவிமோசனபடலத்திலே சர்வாகமசாரமாய் விளங்காநின்ற பன்னிரண்டு சூத்திரத்தைச் சிவஞானபோதம் எனப் பெயர் தந்து உபதேசித்து, அதன்பொருளையும் போதித்தருளினார். அதனைத் திருநந்திதேவர் சனற்குமாரமகாமுனிவருக்கு அருளிச்செய்ய, அவர் சத்தியஞானதரிசனிகளுக்கு அருளிச்செய்ய, அவர் பரஞ்சோதிமகாமுனிவருக்கு அருளிச்செய்தார்.

பரஞ்சோதிமகாமுனிவர் கிருபாவசத்தினாலே திருக்கைலாசமலையினின்று நீங்கித் தமிழ்நாட்டிற்கு எழுந்தருளிவந்து, திருப்பெண்ணாகடத்திலே வேளாளகுலத்திலே ஸாம்பவிதத்தராய்த் * திருவவதாரஞ்செய்து திருவெண்ணெய்நல்லூரில் நன்மாமனார் வீ[illegible]ழுந்தருளியிருந்த இரண்டுபிராயத்தையுடைய சுவேத[illegible]மாளுக்குச் சிவதீக்ஷை செய்து, மெய்கண்டதேவர் என்னுந் திருநாமத்தைக் கொடுத்து, அச்சிவஞானபோதத்தை உபதேசித்தருளினார்.

மெய்கண்டதேவர் அச்சிவஞானபோதத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வார்த்திகம் என்னும் பொழிப்புரை செய்து, தம்முடைய மாணாக்கர்கள் நாற்பத்தொன்பதின்மர்களுக்கும் உபதேசித்தருளினார்.

* ஸாம்பவிதத்தராவார் முற்பிறப்பிலே சரியை கிரியை யோகங்களைச் செய்து நிர்மலாந்தக்கரணராகி மீளப் பிறக்கும்பொழுது அந்த ஞானத்தோடு பிறந்து சிட்டாவ[illegible]ன்னுவோர்.

அம்மாணாக்கர்களுள்ளே தலை மாணாக்கரும், திருத்துறையூரிலே திருவவதாரஞ் செய்தருளிய ஆதிசைவரும், சகலாகமபண்டிதர் என்னும் காரணப்பெயரை உடையவருமாகிய அருணந்திசிவாசாரியர், சிவஞானசித்தியார் இருபாவிருபது என்னும் சைவசித்தாந்தசாத்திரங்களைச் செய்து, அவைகளையும் சிவஞானபோதத்தையும், திருப்பெண்ணாகடத்திலே பிராமணகுலத்திலே திருவவதாரஞ்செய்த மறைஞானசம்பந்தசிவாசாரியருக்கு உபதேசித்தருளினார்.

மெய்கண்டதேவர் மாணாக்கர்களுள்ளே திருவதிகை மனவாசகங்கடந்தார் உண்மைவிளக்கம் என்னுஞ் சைவசித்தாந்த சாத்திரத்தை இயற்றியருளினார்.

மறைஞானசம்பந்த சிவாசாரியர் சிதம்பரத்தைச் சார்ந்த திருக்களாஞ்சேரியில் எழுந்தருளியிருந்துகொண்டு, தில்லைவாழந்தணர்களுள் ஒருவராகிய உமாபதிசிவாசாரியருக்கு உபதேசித்தருளினார்.

உமாபதிசிவாசாரியர் சிதம்பரத்தைச் சார்ந்த கொற்றவன்குடியில் எழுந்தருளியிருந்துகொண்டு, வடமொழியிலே பௌட்கராகமத்துக்கு வியாக்கியானத்தையும், தமிழிலே சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம் என்னுஞ் சைவசித்தாந்தசாத்திரங்களையும், கோயிற்புராணம், திருத்தொண்டர் புராணசாரம், திருமுறை கண்டபுராணம், சேக்கிழார்புராணம், திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவை என்னும் பிரபந்தங்களையுஞ் செய்தருளினார்.

உமாபதிசிவாசாரியர் அருணமச்சிவாயதேசிகர் முதலிய மாணாக்கர்களுக்கு உபதேசித்தருளினார். அன்றியும், சபாநாயகர் விடுத்தருளிய "அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங் - குடியாற் கெழுதியகைச் சீட்டுப் - படியின்மிசைப் - பெற்றான்

சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து - முத்தி கொடுக்க முறை'' என்னுந் திருமுகத்தைப் பெற்றுககொண்டு, பெற்றான் சாம்பானுக்கு உடனே முத்திகொடுத்தருளினார். பின்பு அப் பெற்றான்சாம்பானுடைய மனைவியும் அரசன் முதலாயினோருங் காண அதனுண்மையை வெளிப்படுத்தி அவர்கள் ஐயத்தை ஒழித்தற்பொருட்டு முள்ளிச்செடிக்கு முத்திகொடுத்தருளினார்.

உமாபதிசிவாசாரியர் சங்கற்பநிராகரணஞ் செய்தருளிய காலம் சாலிவாகனசகாப்தம் ௧௨௩௬.

சிதம்பரமான்மியத்தின் வழித்தாக அருளிச்செயப்பட்ட கோயிற்புராணம் அரங்கேற்றப்படாது பேடகத்துள் இருந்த பொழுது, சபாநாயகர் தில்லைவாழந்தணர்களுக்குச் சொப்பனத் திலே தோன்றி 'நாம் கொற்றவன்குடி உமாபதியுடைய பேடகத் துள் இருக்கின்றோம்'' என்று திருவாய்மலர்ந்தருளினார். அத னைத் தில்லைவாழந்தணர்கள் உமாபதிசிவாசாரியருக்கு விண்ணப் பஞ்செய்ய, அவர் கோயிற்புராணத்தைச் சபாநாயகர்சந்நிதியில் அரங்கேற்றியருளினார்.

மெய்கண்டதேவர் பரிபூரணதசை அடைந்த தலம் திரு வெண்ணெய்நல்லூர்.

அருணந்திசிவாசாரியர் பரிபூரணதசை அடைந்த தலம் திருத்துறையூர்.

மறைஞானசம்பந்தசிவாசாரியர் பரிபூரணதசை அடைந்த தலம் திருக்களாஞ்சேரி.

உமாபதிசிவாசாரியர் பரிபூரணதசை அடைந்த தலம் கொற் றவன்குடி.

## சந்தானகுரவர் நால்வர் திருநக்ஷத்திரம்.

சித்திரை யத்த முமாபதி யாவணித் திங்கட்டனி
லுத்திரஞ் சீர்கொண் மறைஞான சம்பந்த ரோதுகன்னிச்
சுத்தமெய்ப் பூர மருணந்தி யைப்பசிச் சோதிதனில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

---

## சருக்கவகராதி.


| சருக்கம். | பக்கம். |
| --- | --- |
| இரணியவன்மச்சருக்கம் ... ... | கசஉ |
| திருவிழாச்சருக்கம் ... ... ... | உகரு |
| நடராசச்சருக்கம் ... ... ... | க0௬ |
| பதஞ்சலிச்சருக்கம். ... ... ... | ச௬ |
| பாயிரம் ... ... ... ... ... | உ |
| வியாக்கிரபாதச்சருக்கம் ... ... | உ0 |

# சிதம்பர தசதீர்த்தம்.

க. சிவகங்கை — இது கனகசபைக்கு வடக்கே உள்ளது.

உ. குய்யதீர்த்தம்—இது திருக்கோயிலுக்கு வடகிழக்கே உள்ள சமுத்திரத்திற பாசமறுத்த துறை.

ங. புலிமடு—இது திருககோயிலுக்குத தெற்கே உள்ளது.

ச. வியாக்கிரபாததீர்த்தம்—இது திருக்கோயிலுக்கு மேற்கே திருப்புலீச்சுரததுக்கு எதிரே உள்ளது. இது இளமை நாயனார்குளம் எனவும் பெயர் பெறும்.

ரு. அனந்ததீர்த்தம்—இது திருக்கோயிலுக்கு மேற்கே திருவனந்தேச்சுரததுக்கு முனனுள்ளது.

சா. நாகசேரி—இது திருவனந்தேச்சுரத்துக்கு மேற்கே உள்ளது.

எ. பிரமதீர்த்தம்—இது திருக்கோயிலுக்கு வடமேற்கே திருக்களாஞ்சேரியில உள்ளது.

அ. சிவப்பிரியை—இது திருக்கோயிலுக்கு வடக்கே பிரமசாமுண்டி கோயிலுக்கு முன்னே உள்ளது.

கூ. திருப்பாற்கடல்—இது சிவப்பிரியைக்குத் தென்கிழக்கே உள்ளது.

க0. பரமானந்தகூபம்—இது கனகசபைக்குக் கிழக்கே உள்ளது.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# கோயிற்புராணம்

## மூலமுமுரையும்.

பொற்ப தப்பொது வார்புலி யூர்ப்புகழ்
சொற்ப தப்பொரு ளாகுவ தூயவ
ரற்ப கற்றொழ வாழணி கோபுரக்
கற்ப கத்தனி யானை கழல்களே.

இதன்பொருள். பொற் பதப் பொது ஆர் புலியூர் புகழ் சொற் பதப் பொருள் ஆகுவ - பொன்னாலாகிய ஒளியையுடைய சபை பொருந்திய சிதம்பரத்தைப் புகழும் புராணத்துக்குப் பதங்கடோறும் பொருளாய் நிகழ்வன—தூயவர் அற்பகல் தொழ அணி கோபுரம் வாழ் கற்பகத் தனி யானை கழல்களே - (சித்த) சுத்தியையுடைய அடியார்கள் இரவும் பகலும் வணங்க அலங்கரிக்கப்பட்ட (மேலைக்) கோபுரத்தின்கண் எழுந்தருளியிருக்கும் கற்பகவிநாயகராகிய ஒப்பில்லாத யானைமுகக்கடவுளுடைய திருவடிகளேயாம் என்றவாறு.

பதம் முன்னையது ஒளி, பின்னையது சொல். சொல்லென்பது இங்கே புராணத்துக்கு ஆகுபெயராய் நின்றது.

## பாயிரம்.

பூங்கமலத் தயனுமலர் புண்டரிகக் கண்ணனுந்
தாங்குபல புவனமுமேற் சகலமுமா யகலாத
வோங்குமொளி வெளியேநின் றுலகுதொழ நடமாடுந்
தேங்கமழும் பொழிற்றில்லைத் திருச்சிற்றம் பலம்போற்றி.

இ - ள். பூங்கமலத்து அயனும் அலர் புண்டரிகக்கண்ணனும் தாங்கு பல புவனமும் - பொலிவாகிய தாமரைமலரில் இருக்கும் பிரமதேவராலும் அலர்ந்த செந்தாமரைமலர்போலுங் கண்களையுடைய விட்டுணுவாலும் தாங்கப்படுகின்ற பல புவனங்களும்—மேற்சகலமுமாய் - (அவற்றிற்கு) மேலாகிய எல்லாப்புவனங்களுமாய்—அகலாத ஓங்கும் ஒளி - (அவற்றை) நீங்காது நிறைந்து நிற்கின்ற உயர்ந்த ஒளியாகிய சிவம்—உலகு தொழ - ஆன்மாக்கள் வணங்கும்பொருட்டு—வெளியே நின்று நடம் ஆடும் - திரோதானசத்தி நீங்க நின்று திருநிருத்தஞ்செய்தருளும்—தேம் கமழும் பொழில் தில்லைத் திருச்சிற்றம்பலம் போற்றி - மணங்கமழ்கின்ற சோலைகளினாலே சூழப்பட்ட தில்லையின்கணுள்ள திருச்சிற்றம்பலந் துதிக்கப்படுவது. எ - று.

சிற்றம்பலம் ஞானசபை. திரோதானம் மறைத்தல். போற்றியென்பதனுள் இகரஞ் செயப்படுபொருள்விகுதி, ஊருணியென்பதனுட்போல. போற்றியென்பதனை வாழியவென்பது வாழியென வந்தாற்போல வந்த வியங்கோண்முற்றெனக்கொண்டு காக்கவெனப் பொருள் கூறினும் பொருந்தும். (க)

ஆரணங்கண் முடிந்தபதத் தானந்த வொளியுலகிற்
காரணங்கற் பனைகடந்த கருணைதிரு வுருவாகிப்
பேரணங்கி னுடனாடும் பெரும்பற்றப் புலியூர்சேர்
சீரணங்கு மணிமாடத் திருச்சிற்றம் பலம்போற்றி.

இ - ள். ஆரணங்கள் முடிந்த பதத்து ஆனந்த ஒளி - வேதங்கள் முடிந்த இடமாகிய உபநிடதங்களில் உணர்த்தப் படும் இன்பவொளியாகிய சிவம்—உலகில் காரணம் கற்பனை கடந்த கருணை திருவுருவாகி - உலகத்தின்கண்ணே (தனக்கு) உபாதானகாரணமும் நிமித்தகாரணமுங் கடந்த திருவருளை திருமேனியாகக் கொண்டு—பேர் அணங்கினுடன் ஆடும் பெரும் பற்றப்புலியூர் சேர் - பெருமையாகிய பராசத்தியோடு திருநிருத் தஞ் செய்தருளும் பெரும்பற்றப்புலியூரிலே பொருந்திய—சீர் அணங்கு மணி மாடத் திருச்சிற்றம்பலம் போற்றி - அழகிய திவ் விய ரத்தினங்களாலாகிய மாடங்களினாலே சூழப்பட்ட திருச் சிற்றம்பலந் துதிக்கப்படுவது. எ - று.

பதம் இடம். பெரும்பற்றப்புலியூர் தன்னைத் தரிசித்த ஆன் மாக்கட்குத் தன்னிடத்தே பெரும்பற்றை விளைக்கும் புலியூர்; அகரம் சாரியை. சிவம் திருநிருத்தஞ்செய்தருளுந் திருச்சிற்றம் பலமெனக் கூட்டுக. (௨)

தற்பரமாய்ப் பரபதமாய்த் தாவிலநு பூதியதா
யற்புதமா யாரமுதா யானந்த நிலயவொளிப்
பொற்பினதாய்ப் பிறிவிலதாய்ப் பொருளாகி யருளாகுஞ்
சிற்பரமா மம்பரமாந் திருச்சிற்றம் பலம்போற்றி.

இ - ள். தற்பரமாய் - ஆன்மாவுக்கு மேலானதாய்—பரபத மாய் - மேலாகிய பொருளாய்—தாவு இல் அநுபூதியதாய் - குற்றமில்லாத அநுபவத்தா லறியப்படுவதாய்—அற்புதமாய் - ஆச்சரியத்தை விளைவிப்பதாய்—ஆர் அமுதாய் - அரிய அமிர்த மயமாய்—ஆனந்த நிலைய ஒளிப் பொற்பினதாய் - ஆனந்த நிருத் தப் பிரகாசத்தினது மிகுதியையுடையதாய்—பிறிவு இலதாய் - (சிவத்தோடு) நீக்கமில்லாததாய்—பொருளாகி-உண்மையாய்— அருளாகும் - சத்திரூபமாயுள்ள—சிற்பரம் ஆம் அம்பரம் ஆம்

திருச்சிற்றம்பலம் போற்றி - சிதம்பரமாகிய திருச்சிற்றம்பலந் துதிக்கப்படுவது. எ - று.

தற்பரம் தனக்குப் பரமென விரியும். தன்னென்றது ஆன்மாவை. பதம் பொருள். நிலயம் கூத்து. பொற்பு மிகுதி. சிற்பரமா மம்பரம் - சிதெதன்னுஞ்சொற்குப் பின்னதாகிய அம்பரம்; எனவே, சிதம்பரம் என்றவாறாயிற்று. பரம் பின். சிதம்பரம் ஞானாகாசம். (௩)

வையகமின் புறநின்ற மருமலிபொற் பதம்போற்றி
கையமரு நிலைபோற்றி கருணைமுக மலர்போற்றி
மெய்யிலகு மொளிபோற்றி விரவியெனை யெடுத்தாண்ட
செய்யதிரு வடிபோற்றி திருச்சிற்றம் பலம்போற்றி.

இ - ள். வையகம் இன்பு உற நின்ற மரு மலி பொற்பதம் போற்றி - பூமியிலுள்ளோர் இன்பமடையும்பொருட்டு நின்றருளிய மணநிறைந்த பொன்போலுந் திருவடி துதிக்கப்படுவது,— கை அமரும் நிலை போற்றி - திருக்கரம் அமைத்தருளிய நிலை துதிக்கப்படுவது,—கருணை முகமலர் போற்றி-காருண்ணியத்தையுடைய திருமுகமாகிய செந்தாமரைமலர் துதிக்கப்படுவது,— மெய் இலகும் ஒளி போற்றி - திருமேனியில் விளங்கும் ஒளி துதிக்கப்படுவது,—விரவி எனை எடுத்து ஆண்ட செய்ய திருவடி போற்றி - (அநாதியே) கலந்து நின்று என்னை (ப்பிறவிக்கடலின்) வீழாமல் எடுத்தாட்கொண்டருளிய சிவந்த திருவடி துதிக்கப்படுவது,—திருச்சிற்றம்பலம் போற்றி-திருச்சிற்றம்பலந் துதிக்கப்படுவது. எ - று. (௪)

மன்றின்மணி விளக்கெனலா மருவுமுக நகைபோற்றி
யொன்றியமங் கலநாணி னொளிபோற்றி யுலகும்பர்
சென்றுதொழ வருள்சுரக்குஞ் சிவகாம சுந்தரிதன்
னின்றதிரு நிலைபோற்றி நிலவுதிரு வடிபோற்றி.

இ - ள். மன்றின் மணி விளக்கு எனல் ஆ மருவு முக நகை போற்றி-கனகசபையிலிட்ட இரத்தினதீபமென்னும்படி பொருந்திய திருமுகத்தினது ஒளி துதிக்கப்படுவது,—ஒன்றிய மங்கல நாணின் ஒளி போற்றி - (எக்காலமும்) பொருந்திய மங்கல சூத்திரத்தினது பிரகாசந் துதிக்கப்படுவது,—உலகு உம்பர் சென்று தொழ அருள் சுரக்கும் சிவகாமசுந்தரி தன் நின்ற திருநிலை போற்றி - பூவுலகத்தாரும் தேவுலகத்தாரும் போய் வணங்க (அவர்களுக்குக்) கருணையைப் பயக்குஞ் சிவகாமசுந்தரியம்மையாருடைய நின்றருளிய திருநிலை துதிக்கப்படுவது,—நிலவு திருவடி போற்றி - விளங்குகின்ற திருவடிகள் துதிக்கப்படுவன. எ - று.

எனலாக என்பது எனலா எனக் குறைந்து நின்றது. (ரு)

தன்னோங்கு மலரடியுந் தளிரோங்கு சாகைகளு
மின்னோங்கு முகக்கொம்பும் விரவியகண் மலர்களுமாய்
மன்னோங்க நடமாடு மன்றோங்கு மதிற்குடபாற்
பொன்னோங்கன் முன்னோங்கும் பொற்பமர்கற்பகம்போற்றி.

இ - ள். தன் ஓங்கு மலர் அடியும் - தம்முடைய மேலாகிய செந்தாமரைமலர்போலும் திருவடிகளும் [தன்னுடைய பெருத்த அகன்ற அடியும்]—தளிர் ஓங்கு சாகைகளும் - (செவ்வொளியினாலே) தளிரினுஞ் சிறந்த திருக்கரங்களும் [தளிர் நிறைந்த பக்கக் கிளைகளும்] மின் ஓங்கு முகக்கொம்பும் - ஒளி சிறந்த முகத்திற்கொம்பும் [ஒளி மிகுத்த அடிப்பணைகளும்]—விரவிய கண் மலர்களுமாய் - பொருந்திய மூன்று திருக்கண்மலர்களுமாய் [கள் விரவிய மலர்களுமாய் - தேன் பொருந்திய பூக்களுமாய்]—மன் ஓங்க நடம் ஆடும் மன்று - பதியாகிய சிவம் (ஆன்மாக்கள் பாசத்தைக் கீழ்ப்படுத்தி) ஓங்கும்பொருட்டுத் திருநிருத்தஞ்செய்தருளுங் கனகசபையினுடைய—ஓங்கு குடபால் மதில்-உயர்ந்த மேலைத்திருமதிலிலே—பொன் ஓங்கல் முன் ஓங்கும்

பொற்பு அமர் கற்பகம் போற்றி - பொன்மலைபோலுந் திருக் கோபுரத்தின் முன் எழுந்தருளியிருக்கும் அழகு பொருந்திய கற் பகவிநாயகர் துதிக்கப்படுவர். எ - று.

சாகை கைக்கும் மரக்கிளைக்கும் பெயர். (சா)

தேராட்டிக் கயங்காட்டுந் திரண்மாக்கட் டயமூட்டிப்
போராட்டிப் புறங்காட்டிப் போங்காட்டிற் புலால்கமழு
நீராட்டிச் சூர்மாட்டி நிகழ்நாட்டிற் புகழ்நாட்டும்
பேராட்டி சீராட்டும் பிள்ளையார் கழல்போற்றி.

இ - ள். தேர் - தேர்களையும்—ஆள் - காலாட்களையும்—திக்கயம் காட்டும் திரள் மா - திக்குயானைகள்போலத் தம்மைத் தோற்றுவிக்குங் கூட்டமாகிய யானைகளையும்—கட்டு அயம் - (சேணங்) கட்டப்பெற்ற குதிரைகளையும்—மூட்டி - கூட்டி—போர் ஆட்டி - யுத்தஞ்செய்து—புறம் காட்டிப் போம் காட்டில் - புறகிட்டுப் போகுங் காட்டிலே—புலால் கமழும் நீர் ஆட்டி-புலவு கமழும் இரத்தநீராற் குளிப்பித்து—சூர் மாட்டி - சூரபன்மனை மாள்வித்து—நிகழ் நாட்டில் புகழ் நாட்டும் - விளங்காநின்ற உலகத்தின்கண்ணே (தமது) கீர்த்தியைத் தாபித்தருளிய—பேராட்டி சீராட்டும் பிள்ளையார் கழல் போற்றி - பெருமையையுடைய உமாதேவியார் சிறப்புச்செய்து வளர்த்தருளிய இளையபிள்ளையாருடைய திருவடிகள் துதிக்கப் படுவன. எ - று. (எ)

திருஞான சம்பந்தர் செய்யதிரு வடிபோற்றி
யருணாவுக் கரசர்பிரா னலர்கமல பதம்போற்றி
கருமாள வெமையாளுங் கண்ணுதலோன் வலிந்தாண்ட
பெருமாள்பூங் கழல்போற்றி பிறங்கியவன் பர்கள்போற்றி.

இ - ள். திருஞானசம்பந்தர் செய்ய திருவடி போற்றி - திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருடைய சிவந்த திருவடிகள்

துதிக்கப்படுவன;—அருள் நாவுக்கரசர் பிரான் அலர் கமல பதம் போற்றி - கருணையையுடைய திருநாவுக்கரசுநாயனாருடைய அலர்ந்த செந்தாமரைமலர்போலும் திருவடிகள் துதிக்கப்படுவன;—கரு மாள எமை ஆளும் கண் நுதலோன் வலிந்து ஆண்ட பெருமாள் பூங் கழல் போற்றி - பிறவி கெடும் வண்ணம் எம்மை யாண்டருளிய நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் வலிய அடிமைக்கொண்ட சுந்தரமூர்த்திநாயனாருடைய பொலிவாகிய திருவடிகள் துதிக்கப்படுவன;—பிறங்கிய அன்பர்கள் போற்றி - உயர்ந்த மற்றைத் திருத்தொண்டர்களும் துதிக்கப்படுவர்கள். எ - று. (அ)

பேசுபுகழ் வாதவூர்ப் பிறந்துபெருந் துறைக்கடலுண்
டாசிலெழி றடித்தயர வஞ்செழுத்தா லதிர்த்தெழுந்து
தேசமலி தரப்பொதுவார் சிவபோக மிகவிளைவான்
வாசகமா மாணிக்க மழைபொழிமா முகில்போற்றி.

இ - ள். பேசு புகழ் வாதவூர்ப் பிறந்து - பேசப்படும் கீர்த்தியையுடைய திருவாதவூரிலே திருவவதாரஞ்செய்து [வாயுமண்டலத்திற்றோன்றி]—பெருந்துறைக்கடல் உண்டு - திருப்பெருந்துறையில் ஆனந்தசமுத்திரத்தைப் பருகி [பெரிய துறைகளையுடைய சமுத்திரத்தைப்பருகி]—ஆசு இல் எழில் தடித்து அயர - பாசமில்லாத ஆன்மப்பிரகாசம் மிகுத்துச் செல்ல [குற்றமில்லாத அழகையுடைய மின்னல் உண்டாக]—அஞ்சு எழுத்தால் அதிர்த்து எழுந்து - பஞ்சாக்கரோச்சாரணத்தினால் (வாசனையைத)தள்ளி மேலிட்டு [அஞ்செழுத்தால் அதிர்த்து எழுந்து - சலத்தினுடைய வளமையினாலே முழங்கி எழுந்து]—தேசம் மலிதரப் பொது ஆர் சிவபோகம் மிக விளைவான்-ஞானப்பிரகாசமிகும்படி கனகசபையிலே நிறைந்த சிவானந்தம் மிக விளையும்பொருட்டு [தேசங்கள் மலியும்படி யாவருக்கும் பொதுவாய்நிறைந்த நல்ல போகங்கள் மிக விளையும்பொருட்டு]—வாசகம் ஆம் மாணிக்க மழை பொழி மா முகில் போற்றி - திருவாச

கமாகிய மாணிக்கமழையைப் பொழிந்தருளிய (திருவாதவூரடிக ளாகிய) பெரிய மேகந் துதிக்கப்படுவதா. எ - று. (கூ)

நாவிரவு மறையினராய் நாமிவரி லொருவரெனுந்
தேவர்கடே வனசெல்வச் செல்வர்களாய்த் திகழ்வேள்வி
பாவுநெறி பலசெய்யும் பான்மையராய் மேன்மையரா
மூவுலகுந் தொழுமூவா யிரமுனிவ ரடிபோற்றி.

இ - ள். நா விரவு மறையினராய் - நாவிலே பொருந்திய வேதத்தையுடையர்களாய்—நாம் இவரில் ஒருவர் எனும் தேவர் கள் தேவு அன செல்வச் செல்வர்களாய் - நாம் இவர்களுள் ஒரு வரென்று திருவாய்மலர்ந்தருளிய தேவதேவராகிய சிவபெருமா னைப்போன்ற செல்வத்துட் செல்வமாகிய ஞானத்தையுடையர்க ளாய்—திகழ் வேள்வி பாவு நெறி பல செய்யும் பான்மை யராய் - விளங்குகின்ற யாகங்களைப் பொருந்திய பலவிதமாகச் செய்யுந் தகுதியையுடையர்களாய்—மேன்மையராம் - (யாவருக் கும்) மேலானவர்களாயிருக்கின்ற—மூவுலகும் தொழும் மூவாயி ரம் முனிவர் அடி போற்றி - மூன்றுலகத்தாரும் வணங்குந தில் லைமூவாயிரமுனிவர்களுடைய திருவடிகள் துதிக்கப்படுவன. எ - று. (க0)

தந்தையெனு திகழ்ந்தபுகழ்ச் சண்டேசர் விறறகுமெய்ச்
சிந்தையரா யெல்லையிலாத் திருவேடத் தினராகி
யெந்தைபிரா னருள்வளர்க்கு மியல்பினராய் முயறவங்க
ளந்தமிலா வடியவர்க டிருக்கூட்ட மவைபோற்றி.

இ - ள். தந்தை எனுது இகழ்ந்த புகழ்ச் சண்டேசர் (போற்றி) - (சிவத்துரோகஞ்செய்த எச்சதத்தனைத் தமக்குப்) பிதாவென்று நோக்காது தண்டித்த கீர்த்தியையுடைய சண்டே சுரநாயனூர் துதிக்கப்படுவர்;—விறல் தரும் மெய்ச் சிந்தைய ராய் - ஞானவீரம் தக்க உண்மையாகிய சித்தத்தையுடையர்க

ளாய்—எல்லை இலாத் திருவேடத்தினராகி - எண்ணில்லாத திருவேடங்களையுடையர்களாய்—எந்தை பிரான் அருள் வளர்க்கும் இயல்பினராய் - எமது பிதாவாகிய சிவபெருமானுடைய திருவருளினாலே வளர்க்கப்படும் நற்குணங்களையுடையர்களாய்—முயல் தவங்கள் அந்தம் இலா அடியவர்கள் திருக்கூட்டமவை போற்றி- முயலுந்தவங்களினாலே முடிவில்லாதவர்களாயுள்ள அடியார்களுடைய திருக்கூட்டங்கள் துதிக்கப்படுவன. எ - று.

எல்லையிலாத் திருவேடமென்றது சடை முண்டம் சிகை முதலியவற்றை. (கக)

ஒன்றியசீ ரிரவிகுல முவந்தருளி யுலகுய்யத்
துன்றுபுகழ்த் திருநீற்றுச் சோழனென முடிசூடி
மன்றினடந் தொழுதெல்லை வளர்கனக மயமாக்கி
வென்றிபுனை யநபாயன் விளங்கியபூங் கழல்போற்றி.

இ - ள். சீர் ஒன்றிய இரவி குலம் உவந்தருளி - சிறப்புப் பொருந்திய சூரியவமிசத்திலே திருவவதாரஞ்செய்து—உலகு உய்யத் துன்று புகழ்த் திருநீற்றுச் சோழன் என முடிசூடி - ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு மிகுந்த கீர்த்தியையுடைய திருநீற்றுச் சோழரென்று முடிதரித்து—மன்றில் நடம் தொழுது-கனகசபையின்கண்ணே செய்யப்படுந் திருநிருத்தத்தை வணங்கி—எல்லை வளர் கனகமயம் ஆக்கி - (அச்சபையினது) திருவெல்லையை (ஒளி) வளரும் பொன்மயமாகச் செய்து— வென்றி புனை அநபாயன் விளங்கிய பூங்கழல் போற்றி-வெற்றி பெற்ற அநபாய சோழநாயனாருடைய விளங்கிய பொலிவாகிய திருவடிகள் துதிக்கப்படுவன. எ - று.

திருவம்பலமும் திருக்கோபுரமும் திருமண்டபங்களும் பொன்னால் வேய்ந்தமையால், எல்லைவளர் கனகமயமாக்கி என்றார். (கஉ)

மல்குபுகழ் நடராசன் வளர்கோயி லகலாது
பல்கிளைஞ ருடனுரிமைப் பணிசெய்யும் பரிவினராய்க்
கல்விகளின் மிகுமெல்லைக் கருத்தினராய் நிருத்தனருட்
செல்வமலி யகம்படிமைத் திறலினர்தம் பதம்போற்றி.

இ - ள். மல்கு புகழ் நடராசன் வளர் கோயில் அகலாது - நிறைந்த கீர்த்தியையுடைய நடராசரது (சிவதருமம்) வளருந் திருக்கோயிலைப் பிரியாது—பல் கிளைஞருடன் உரிமைப் பணி செய்யும் பரிவினராய்-பலசுற்றத்தாரோடு (தங்கள் தங்களுக்கு) உரிமையாகிய தொண்டுகளைச் செய்யும் அன்பையுடையர்களாய்—கல்விகளின் மிகும் எல்லைக் கருத்தினராய் - கல்விகளினுடைய மிக்க எல்லையிலே கருத்தையுடையர்களாய்—நிருத்தன் அருட் செல்வம் மலி அகம்படிமைத் திறலினர்தம் பதம் போற்றி - அந்நடராசருடைய திருவருட் செல்வம் நிறைந்த ஞானவலியையுடைய திருவகம்படியார் பதினறுயிரவருடைய திருவடிகள் துதிக்கப்படுவன. எ - று. (௧௩)

மண்ணிலிரு வினைக்குடலாய் வானிரயத் துயர்க்குடலா
யெண்ணிலுட லொழியமுய லிருந்தவத்தா லெழிற்றில்லைப்
புண்ணியமன் றினிலாடும் போதுசெய்பா நடங்காண
நண்ணுமுட லிதுவன்றே நமக்குடலாய் நயந்தவுடல்.

இ - ள். மண்ணில் இருவினைக்கு உடலாய் - பூமியிலே (புண்ணியமும் பாவமுமாகிய) இருகருமங்களுக்குஞ் சரீரங்களாகியும்—வான் நிரயத் துயர்க்கு உடலாய் - சுவர்க்கத்திலும் நரகத்திலும் சுகமும் துக்கமுமாகிய இருபலங்களுக்குஞ் சரீரங்களாகியும்—எண் இல் உடல் ஒழிய - அளவில்லாத சரீரங்கள் ஒழிய,—முயல் இருந்தவத்தால் - செய்யப்பட்ட பெரிய தவத்தினாலே—எழிற்றில்லைப் புண்ணிய மன்றினில் ஆடும் - அழகையுடைய தில்லையினுள்ள சுத்தமாகிய கனகசபையின்கண்ணே

நடிக்கும்—போது செய்யா நடம் காண நண்ணும் உடல் இது அன்றோ - காலந்தோறும் வேறுபடாது ஒருதன்மையதாகிய திருநிருத்தத்தைத் தரிசிக்கும்பொருட்டுக் கிடைத்த இந்தச்சரீர மன்றோ—நமக்கு உடலாய நயந்த உடல் - நமக்குச் சரீரமாகி (நம்மளவில்) விரும்பியசரீரம். எ - று. (கச).

மறந்தாலு மினியிங்கு வாரோமென் றகல்பவர்போற்
சிறந்தார நடமாடுந் திருவாளன் றிருவடிகண்
டிறந்தார்கள் பிறவாத விதிலென்ன பயன்வந்து
பிறந்தாலு மிறவாத பேரின்பம் பெறலாமால்.

இ - ள். இனி இங்கு மறந்தாலும் வாரோம் என்று அகல்பவர்போல் - இனி இவ்விடத்தே மறந்தாயினும் வரக்கடவே மல்லேமென்று (வெறுத்து) அகன்று போனவர்கள்போல— சிறந்து ஆர நடம் ஆடும் திருவாளன் திருவடி கண்டு இறந்தார்கள் - (அருள்) சிறந்து நிறையும்படி திருநிருத்தஞ்செய்தருளுஞ் செல்வராகிய சிவபெருமானுடைய திருவடிகளைத் தரிசித்துச் (சிவபதத்திற்) சென்றவர்கள்—பிறவாத இதில் என்னபயன் - பிறவாதிருக்கும் இநநெறியினால் யாது பயன்:—வந்து பிறந்தாலும் இறவாத பேரின்பம் பெறலாம் - (மீண்டு) வந்து (சிதம்பரத்திற்) பிறந்தாலும் ஒழியாத பேரின்பத்தைப் பெறலாம். எ - று.

ஆல் அசை. சிதம்பரத்திற்பிறந்த ஆன்மாக்கட்கும், தரிசித்த ஆன்மாக்கட்கும், இறந்த ஆன்மாக்கட்கும் முத்தி சித்திக்கும் என்பது இதனாற் கண்டுகொள்க. (கரு).

காதமருங்கொடுங்குழையான் கரத்தமருங்கொடுங்குழையான்
பாதமுற வளைந்திரவும் பகலுமுற வளைந்திரவும்
பேதமற வுடன்றீரும் பிணிபிறவி யுடன்றீரு
மோதலுறு மருந்தில்லை யொழியவொரு மருந்தில்லை.

இ - ள். காது அமரும் கொடும் குழையான் - திருச்செவியிற் பொருந்திய வளைந்த சங்கக்குண்டலத்தையுடையவரும்—கரத்த மருங்கு ஒடுங்கு உழையான் - திருக்கரத்திலுள்ள இடையொடுங்கிய மான்கன்றினையுடையவருமாகிய நடராசருடைய—பாதம் உற வளைந்து - திருவடியிலே (சென்னி) பொருந்த வணங்கி—இரவும் பகலும் உறவு அளைந்து இரவும் - இரவினும் பகலினும் அன்பிலே முழுகி (வேண்டும் வரங்களை) யாசியுங்கள்;—பேதம் அற உடன்று ஈரும் பிணி பிறவி உடன் தீரும் - வேற்றுமையற (நின்று உங்களை) வெகுண்டு அரியும் பிணியும் பிறவியும் உடனே நீங்கிவிடும்;—ஓதல் உறும் அருந்தில்லை ஒழிய - (வேதாகமங்களிலுலே) சொல்லப்படும் அருமையாகிய சிதம்பரமொழிய—ஒரு மருந்து இல்லை - (பிறிது) ஒருமருந்தும் இல்லை. எ - று.

கோடுங்குழையானென்பது கொடுங்குழையான் எனக் குறுக்கல்விகாரம்பெற்று நின்றது. (கசு)

பொன்றிகழ் பங்கயமூழ்கிப் புனிதனபங் கயமூழ்கிச்,
சென்றுதொழக் கருத்துடையார் சிலரொழியக் கருத்துடையா, ரொன்றுமுளத் திருக்கூத்தை யுருவொழிக்குந் திருக்கூத்தை, மன்றமரப் பணியீரேன் மருவுமரப் பணியீரே.

இ - ள். பொன் திகழ்பு அம் கயம் மூழ்கி-பொன் விளங்கு தலையுடைய அழகிய (சிவகங்கையென்னும்) திருக்குளத்திலே ஸ்நானஞ்செய்து—புனிதன பங்கயம் ஊழ்கி - சுத்தராகிய நடராசருடைய திருவடித்தாமரைகளைத் தியானித்து—சென்று தொழக் கருத்து உடையார் சிலர் ஒழிய - (கனகசபையிலே) போய் வணங்கக் கருத்துடையவர் சிலர் தவிர—கருத் துடையார் - (மற்றொருவரும்) பிறவியை நீக்கிக்கொள்ளமாட்டார்:—உளம் ஒன்று இருக்கு - ஆன்மாவைப் பொருந்திய ஆணவமலத்தையும்—ஊத்தை - ஊத்தையாகிய கருமமலத்தையும்—உரு -

உருவாகிய மாயாமலத்தையும்—ஒழிக்கும் திருக்கூத்தை - நீக்கியருளும் ஆனந்தத்திருநிருத்தத்தை—மன்று அமரப் பணியீரேல் - கனகசபையிலே (சென்னி) பொருந்த வணங்காதிருப்பீர்களாயின்—மருவு மரப் பணியீர் - பொருந்திய மரப்பாவைக் கொப்பீர்கள். எ - று.

உள்கி என்பது ஊள்கியென நீட்டல்விகாரம் பெற்றது; ழகர ளகரவொற்றுமைபற்றி அதனுள் ளகரம் ழகரமாயிற்று.

பொருவிலரு ணெறிவாழ்க புரைநெறிகண் மிகவாழ்க
வரைவிற்றிருத் தொண்டரணி வளர்கதிருத் தொண்டரணி
யருள்விரவக் கற்றோர்க்கு மடர்புலன்போக் கற்றோர்க்கு
மருவுபுக லம்புலியூர் மாடமலி யம்புலியூர்.

இ - ள். பொருவு இல் அருள் நெறி வாழ்க - ஒப்பில்லாத திருவருளால் விளக்கப்படுஞ் சைவசமயம் வாழ்க;—புரைநெறிகள் மிக ஆழ்க - குற்றத்தையுடைய புறச்சமயங்கள் மிகக் கீழ்ப்படுக;—வரை வில் திருத்து ஒள் தரணி - (நவகண்டமாக) வரைந்து வில்வடிவாகத் திருத்தப்பட்ட ஒள்ளிய பூமியின் கண்ணே—திருத்தொண்டர் அணி வளர்க - திருத்தொண்டர் வகுப்புத் தழைக்க;—அருள் விரவக் கற்றோர்க்கும் - திருவருள் (தங்களிடத்தே) கலக்கும்படி (வேதாகமங்களைக்) கற்றவர்களுக்கும்—அடர் புலன் போக்கு அற்றோர்க்கும் - வருத்துகின்ற ஐம்புலன்வழியே செல்லுதலில்லாதவர்களுக்கும்—மருவு புகல் - பொருந்தும் புகலிடமாவது—அம் புலி ஊர் மாடம் மலி அம் புலியூர் - பிறை தவழ்கின்ற மாடங்கள் நிறைந்த அழகிய புலியூர். எ - று.

புறச்சமயங்களாவன உலோகாயதம், பௌத்தம், ஆருகதம், மீமாஞ்சகம், மாயாவாதம், பாஞ்சராத்திரம் என்பவைகளாம்.

இரும்பொத்துச் சிறிதிடமு மின்றெனக்கின் றருளாலே
சுரும்புற்ற நறையிதழித் தொடைமுடியோ னமரர்தொழக்
கரும்புற்ற வரவாடக் காரிகையி னுடனுடும்
பெரும்பற்றப் புலியூரா யிருந்ததுளம் பெரிதாயே.

இ - ள். எனக்கு உளம் - எனக்கு மனமானது—இரும்பு ஒத்துச் சிறிது இடமும் இன்று - (இதற்கு முன்னே) உரத்த இரும்பையொத்துச் சிறிதிடமுமின்றி இருந்தது;—அருளால் - திருவருளினால்—இன்று - இந்நாளிலே—சுரும்பு உறற நறை இதழித் தொடைமுடியோன் - வண்டுகள் பொருந்திய தேனை யுடைய கொன்றைமாலையை அணிந்த முடியையுடைய சிவபெருமான்—அமரர் தொழ - தேவர்கள் வணஙக—கரும்புற்ற அரவு ஆட - பெரிய புற்றின்கணுள்ள சருப்பம் ஆட—காரிகையினுடன் ஆடும் பெரும்பற்றப்புலியூராய்ப் பெரிதாய் இருந்தது - உமா தேவியாரோடு திருநிருத்தஞ்செய்தருளும் பெரும்பற்றப்புலியூராய் மிகவும் இருந்தது. எ - று.

திருவருளினால் இந்நாளிலே பெரும்பற்றப்புலியூராயிருந் தது எனக்கூட்டுக. (கக)

தேசமலி பொதுஞானச் செவ்வொளியுந் திகழ்பதியா
மீசனது நடத்தொழிலு மிலங்குபல வுயிர்த்தொகையும்
பாசமுமங் கதுகழியப் பண்ணுதிரு வெண்ணீறு
மாசிறிரு வெழுத்தஞ்சு மநாதியிவை யாறுக.

இ - ள். தேசம் மலி பொது ஞானச் செவ்வொளியும் - ஒளி நிறைந்த சபையினுள்ள ஞானச்செஞ்சோதியாகிய பதியும்,—திகழ் பதியாம் ஈசனது நடத்தொழிலும - விளங்கா நின்ற அப்பதியாகிய சிவபெருமானுடைய பஞ்சகிருத்திய நடனமும்,—இலங்கு பல உயிர்த்தொகையும் - விளங்கிய பலவுயிர்க் கூட்டமும்,—பாசமும் - (அவ்வுயிர்களைப் பந்தித்த ஆணவ

முதலிய பஞ்ச) பாசமும்,—அங்கு அது கழியப் பண்ணு திரு வெண்ணீறும் - அவ்விடத்து அப்பாசத்தை நீங்கச்செய்யும் திருவெண்ணீறும்,—ஆசு இல் திருவெழுத்து அஞ்சும் - குற்றமில்லாத ஸ்ரீ பஞ்சாக்ஷரமும்—இவை ஆறு அநாதி ஆக - ஆகிய இவையாறும் அநாதியாதலால். எ - று.

இது முதலிய மூன்று திருப்பாட்டும் ஒருதொடர். (உ0)

கற்பங்க டொறுநடஞ்செய் கழலடைந்தோர் கணிப்பிலர்தஞ்
சிற்பங்க ளரும்புகழுஞ் சென்றனவிச் செல்காலத்
தற்பங்கொ டுதிக்குமிறை யருடருமென் றனரொன்றூர்
சொற்பந்த முறுமனமே துணையாகத் தொடங்குதலும்.

இ - ள். கற்பங்கடொறும் நடம் செய் கழல் அடைந்தோர் கணிப்பு இலர் - கற்பகங்கடோறும் ஆனந்தநிருத்தஞ்செய்தருளும் திருவடியை அடைந்தவர்கள் அளவில்லாதவர்கள்,—தம் சிற்பங்கள் தரும் புகழும் சென்றன - அவர்களுடைய சிந்தித்தல்களின் பொருட்டு (அவ்வக்கற்பகங்கடோறும்) செய்யப்பட்ட புராணங்களும் இறந்துபோயின;—இச் செல்காலத்து அற்பம் கொள் துதிக்கும் இறை அருள் தரும் என்றனர் - இவ்வர்த்தமானகாலமாகிய கலியுகத்திலே சிறிதாகப் பொருந்திய துதிக்கும் சிவபெருமான் அருள்செய்வர் என்று (வேதாகமம் வல்லோர்) அருளிச்செய்தனர்—என்று ஆர் சொற்பந்தம் உறு மனமே துணை ஆகத் தொடங்குதலும் - என்று பொருந்திய சொல்லினாலே பந்திக்கப்பட்ட என்மனமே எனக்குத் துணையாக (நான் சிதம்பரமான்மியத்தைத் துதிசெய்யத்) தொடங்குதலும். எ - று.

சிற்பம் சிந்தித்தல். அவர்களுடைய சிந்தித்தல் - அவர்களைச் சிந்தித்தல். புகழ் ஆகுபெயர். (உக)

ஆராத மனமினிய வானந்த நடத்தளவுஞ்
சாராத தன்மையினாற் றகுமொழிக்குச் சொற்படுத்த

வாராதென் றறிந்தாலு மற்றதுகட் புலப்படலா
லோராத பேராசை யொருக்காலு முலவாதால்.

இ-ள். ஆராத மனம் இனிய ஆனந்த நடத்தளவும் சாராத தன்மையினால் - பூரண ஞானத்தைப் பொருந்தாத என்மனம் இனிமையாகிய ஆனந்தநிருத்தமளவாகச் செல்லாததன்மையினால்—தகும் மொழிக்குச் சொற் படுத்த வாராது என்று அறிந்தாலும் - (அவ்வானந்த நிருத்தமாகிய பொருளுககுத்) தக்க புராணத்துக்குச் சொற்செய்ய இயலாது என்று அறிந்தாலும்,—மற்றது கட்புலப்படலால் - அவ்வானந்தநிருத்தம் (பதஞ்சலி மகா முனிவருக்கருளிய சங்கற்பத்தின்படி) என்கண்ணுக்குப் புலப்படுதலால்—ஓராத பேர் ஆசை ஒருக்காலும் உலவாது - ஆராய்வில்லாத பேராசையானது ஒருக்காலும் ஒழியாது (ஆதலால் யாது செய்வேன்.) எ - று.

ஆல் அசை. மொழி ஆகுபெயர். (௨௨)

காதரமார் தருமனமே கமலமல ரயனல்லை
சீதரமா யனுமல்லை சிவனுமனற் றிரளல்ல
னீதரமா வருளுடையை நிலைகலங்கே லினிமன்றி
லாதரமா துடனாடு மண்டனடங் கண்டனையால்.

இ - ள். காதரம் ஆர்தரு மனமே - அச்சம் நிறைந்த மனமே,—கமல மலர் அயன் அல்லை - நீ தாமரைமலரிலிருக்கும் பிரமனுமல்லை,—சீ தர மாயனும் அல்லை - இலக்குமியைத் தரித்தவனாகிய விட்டுணுவுமல்லை,—சிவனும் அனற்றிரளல்லன் - நடராசரும் (அவர்களாற் பறந்தும் இடந்துங் காணப்படாத) சோதிரூபியல்லர்,—நீ தரமா அருள் உடையை - நீ (அவ்விருவரினும்) மேலாக அருளையுடையை;—இனி நிலை கலங்கேல் - இனி நீ நிலைமை கலங்காதே;—மன்றில் ஆதர மாதுடன் ஆடும் அண்டன் நடம் கண்டனை - கனகசபையின்கண்ணே விருப்பத்தை

யுடைய உமாதேவியாரோடு நடிக்குஞ் சிவபெருமானுடைய திரு நிருத்தத்தைத் தரிசித்தனே (ஆதலால்.) எ - று.

ஆல் அசை. தரம் மேன்மை. தரமாக என்பது தரமா எனக்குறைந்து நின்றது. (உங)

நாதனருள் பிரியாத நந்திதரச் சனற்குமரன்
வேதவியா தனுக்களிக்க மேன்மையெலா மவன்விளங்கிச்
சூதமுனி தனக்குதவச் சோபான வகைதொகுத்த
மூதறிவா லவன்மொழிந்த புராணமவை மூவாறில்.

இ - ள். நாதன் அருள் பிரியாத நந்தி தர - ஸ்ரீகண்ட பரமசிவனுடைய திருவருளைப் பிரியாத திருநந்திதேவர் சொல்லியருள, —சனற்குமரன் வேதவியாதனுக்கு அளிக்க - (அது கேட்ட) சனற்குமாரமகாமுனிவர் வேதவியாதமகாமுனிவருக்குச் சொல்லியருள, —அவன் மேன்மை எலாம் விளங்கிச் சூதமுனிதனக்கு உதவ - அவர் அம்மேன்மையெல்லாம் தெளிந்து சூதமகாமுனிவருக்குச் சொல்லியருள, —சோபானவகை தொகுத்த - (இவ்வாறே) பாரம்பரியமாகச் சுருக்கிச் சொல்லப்பட்ட பொருள்களை —அவன் மூதறிவால் மொழிந்த புராணமவை மூவாறில் - அவர் (தமது) முதிர்ந்த அறிவினாலே விரித்துச் சொல்லியருளிய பதினெண்புராணங்களுள். எ - று.

இது முதலிய மூன்று திருப்பாட்டும் ஒருதொடர். (உச)

நலமலியுந் திருத்தில்லை நடராசன் புகழ்நவிலும்
பலகதியில் யானறிந்த படிபடியிற் பயிலுறிச்
செலவினர்போ லெவ்வழியுஞ் செவ்வழியாச் சிறிதியங்கித்
தொலைவில் பெரும் பதியணையத் துணிந்தருளே துணையாக

இ - ள். நலம் மலியும் திருத்தில்லை நடராசன் புகழ் நவிலும் பல கதியில் - நன்மை நிறைந்த திருத்தில்லைவனத்து நிருத்த

ராசருடைய புகழைச் சொல்லும் பலவிதமார்க்கத்தில்—யான் அறிந்தபடி - நான் அறிந்துகொண்டபடி எப்படியெனின்;—படியில் பயில் தாரிச் செலவினர்போல் - பூமியில் நடந்த வழி நடத்தலையுடையவர்போல—எவ்வழியும் செவ்வழியாச் சிறிது இயங்கி - எந்தவழியும் செவ்வையாகிய வழியாகச் சிறிது நடந்து—அருளே துணை ஆக - திருவருளே துணையாகக் கொண்டு—தொலைவு இல் பெரும் பதி அணையத் துணிந்து - அழிவில்லாத (முத்தியாகிய) பெரும்பதியை அடையத் துணிந்து எ - று. (உரு)

மங்கலமார் திருமன்றின் மன்னனடம் வளர்புலிக்காற்
பங்கமில்சீ ரருண்முனிக்கும் பதஞ்சலிக்கும் பணித்தருளிச்
சிங்கவரு மன்றனக்குந் தெரிவித்துத் திருவருளா
லங்கவரைப் பணிகொண்ட வடைவறிந்த படிபுகல்வாம்.

இ - ள். மங்கலம் ஆர் திருமன்றின் மன்னன் - மங்கலநிறைந்த அழகிய சபையினுள்ள நிருத்தராசர்—நடம் - தமது திருநிருத்தத்தை—பங்கம் இல் சீர் அருள் வளர் புலிக்கால் முனிக்கும் பதஞ்சலிக்கும் பணித்தருளி - குற்றமில்லாத சிறப்பையுடைய அருள் வளரும் வியாக்கிரபாதமகாமுனிவருக்கும் பதஞ்சலிமகாமுனிவருக்குந் தரிசிப்பித்தருளி—சிங்கவருமன்றனக்கும் தெரிவித்து - சிங்கவருமருக்கும் புலப்படுத்தி—திருவருளால் அங்கு அவரைப் பணிகொண்ட அடைவு - காருண்ணியத்தினால் அங்கே அம்மூவரையும் சேவைகொண்டருளிய முறைமையை—அறிந்தபடி புகல்வாம் - நாம் அறிந்தபடி சொல்வாம். எ - று. (உசு)

சொல்லோடும் பொருளோடுந் துணிவுடையோர் சொற்றனரென், றெல்லோருங் கொளவெட்டு மிரண்டு மறி யாதோமும், வல்லோர்போ லொரூபனுவன் மதித்தோமா னவை

'பொறுக்க, நல்லோரை யிரந்தோமே னகையாமென் றுரையாமால்.

இ-ள். சொல்லோடும் பொருளோடும் துணிவு உடையோர் சொற்றனர் என்று - சொல்லுடனும் பொருளுடனும் உறுதியுடைய புலவர் சொன்னாரென்று—எல்லோரும் கொள - (கேட்ட பெரியோர்) எல்லோரும்(வழுவற அமைத்துப் பொருள்) கொள்ளும்படிக்கு—எட்டும் இரண்டும் அறியாதோமும் - எட்டுமிரண்டும் பத்தென்று அறியாத யாமும்—வல்லோர்போல் ஒரு பனுவல் மதித்தோம் - (செய்யுளியற்ற) வல்லவர்போல ஒருநூல் சொல்லத் துணிந்தோம்;—நவை பொறுக்க நல்லோரை இரந்தோமேல் - செய்யுட்குற்றம் பொறுக்கப் பெரியோரை வேண்டிக் கொண்டோமாயின்—நகை ஆம் என்று உரையாம் - (கேட்டவருக்குச்) சிரிப்புண்டாகுமென்று வேண்டிகொண்டோமில்லை. எ-று.

ஆல் இரண்டும் அசை. (உஎ)

என்றுமருந் தவமுயல லினிவேண்டா மியாவர்க்கும்
பொன்றுமுடல் கன்றுமுனிப் பொற்கோயிற் புகழ்மாலை
சென்றுசெவிப் புலன்புகுமேற் றீவினைக ளவைதீர்க்கு
மன்றினருள் புரிவிக்குந தெரிவிக்கு மலர்ப்பாதம்.

இ-ள். அருந தவம முயலல் யாவாக்கும இனி என்றும் வேண்டாம் - அருமையாகிய தவங்களைச் செய்தல் யாவருக்கும் இன்றுமுதல் எக்காலமும் வேண்டுவதில்லை;—பொன்றும் உடல் கன்று முன்-(நீர்க்குமிழிபோல்) இறக்குஞ்சரீரம் வார்த்தகமாவதற்கு முன்னே,—இப்பொற்கோயிற் புகழ்மாலை சென்று செவிப்புலன் புகுமேல் - அழகிய இச்சிதம்பரமான்மியம் போய்க் காதுக்கு விடயமாகப் புகுமாயின்,—தீவினைகளவை தீர்க்கும் - தீமையாகிய இருவினைகளையும் ஒழிக்கும்,—மன்றின் அருள் புரிவிக்கும் - கனகசபையின்கண்ணே திருவருளைச் செய்விக்கும்,—

மலர்ப் பாதம் தெரிவிக்கும் - செந்தாமரைமலர்போலுந் திருவடியைத் தரிசிப்பிக்கும். எ - று. (உ-அ)

பாயிர முற்றிற்று.

ஆகச்செய்யுள் - உகூ.

---

## வியாக்கிரபாதச்சருக்கம்.

மன்னுமருந் தபோதனரின் மருவியமத் தியந்தினனு
முன்னரிய திருமுனிபா லோங்குலகந் துயர்நீங்கப்
பன்னரிய சிவஞானம் பத்திதரும் பான்மைதகத்
தன்னிகரி றிருவருளா லவதரித்தா னொருதனயன்.

இ - ள். மன்னும அருந தபோதனரின் மருவிய மத்தியந்தினன் ஆம் உன்னரிய திரு முனிபால் - நிலைபெறற அரிய முனிவர்களுள்ளே பொருந்திய மததியந்தினராகிய நினைத்தற்கரிய மகாமுனிவரிடத்திலே,—ஓங்கு உலகம் துயர்நீங்க - பெரிய சருவலோகத்தாரும் பிறவித்துன்பத்தினின்று நீங்கும் வண்ணம்,—பன்னரிய சிவஞானம் பத்தி தரும் பான்மைதக - சொல்லுதற்கரிய சிவஞானத்தையும் சிவபத்தியையும் விளைவிக்கும் பகுதி மிக்கோங்க,—தன் நிகர் இல் திருவருளால் ஒரு தனயன் அவதரித்தான் - தனக்கொப்பில்லாத திருவருளினால் ஒரு திருக்குமாரர் திருவவதாரஞ்செய்தார். எ - று. (க)

தனிப்புதல்வன் றனையணைத்துத் தகவுச்சி மோந்துசடங்,
கனைத்துமடை வினிலியற்றி யருமறைநூ லவைகொடுத்து,
மனத்துணையாந் திருநாம மருவுநெறி யுபதேசித், தினிச்
செயவேண் டுவதென்கொ லெனமொழிந்தா னெழின்
முனிவன்.

இ - ள். எழில் முனிவன் - அழகையுடைய மத்தியந்தின மகாமுனிவர்—தனிப் புதல்வன்றனை அணைத்து - ஒப்பில்லாத குமாரரைத் தழுவிக்கொண்டு,—தக உச்சி மோந்து - தகுதியாக உச்சியை மோந்து,—சடங்கு அனைத்தும் அடைவினில் இயற்றி - (நாமகரணமுதல் உபநயனமிறுதியாகிய) கருமங்களெல்லாவற்றையும் முறையே செய்து,—அருமறை நூலவை கொடுத்து - அரிய வேதங்களையும் மற்றைநூல்களையுங் கற்பித்து,—மனத் துணையாம் திருநாமம் மருவு நெறி உபதேசித்து - உயிர்த்துணையாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை (ச்சிவாகமத்திலே) பொருந்திய முறைப்படி உபதேசித்து,—இனிச் செயவேண்டுவது என் என மொழிந்தான் - (குமாரரை நோக்கி) இனி (நாம் உனக்குச்) செய்யவேண்டுவதியாது என்று வினவியருளினார். எ - று. கொல் அசைநிலை. (உ)

இந்தவகை சிவனருளா லிரவியெதிர் மணியுமிழ
வந்தவன லெனவிளங்கு மழமுனிவ னடிவணங்கித்
தந்திரமுன் புகலுமருந் தவத்தொகையிற் றலையான
வந்தமின்மா தவமடியேற் கருளுகென வுரைசெய்தான்.

இ - ள். இரவி எதிர் மணி உமிழ வந்த அனல் என - ஆதித்தன் சன்னிதியிலே சூரியகாந்தம் உமிழ உதித்த அக்கினிபோல—இந்த வகை சிவன் அருளால் விளங்கும் மழமுனிவன் - இந்தப்பிரகாரம் (ஆசாரியரை அதிட்டித்த) சிவபெருமானது திருவருளினால் (ஞானம்) உதிக்கப்பெற்ற பாலமுனிவர்—அடி வணங்கி - (தமது தந்தையாருடைய) திருவடிகளை வணங்கி,—தந்திரம் முன் புகலும் அருந்தவத்தொகையில் - வேதாகமநூல்கள் ஆதியிலேசொல்லிய அரிய தவக்கூட்டங்களுள்—தலையான அந்தம் இல் மா தவம் - மேலாகிய முடிவில்லாத பெரிய தவத்தை—அடியேற்கு அருளுக என உரை செய்தான் - அடியேற்கு அருளிச்செய்யும் என்று விண்ணப்பஞ்செய்தார். எ - று.

அருளுக என்பதனீற்றகரந் தொக்கு நின்றது. (ங)

தவமெவையு முணர்ந்தமுனி தனயன்முக மிகநோக்கிப்
புவனமலி போகங்கள் பொருந்துமருந் தவம்புரிந்தாற்
சிவகதியு மிதுவன்று சிவார்ச்சனமார்ச் சனமாகிற்
பவமகலும் பரபோகம் பெறலாகு மெனப்பகர்ந்தான்.

இ - ள். தவம் எவையும் உணர்ந்த முனி - தவங்களெல்லா வற்றையும் அறிந்த மத்தியந்தினமுனிவர்—தனயன் முகம் மிக நோக்கி-குமாரருடைய முகத்தை மிக (அருளோடு) பார்த்து,— அருந்தவம் புரிந்தால் புவனம் மலி போகங்கள் பொருந்தும் - அரிய தவங்களைப் பண்ணினால் (சுவர்க்கமுதலிய) புவனங்களிலே நிறைந்த போகங்கள் கிடைக்கும்,—இது சிவகதியும் அன்று - இது சிவலோகத்துக்கும் போம் வழியன்று;—சிவார்ச்சனம் ஆர்ச்சனம் ஆகில் பவம் அகலும் - சிவபூசையைத் தேடுதல் உண்டாயிற் பிறவி நீங்கும்,—பரபோகம் பெறலாகும் எனப் பகர்ந்தான் - சிவபோகம் பெறலாம் என்று அருளிச்செய்தார். எ - று.

ஆர்ச்சனம் தேடுதல். (ச)

சொன்னமொழி கொண்டிறைவன் றோன்றிமகிழ்ந்துளதானம்
பன்னுகென மழமுனிக்குப் பார்முழுதும் பரப்பிரம
சன்னிதியன் றெனக்காண்ட றவக்குறைகா ணென்றுனு
மன்னிடமாய் நிகழுமிட முளதென்றான் மாமுனிவன்.

இ - ள். சொன்ன மொழி கொண்டு - (பாலமுனிவர் தமக்குத் தந்தையார்) உபதேசித்த திருவாக்கை உட்கொண்டு,— இறைவன் மகிழ்ந்து தோன்றி உள தானம் பன்னுக என - சிவபெருமான் (திருவுள) மகிழ்ந்து வெளிப்பட்டு எழுந்தருளியிருந்துள்ள புண்ணியதலம் அருளிச்செய்யும் என்று விண்ணப்பஞ்செய்ய,—மழமுனிக்கு மா முனிவன் - அப்பாலமுனிவருக்கு மத்தியந்தினமகாமுனிவர்—பார் முழுதும் பரப்பிரம சன்னிதி -

பூமிமுழுதுஞ் சிவசன்னிதியேயாம்,—அன்று எனக் காண்டல் தவக்குறை காண் - அப்படியன்றென்று காண்பது (பண்ணப் பட்ட) தவங்களிற்குறையாமென்று அறிவாயாக;—என்றாலும் - (அங்ஙனமாகும்) எனினும்,—மன் இடமாய் நிகழும் இடம் உளது என்றான் - (சரீரமெங்கும் வியாபித்த ஆன்மாவுக்கு முக்கியத் தானமும் உண்டானாற்போல உலகமெங்கும் வியாபித்த) சிவ பெருமானுக்கு முக்கியத்தானமாய் விளங்கும் புண்ணியதலம் உண்டு என்று அருளிச்செய்தார். எ - று. (ரு)

பாருயிர்கட் குபகரித்துப் பரப்பினடுப் படுவதொரு
மேருகிரி யும்புடைசூழ் வெற்புமவற் றிடைநாடு
மாருயிர்கள் பயனருந்து மமருலகா மெனக்கழித்தான்
சீருலவு நாறுவளர் செறுவெனலாஞ் செறிமையுற.

இ - ள். பார் உயிர்கட்கு உபகரித்து - உலகத்துள்ள ஆன் மாக்களுக்கு (ச்சலனம் வாராமல்) உபகரித்துக்கொண்டு—பரப் பின் நடுப் படுவது ஒரு மேருகிரியும் - பூமிக்கு நடுவே நிற்ப தாகிய ஒப்பில்லாத மகாமேருபருவதமும்—புடை சூழ் வெற் பும் - (அதனைப்) பக்கங்களிலே சூழ்ந்த (எட்டுக்) குலபருவதங் களும்—அவற்று இடை நாடும்-அவைகளினடுவேயுள்ள (எட்டுக்) கண்டங்களும்—ஆர் உயிர்கள் பயன் அருந்தும் அமருலகாம் எனக் கழித்தான் - நிறைந்த ஆன்மாக்கள் (பூமியிற்செய்த கரு மங்களுக்கீடாக அவற்றின்) பலத்தை அநுபவிக்குஞ் சுவர்க்கத் தைப்போலப் போகபூமிகளாமென்று (சிவபெருமான்) கழித் தார். எ - று.

அமரருலகு அமருலகெனக் குறைந்து நின்றது. ஈற்றடி பின் வருந் திருப்பாட்டோடு கூட்டிப் பொருளுரைக்கப்படும். (சு)

எத்தகைய போகங்க ளெவற்றினுக்குங் காரணமா
வைத்தபடி யிடம்போதா வகைநெருங்கு மன்னுயிர்கண்

முத்திபெறத் திருவுள்ள முகிழ்த்தபெருங் கருணையினு
லத்தனுமித் தலநண்ணி யலகிலிடங் கைக்கொண்டான்.

இ - ள். சீர் உலவு நாறு வளர் செறு எனலாம் செறிமை உற - நன்மைபொருந்திய நாறுகள் (முளைத்து) வளர்கின்ற சிறு வயல்போலுமென்று சொல்லுதற்குத தக்க நெருக்கம் பொருந்த—எத்தகைய போகஙகள் எவற்றினுக்கும் காரணமா வைத்த படி - எவ்வகைப் பெருமையையுடைய போகங்களெல்லாவற்றிற் கும் காரணமாக வைக்கப்பட்ட இநதக்கருமபூமியாகிய பரத கண்டத்திலே—இடம் போதா வகை நெருஙகும் மன் உயிர்கள் - இடம் போதாதபடியால் (ஒனறோடொனறு) நெருங்கும் நிலை பெற்ற ஆன்மாக்கள்—முததிபெறத் திருவுள்ளம் முகிழ்தத பெருங்கருணையினுல் - முத்தியடையும்பொருட்டுத் திருவுள்ளத் தில் அரும்பிய பெரிய திருவருளினுல்—அத்தனும் இத்தலம் நண்ணி அலகு இல் இடம் கைக்கொண்டான் - சிவபெருமானும் இக்கருமபூமியைப் பொருந்தி எண்ணில்லாத புண்ணியதலங்க ளைக் கைக்கொண்டருளினு. எ - று.

கருமம் பலவும் முளைக்கும் பரதகண்டம் நாற்றங்காலையும், அவை போகத்தைப் பயக்கும் மற்றைக்கண்டஙகண் முதலாயின விளைபுலத்தையு மொக்குமென்றறிக. (எ)

ஞாலத்தா யிரகோடி நற்றுன முளவவற்றி
னைலத்தா னலமார விடங்கொண்ட வெழிற்றில்லை
மூலத்தா னத்தொளியாய் முளைத்தெழுந்த சிவலிங்கக்
கோலத்தா னின்பூசை கொள்வானென் றுரைசெய்து.

இ - ள். ஞாலத்து ஆயிரகோடி நற்றுனம் உள - இந்தக் கருமபூமியிலே ஆயிரகோடி புண்ணியதலங்களுண்டு;—அவற் றின் - அவைகளுள்ளே—ஏல நலம் ஆரத் தான் இடம் கொண்ட எழிற்றில்லை மூலத்தானத்து - மிகவும் நன்மை பொருந்தும்படி

தாம் இடமாகக் கொண்டருளிய அழகினையுடைய தில்லைவனத்துள்ள மூலத்தானத்திலே—ஒளியாய் முளைத்து எழுந்த சிவலிங்கக் கோலத்தான் - சோதியாய் முளைத்தெழுந்த சிவலிங்க ரூபியாகிய கடவுள்—நின் பூசை கொள்வான் என்று உரை செய்து - உனது பூசையைக் கொண்டருள்வர் என்று திருவாய் மலர்ந்து. எ - று. (அ)

திருநீறு நுதல்சேர்த்தித் திகழுச்சி தனைமோந்தெங்
கருநீறு படவுதித்த காளையென வணைத்துவிழி
தருநீர்மத் தியந்தினனுந் தந்தையைவந் தனைசெய்து
வெருநீர்மை யன்னையையு மடிபணிந்து விடைகொண்டான்.

இ - ள். திருநீறு நுதல் சேர்த்தி - விபூதியை நெற்றியிலே சாத்தி—திகழ் உச்சிதனை மோந்து - விளங்குகின்ற உச்சியை மோந்து—எம் கரு நீறு பட உதித்த காளை என அணைத்து - எம்முடைய பிறவிக்குக் காரணமாகிய பாசம் நீறுகும்படி அவதரித்த பிள்ளையே என்று தழுவிக்கொண்டு—விழி நீர் தரு மத்தியந்தினன் ஆம் தந்தையை வந்தனை செய்து - (பிரிவாற்றாமையினாலே) கண்களினின்றும் நீரைப் பொழியாநின்ற மத்தியந்தின முனிவராகிய தந்தையாரை வணக்கஞ்செய்து,—வெருநீர்மை அன்னையையும் அடி பணிந்து விடைகொண்டான் - (பிள்ளை பிரிகின்றனே என்று) அஞ்சுந்தன்மையையுடைய மாதாவையுந் திருவடியில் வணங்கி அநுமதிபெற்றார் பாலமுனிவர். எ-று. (கூ)

வேறு.

மண்டா னிடர்தீர் வகையா லருளால் வருவா னிருளார் மகரா லயநீர், தண்டா ரகைபோற் றரளம் புரளத் தள்ளுந் தடமா பெயர்தில் லைவனத், தண்டா தியனு டமதே துனையா வரியுங் கரியுந் திரியுஞ் சரியுங், கண்டா னுழையா வுயர்கானமுமுன் காணு தனகண் டெடர்த்தனனே.

இ - ள். மண் தான் இடர் தீர் வகையால் அருளால் வருவான் - பூலோகத்தார் பிறவித்துன்பத்தினின்று நீங்கும்படி திருவருளினலே (தெற்கு நோக்கி) வருவாராகிய பாலமுனிவர்,— இருள் ஆர் மகராலய நீர் - கருமை நிறைந்த சமுத்திரசலம்— தண் தாரகை போல் தரளம் புரளத் தள்ளும் - குளிர்மையாகிய நக்ஷத்திரங்களைப்போல முத்துக்களைப் புரளும்படி ஒதுக்காநின்ற— தடம் மாடு உயர் தில்லை வனத்து - கரைகள் தன் பக்கங்களில் ஓங்கப்பெற்ற தில்லைவனத்தின்கண் எழுந்தருளியிருக்கும்— அண்டாதிபன் நாமமதே துணையா - அண்டங்களைக் காப்பவராகிய சிவபெருமானது திருநாமமாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரமே வழித்துணையாக,— அரியும் கரியும் திரியும் சரியும் - சிங்கமும் யானையுந்திரிகின்ற வழியும்— கண் தான் நுழையா உயர் கானமும் - கண்ணுனது நுழையவொண்ணுத (இருள் செறிந்த) உயர்ந்த காடுமாகிய— முன் காணுதன கண்டு கடந்தனன் - முன்னே தாங்காணுதவைகளை யெல்லாங்கண்டு நீங்கினர். எ-று.

மொழியும் மொழியும் பரிசொன் றிலதா முன்னுன் மறையோ தமுழங் கியகான், வழியும் வழியும் மதுவார் புதுவீ வாசந் தகவீ சியவார் குவளைக், கழிபுங் கழியும் படிவந் தலர்பொற் கமலங் கண்மலங் களையுங் கயநீர், பொழியும் விழியும் மனமுங் குளிரப் புதுமா முனிகண் டுபுகழ்ந் தனனே.

இ - ள். முன் நான்மறை - பழமையாகிய நான்குவேதங்களும்— மொழியும் ஒழியும் பரிசு ஒன்று இலதா - (தங்கள்) வாக்கு ஒழியுந்தன்மை சிறிதும் இல்லையாகும்படி— ஓதம் முழங்கிய கான் வழியும் - கடல் போல ஒலிக்கின்ற காட்டு மார்க்கமும்— வழியும் மது ஆர் புது வீ வாசம் தக வீசிய வார் குவளைக் கழியும் - ஒழுகுகின்ற தேனைப் பருகும் புதிய வண்டுகளுக்கிடமாகிய மணம் பொருந்த வீசிய நீண்ட குவளைகளையுடைய கழியும்— கழியும் படி வந்து - நீங்கும்படி (நடந்து) வந்து,— அலர்

பொற் கமலங்கள் - அலர்ந்த பொற்றாமரைமலர்களையும்,—மலம் களையும் கயம் - பாசத்தைப் போக்குஞ் (சிவகங்கையாகிய) திருக்குளத்தையும்,—நீர் பொழியும் விழியும் மனமும் குளிர - நீர் பொழியாநின்ற கண்ணும் மனமுங்களிகூர,—புது மா முனி கண்டு புகழ்ந்தனன் - புதிய பெரிய பாலமுனிவர் கண்டு துதித்தார். எ - று.

இலதாக என்பது இலதா எனக்குறைந்து நின்றது. அத்தலத்தை முற்பிறப்பிலே தரிசித்திருந்தாற் பிறவி கூடாமையிற் புதுமாமுனி என்றார். (கக)

சீரார் தருபொய் கைவணங் கியதன் றென்பான் மிகுமன்
பொடுசேர் சரியே, பேரா வகைசெல் லவொரா லநிழற் பிரியா
தபிரா னெதிர்நேர் படமுற், பாரா ரவிழுந் துமெழுந் துங்வி
ழிப் பயின்மா ரிபொழிந் துமழிந் துமொழிந், தாரா வமுதே
யெனையா ளுடையா யறிவே யெனவோ தினனா ரணமே.

இ - ள். சீர் ஆர்தரு பொய்கை வணங்கி - அழகு நிறைந்த சிவகங்கையை வணங்கி,—அதன் தென்பால் சேர் சரியே - அதற்குத் தெற்குப்புறமாகப் பொருந்திய வழியே—பேராவகை மிகும் அன்பொடு செல்ல - விலகாமல் மிக்க அன்புடனே நடக்கும் போது,—ஓரால நிழற பிரியாத பிரான் எதிர் நேர்பட - ஓரால மரநிழலின்கண்ணே பிரியாத சிவலிங்கப்பெருமான் தம்மெதிரே வெளிப்பட,—முன் பார் ஆர விழுந்தும் - திருமுன்னே பூமியிலே (எட்டுறுப்புந்) தோய வணங்கியும்,—எழுந்தும் - எழுந்திருந்தும்,—விழிப் பயில் மாரி பொழிந்தும் - கண்களினின்றும் பயிலாநின்ற (கண்ணீர்) மழையைப் பொழிந்தும்,—அழிந்தும் - (தம்மை) இழந்தும்,—ஆரா அமுதே - தெவிட்டாத அமிர்தமே—எனை ஆள் உடையாய் - தமியேனை அடிமையாக உடையவரே—அறிவே என மொழிந்து - ஞானமூர்த்தியே என்று சொல்லி—ஆரணம் ஓதினன் - வேதங்களை ஓதினார். எ - று. (கஉ)

முன்னாள் பதியா யினுமே தகுசீர் மூலப் பதியா ளுடை முக் கணனே, பொன்னார் தருபொய் கையுடைப் புனிதா பொடிசேர் வடிவே முடிவே யடியே, னென்னு தரவார் தருபூ சைகொள்வா யினியாய் முனியா தெனவோ திமடுப், பன் னாண் மலர்கொய் ததின்மூழ் கியருட் பாதங் களணைந் துப ணிந் தனனே.

இ-ள். முன் ஆள் பதி ஆயினும் - அநாதிகாலந்தொடங்கி (ஆன்மாக்களைப் பெத்தமுத்தியிரண்டினும்) ஆண்டருளும் பதியேயாயினும்—மே தகு சீர் மூலப்பதி ஆள் உடை முக்கணனே-மேன்மை தக்க சிறப்பையுடைய மூலத்தானமாகிய இத்திருப்பதியை ஆளுதலையுடைய முக்கண்ணரே,—பொன் ஆர் தரு பொய்கை உடைப் புனிதா - பொற்றாமரை நிறைந்த சிவகங்கையையுடைய சுத்தரே,—பொடி சேர் வடிவே - விபூதி பொருந்திய திருமேனியையுடையவரே,—முடிவே - (எல்லாப் பொருளுக்கும்) முடிவே,—இனியாய் - (மெய்யடியார்களுக்கு) இனியவரே,—அடியேன் என் ஆதரவு ஆர்தரு பூசை முனியாது கொள்வாய் என ஓதி - அடியேனாகிய என்னுடைய விருப்ப நிறைந்த பூசையை வெறுக்காது கொண்டருளும் என்று விண்ணப்பஞ்செய்து,—மடு மூழ்கி - சிவகங்கையிலே ஸ்நானம்பண்ணி,—அதில் பல் நாள் மலர் கொய்து அணைந்து - அதிற்பலவாகிய அன்றலர்ந்த பூக்களை எடுத்து வந்து,—அருட் பாதங்கள் பணிந்தனன் - சத்திரூபமாகிய திருவடிகளை (ப்பூசித்து) வணங்கினார். எ - று. (கஙு)

தடமா மலர்கொண் டுவணங் கியருந் தாவா முனிதில்லை வனச் சரியே, குடபா லணைவான் மணமா மலருங் குளமுங் கரையுந் தளமுங் குறுகித், திடமார் தருவே நிழலா வெழி லார் சிவலிங் கமிருத் தியருத் தியொடங், கிடமா கவிரண் டிடமும் பணிவுற் றிறையே துணையா கவிருந் தமர்நாள்.

இ - ள். தாவா அரு முனி - கெடுதலில்லாத பெரிய பால முனிவர்—தடம் மா மலர் கொண்டு வணங்கி - திருக்குளத்தி னுள்ள பெரிய பூக்களைக் கொண்டு பூசித்து,—தில்லை வனக்குட பால் சரியே அணைவான் - தில்லைவனத்திலே மேற்குப் பக்கத் திலே போகும் ஒரு வழியே செல்லுகையில்,—மணம் மா மல ரும் குளமும் கரையும் தளமும் குறுகி - மணத்தையுடைய பெரிய பூக்களையும் வாவியையும் கரையையும் வெளியிடத்தை யும் அணுகி,—திடம் ஆர் தருவே நிழலா - வலி பொருந்திய மரமே நிழல் செயவதாக—எழில் ஆா சிவலிங்கம் இருத்தி - அழகு நிறைந்த ஒரு சிவலிங்கந்தாபித்து,—அருத்தியொடு அங்கு இடம் ஆக - ஆசையோடு அவ்விடமே (தமக்கு) இடமாக (ஒரு பர்ணசாலை உண்டாக்கி,)—இரண்டு இடமும் பணிவுற்று - (அவ் விடமும் திருமூலட்டானமுமாகிய) இரண்டிடத்தும் வணங்கிக் கொண்டு,—இறையே துணை ஆக இருந்து அமர் நாள் - சிவ பெருமானே துணையாகப் பொருந்தி இருக்கு நாளிலே. எ - று.

பர்ணசாலை இலைகளாலும் புற்களாலும் வேயப்பட்ட குடி சை. பர்ணம் இலை. (கசு)

காலம் பெறநீ றணிமா முனிநீர் கமழ்குண் டிகைதண் டுகரண் டிகையுட், சாலும் பலபோ துசமித் தொளிர்புற் சாகா திபலா சிலைதா மிகமே, ஞாலுஞ் சடையெட் டுமுடித் தொருநா ணணிமீத் திகழ்ச் சனைபண் ணமருப், பாலொன் றலராய் பொழுதே பழுதார் பலமா மலர்கண் டுபகர்ந் தயர் வான்.

இ - ள். காலம் பெற நீறு அணி மா முனி - பிராதக்காலம் பொருந்த விபூதி தரித்துச் சந்தியாவந்தனமுடித்த பெரிய பால முனிவர்,—நீர் கமழ் குண்டிகை - சலங்கமழ்கின்ற கமண்டல மும்—தண்டு - தண்டும்—கரண்டிகையுள் சாலும் பல போது - திருப்பூங்கூடையுள் நிறைந்த பலபூக்களும்—சமித்து - சமித்

தக்களும்—ஒளிர் புல் - விளங்குகின்ற (தருப்பை அறுகு முதலிய) புற்களும்—சாகாதி - சாகமூலபலங்களும்—பலாசு இலை தாம் மிக - பலாசிலையும் மிகக் கொண்டுவந்து,—மேல் - (அதற்கு) மேலே—நாலும் சடை எட்டும் முடித்து - தாழ்ந்த சடையெட்டும் (உயரக்கட்டி) முடித்து,—ஒருநாள் நண்ணித்திகழ் அர்ச்சனை பண்ண - ஒரு நாளிலே (திருமுன்) சென்று விளங்காநின்ற பூசையைச் செய்தற்கு—பால் மரு ஒன்று அலர் ஆய் பொழுது - தம்மிடத்து மணம் பொருந்திய பூக்களை ஆராயும்பொழுது,—பழுது ஆர் பல மா மலர் கண்டு - குற்றமிகுத்த பல பெரும்பூக்களைக் கண்டு—பகர்ந்து அயர்வான் - (இங்ஙனஞ்) சொல்லிச் சோகிப்பாராயினர். எ - று. (௧௫)

வண்டூ தும்விடிந் தெனிலல் லெனிலோர் வழியுந் தெரியா
துமரங் கண்மிகக், கண்டூ ரவளர்ந் துகரஞ் சரணங் காலும்
பனியால் வழுவுங் கழிதே, னுண்டூ றுபடுத் தியசெம்
மனல்வீ யொத்தே றுமரும் புவிரும் பலரைப், பண்டூ
ரொடெரித் தபரம் பொருளார் பழுதென் றனரென் றுபகர்ந்
தயர்வான்.

இ - ள். விடிந்து எனில் வண்டு ஊதும் - (பூக்களை) விடிந்த பின் எடுக்கவெனின் வண்டுகள் ஊதும்,—அல் எனில் ஓர் வழியும் தெரியாது - இராத்திரியிலே எடுக்கவெனின் ஒருவழியும் தெரியாது;—மரங்கள் கண் மிகத் தூர வளர்ந்து கரம் சரணம் காலும் பனியால் வழுவும் - (கோங்கு முதலிய) மரங்களில் எடுக்கவெனிற கணுக்கள் மிக நீள வளர்ந்தபடியினாலே கையுங் காலும் வழுகின்ற பனியினால் வழுக்கும்;—பண்டு விரும்பலரை ஊரொடு எரித்த பரம்பொருளார் - ஆதிகாலத்திலே பகைவராகிய அசுரரை முப்புரத்தோடும் எரித்தருளிய சிவபெருமான்—கழி தேன் உண்டு ஊறு படுத்திய - (வண்டுகள்) மிகுந்த தேனை உண்டு ஊறுபடுத்திய பூவும்—செம்மல் - பழம்பூவும்—நல் வீ

ஒத்து ஏறும் அரும்பு - நல்ல பூவோடு பொருந்தி ஏறிய அரும்பும்—பழுது என்றனர் என்று பகர்ந்து அயர்வான் - குற்றமுடையனவென்று (சிவாகமத்தில்) அருளிச்செய்தார் (இதற்கு யாது செய்வேன) என்று சொல்லித் துக்கமுறுவாராயினர். எ-று. ()

தண்ணார் மதிசூ டுசடா மகுடத் தலைவா கடைவாழ் வுதவிர்ப் பவனே, கண்ணார் நுதலோ யொருமான் மறிசேர் கரவா வரவா கருமூ லகரா, மண்ணார் புகழ்தில் லைவனம் பிரியா மணியே யெனையா ளமகிழ்ந் தனையே, லெண்ணு துநினைந் தவைதந் தருண்மற் றின்பார் தருமன் பிலனென் றயர்வான்.

இ-ள். தண் ஆர் மதி சூடு சடாமகுடத் தலைவா - குளிர்மை பொருந்திய பிறையைத் தரித்த சடாமுடியையுடையநாயகரே,—கடை வாழ்வு தவிர்ப்பவனே - கீழாகிய (பிரபஞ்ச) வாழ்க்கையைத் தீர்ப்பவரே,—கண் ஆர் நுதலோய் - கண் பொருந்திய நெற்றியையுடையவரே,—ஒரு மான் மறி சேர் கரவா - ஒரு மான்மறி பொருந்திய கையையுடையவரே,—அரவா - பாம்பையணிந்தவரே,—கரு மூலகரா - பிறவிக்கு மூலமாகிய பாசத்தை அரிப்பவரே,—மண் ஆர் புகழ் தில்லை வனம் பிரியா மணியே - பூமியிலுள்ளார் துதிக்குந் தில்லைவனத்தை நீங்காத சிந்தாமணியே,—எனை ஆள மகிழ்ந்தனையேல் - தமியேனை ஆட்கொள்ள விரும்பினீராயின்,—எண்ணாது நினைந்தவை தந்து அருள் - (அடியேனிடத்தே பத்திஞான வைராக்கியமில்லாமையைச்) சிந்தியாது அடியேன் நினைத்த வரங்களைத தந்தருளும்;—மற்று இன்பு ஆர்தரும் அனபு இலன் என்று அயர்வான் - வேறொருசுகத்தையும் அநுபவிக்கும் விருப்பமில்லேன் என்று தளர்வாராயினர். எ - று. (௧௭)

அன்பூ டுருகப் பணிவா ரிலரே லருளா யெனும்வாய் மையறிந் தும்விடா, வென்பூ சையுநே சமும்யா னுமுனக்

கெங்கே யெனநொந் தயர்வா னெதிரே, வன்பூ தமிகப் புடை சூழ் விடைமேன் மதிசூழ் சடைவா னவர்கோன் வரநேர், முன்பூ தலமீ துபணிந் திருகண் முகமார் புனலா டினன்மா முனியே.

இ - ள். அன்பு ஊடு உருகப் பணிவார் இலரேல் அருளாய் எனும் வாய்மை அறிந்தும் - அன்பினாலே மனநெகரைய வணங்குவோர் இலராயின் அருள் செய்யீர் என்னும் உண்மையை அறிந்தும்—விடா என் பூசையும் நேசமும் யானும் உனக்கு எங்கே என நொந்து அயர்வான் எதிரே - விடாத என்னுடைய பூசையும் பொய்யன்பும் நானும் உமக்கு எங்கேயென்று நொந்து சோகிப்பவராகிய பாலமுனிவரெதிரே,—மதி சூழ் சடை வானவர்கோன் - பிறை பொருந்திய சடையையுடைய தேவதேவராகிய சிவபெருமான்—புடை வன்பூதம் மிகச் சூழ் விடைமேல் வர - பக்கத்திலே வலிய பூதங்கள் மிகச்சூழும் இடபத்தின் மேல் எழுந்தருளிவர,—நேர் முன் பூதலமீது பணிந்து - நேரே திருமுன்பு பூமியிலே வணங்கி,—இரு கண் முகம் ஆர் புனல் ஆடினன் மா முனி - இரண்டு கண்களினின்றும் முகம் வழியாகச் சொரிந்து நிறைந்த நீரினாலே ஸ்நானஞ்செய்தார் பெரிய பாலமுனிவர். எ - று. (கஅ)

ஆலந் தருவா னமுதா மொழியா லருமா முனியர்ச் சனையிச் சையினின், சீலந் திகழ்வாய் மைமகிழ்ந் தனமீ சிந்தித் தவரம் பலசெப் பெனவென், காலுங் சரமும் புலியின் மலியக் கண்ணங் கவைதங் கவிரங் கிமுதற், கோலந் திகழ்பூ சைகொளென் றுவரங் கொண்டா னவையெந் தைகொடுத் தனனே.

இ - ள். ஆலம் தருவான் - ஆலமரநிழலின்கண் எழுந்தருளியிராநின்ற சிவபெருமான்,—அமுது ஆம் மொழியால் - அமிர்தமயமாகிய திருவாக்கினால்,—அரு மா முனி - அரிய பெரிய

பாலமுனியே,—அர்ச்சனை இச்சையின் நின் சீலம் திகழ் வாய்மை மகிழ்ந்தனம்-(நமக்குச் செய்யாநின்ற) பூசையில்வைத்த ஆசையை யுடைய உனது நல்லொழுக்கம் விளங்கும் உண்மையைக் கண்டு நாம் மனமகிழ்ந்தேம்—நீ சிந்தித்த வரம் பல செப்பு என - நீ நினைத்த வரங்கள் பலவற்றைச் சொல்வாயாக என்று அருளிச் செய்ய,—(அது கேட்ட பாலமுனிவர்)—என்கா லும் கரமும் புலியின் வலிய - அடியேனுடைய கால்களுங் கைகளும் புலிக் கால்களும் புலிக்கைகளும்போல (வலிய உகிர்ப்பற்றுடையன வாய்) இருக்கும்பொருட்டும்—அங்கு அவை கண் தங்க இரங்கி- அங்கே அவைகளிலே கண்கள் பொருந்தும்பொருட்டும் இரங்கி யருளி—முதற் கோலம் திகழ் பூசை கொள் என்று வரம் கொண் டான் - (புட்பவிதிப்படி செய்யப்படும்) முதன்மையாகிய அழகு விளங்குகின்ற பூசையைக் கொண்டருளும் என்று வரம் வேண் டிக்கொண்டார்;—எந்தை அவை கொடுத்தனன் - எமது பிதா வாகிய சிவபெருமான் அவ்வரங்களைக் கொடுத்தருளினார். எ-று.

வழுக்காமற் பற்றியேறுதற்கு நகங்களும், பார்த்து நடத் தற்கும் பூக்களைப் பழுது பார்த்தெடுத்தற்குங் கண்களும் வேண் டப்பட்டன. (௧௧)

விண்ணு டருநா டருமே லவனே விரவா வரமுந் தருவா னெனநற், கண்ணு றுமரும் புபெரும் புனன்மெய்க் காலா றெனவா றருகா தன்மையான், மண்ணு ரவணங் கவணங் குடனே மறைவா னிறைவான் வழிமே வியபின், பண்ணு ரவியாக் கிரபா தனெனும் பாவார் பெயரோ தினபா ரிடமே.

இ - ள். விண்ணுடரும் நாடு அரு மேலவனே விரவா வர மும் தருவான் என - தேவர்களுங் காண்டற்கரிய மேலோராகிய சிவபெருமானே (தமியேன்பொருட்டு இவ்விடத்து) எழுந்தருளி வந்து (வேண்டிய) வரங்களையுந் தந்தருள்வார் என்று,—நற் கண் ஆறும் அரும்பு பெரும் புனல் - நன்மையாகிய ஆறுகண்களினின்

றும் பாயும் பெருநீர்—மெய்க் கால் ஆறு என ஆறு அரு காதன்மையால் - சத்தியமாக ஆற்றுக்கால்போல ஒழியாமற் செல்லும் பத்திமையால்—மண் ஆர வணங்க - பூமியிலே (எட்டுறுப்புந்) தோய நமஸ்கரிக்க,—அணங்குடனே மறைவான் இறை வான் வழி மேவியபின் - உமாதேவியாரோடு மறைவாராகிய சிவபெருமான் ஆகாயமார்க்கமாகச் சென்றருளியபின்,—பண் ஆர - இசைப்பாட்டுக்கள் நிறைய—பாரிடம் பா ஆர் வியாக்கிரபாதன் எனும் பெயர் ஓதின - பூமியினுள்ளார்கள் (எங்கும்) பரவுதல் பொருந்திய வியாக்கிரபாதர் என்னுந் திருநாமத்தைச் சொல்லினர். எ - று. (௨௦)

அறுகா லெழுகால் பிறகா மடுவுற் றமையா நியதிச்
சமைவா தரியா, மறைகா தலினு லறைவா னறவார் மந்தா
ரவரும் புசெருந் திகுரா, நிறைபா திரிகோங் குயர்சண்
பகமே நீர்வாழ் மலர்வல் லிகொணீண் மலர்கொண், டிறையா
னடியே முறையால் வழிபட் டெண்ணுர் தருகா லமிருந்
தனனே.

இ - ள். அறுகால் எழு கால் பிறகா மடு உற்று - வண்டுகள் எழுங்காலம் பின்னாக (முன்னே) பொய்கையை அடைந்து,—அமையா நியதிச் சமைவு ஆதரியா - இன்றியமையாத நியதி முடித்தலை விரும்பிச் செய்து,—மறை காதலினால் அறைவான் - வேதங்களை அன்பினோடும் உச்சரித்துக்கொண்டு சென்று,—நறவு ஆர் மந்தாரவரும்பு - மணநிறைந்த மந்தாரமுகையும்—செருந்தி - செருந்திமலரும்—குரா - குராமலரும்—நிறை பாதிரி - நிறைந்த பாதிரிமலரும்—கோங்கு - கோங்கமலரும்—உயர் சண்பகம் - உயர்ந்த சண்பகமலருமாகிய கோட்டுப் பூக்களையும்—நீர் வாழ் மலர் - நீரிலே பொருந்திய பூக்களையும்—வல்லி கொள் நீள் மலர் கொண்டு—கொடியிலே பொருந்திய நீண்ட பூக்களையும் எடுத்துக்கொண்டுவந்து,—இறையான் அடியே முறையால்

வழிபட்டு - சிவபெருமானுடைய திருவடிகளைச் சிவாகமவிதிப் படி பூசித்து,—எண் ஆர் தரு காலம் இருந்தனன் - எண்ணி றைந்த காலம் இருந்தார் பாலமுனிவர். எ-று. (உக)

நற்றந் தைபுலிச் சரணங் கரநீ ணயனங் கள்பரித் தமைகா ணநயந், துற்றங் கெதிர்சென் றுவணங் கமகிழ்ந் தொளிர்மே னியின்வாய் மையுவந் துடனே, பொற்றண் மலர்வா விபடிந் திறையைப் பூசித் தருண்மே வுபுலீச் சரமும், பற்றும் பெருமா னையுமர்ச் சனைசெய் பயில்வா ரவிருந் துபரிந் தொருநாள்.

இ - ள். நற்றந்தை - நல்ல பிதாவாகிய மதியந்தினமுனி வர்,—புலிச் சரணம் கரம் நீள் நயனங்கள் பரித்தமை காண நயந்து - (தம்முடைய பிள்ளை) புலிக்காலையும் புலிக்கையையும் (அவைகளிலே) நீண்ட கண்களையும் பெற்றமையைக் காண விரும்பி,—உற்று-தில்லைவனத்தை அடைந்து,—மகிழ்ந்து அவரு எதிர் சென்று வணங்க - (அக்குமாரர்) மனமகிழ்ந்து அங்கே தம் மெதிர் வந்து நமஸ்கரிக்க,—ஒளிர் மேனியின் வாய்மை உவந்து - (தாம் அவருடைய) விளங்காநின்ற திருமேனியின் மெய்மை யைக் கண்டு மகிழ்ந்து,—உடனே தண் பொன் மலர் வாவி படிந்து - அப்பொழுதே குளிர்மையாகிய பொற்றாமரைமலர் களையுடைய சிவகங்கையிலே ஸ்நானஞ்செய்து,—இறையைப் பூசித்து - திருமூலத்தானமுடைய தம்பிரானுரைப் பூசித்து,— அருள் மேவு புலீச்சரமும் பற்றும் பெருமானையும் - கருணை தங் கிய திருப்புலீச்சரத்தைப் பொருந்திய சிவலிங்கப்பெருமானை யும்—அர்ச்சனை செய் பயில்வு ஆர - பூசைசெய்யும் பயிற்சி மிக—இருந்து - (அவ்வியாக்கிரபாத முனிவருடைய பர்ணசாலை யில்) இருந்து,—பரிந்து ஒருநாள் - (அவர்மேல்) அன்புகொண்டு ஒரு நாளிலே. எ - று. (உஉ)

நற்பான் மிகுதந் தையரும் புதல்வா நஞ்சந் ததியுய்ந் திட நண் ணினையே, லிற்பா லினியா குதியா திமறித் திடுவா னுடையா னெடுவா னடைவான், முற்பா லுனையா னெனநீ பெறுமா முனியா துகொளென் றுவசிட் டமுனிக், கற்பார் தருபின் னியைமன் னுமணக் கடனு லுடனு நெறிகண் டனனே.

இ - ள். நற் பால் மிகு தந்தை - நல்ல குணத்தினுன் மிக்க பிதாவாகிய மத்தியந்தினமுனிவர்,—அரும் புதல்வா - (நான் பெறுதற்கு) அரிய புதல்வனே,—நம் சந்ததி உய்ந்திட நண்ணினையேல் - நமமுடைய சந்ததி தழைத்தோங்கப் பொருந்தினு யாயின்,—இனி இற்பால் - இனி இல்லறத்தின்பகுதியை அடையக்கடவாய்,—ஆகுதி ஆதி மறித்து இடுவான் உடையான் நெடு வான அடைவான் - (பிதிரர்பொருட்டு) ஓமம் பிண்டதானம் தருப்பணமுதலியவைகளைக் கைம்மறித்துச் செய்வானுகிய புத்திரனையுடையவனே பெரிய சுவர்க்கத்தை அடைவான்;—முற் பால் உனை யான் என நீ பெறுமா-முன்னே உரிமையாக உன்னை நான பெற்ருற்போல (ஒரு புத்திரனை) நீ பெறும்படி—முனியாது கொள் என்று - (என்வாக்கைத) தள்ளாது கொள்ளக் கடவாய் என்று சொல்லி (உடன்படுத்திக்கொண்டு,)—வசிட்ட முனிக் கறபு ஆர்தரு பின்னியை - வசிட்டமுனிவருடைய கறபு மிக்க தங்கையை—மன்னும் மணக்கடனுல் - நிலைபெற்ற விவாக விதிப்படி—உடன் ஆம் நெறி கண்டனன் - (அவ்வியாக்கிரபாத முனிவருக்கு மனைவியாகிக்) கூடியிருக்கும்படி செய்தார். எ-று.

பின்பக் கொடிமன் னுபமன் னியனைப் பெறவந் தவருந் ததிகொண் டுபெயர்ந், தின்பச் சுரபிப் பொழிபா லுகர்வித் தெழிலா ரவளர்த் திடுநா ளிவர்தா, மன்பிற் புணரக் கொணர்வித் துமகிழ்ந் தயிலென் றிடுமுன் பயிலும் படிசேர்,

புன்பற் கமர்பண் டமுமுண் டறிபால் போலுய்த் தனவும்
புகழா திகழ்வான்.

இ - ள். பின்பு அக்கொடி மன் உபமன்னியனைப் பெற - பின்பு அந்தத்தேவியார் நிலைபெற்ற உபமன்னியபகவானைப் பெற,—வந்த அருந்ததி கொண்டு பெயர்ந்து - (அங்கே) வந்த அருந்ததியார் (அவரைத் தம்முடைய ஆச்சிரமத்துக்குக்) கொண்டுபோய்,—இன்பச் சுரபிப் பொழி பால் நுகர்வித்து - இன்பத்தைத் தருங் காமதேனுவினது பொழிந்த பாலையூட்டி— எழில் ஆர வளர்த்திடு நாள் - அழகு மிக வளர்க்குநாளிலே,— இவர் தாம் அன்பின் புணரக் கொணர்வித்து - (வியாக்கிரபாத முனிவரும் தேவியாருமாகிய) இவர்கள் புத்திரவாஞ்சையினாலே அவரை (த் தங்கள் பர்ணசாலையிலே) பொருந்தக் கொண்டு வரச்செய்து,—மகிழ்ந்து - மனமகிழ்ந்து—அயில் என்று இடு - புசிப்பாயாக என்று கொடுத்த—முன் பயிலும் படி சேர் புன் பறகு அமர் பண்டமும் - (இவர்கள்) முன்னே உண்டு பழகிய தன்மை பொருந்திய சிறிய பல்லுக்கிசைந்த பதார்த்தங்களை யும்—உண்டு அறி பால் போல் உய்த்தனவும் - (முன்னே தாம்) உண்டறிந்த பால்போலச்சேர்த்த திரவியங்களையும்—புகழாது இகழ்வான் - (அவ்வுபமன்னியபகவான்) புசியாது உமிழ்ந்து போடுவாராயினார். எ - று.

முன்பயிலும்படி சேர் பண்டமென்றது சாகமூலபலங்களை. உண்டறிபால்போலுயத்தனவென்றது சலத்திற்கரைத்தமாவை.

மணமே தருபால் பெறுமா றமுமா மகனூர் முனியாம் வறியோ மறியோ, முணவே யினிதா மவைதா மிவர்கா ணுடையா ரெனவாழ் வுடையா னெதிரே, துணர்மே லெழு வெங் கனறங் கிடத் துஞ்சுங் தொழிறஞ் செனைஞ் சுழு தக், கணமே யிறையா னிறையா லலையுங் கடல்பெற் றது கண் டுகளித் திடுவான்.

இ - ள். மா மகனார் மணம் மேதகு பால் பெறு மாறு அழ - பெருமையாகிய திருக்குமாரர் வாசனை மிக்க (காமதேனுவின்) பாலைப் பெறும்படி அழ,—முனி - வியாக்கிரபாதமகாமுனிவர்—யாம் வறியோம் - நாங்கள் வறியோம்,—இனிது ஆம் உணவு அறியோம் - இனிதாகிய உணவை அறியோம்;—அவை தாம் உடையார் இவர் காண் என - அவைகளையுடையவர் இவரேகாண் என்று—வாழ்வு உடையான் எதிரே - எல்லாச் செல்வமுமுடைய சிவலிங்கப்பெருமான் சந்நிதியிலே வளர்த்திவிட,—துணர் மேல் எழு வெங்கனல் தங்கி - (ஆதாரபதும) தளங்களின்மேலே சுவாலிக்கின்ற வெவ்விய உதராக்கினி பொருந்துதலினாலே—நடுத் துஞ்சும் தொழில் தஞ்சு என - அவமிருத்துகருமமே புகலிடமென்று—நைஞ்சு அழுது - வருந்தி அழுது,—அக்கணமே இறையால் அலையும் நிறை பாற் கடல் பெற்று - அக்கணத்திற்றானே சிவபெருமானால் அலையாநின்ற நிறைந்த திருப்பாற்கடலைப் பெற்று,—அது கண்டு களிதந்திடுவான் - அதனைப் பருகிச் சுவை கண்டு களிகூர்வாராயினார். எ - று. தஞ்சம் தஞ்சு எனக் குறைந்து நின்றது. (௨௫)

ஆளும் பெருமா னெதிரங் கொருநா ளலர்பங் கயவா
தனமா யமரத், தாளொன் றுதலஞ் சகனந் தவிரச் சடாந்
தொடர்மார் பெதிர்தள் ளவிழத், தோளங் கைபொரக்
களமே னிமிரச் சுரிதந் தநிரைப் பிரிவந் தரநா, வாளொன்
றுவிழிக் கடைதுண் டம்விடா வண்ணந் தகுதிண் ணியமா
முனியே.

இ - ள். வண்ணம் தகு திண்ணிய மா முனி - குணமிக்க வலிய வியாக்கிரபாதமகாமுனிவர்,—அங்கு ஆளும் பெருமான் எதிர் - அங்கே (தம்மை) ஆண்டருளுஞ் சிவலிங்கப்பெருமானுடைய சந்நிதியிலே—ஒருநாள் - ஒருநாள்—அலர்பங்கயவாதனமாய் அமர - ஆதனம் விரிந்த பதுமாதனமாய்ப்பொருந்த,—

தாள் ஒன்று தலம் சகனம் தவிர - ஒருகால் பூமியையுஞ் சகனத்தையும் பொருந்துதலொழிய,—சடரம் தொடர் மார்பு எதிர் தள்ள - வயிறு தொடர்ந்து மார்பை முன்னே தள்ள,—தோள் விழ - இரண்டுதோள்களுந்தாழ,—அம் கை பொர - அழகிய கைகள் (மடிமீது குறுக்காக ஒன்றன்மேல் ஒன்று) பொருந்த,—களம் மேல் நிமிர - கழுத்துமேலே நிமிர,—சுரி தந்த நிரைப் பிரிவு அந்தரம் நா - சுரிந்த பல்வரிசைகளின் பிரிவினிடையே நாக்குப் பொருந்த,—வாள் ஒளனறு விழிக்கடை துண்டம் விடா - ஒளி பொருந்திய கடைக்கண்களை நாசிநுனியிலே வைத்து. எ-று.

இடவுள்ளங்கை மீது வலப்புறங்கையை வைத்தல் வேண்டுமென்றறிக. சகனம் கடியின் முற்பக்கம். தாள் அம் சகனம் ஒன்றுதல் தவிர எனக்கொண்டு கால்கள் அழகிய சகனத்தைத் தீண்டுதலொழிய எனப் பொருள் கூறினும் பொருந்தும். (உ௯)

சீரார் சிவயோ கமகம் புணரச் செறியின் புணரக் குறி
யின் புறமா, றேரார் தருதா ருவனத் திடையா றெண்ணா
யிரமா முனிவர்க் கிறைவ, ஞோரா தவர்மோ கமொழித்
தருளா லொருநா ணடமா டலுகந் தனனென், றூரா
வுணர்வா லறிவுற் றயரா வந்தோ வெனநொந் தயர்கின்
றனனே.

இ-ள். சீர் ஆர் சிவயோகம் அகம் புணர - சிறப்பு மிக்க சிவயோகம் மனத்திலே பொருந்த—செறி இன்பு உணர - விளைந்த அநுபவஞானத்தினுலே பார்த்தவிடத்து—குறி இன்பு உறும் ஆறு - ஞேயமாகிய சிவத்தோடு கலந்து இன்பம் அநுபவிக்குநெறியிலே,—ஏர் ஆர்தரு தாருவனத்திடை - அழகுநிறைந்த தேவதாருவனத்திலே—இறைவன் - சிவபெருமான்—ஓராதவர் ஆறெண்ணாயிர மா முனிவர்க்கு - (தம்மை) அறியாதவர்களாகிய நாற்பத்தெண்ணாயிர மகாமுனிவர்களுக்கு—மோகம் ஒழித்து - மோகத்தைத் தவிர்த்து—ஒருநாள் அருளால் நடம் ஆடல் உகந்

தனன் என்று - ஒருநாள் அருளினாலே திருநிருத்தஞ்செய்தருளி னார் என்று—ஆரா உணர்வால் அறிவுற்று - சிறிதறிவினாலே கண்டு—அயரா - சோகித்து,—அந்தோ என நொந்து அயர்கின் றனன் - ஐயோ என்று நொந்து தளர்கின்றவராயினார். எ-று. ()

நன்மே னிகொடெந் தைபிரான் வெளியே நடமா டியநா
டிடமா யிடநா, முன்னே யமரா வகைமா முனிவன் மூலப்
பதிசே ரமொழிந் தனனற், றன்னே ருறுதா ளருணா முணா
ரத் தருமோ மிகுமன் பகமோ விலதா, லென்னே பெருமா
னொருமா னுடன்வந் தெங்கே பரதந் தருமென் றயர்வான்.

இ - ள். எந்தை பிரான் நல் மேனி கொடு வெளியே நடம் ஆடிய நாடு - எம்முடைய பிதாவாகிய சிவபெருமான் நல்ல திரு மேனிகொண்டு வெளியே நின்று திருநிருத்தஞ் செய்தருளிய தேவதாரு வனமே—இடம் ஆயிட நாம் முன்னே அமராவகை - (நமது சிவபூசைக்குத்) தானமாக நாம் முன்னே பொருந்தாத படி—மா முனிவன் மூலப்பதி சேர மொழிந்தனன் - (தந்தையா ராகிய) மத்தியந்தினமகாமுனிவர் இந்தத் திருமூலத்தானத்தை அடையும்வண்ணங் கற்பித்தருளினார்;—நல் தன் ஏர் உறு அருள் தாள் - நன்மையாகிய அச்சிவபெருமானுடைய அழகு பொருந் திய சத்திரூபமாகிய திருவடி—நாம் உணரத் தருமோ - நாம் அறியத்தருமோ!—அகமோ மிகும் அன்பு இலது - (நமது) நெஞ்சத்தின்கண்ணே மிக்க அன்பில்லை;—என்னே - இஃ தென்னே!—பெருமான் ஒரு மானுடன் எங்கே வந்து பரதம் தரும் என்று அயர்வான் - சிவபெருமான் ஒப்பில்லாத உமாதேவி யாரோடும் எப்படி எழுந்தருளிவந்து திருநிருத்தந் தரிசிப்பித் தருளுவர் என்று சோகிப்பாராயினார். எ - று.

பின்பு தெளிந்து சிதம்பரதலந் திருநிருத்தத்தைத் தரும் என்று துணிகின்றார். (உ௮)

அத்தன் பரதத் துவனித் தநடத் தமரும் பொதுவின்
பெயர்மன் றமலஞ், சத்தும் பரிரண் மயகோ சமகத் தனி
புண் டரிகங் குகைவண் ககனஞ், சுத்தம் பரமற் புத
மெய்ப் பதமச் சுழுனு வழிஞா னசுகோ தயநற், சித்தம் பர
முத் திபரப் பிரமந் திகழுஞ் சபைசத் திசிவா லயமே.

இ - ள். அத்தன் பரதத்துவன் - (உலகத்துக்குப்) பிதாவும் தத்துவங்களைக் கடந்தவருமாகிய சிவபெருமான்—நித்த நடத்து அமரும் பொதுவின் பெயர் - அனவரததாண்டவத்திலே (திருவுளம்) பொருந்தப்பெற்ற அம்பலத்தின் பெயர்களாவன,—மன்று - மன்றும்,—அமலம் - அமலமும்,—சத்து - சத்தும்,—உம்பர் - உம்பரும்,—இரண்மயகோசம் - இரண்மயகோசமும்,—மகத் - மகத்தும்,—தனி - தனியும்,—புண்டரிகம்-புண்டரீகமும்,—குகை - குகையும்,—வண்ககனம் - வளவிய ககனமும்,—சுத்தம் - சுத்தமும்,—பரம் - பரமும்,—அற்புதம் - அற்புதமும்,—மெய்ப்பதம் - மெய்ப்பதமும்,—அச்சுழுனுவழி ஞான சுகோதயம் - அந்தச் சுழுனுவழிஞானசுகோதயமும்,—நற் சித்தம்பரம் - நல்ல சிதம்பரமும்,—முத்தி - முத்தியும்,—பரப்பிரமம் - பரப்பிரமமும்,—திகழும் சபை - விளங்காநின்ற சபையும்,—சத்தி - சத்தியும்,—சிவாலயம் - சிவாலயமுமாம். எ-று.

சருவான்மாக்கட்கும் பொதுவாய்ச் சம்சாரவழக்கறுக்கும் அம்பலமாதலின் மன்றெனவும், இயல்பாகவே பாசத்தினீங்கி நிற்றலின் அமலமெனவும், காலத்தால் வரையறுக்கப்படாது உள்ளதாதலிற் சத்தெனவும், மேலாகிய பொருளாதலின் உம்பரெனவும், பொன்மயமாகிய கோசமாதலின் இரண்மயகோசமெனவும், பெரிதாதலின் மகத்தெனவும், சுத்த கேவலமாதலிற் றனியெனவும், பூமிக்கு இருதயகமலமாதலிற் புண்டரீகமெனவும், யாவர்க்கும் புகலிடமாதலிற் குகையெனவும், நித்தமும் வியாபகமுஞ் சுத்தமுமாகிய பரமாகாசமாதலிற் ககனமெனவும்,

னாய்தாதலிற் சுத்தமெனவும், எல்லாப்பொருட்கும் மேலாதலிற் பரமெனவும், காணுந்தோறும் காணுந்தோறும் புதிது புதிதாயி ருத்தலின் அற்புதமெனவும், சத்தியத்துக்கு இடமாதலின் மெய்ப்பதமெனவும், சுழுமுனைமார்க்கத்திலே ஞானாநந்தம் உதிக் கும் இடமாதலிற் சுழுனைவழி ஞானசுகோதயமெனவும், பூதா காசம்போலச் சடமாகாது சித்தேயாகலிற் சிதம்பரமெனவும், பாசநீக்கத்தானமாதலின் முத்தியெனவும், மகாமாயைக்கு மேலா தலிற் பரப்பிரமமெனவும், எக்காலத்தும் எல்லாப்பொருளினும் விளங்குதலிற் சபையெனவும், சிவசத்திவடிவாதலிற் சத்தியென வும், சிவத்துக்கு ஆலயமாதலிற சிவாலயமெனவும் பெயர் பெற்றதென்றறிக. (உக)

என்றின் னமநே கமநே கமெடா வேரார் பொதுவின்
பேரா ரணநூ, னின்றென் றுமியம் பிடுமின் னுமிதி னேரே
யெனவிங் காரே யறிவா, ரன்றந் நிலயத் தலைவன் னிலைகண்
டவருண் டெனவின் றுணர்கின் றனமான், மன்றந் தெரியத்
தருமென் றருளால் வளர்சிந் தைதெளிந் தனன்மா முனியே.

இ - ள். என்று இன்னம் அநேகம் அநேகம் எடா - என்று இன்னமும் பலபலவாக எடுத்துக்கொண்டு—ஏர் ஆர் பொது வின் பேர் - அழகு நிறைந்த சபையின் பெயர்களை—ஆரண நூல் நின்று என்றும் இயம்பிடும் - வேதநூல்கள் (இடையறாது) நின்று எக்காலமுஞ்சொல்லும்;—இன்னும் இதின் நேர் இங்கு என ஆர் அறிவார் - இன்னும் இச்சபையினது உண்மை இங்ஙன மென்று யாவர் அறியுமவர்!—அன்று அந்நிலயத் தலைவன் நிலை கண்டவர் உண்டு என இன்று உணர்கின்றனம் - முற்காலத்திலே அந்த நிருத்தராசருடைய திருநிலையைத் தரிசித்தவர்கள் உண் டென்று இன்றைக்கு அறிகின்றோம்;—மன்றம் தெரியத் தரும் என்று - (ஆதலினால் இச் சிதம்பரமே திருநிருத்தந் தரிசிக்கும் படி தந்தருளும் என்று—மாமுனி - வியாக்கிரபாதமகாமுனி

வர்—அருளால் வளர் சிந்தை தெளிந்தனன் - திருவருளினால் (அன்பு) வளராநின்ற மனம் தெளிந்தார். எ - று. (௩௦)

வியாக்கிரபாதச்சருக்கம் முற்றிற்று.

ஆ செய்யுள் - ௫௧.

---

## பதஞ்சலிச்சருக்கம்.

இந்தவகை வளர்புலிக்கா லெழில்முனிவன் றெளிந்தெந்தை
யந்தமிலா வானந்த நிருத்தமளித் தருளென்று
பந்தமறப் பணிந்திருப்பப் பரவுபதஞ் சலியவன்பால்
வந்தபடி யிருந்தபடி போனபடி வகுத்துரைப்பாம்.

இ - ள். இந்தவகை எழில் வளர் புலிக்கால் முனிவன் தெளிந்து - இந்தப்பிரகாரமே அழகு வளராநின்ற வியாக்கிரபாதமகாமுனிவர் தெளிந்து,—எந்தை அந்தம் இலா ஆனந்த நிருத்தம் அளித்தருள் என்று - எமது பிதாவாகிய சிவபெருமானே முடிவில்லாத ஆனந்ததாண்டவத்தைத் தரிசிப்பித்தருளுமென்று—பந்தம் அறப் பணிந்து இருப்ப - (அதற்கு விலக்காகிய) பாசம் நீங்கும்படி (சிவலிங்கப் பெருமானை) வணங்கிக் கொண்டிருப்ப,—பரவு பதஞ்சலி அவன் பால் வந்த படி - (யாவராலும்) துதிக்கப்படும் பதஞ்சலிமகாமுனிவர் அவ்வியாக்கிரபாதமகாமுனிவரிடத்தே வந்த தன்மையையும்—இருந்தபடி - (நெடுங்காலந்தவஞ்செய்துகொண்டு) இருந்த தன்மையையும்—போன படி வகுத்து உரைப்பாம் - (நம்மால்) இயன்ற பிரகாரம் வகுத்துச் சொல்வாம். எ - று. (௧)

பரந்தபெரும் பாற்கடலிற் பள்ளிகொள்வா னொழிந்தொருநா
ளருந்தவமா ரனந்தன்மிசை யரியாசங் கரவென்று

கரங்கள்சிர மிசைமுகிழ்ப்பக் கண்ணருவி சொரியநிமிர்ந்
திருந்தனன்முன் சலியாத வெழுதுமணி விளக்கென்ன.

இ - ள். அரி - விட்டுணுவானவர்—ஒருநாள் - ஒருநாள்—பரந்த பெரும் பாற்கடலில் அருந் தவம் ஆர் அனந்தன்மிசைப் பள்ளி கொள்வான் ஒழிந்து - விரிந்த பெரிய திருப்பாற்கடலின் கண்ணே அரிய தவநிறைந்த ஆதிசேடனாகிய சயனத்தின்மீதே சயனித்தலையொழிந்து,—அர சங்கர என்று - அரகர சங்கர வென்று உச்சரித்து,—கரங்கள் சிரமிசை முகிழ்ப்ப - கைகள் சிரசின்மேலே குவிய—கண் அருவி சொரிய - கண்களினின்றும் அருவி பொழிய—முன் சலியாத எழுது மணி விளக்கு என்ன நிமிர்ந்து இருந்தனன் - (வாயுவின்) முன் அசையாத சித்திரிக்கப்பட்ட அழகிய தீபம்போல நிமிர்ந்திருந்தார். எ - று.

கொள்வான் தொழிற்பெயர். வான்பான் பாக்கு இம்மூன்றுந் தொழிற்பெயர்விகுதியுமாமென்றறிக. (உ)

திருமகளு மணுகாது திகைத்தயரத் திருந்துபணிப்
பரிசனமு மிகநடுங்கப் பரானந்த பராயணனாய்ப்
பொருவிலநு பவநீங்கிப் புவிமிடைந்த திருளெனவந்
திருபரிதி யெழுகிரிபோ லிருகண்மலர் தரவிருந்தான்.

இ - ள். திருமகளும் அணுகாது திகைத்து அயர - (இத்தன்மை கண்ட) இலக்குமியுஞ் சமீபியாது திகைத்து வருந்த,—திருந்து பணிப் பரிசனமும் மிக நடுங்க - திருத்தமுற்ற அடிமையாகிய ஆதிசேடரும் (என்னிடத்து அபராதம் உண்டோ என்று) மிக நடுங்க,—பரானந்த பராயணனாய் - பரமானந்தத்திலே பரவசராகி,—பொருவு இல் அநுபவம் நீங்கி - ஒப்பில்லாத சிவாநுபவநீங்கி,—இருள் புவி மிடைந்தது என இரு பரிதி வந்து எழு கிரிபோல் - இருளானது பூமியெங்கும் நெருங்கியதென்று இரண்டாதித்தர் கூடி வந்து உதிக்கும் உதயபருவதம்போல—இருகண்

மலர்தர இருந்தான் - இரண்டு (சிவந்த) கண்களும் மலரும்படி இருந்தார். எ - று.

பராயணன் - பற்றுவோன், அடைவோன். (௩)

புண்டரிக விழிமலர்ந்து புணரமளி கழிந்துபுனல்
கொண்டுநிய திகண்முடித்துக் குலவியமண் டபமேறித்
தண்டரள மணிப்பந்தர்த் தபனியப்பூந் தவிசின்மிசை
யண்டர்தொழ வந்திருந்தா னானந்த வனந்தனுடன்.

இ - ள். புண்டரிக விழி மலர்ந்து - செந்தாமரைக்கண் விழித்து,—புணர் அமளி கழிந்து - (நித்திரை) பொருந்திய நாக சயனத்தினின்று நீங்கி,—புனல் கொண்டு நியதிகள் முடித்து - சலங்கொண்டு நித்தியகருமங்களை முடித்து,—குலவிய மண்டபம் ஏறி - விளங்காநின்ற மண்டபத்திலே ஏறி,—தண் தரள மணிப் பந்தர் - குளிர்மை பொருந்திய முத்துக்களாலாகிய அழகிய பந்தரின்கீழ் (இடப்பட்ட)—பூந்தபனியத் தவிசின் மிசை - பொலிவாகிய பொற்சிங்காசனத்தின்மேலே—அண்டர் வந்து தொழ ஆனந்த அனந்தனுடன் இருந்தான் - தேவர்கள் வந்து வணங்க ஆனந்த நித்திரையோடுமிருந்தார். எ - று. (௪)

தாழ்ந்தமடை யுடைபுனல்போற் றம்பிரா னடங்கருதி
யாழ்ந்தவினை வழிமாற்றி யானந்த பரவசனாய்
வாழ்ந்தளவில் பேரின்ப வாரிவழி யேயொழுகி
வீழ்ந்தகருத் தினைமீட்டு மேட்டுமடைப் புலமேற்றான்.

இ - ள். தாழ்ந்த மடை உடை புனல்போல் - பள்ளமடையிலே உடைத்தோடுஞ்சலம்போல்—தம்பிரான் நடம் கருதி - (தேவதாருவனத்திலே செயப்பட்ட) சிவபெருமானது திருநிருத்தத்தை நினைந்து,—ஆழ்ந்த வினை வழி மாற்றி - (தாம் முன்னே) அழுந்திய தீவினையாகிய வழியை ஒழித்து,—ஆனந்த பரவச

ஞய் வாழ்ந்து - சிவானந்தத்திலே பரவசராய் வாழ்ந்து—அளவு இல் பேர் இன்ப வாரி வழியே ஒழுகி வீழ்ந்த கருத்தினை மீட்டு - அளவில்லாத பேரினபமாகிய நீர்வசத்திலே சென்று அமிழ்ந்திய சித்தத்தைத் திருப்பி,—மேட்டு மடைப் புலம் ஏற்றுன் - மேட்டு மடைபோலும் விஷயஞானத்திலே ஏற்றினார். எ - று.

தம்பிரான் நமக்குப் பிரானென விரியும். தம்மென்றது ஆன்மாக்களை. (ரு)

தெள்ளுமனந் தெளிபொழுதிற் றிருந்தனந்த னடிவணங்கி
வள்ளலே யடியேனு மலரமளி மிசைமுன்போற்
பள்ளிகொள்ளா துணராதிப் பரிசிருந்த படியடியேற்
குள்ளபடி யருள்செய்ய வேண்டுமென வுரைசெய்தான்.

இ - ள். தெள்ளும் மனம் தெளி பொழுதில் - சிவஞானத் திற் புகுந்த மனம் விடயஞானத்திற்புகுந்த பொழுது,—திருந்து அனநதன் அடி வணங்கி - திருத்தமுற்ற ஆதிசேடர் (அவரு டைய) திருவடியை வணஙகி,—வள்ளலே - கொடையையுடைய எம்பெருமானே,—அடியேன் ஆம் மலர் அமளிமிசை முன்போல் பள்ளி கொள்ளாது - அடியேனுகிய விரிந்த சயனத்தின்மீது முன்புபோலச் சயனியாமலும்—உணராது - (பின்பு) விழியாம லும்—இப்பரிசு இருநத படி - இந்தப்பிரகாரம் எழுநதருளி யிருநத தனமையை—அடி யேற்கு உள்ளபடி அருளசெய்ய வேண்டும என உரை செயதான் - அடியேறகு உளளபிரகாரம் அருளிச்செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார். எ - று.

ஆஙகவனு நகைததருளகூாந தனநதனிரு வலாகமலப
பூங்குழலு மிருவென்று புகன்றெனையா ளுடைப்புனிதன்
ருங்கரிய பெருங்கருணைத் தன்மையினு லெனக்களித்த
வோங்குதிரு வருள்கேட்கி லுலவாதென் றுரைசெய்தான்.

இ - ள். ஆங்கு அவனும் நகைத்து அருள் கூர்ந்து - அங்கே அவ்விட்டுணுவுஞ்சிரித்துக் கருணை மிகுந்து,—அனந்தன் இரு - அனந்தனே இரு,—அலர் கமலப் பூங்குழலும் இரு என்று புகன்று - அலர்ந்த செந்தாமரைமலரிலிருக்கும் பூவைமுடித்த கூந்தலையுடைய இலக்குமியே நீயும் இரு என்று பணித்து,— எனை ஆள் உடைப் புனிதன் - என்னை அடிமையாகவுடைய சுத்தராகிய சிவபெருமான்—தாங்கு அரிய பெருங்கருணைத் தன்மையினால் - (என்னாலே) பரித்தற்கரிதாகிய பெரிய காருண்ணியத்தினது இயற்கையினாலே—எனக்கு அளித்த ஓங்கு திருவருள் கேட்கில்-எனக்குத தந்த மேலாகிய திருவருளை (நீங்கள்) உள்ளபடி கேட்கப் புகின்—உலவாது என்று உரை செய்தான் - (ஒரு காலத்தும்) முடியாது என்று சொல்லியருளினார். எ - று. (எ)

மன்னுமொளி வளர்பொருவில் வடகயிலை மலைமருந்தைச்
சென்னியுறத் தொழுநென்னற் றிருந்துதிரு முகமதனா
லென்னைவரவழைத்தருளி நகைத்தருள்கூர்ந்தென்கைமிசைத்
தன்னிகரில் கரமூன்றி யெழுந்திருந்தான் றனித்துணைவன்.

இ - ள். மன்னும் ஒளி வளர் பொருவு இல் வடகயிலை மலை மருந்தை - நிலைபெற்ற ஒளி வளராநின்ற ஒப்பில்லாத உத்தர கைலாசபருவதத்தின்கண்ணே எழுந்தருளியிருக்கும் மருந்து போலுஞ் சிவபெருமானை—நென்னல் சென்னி உறத்தொழ - நேற்று (நான சென்று) சிரசு பொருந்த வணங்கியமாத்திரத்தில்,—தனித் துணைவன் - ஒப்பில்லாத துணைவராகிய அச்சிவபெருமான்—திருந்து திருமுகமதனால் என்னை வர அழைத்தருளி- திருத்தமுற்ற திருமுகத்தினாலே என்னைத் (தம்மருகே) வரும்படி அழைத்தருளி,—நகைத்து அருள் கூர்ந்து - சிரித்துக் கருணை மிகுந்து,—என் கை மிசைத் தன் நிகர் இல் கரம் ஊன்றி எழுந்திருந்தான் - என்னுடைய கையின்மேலே தம்முடைய ஒப்பில்லாத திருக்கரத்தை ஊன்றிக்கொண்டு எழுந்தருளினார். எ - று.

எழுந்தபொழு தொளிர்சங்க மெம்மருங்கு மிகமுழங்கத்
தழங்கவரு மறைபரவத் தாவில்கணம் புடைசூழச்
செழுந்தவர்கண் மிடைந்தேத்தத் தேவரணி தொழத்திங்கட்
கொழுந்தணியும் பெருமானக் குலகிரியி னடியணைந்தான்.

இ - ள். எழுந்த பொழுது-எழுந்தருளிய பொழுது—ஒளிர் சங்கம் எம்மருங்கும் மிக முழங்க - விளங்காநின்ற சங்குகள் எந்தப்பக்கங்களினும் மிகவொலிக்க,—தழங்க அரு மறை பரவ - உச்சரித்தற்கரிய வேதங்கள் புகழ,—தாவு இல் கணம் புடை சூழ-குற்றமில்லாத கணநாதர்கள் பக்கங்களிலேசுற்ற,—செழும் தவர்கள் மிடைந்து ஏத்த - மாட்சிமை பொருந்திய தவத்தை யுடைய முனிவர்கள் நெருங்கித் துதிக்க,—தேவர் அணி தொழ- தேவர்கள்கூட்டம் வணங்க,—திங்கட்கொழுந்து அணியும் பெருமான் - பிறையைச்சூடுஞ் சிவபெருமான்—அக் குலகிரியின் அடி அணைந்தான் - அக்குலபருவதத்தின் அடிவாரத்தை அடைந்தருளினார். எ - று. (௧)

மேயதொரு மண்டபத்து விரைந்தணைந்து தாருவனத்
தூயவரு முனிவருளஞ் சோதிப்போ நமக்கிசைய
நீயரிவை யுருவாகி நிலவுகென வருள்செய்து
நாயகனுந் திருமேனி நலங்கிளர வலங்கரித்தான்.

இ - ள். மேயது ஒரு மண்டபத்து விரைந்து அணைந்து - (அங்கே தமக்குப்) பொருந்தியதாகிய ஒரு மண்டபத்திலே விரைந்து சென்று,—தாருவனத்து தூய அரு முனிவர் உளம் சோதிப்போம் - தேவதாருவனத்திலுள்ள பரிசுத்தர்களாகிய பெரிய முனிவர்களுடைய மனசைப் பரீக்ஷிப்போம்,—நமக்கு இசைய நீ அரிவை உரு ஆகி நிலவுக என அருள்செய்து - நம்முடைய வேடத்துக்கேற்ப நீ பெண்ணுருவமாகி விளங்கக்கடவாய் என்று ஆஞ்ஞாபித்து,—நாயகனும் திருமேனி நலம் கிளர அலங்

கரித்தான் - ஆன்மநாயகராகிய சிவபெருமானுந் தமது திருமேனியை அழகு விளங்க அலங்கரித்தருளினார். எ - று. (௪0)

திருவடியின் மிதியடியுந் திகழுடைவெண் கோவணமேன்
மருவரையும் புரிநூலும் வலஞ்சுழியுந் தியுமார்பு
மொருவரையு மிருவரையும் புரையாத வுயர்தோளும்
பரவருநற் பொக்கணமுந் தமருகமும் பலிக்கலனும்.

இ - ள். திருவடியின் மிதியடியும் - திருவடிகளிலே மிதியடிகளும்,—திகழ் உடை வெண் கோவணம் மேல் மருவு அரையும் - விளங்குகின்ற திருவுடையாகிய வெள்ளிய கௌபீனம் மேலே பொருந்திய திருவரையும்,—புரிநூலும் - முப்புரிநூலும்,—வலம் சுழி உந்தியும்-வலமாகச் சுழித்த திருவுந்தியும்,—மார்பும் ஒருவரையும் - திருமார்பும் (அதிலே பொருந்திய உத்தமலக்கணமாகிய) ஏகரேகையும்,—இருவரையும் புரையாத உயர் தோளும் - (உதயபருவதம் அத்தமயபருவதம் என்னும்) இரண்டு பருவதங்களும் ஒவ்வாத உயர்ந்த திருப்புயங்களும்,—பரவு அருநற் பொக்கணமும் - துதித்தற்கரிய நல்ல பொக்கணமும்,—தமருகமும் - உடுக்கையும்,—பலிக்கலனும் - பிக்ஷாபாத்திரமும். எ - று. (௪௧)

சீராருந் திருமிடறுஞ் செங்கனிவாய்ப் புன்சிரிப்பு
மேராரும் வார்காது மிலகுவிழித் தொழினயப்பும்
வேராருந் திருநுதற்கீழ் விருப்புருவத் திருப்புருவந்
தாராநிற் குங்கமலத் தனிமலர்போற் றிருமுகமும்.

இ - ள். சீர் ஆரும் திருமிடறும் - நன்மை பொருந்திய திருமிடறும்,—செங்கனி வாய்ப் புன்சிரிப்பும் - சிவந்த கனிபோலுந் திருவாயிற்றோன்றிய திருப்புன்முறுவலும்,—ஏர் ஆரும் வார் காதும் - அழகு நிறைந்த நீண்ட திருச்செவிகளும்,—இலகு விழித் தொழில் நயப்பும் - விளங்குகின்ற திருக்கண்களினு

டைய (பார்வைத்) தொழிலினது நயமும்,—வேர் ஆரும் திருநுதற்கீழ் - வேர்வை நிறைந்த திருநெற்றியின்கீழ்—விருப்பு உருவத் திருப்புருவம் தாராநிற்கும் - விருப்பமே வடிவமாகவுடைய திருப்புருவங்களைத் (தன்னிடத்தே) தோற்றுவிக்கும்—தனிக் கமல மலர்போல் திருமுகமும் - ஒப்பில்லாத செந்தாமரைமலர் போலுந் திருமுகமும். எ - று. (கஉ)

பொட்டுமலி திருநுதலும் புரிந்துமுரிந் திசைந்தசைந்த
மட்டுமலி கருங்குழலும் வளர்பவள வொளிமழுங்க
விட்டுவிளங் கியவெழிலார் மேனியுமாய் மெல்லியலார்
பட்டுவிழும் படியில்விழும் படியழகின் படிவமென.

இ - ள். பொட்டு மலி திருநுதலும்-பொட்டுப் பொருந்திய திருநெற்றியும்,—புரிந்து முரிந்து இசைந்து அசைந்த மட்டு மலி கருங் குழலும் - நெறித்துச் சுருண்டு (தம்மில்) ஒத்தசைந்த தேனிறைந்த கரிய குழலும்,—வளர் பவள ஒளி மழுங்க விட்டு விளங்கிய எழில் ஆர் மேனியும் ஆய் - வளர்கின்ற பவளவொளியும் மழுங்கும்படி (செவ்வொளி) விட்டு விளங்கிய அழகு நிறைந்த திருமேனியுமாகி,—மெல்லியலார் பட்டு விழும் படியில் விழும்படி-(இவ்வடிவைக் கண்ட) மென்மையாகிய இயலையுடைய பெண்கள் (தங்கள் அரையினுள்ள) பட்டுச்சீலை விழுந்தன்மை போலத் (தாங்களும்) விழும்படி—அழகின் படிவம் என - அழகினது உருவம்போல. எ - று. (கங)

மன்னனெதி ருறுமளவில் வளரிருடா ரகைகுழறிற்
றென்னமலர் மயிர்சொருகி யிலகநுதற் றிலகமுகம்
பன்னரிய துகிலுடுத்துப் படர்தானை பின்போக்கித்
தன்னிகரி றலைமுலைமேற் றனிக்காறை தனிற்றுவக்கி.

இ - ள். மன்னன் எதிர் உறும் அளவில் - (சருவலோகத்துக்கும் ஏக) நாயகராகிய சிவபெருமான் என்னெதிரே பொருந்து

மளவில்,—வளர் இருள் தாரகை சூழ்நிற்று என்ன மயிர் மலர் சொருகி - மிகுந்த இருளிலே நக்ஷத்திரங்களைக் கலந்ததுபோல அளகத்திலே பூக்களைச் சொருகி,—நுதற்றிலகம் முகம் இலக - நெற்றியிலிட்ட சிறுபொட்டினாலே முகம் விளங்க,—பன் அரிய துகில் உடுத்து - (விலை) சொல்லுதற்கரிய பட்டுப்புடைவையை உடுத்து,—படர் தானை பின் போக்கி - அகன்ற முன்றானையை (ஏகாசமாக இடத்தோண்மேலாகப் பின்னே போட்டு,—தன் நிகர் இல் தலை - (அதனுடைய தனக்கொப்பில்லாத தலையை (வலக்கைக்குள்ளாகவாங்கி)—முலைமேல் தனிக் காறைதனில் துவக்கி - முலைமீ தணிந்த ஒப்பில்லாத கா்றையென்னும் ஆபரணத்தின்மேலேபிணித்தது. எ - று. (௧௮)

மாமணிநற் பாடகமு மலிவித்தோர் வல்லியெனப்
பூமலிசெங் கரத்துடனப் புண்ணியனேர் புணர்பொழுதிற்
காமனெழி லழித்தவனுங் காமுறுவோ னெனவெனது
தீமைவிழிக் கடைநோக்கிச் சிறுமுறுவ லிறைசெய்தான்.

இ - ள். மா மணி நற் பாடகமும் மலிவித்து - பெரிய இரத்தினங்களாலாகிய நல்ல பாடகங்களையும் அணிந்து.—ஓர் வல்லி என - ஒருகொடி போல—பூ மலி செங்கரத்துடன் - பூங்கொத்துப் பொருந்திய சிவந்த கையுடனே—அப் புண்ணியன் நேர் புணர் பொழுதில் - நான் அந்தச் சுத்தராகிய சிவபெருமானுடைய சன்னிதியிலே பொருந்தியபொழுது,—காமன் எழில் அழித்தவனும் - மன்மதனுடைய அழகை அழித்தவராகிய சிவபெருமானும்—காமுறுவோன் என - காமமுற்றவர் போல—எனது தீமை விழிக் கடை நோக்கி - எனது தீமை பொருந்திய கடைக்கண்ணைப் பார்த்து,—சிறு முறுவல் இறை செய்தான் - திருப்புன்முறுவலைச் சற்றே பண்ணினார். எ - று.

காமமுறுவோன் காமுறுவோன் எனக்குறைந்து நின்றது.

அவ்வரையி லிமயமயி லமர்ந்திருப்ப வகிலத்துப்
பொய்விரவா முனிவரிவன் புகழியக்க னெனவுணரச்
செவ்வரைமே னியனடியேன் சேயிழையாய்ப் பின்செல்லச்
சைவமுனி வர்களிருக்குந் தாருவன மதுசார்ந்தான்.

இ - ள். அவ்வரையில் இமயமயில் அமர்ந்து இருப்ப - அந்தக் கைலாசபருவதத்திலே பார்ப்பதிதேவியார் (தனித்து) எழுந்தருளியிருப்ப,—செவ்வரை மேனியன் - செம்பவளமலைபோலுந் திருமேனியையுடைய சிவபெருமான—அகிலத்துப்பொய் விரவா முனிவர் இவன் புகழ் இயக்கன் என உணர - உலகத்துப் பொய் பொருந்தாத முனிவர்கள இவன் கீர்த்தியையுடைய இயக்கனென்று சிந்திக்க,—அடியேன் சேயிழையாய்ப் பின செல்ல - அடியேன் செவ்விய வாபரணத்தையுடைய பெண்ணுரு (த்தமக்கு) ப் பின்னே செல்ல,—சைவமுனிவர்கள் இருக்கும தாருவனமது சார்ந்தான் - (மேலே) சைவர்களாதறகுரிய முனிவர்கள் இருக்குந தேவதாருவனத்தை அணுகினுர். எ - று. (கக)

சென்றுமுனி வர்களிருக்குந் தெருத்தலைச்சே ரியிற்செறிந்து
முன்றிலிடைத் துடிமுழக்கி முறுவன்மிக முகமலர்த்தித்
துன்றுபலி கொணர்ந்தணையுஞ் சுரிகுழலா ரெழினோக்கி
யன்றிறைவ னின்றுபுரி யபிநயமா யிரகோடி.

இ - ள். சென்று முனிவர்கள் இருக்கும் தெருத் தலைச் சேரியில் செறிந்து - போய் முனிவர்கள் இருக்குந்தெருவிலுள்ள முதறபர்ணசாலையிலே புகுந்து,—முன்றிலிடைத் துடி முழக்கி - முற்றத்திலே (நின்று) தமருகத்தை வாசித்து,—முறுவல் மிக முகம் மலர்த்தி - சிரிப்பு மிகும்படி முகத்தை மலரச்செய்து,—துன்று பலி கொணர்ந்து அணையும் சுரி குழலார் எழில் நோக்கி அன்று - கைநிறைந்த பிக்ஷையைக் கொண்டுவந்து அணுகாநின்ற சுருண்ட அளகத்தையுடைய இருடிபத்தினிகளுடைய அழ

கைப்பார்த்தன்று,—இறைவன் நின்று புரி அபிநயம் ஆயிர கோடி - சிவபெருமான் நின்று செய்த அபிநயங்கள் ஆயிர கோடி. எ - று.. (கஎ)

எண்ணரிய வபிநயங்க ளிறைபுரிய நிறைகற்பிற்
பண்ணமரு மொழிமுனிவர் பார்ப்பனிகள் பலரீண்டி
நண்ணருநாண் மடமச்சம் பயிர்ப்பென்னு மிவைநழுவக்
கண்ணுதலோ னிருமருங்கு மொன்றாகக் கைக்கொண்டார்.

இ - ள். இறை எண் அரிய அபிநயங்கள் புரிய - சிவபெருமான் எண்ணுதற்கரிய அபிநயங்களைச் செய்ய,—நிறை கற்பின் பண் அமரும் மொழி முனிவர் பார்ப்பனிகள் பலர் ஈண்டி - நிறைந்த கற்பையும் பண் பொருந்திய சொல்லையுமுடைய இருடி பத்தினிகள் பலர்கூடி,—நண் அரு நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் இவை நழுவ - கிட்டுதற்கரிய (இயல்பாயுள்ள) நாணமும் (கொளுத்தக் கொண்டு கொண்டது விடாத) மடமும் (பேதைமையாலாகிய) அச்சமும் (பயிலாத பொருளில் அருவருப்பாகிய) பயிர்ப்பும் என்னும் இந்நான்கு குணமும் நழுவ,—கண்ணுதலோன் இருமருங்கும் ஒன்றாகக் கைக்கொண்டார் - நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானை இரண்டு பக்கத்தும் ஒருங்கு வளைந்து கொண்டார்கள். எ - று. (கஅ)

சாயவார் குழலொருகை கலையொருகை யுறத்தாங்கிப்
பாயவாள் விழியருவி பரவசரா யெதிர்பயில்வார்
தூயவா திருவாயிற் றுலங்குநகை யெனமொழிவா
ராயவா வினியெம்மை யணைந்தருளா யெனவயர்வார்.

இ - ள். வார் குழல் சாய ஒருகை - நீண்ட அளகஞ்சரிய (அதனை) ஒருகையினாலும்—கலை (சாய) ஒருகை - புடைவை அவிழ (அதனை) ஒருகையினாலும்—உறத் தாங்கி - இறுகப் பிடித்துக்கொண்டு,—வாள் விழி அருவி பாயப் பரவசராய் எதிர் பயில்வார் - ஒளியையுடைய கண்களினின்றும் அருவி பொழியப்

பரவசர்களாய் எதிரே செல்வார்கள் சிலர்;—திருவாயில் துலங்கு நகை தூயவா என மொழிவார் - (இவர்) திருவாயில் விளங்குகின்ற தந்தங்கள் சுத்தமாயிருக்கின்றன என்று சொல்வார்கள் சிலர்;—அவா ஆய் எம்மை இனி அணைந்து அருளாய் என அயர்வார் - (எங்கண்மேல்) ஆசையாகி எங்களை இனித் தழுவியருளும் என்று மோகிப்பார்கள் சிலர். எ - று. (௧௯)

ஐயமிட வென்றுகடி தரிசிகொடு புறப்பட்டுக்
கையமர வமுதாக்கிக் கலத்திடுவார் நிலத்திடுவார்
கொய்புமல ரிலையுடனே குவித்தகரத் துடன்கொணர்ந்து
மையுமட கெனவிடுவார் நாமுய்ந்தோ மெனநவில்வார்.

இ - ள். ஐயம் இட என்று கடிது அரிசி கொடு புறப்பட்டு - பிக்ஷையிடவேண்டுமென்று சடிதியில் அரிசியள்ளிக்கொண்டு புறப்பட்டு—கை அமர அமுது ஆக்கி - (காமாக்கினியினாலும் விரகவேர்வையினாலும்) கையே (பானையாகப்) பொருந்த அமுது சமைத்து—கலத்து இடுவார் நிலத்து இடுவார் - பிக்ஷாபாத்திரத்தில் இடுவார்கள்போலக் (கண்ணும் மனமும் வேற்றுவிகாரப்படுதலால்) நிலத்திலிடுவார்கள் சிலர்;—உடனே கொய்யும் மலர் இலை குவித்த கரத்துடன் கொணர்ந்து - (திருவடிகளிலே பூசிக்கும்பொருட்டு) உடனே எடுத்த புஷ்பத்தையும் பத்திரத்தையும குவித்த கையோடு கொண்டுவந்து—ஐயும் அடகு என இடுவார் - (திருவடிகளிலே அருச்சிப்பவர்கள்போல மயங்கிப் பிக்ஷாபாத்திரத்திலே) வெந்த இலைக்கறியென்று இடுவார்கள் சிலர்—நாம் உய்ந்தோம் என நவில்வார் - (இங்ஙனம் அழகு மிகுத்த நாயகரைப் பெற்றோமாதலால்) நாங்கள் பிழைத்தோம் என்று சொல்வார்கள் சிலர். எ - று. (௨௦)

முன்பிச்சை வரைக்கண்ட முகமென்பார் முயங்கிரதி
மன்பிச்சை வனப்பகழி யாரிசொரிந் திடுமென்பார்

பின்பிச்சை கொண்டுவரப் பெரும்பிச்சை யளித்தகல்வா
ரென்பிச்சை கெடவுருக வெமக்கிரங்கா ரெனவயர்வார்.

இ - ள். முன்பு இச் சைவரைக் கண்ட முகம் என்பார் - முன்னும் இந்தச்சைவரைக் கண்ட முகம்போலிருக்கின்றது என்பார்கள் சிலர்;—முயங்கு இரதி மன் பிச்சு ஐ வனப்பகழி மாரி சொரிந்திடும் என்பார் - தழுவாநின்ற இரதிக்குநாயகனாகிய மன்மதன (அம்பறாத்தூணியினின்றும்) வாங்கி ஐவகையாகிய பாணமழைகளைப் பொழிகின்றான் என்பார்கள் சிலர்;—பின் பிச்சை கொண்டுவர - நாம் பின்னே (ஒருபிடி) பிச்சை கொண்டுவர—பெரும் பிச்சை அளித்து அகல்வார் - பெரிய மயலைத் தந்து போவார்—என்பு இச்சை கெட உருக எமக்கு இரங்கார் என அயர்வார் - எலுமபானது இச்சை கெடும்படி உருக எமக்கிரங்கியருள்கின்றிலர் என்று தளர்வார்கள் சிலர். எ-று. (உக)

நில்லுமினை வளைதாரு நீரென்று தகைந்தொன்று
சொல்லிவிடு மெனவணைவார் துணைகொண்மணி முலைகாட்டி
யில்லுமிது வெனமொழிவா ரெவ்விடமு மிடமென்பார்
புல்லியிடு மெல்லையுடன் போதுமினு மெனப்புகல்வார்.

இ - ள். நீர் நில்லும் இன வளை தாரும் என்று தகைந்து - நீர் (இவ்விடத்தே) நில்லும், (போவீராயின் நம்முடைய) கூட்டமாகிய வளையல்களைத் தந்துவிட்டுப் போம் என்று தடுத்து—ஒன்று சொல்லிவிடும் என அணைவார் - ஒருவார்த்தை சொல்லிவிடும் என்று அணுகுவார்கள் சிலர்;—துணை கொள் மணி முலை காட்டி இல்லும் இது என மொழிவார் - இணையொத்த முத்துவடங்கள் பொருந்திய தனங்கள் தோன்றநின்று எம்முடைய வீடும் (தூரமன்று) இதுவே என்று சொல்வார்கள் சிலர்;—எவ்விடமும் இடம் என்பார் - (உமக்குப் பொருத்தமாயின்) எவ்விடமும் (நமக்குப் பொருத்தமாகிய) இடமாம் என்பார்கள் சிலர்;—புல்லியிடும் எல்லை உடன் நாம் போதுமின்

எனப் புகல்வார் - தழுவுதற்குச் சமயம் இதுவே, எம்முடனே நீர் வாரும் என்று சொல்வார்கள் சிலர். எ - று.

நாமென்னு முன்னிலை யுளப்பாட்டுத்தன்மை உயர்வு தோன்ற முன்னிலைக்கண் வந்தது. "நாமரை யாமத்தென்னோ வந்து வைகி நயந்ததுவே" என்னுந் திருக்கோவையாராலும் அறிக. (உஉ)

ஐயமுள திலதிடையென் றறிவிப்பா ரெனநிற்பா
ருயமுள திலதுயிர்வந் தணைந்துகொளென் பவர்போல்வா
ரையமனு மெனக்கணைகொண் டநங்கனடர்ந் தலையாமே
யையமனு வெமைநோக்கி யஞ்சலெனு யெனவயர்வார்.

இ - ள். ஐயம் உளது இடை இலது என்று அறிவிப்பார் என நிற்பார் - பிக்ஷையுண்டு இடை இல்லை என்று அறிவிப்ப வர்கள்போல (எதிரே வந்து) நிற்பார்கள் சிலர்;—உயிர் உளது இலது ஐயம் வந்து அணைந்து கொள் என்பவர் போல்வார் - (எமதுடலின்கண்) உயிர் உண்டு இல்லையென்பது சந்தேகம், (விரைந்து) வந்து (எம்மைத்) தழுவிக்கொண்டு பிழைப்பியும் என்பவரைப் போல்வார்கள் சிலர்;—அநங்கன் ஐ யமன் ஆம் எனக் கணை கொண்டு அடர்ந்து அலையாமே - மன்மதன் ஐந்து கூற்றுவர்போல ஐந்துபாணங்களைக் கொண்டு (எம்மை) நெருக்கி வருத்தாவண்ணம்—ஐய மனு எமைநோக்கி அஞ்சல் எனுய் என அயர்வார் - ஐயரே மனனரே எம்மைப் பார்த்துப் பயப் படாதொழிக என்று சொல்லியருளும் என்று மயங்குவார்கள் சிலர். எ - று. (உ௩)

ஆடுவா ராடாத வபிநயங்கள் பலபுரிவா
ரோடுவா ரோடாமோ வுண்கலனிங் குமக்கென்பார்
கூடுவார் கூடாத குழலலையக் குழன்மொழியாற்
பாடுவார் பாடாக மேல்விழுவார் பலராகி.

இ - ள். ஆடுவார் - (களிப்புமிகுதியினாலே) கூத்தாடுவார்கள் சிலர்;—ஆடாத அபிநயங்கள் பல புரிவார் - (உலகத்திலே முன்பு) செய்யப்படாத அபிநயங்கள் பலவற்றைச் செய்வார்கள் சிலர்;—ஓடுவார் - (திருமேனியழகைக் கண்டு திரும்பிப் பாராரோ என்று அவர்பின் விரைய) ஓடுவார்கள் சிலர்;—இங்கு உமக்கு உண்கலன் ஓடாமோ என்பார் - இங்கே உமக்குப் பிக்ஷாபாத்திரம் தலையோடாமோ என்பார்கள் சிலர்;—கூடுவார் - (அதிசமீபத்தில்) அடுப்பார்கள் சிலர்;—கூடாத குழல் அலையக் குழல் மொழியால் பாடுவார் - முடிக்கப்படாத அளகம் அலையக் குழல்போலும் மொழியினாலே பாடுவார்கள் சிலர்;—மேல் பலராகிப் பாடு ஆக விழுவார் - (அவர்திருமேனியின்மேலே) பலராகிப் பாடாக விழுவார்கள். எ - று. (உச)

பேதையர்கண் முதலாகப் பேரிளம்பெண் மையர்முடிவா
மாதரவ ரிருமருங்கு மறுகுமறு கிடைநெருங்கி
யோதமெழுந் தெனநிலவு மொலியுயர் வானுறநகைத்து
நாதனெழுந் தருளவய லணைந்த படிநவில்வேன்.

இ - ள். பேதையர்கள் முதல் ஆகப் பேரிளம்பெண்மையர் முடிவு ஆம் மாதரவர் - பேதையர்கண் முதலாகப் பேரிளம்பெண்களிறுதியாகிய (எழுவகைப்) பெண்களும்—இருமருங்கும் மறுகும் மறுகிடை - இரண்டுபக்கத்தும் மயங்கிநிற்குந் தெருவிலே,—ஓதம் நெருங்கி எழுந்து என நிலவும் ஒலி உயர்வான் உற - ஏழுசமுத்திரமுங்கூடி ஒலித்தாற்போலப் பரம்பும் ஓசை உயர்ந்த ஆகாயத்திற்செல்ல—நகைத்து நாதன் எழுந்தருள - சிரித்துக்கொண்டு சிவபெருமான் எழுந்தருள,—அயல் நான் அணைந்த படி நவில்வேன் - (அவர்) பக்கத்தில் நான் சென்ற தன்மையைச் சொல்வேன். எ - று.

எழுந்தாலென்பது எழுந்தெனக் குறைந்து நின்றது. (உரு)

கற்புடைய மடந்தையெனக் கருதரிதாய்க் கண்டவர்கள்
பொற்புடைய பொதுமகளாப் புகல்வரிதாம் பொலிவினதா
யற்புதமாய்ச் சிவந்துநிமிர்ந் தகன்றவயில் விழிக்கணைகள்
விற்புருவத் துடன்முனிவர் விழியிலக்கா விடுமளவில்.

இ - ள். கற்பு உடைய மடந்தை எனக் கருது அரிது ஆய் - (உடையினாலும் 'நடையினாலும் கையிற்பிடித்த பூவினாலும்) கற்பையுடைய பெண்ணென்று நினைத்தற்குக் கூடாததாய்— கண்டவர்கள் பொற்பு உடைய பொதுமகளாப் புகல்வு அரிது ஆம் பொலிவினது ஆய் - (நாயகன்பின்னே நிழல்போலப் புறவடிபார்த்து நடத்தலினால்) பார்த்தவர்கள் அழகையுடைய வேசியென்று சொல்லுதற்கரிதாகிய பொலிவினையுடைய கபடவேடங் கொண்டு—அறபுதம் ஆய்ச் சிவந்து நிமிர்ந்து அகன்ற அயில் விழிக் கணைகள்-ஆச்சரியத்தையுடையனவாய்ச் செவ்வரி பரந்து நீண்டு இடவிய கூரிய கண்களாகிய அம்புகளை—விற்புருவத் துடன் முனிவர் விழி இலக்கா விடும் அளவில் - புருவமாகிய வில்லிலே தொடுத்து (என்னைப பார்த்த) முனிவர்களுடைய கண்களே இலக்காக விட்டமாத்திரத்தில். எ - று. (உகூ)

எண்ணரிய திறலினர்க ளிடுநூலே குறியாகத்
திண்ணியநெஞ் சலைகுலையச் சிகையவிழ வுடைநழுவப்
பண்ணலரு மபிநயங்கள் பலபுரிந்து பரவசரா
யண்ணலெதி ரெனைநோக்கி யாதரித்தா ரருமுனிவர்.

இ - ள். எண் அரிய திறலினர்கள் அரு முனிவர் - மதித்தற்கரிய தவவலியையுடையர்களாகிய பெரிய முனிவர்கள்,— இடு நூலே குறி ஆக - தரித்த உபவீதமாத்திரமே அடையாளமாக,—திண்ணிய நெஞ்சலை குலைய - திடமாகிய சித்தங்கள் கலங்க,—சிகை அவிழ - குடுமி குலைய,—உடை நழுவ - உடுத்த மரவுரி நழுவி விழ,—பண்ணல் அரும் அபிநயங்கள் பல புரிந்து- (பிறராலே) செய்தற்கரிய அபிநயங்கள் பலவற்றைச்செய்து,—

பரவசராய் - பரவசர்களாகி,—அண்ணல் எதிர் எனை நோக்கி ஆதரித்தார்-சிவபெருமான்சன்னிதியிலே என்னைக்கண்டு ஆசைப் பட்டார்கள். எ - று. (உஎ)

எவராலு மென்றலு மெய்தரியா னெய்வுற்றுத்
தவராசி விடங்கடொறுந் தாவில்பலி கொளநடந்தான்
சிவராக மடைவோரிற் சேயிழைபா மெனைநோக்கு
பவராகா வபராத பரம்பரையோ ராயினர்.

இ - ள். எவராலும் என்றலும் எய்து அரியான் ஏய்வு உற்று - (பிரமா முதலிய) எவர்களாலும என்றலும் அடைதற் கரிய சிவபெருமான் (இயக்கரூபத்தைப்பொருந்தி,—தவர் ஆசு இல் இடங்கள் தொறும் தாவு இல் பலி கொள நடந்தான் - முனிவர்களுடைய குற்றமில்லாத பர்ணசாலைகடோறும் குறற மில்லாத பிக்ஷை கொள்வதற்கு நடந்தருளினர்;—சிவராகம் அடைவோரின் - சிவத்தினிடத்தே இச்சை அடைவோர்கள் போல—சேயிழை ஆம் எனை நோக்குபவர் ஆகா - செவ்விய ஆபரணத்தையுடைய பெண்ணாகிய என்னைப் பார்ப்போர்க ளாகி—அபராத பரம்பரையோர் ஆயினர் - அபராதங்களின் வரி சையையுடையோர்களாயினர்கள். எ - று.

பரம்பரை வரிசை. (உஅ)

கோவமிகு முதுமுனிவ ரொன்றாகக் குழுமியெழுந்
தாவதென மிவனிந்த வாச்சிரமத் தஞ்சாதே
காவன்மிகுங் கற்பழித்த காபாலி யெனக்கனன்று
தாவமிகும் படிபரவாச் சாபங்கள் பலவிட்டார்.

இ - ள். கோவம் மிகு முது முனிவர் ஒன்று ஆகக் குழுமி எழுந்து - கோபம் மிக்க பழைய முனிவர்கள் ஒருங்கு கூடி யெழுந்து,—ஆவது என் ஆம் - (இனி) ஆவதென்னை!—இவன் இந்த ஆச்சிரமத்து அஞ்சாதே காவல் மிகும் கற்பு அழித்த

காபாலி எனக் கனன்று - இவன் இந்தவாச்சிரமத்தின்கண்ணே அஞ்சாது வந்து (நம்பத்தினிகளுடைய) காவல் மிக்க கற்பைக் குலைத்த காபாலியென்று கோபித்து,—தாவம் மிகும்படி பர வாச் சாபங்கள் பல இட்டார் - உட்டணமிகும்படி சொல்லமுடி யாத சாபங்கள் பலவற்றை இட்டார்கள். எ - று. (உகூ)

இட்டபல சாபங்க ளிறைவனயன் மேவாது
கெட்டபடி கண்டுசினங் கெடாதமனத் தினராகி
நட்டமளித் தருளென்று தகைவார்போ லெதிர்நண்ணிச்
சிட்டமலி தருகுண்டந் திருமுன்னே திகழ்வித்தார்.

இ - ள். இட்ட பல சாபங்கள் இறைவன் அயல் மேவாது கெட்ட படி கண்டு - (தாங்கள்) இட்ட பலசாபங்களுஞ் சிவ பெருமானருகே செல்லாது கெட்ட தன்மையைக் கண்டு,— சினம்கெடாத மனத்தினர் ஆகி - கோபம் ஆறுத மனத்தையு டையவர்களாகி,—நட்டம். அளித்து அருள் என்று தகைவார் போல் எதிர் நண்ணி - (எங்களுக்குத்) திருநிருத்தத்தைத் தரி சிப்பித்தருளும் என்று தடுப்பவர்கள்போல எதிரே கிட்டி,— சிட்டம் மலிதரு குண்டம் திரு முன்னே திகழ்வித்தார் - பெருமை மிகுந்த குண்டத்தைத திருமுன்னே யிட்டார்கள். எ - று. (ங௦)

எஞ்சாத வழலிருத்தி யெடுத்துமனுக் கணித்தோதி
நஞ்சான திரவியங்க ணாடியவை பலகோலி
நெஞ்சாலு நினைவரிய நிருமலனே யிலக்காக
வஞ்சாதே யபிசார மபிசாரத் தமைத்தார்கள்.

இ - ள். எஞ்சாத அழல் இருத்தி - குறையாத அக்கினியை (அக்குண்டத்திலே) தாபித்து,—மனு எடுத்துக் கணித்து ஓதி - மந்திரங்களையெடுத்து எண்ணி உச்சரித்து,—நஞ்சு ஆன திர வியங்கள் நாடி அவை பல கோலி - விஷத்திரவியங்களை

ஆராய்ந்து அவைகள் பலவற்றைக் கொண்டு,--நெஞ்சாலும் நினைவு அரிய நிருமலனே இலக்கு ஆக - மனசாலும் நினைத்தற்கரிய அநாதிமலமுத்தராகிய சிவபெருமானே இலக்காக—அஞ்சாதே அவிசாரம் அவிசாரத்து அமைத்தார்கள் - பயப்படாமல் அவி சாரஹோமத்தை ஆராய்வின்மையினாலே செய்தார்கள். எ - று.

கருத்தில்விழி சிவந்தமுனிக் கணங்கணத்தி லுதிப்பித்த
வெரித்ததிரு முழுவையைநே ரேவுதலு மெந்தைபிரான்
சிரித்தருளி யதுபிடித்துத் திருக்கரத்தி னகநுதியா
லுரித்தவுரி பசும்பட்டா வுடைதொடைமே லுறவுடுத்தான்.

இ - ள். கருத்தில் விழி சிவந்த முனிக்கணம்-மனத்தினுங் கண்கள் சிவக்கப்பெற்ற முனிவர்கூட்டம்—கணத்தில் உதிப் பித்த - கணப்பொழுதினுள்ளே (குண்டத்தக்கினியினின்றுந்) தோற்றுவித்த—எரித்து அதிரும் உழுவையை நேர் ஏவுதலும் - (எதிர்த்தோரைத்) தரித்துக் கர்ச்சிக்கின்ற புலியைத் திரு முன்னே விடுத்தலும்,—எந்தை பிரான்-எமது பிதாவாகிய சிவ பெருமான்—சிரித்தருளி அது பிடித்து - திருப்புன் முறுவல் பண்ணி அப்புலியைப் பிடித்து,—திருக் கரத்தின் நக நுதியால் உரித்த உரி பசும்பட்டா - திருக்கையினது நுனிநகத்தினால் உரி த்த தோல் பசும்பட்டாக—உடை தொடை மேல் உற உடுத்தான்- அவ்வுடையைத் திருத்தொடையின்மேலே பொருந்த உடுத்தருளி னார். எ - று. (கூஉ)

ஏரடங்கு குண்டத்தி னெரிவயிற்றிற் பிறந்தெழுந்த
பாரிடங்க ளாரிடமாம் பரிசனமா யினபயிலச்
சீரடர்ந்த மணிமூச்சிச் செய்யவிழி வெள்ளெயிற்றுக்
கார்விடங்கொ ளொருபுயங்கங் கடிதுவரக் கைக்கொண்டான்.

இ - ள். ஏர் அடங்கு குண்டத்தின் எரி வயிற்றில் பிறந்து எழுந்த பாரிடங்கள் - அழகு செறிந்த குண்டத்தினுள்ள அக்

கினியின்கண் உதித்தெழுந்த பூதங்களானவை—ஆரிடம் ஆம் பரிசனம் ஆயின பயில - இருடிகளால் விடுக்கப்பட்டனவாகிய அடிமைகளாகிச் சேவிக்க,—சீர் அடர்ந்த மணி முச்சி - அழகு மிகுந்த இரத்தினமௌலியையும்—செய்ய விழி - சிவந்த கண்ணையும்—வெள் எயிற்றுக் கார் விடம் கொள் ஒரு புயங்கம் - வெண்மையாகிய பல்லிலே கரிய நஞ்சையும் பொருந்திய ஒரு சருப்பம—கடிது வரக் கைக் கொண்டான் - (தமது திருமுனனே) சீக்கிரம் வர (அதனைக் கடகமாகத்) திருக்கரத்தில் அணிந்துகொண்டருளினார். எ - று. (கூகூ)

மைவிஞ்சு நெடுந்தடித்தின் வார்குழல்வார் சடையாகத்
தெவ்வன்ப ரெதிரிரண்டு திருக்கரங்க ளுருத்தெழமுற்
கைவந்த நிலயமலர்க் கால்வந்து கலந்திசைப்பப்
பவ்வங்கொண் முழுநஞ்சு நுதல்விழியும் பாரித்தான்.

இ - ள். மை விஞ்சு நெடுந தடித்தின் வார் குழல் வார் சடை ஆக - இருளைத் தள்ளி மேலிட்ட நெடிய மின்களைப் போல நீண்ட கருங்குழலே நீண்ட செஞ்சடையாக,—தெவ் அன்பர் எதிர் இரண்டு திருக்கரங்கள் உருத்து எழ - பகைவர்களாகிய முனிவர்களுள் அன்பர்களாயினோர்களுக்கெதிரே (முந்திய திருக்கரஙகளொழியப் பின்னும்) இரண்டு திருக்கரங்கள் தோன்றியெழ,—முன் கைவந்த நிலயம் மலர்க் கால் வந்து கலந்து இசைப்ப - முன்னே கைவந்துள்ள திருநிருத்தம் செந்தாமரைமலர்போலுந திருவடியில் வந்து பொருந்தி யொலிக்க,—பவ்வம் கொள் முழு நஞ்சும் நுதல் விழியும் பாரித்தான்- திருப்பாறகடலினின்றுந்தோன்றிய குறைவற்ற விடத்தையும் நெற்றிக்கண்ணையுங் காட்டியருளினார். எ - று.

உருத்தல் தோன்றல். பாரித்தல் தோற்றல். (கூச)

ஏய்ந்தவனன் முன்னுகர்ந்த விருளுமிழ்வ தெனவெரிவாய்ப்
போந்ததிரு மெரிமுச்சிப் பொறிவிழி வெண்பற்குறளன்

சிந்தரவத் துடனரவந் திகழவர வரனெதிரே
பாய்ந்தருளி வெரிநெரியும் படியடிமேற் பயில்வித்தான்.

இ - ள். ஏய்ந்த அனல் முன் நுகர்ந்த இருள் உமிழ்வது என - பொருந்திய அக்கினியானது (தான்) முன்னே விழுங்கிய இருளை (த் தற்காலத்தில்) உமிழ்ந்தாற்போல—எரிவாய்ப் போந்து அதிரும் - (குண்டத்து) அக்கினியினின்றுந் தோன்றி ஒலிக்கின்ற—எரி முச்சி - அக்கினியை வீசுகின்ற குஞ்சியையும்—பொறி விழி - தீப்பொறிகளைச் சிந்துகின்ற கண்களையும்—வெண் பற் குறளன் - வெண்மையாகிய பறகளையுமுடைய குறள் வடிவினதாகிய முயலகன்—சீந்து அரவத்துடன் அரவம் திகழ வர - கோபிக்கின்ற பாம்பினோடும் ஒலி மிகும்படி வர,—அரன் எதிரே பாய்ந்தருளி - சிவபெருமான் எதிரே (அம்முயலகன் கீழ்ப்படப்) பாய்ந்து—வெரிந் நெரியும்படி மேல் அடி பயில்வித்தான் - (அதன்) முதுகு நெரியும்படி அதன்மேலே (வலப்) பாதத்தினாலே மிதித்தருளினார். எ - று. (சுரு)

மலங்கவெரி தரவேந்தி மந்திரங்கள் வரக்கரத்தா
லலம்புசிலம் பணியாகத் திருவடியி லமர்வித்துத்
துலங்குபல சடைதாழத் துணங்கைகணந் துதைவிப்ப
வலங்கலணி தடந்தோளா னருநடமா டுதல்புரிந்தான்.

இ - ள். மலங்க - (முனிவர்கள் தங்களால் விடுக்கப்பட்டவைகளெல்லாம்) தளர்ந்தமையால்—எரி தர ஏந்தி - அக்கினியை விடுக்க (அதனை) ஏந்தியருளி,—மந்திரங்கள் வர-(பின்பு) மந்திரங்கள் (விடுக்கப்பட்டு) வர—கரத்தால் அலம்பு சிலம்பு அணி ஆகத் திருவடியில் அமர்வித்து - (அவைகளைத்) திருக்கரத்தினாலே ஒலிக்கின்ற திருச்சிலம்புகளுக்குத் தரிசாகத திருவடியிலே சாத்தியருளி,—துலங்கு பல சடை தாழ - விளங்குகின்ற பலசடைகள் (பின்னே) தூங்க—கணம் துணங்கை துதைவிப்ப - கணநாதர்கள் துணங்கைக்கூத்தை மிகச்செய்ய—அலங்

கல் அணி தடம் தோளான் அரு நடம் ஆடுதல் புரிந்தான் - கொன்றைமாலையை அணிந்த பெரிய திருத்தோள்களையுடைய சிவபெருமான் அரிய திருநிருத்தஞ்செய்யத் தொடங்கியருளினார். எ - று. (௩௬)

தாகத்தா லலைந்துமிகத் தளர்ந்துதவ வலிசலித்த
மோகத்தா லிழந்தனலு மந்திரமும் விடமுடிந்த
சோகத்தா னிராயுதராய்த் துளங்குநட மிறைதொடங்கும்
வேகத்தா லருமுனிவ ரொன்றாக வீழ்ந்தார்கள்.

இ - ள். அரு முனிவர் - பெரிய முனிவர்கள்—தாகத்தால் மிக அலைந்து - (ஓமாக்கினியுட்டணத்தினாலாகிய) தாகத்தினாலே மிக வாடி,—தவ வலி சலித்த மோகத்தால் தளர்ந்து - தவவலி குறைந்த மயக்கத்தினாலே தளர்ந்து,—அனலும் இழந்து - அக்கினியையும் இழந்து,—மந்திரமும் விட முடிந்த சோகத்தால் நிராயுதராய் - மந்திரமும் நீங்க (அதனால்) விளைந்த துன்பத்தினாலே நிராயுதர்களாகி,—துளங்கு நடம் இறை தொடங்கும் வேகத்தால் - விளங்காநின்ற திருநிருத்தத்தைச் சிவபெருமான் றொடங்கியருளிய வேகத்தினாலே—ஒன்று ஆக வீழ்ந்தார்கள் - ஒருங்கே விழுந்தார்கள். எ - று. (௩௭)

நடமுயலும் பொழுதஞ்சி நடுநடுங்கி நானயரக்
கடகமென விடதரத்தைக் கட்டியவங் கைக்கவித்த
விடையில்விடை யுடனெடுவா னெய்தியிடத் தணைந்தகுல
மடவரலை மகிழ்ந்தவண்மேன் மலர்ந்தகடைக் கண்வைத்தான்.

இ - ள். நடம் முயலும் பொழுது - திருநிருத்தந்தொடங்குங்பொழுது—நான் அஞ்சி நடுநடுங்கி அயர - நான் (அதன் வேகத்தைச் சகிக்கமாட்டாது) பயப்பட்டு நடுநடுங்கிச் சோகிக்க,—விடதரத்தைக் கடகம் எனக் கட்டிய அம் கைக் கவித்த இடையில் - பாம்பைக் கடகமாகக் கட்டிய அழகிய திருக்கரத்

னிலே (அஞ்சாதே என்று) அமைத்தருளிய பொழுதில்— விடையுடன் நெடு வான் எய்தி இடத்து அணைந்த குல மடவாலை மகிழ்ந்து - இடபவாகனத்தோடு நெடிய ஆகாயமார்க்கமாக வந்து இடப்பாகத்திலே பொருந்திய குலப்பெண்ணாகிய உமாதேவியாரைப் பார்த்து மகிழ்ந்து,—அவள்மேல் மலர்ந்த கடைக்கண் வைத்தான் - அவண்மீதே அகன்ற திருக்கடைக் கண் வைத்தருளினார். எ - று. (௬௮)

வேறு.

அரிவைய ணைந்தபி னெங்கணு மலர்மழை யண்டர்பொ ழிந்தனர், பிரமபு ரந்தரர் வந்தனை பெருகினர் முன்புற வின்புறு, முருவமொ ழிந்திக ழென்பழ வுடலது கொண்டுப ணிந்தெதிர், மருவந டுங்கியொ டுங்குதன் மலைமகள் கண்டும கிழ்ந்தனள்.

இ - ள். அரிவை அணைந்த பின் - உமாதேவியார் எழுந்தருளிய பின்பு,—அண்டர் எங்கணும் அலர் மழை பொழிந்தனர் - தேவர்கள் எவ்விடங்களினும் பூமழை பொழிந்தார்கள்;—பிரம புரந்தரர் முன்பு உற வந்தனை பெருகினர் - பிரமாவும் இந்திரனும் திருமுன்னே (எட்டுறுப்பும) பொருந்த நமஸ்காரத்தை மிகச்செய்தார்கள்;—இன்பு உறும் உருவம் ஒழிந்து - (நான் முனிவர்கள்) இன்புறுதற்கேதுவாகிய வடிவத்தை நீங்கி,— இகழ் என் பழ உடலது கொண்டு பணிந்து - இகழப்படுகின்ற என்னுடைய பழைய சரீரத்தைக்கொண்டு (சிவபெருமானை) நமஸ்கரித்து,—எதிர் மருவ நடுங்கி ஒடுங்குதல் - (முன்பு போலக் கூசாமல்) எதிரே பொருந்துதற்கு அஞ்சி (ப் பிரமேந்திராதிகளுக்குப் பின்னே) ஒடுங்கி நிற்றலை—மலை மகள் கண்டு மகிழ்ந்தனள் - பார்ப்பதிதேவியார் கண்டு (திருவுள்ள) மகிழ்ந்தருளினார். எ - று. (௬௯)

விரவிய வங்கண னெங்கணும் விரிசடை மண்டியலைந்திட
வெரிவிரி செங்கை சுழன்றிட விடிதுடிகொண்டிடவெண்டிசை
பரிபுர புண்டரி கந்தகு பதயுக ளம்பல ருந்தொழ
வருள்புரி யெந்தை மடந்தையு மதிர நடங்க டொடங்கினன்.

இ - ள். அருள் புரி எந்தை-கருணையைச் செய்கின்ற எமது பிதாவும்—விரவிய அஙகணன் - (திருவிருத்தத்தைப்) பொருந்திய அருட்கண்ணருமாகிய சிவபெருமான்,—விரி சடை எங்கணும் மண்டி அலைந்திட - விரிந்த சடை எவ்விடத்தினுஞ் செறிந்து அசைய,—எரி விரி செங்கை சுழன்றிட - அக்கினி சுவாலிக்குஞ் சிவந்ததிருக்கரஞ்சுழல,—துடி எண்டிசை இடி கொண்டிட - தமருகம் எட்டுத்திக்கினும் இடிபோலுமோசையைப் பொருந்த,—பரிபுர புண்டரிகம் தகு பதயுகளம் பலரும் தொழ-சிலம்பையணிந்த செந்தாமரைமலர்போலுந் திருவடிகளிரண்டையும் யாவரும் வணங்க,—மடந்தையும் அதிர-உமாதேவியாரும் நடுங்க,—நடங்கள் தொடங்கினன் - (வெகுவித) திருத்தங்களைத் தொடங்கியருளினார். எ - று. (௬௦)

கரணம னந்தமு யன்றொலி கலவுசி லம்பணி குஞ்சித, சரணமி லங்கவ லம்புரி தருகர மும்பொலி வுந்தகு, திரணகின் மங்கைநெ டுங்கய றிருநய னங்கள்செ றிந்திடு, புரணமு மொன்றிய வென்றிகொள் பொருவில்பு யங்கமு யங்கினன்.

இ - ள். அனந்தம் கரணம் முயன்று - அளவில்லாத கரணங்களை நடித்து,—ஒலி கலவு சிலம்ப அணி குஞ்சித சரணம் இலங்க - ஓசை பொருந்திய சிலம்பை அணிந்த குஞ்சிதபாதம் விளங்க,—வலம்புரி தரு கரமும்-(உத்தமலக்கணமாகிய) சங்கு பொருந்திய திருக்கரமும்—பொலிவும் - (திருக்கரத்தினலைமைத் தருளிய) பொலிவும்—தகு திரள் நகில் மங்கை நெடுங்கயல் திரு நயனங்கள் செறிந்திடு புரணமும் - இணையொத்த திரண்ட தனங்களையுடைய உமாதேவியாருடைய நெடிய கயல் போலுந்

திருக்கண்களும் (தம்முடைய) திருக்கண்களுஞ்சேர்ந்த அசைவும்—ஒன்றிய வென்றி கொள் பொருவு இல் புயங்கம் முயங்கினன் - பொருந்திய வெற்றியைக் கொண்ட ஒப்பில்லாத புயங்ககரணத்தைப் பொருந்தியருளினார். எ - று.

குஞ்சிதம் வளைந்தது. புரணம்-அசைதல்,துடித்தல். (௪௧)

புனிதபு யங்கமு யங்கிய பொழுதவ னுந்தன டந்தரு,
மினிமைநு கர்ந்தம டந்தையு மெழில்விடை யும்பெறு கென்
றரு, ணனிமிக வென்கணு மங்கண னகைதர வுய்ந்துவ
ணங்கினன், மனமுரு கும்படி யன்புடன் வளர்விழி பின்புவ
ழங்கினன்.

இ - ள். புனித புயங்கம் முயங்கிய பொழுது - சுத்தமாகிய புயங்ககரணத்தைப் பொருந்தியபொழுது—அங்கணன்* அவனும்- அருட்கண்ணராகிய அச்சிவபிரானும்—தன் நடம் தரும் இனிமை நுகர்ந்த மடந்தையும் - தமது திருநிருத்தத்தால் விளைந்த இன்பத்தை அநுபவித்த உமாதேவியாரையும்—எழில் விடையும் - அழகையுடைய இடபதேவரையும் (நோக்கி)—பெறுக என்று - (நீங்கள் இப்புயங்ககரணத்தைத் தரிசிக்கப்) பெறுவீர்களாக என்று அருளிச்செய்து,—என்கணும் அருள் நனி மிக நகை தர - என்னிடத்தும் அருள் மிகத் தழைக்கும்படி திருமுறுவல் செய்தருள,—உய்ந்து வணங்கினன் - (அப்பொழுது நான்) உய்ந்து நமஸ்கரித்தேன்,—பின்பு மனம் உருகும்படி அன்புடன் வளர் விழி வழங்கினன் - பின்பு என்னெஞ்சங் கரையும்படி அன்பினோடு வளராநின்ற (ஞானக்) கண்ணைத் தந்தருளினார். எ - று.

அயருமருந்தவர் நம்பதி யகலநி னைந்தரு ளங்கண
சயசய சங்கர வென்றெதிர் தரையில் விழுந்துப ணிந்தனர்
நயநட னுந்தரு மங்கவர் நவையெவை யுந்தொக வந்திருண்
முயலக னென்றுக வென்றதன் முதுகதி ரும்படி நின்றனன்.

இ - ள். அயரும் அருந்தவர் - சோகிக்கின்ற பெரிய முனிவர்கள்,—அங்கண சயசய சங்கர நம் பழி அகல நினைந்தருள் என்று - அருட்கண்ணரே சய சய சங்கரரே அடியேங்களுடைய குற்றநீங்கும்படி திருவுளங்கொண்டருளும் என்று—எதிர் தரையில் விழுந்து பணிந்தனர் - சந்நிதியிலே பூமியின்கண் விழுந்து நமஸ்கரித்தார்கள்;—நய நடனும் - இன்பத்தைத் தருகின்ற நிருத்தராஜரும்—தகும் அங்கவர் நவை எவையும தொக வந்து இருள் முயலகன் ஒன்றுக என்று - (அநுக்கிரகிக்கப்படத்) தகக அவர்களுடைய ஆணவமல சத்திகளெல்லாங்கூடி வந்து ஆணவ மூலமாகிய முயலகனைப் பொருந்துக என்று அருளிச்செய்து,—அதன் முதுகு அதிரும்படி நின்றனன் - அதனுடைய முதுகு நெரியும்படி நின்றருளினார். எ - று. (சஙு)

பண்டைய விருள்பறி யும்படி பங்கய பதமுத வும்பொழுதெண்டிக ழிருடிகள் கண்டன ரின்புறு திருநட மன்பொடு,
கண்டனர் வெருவினர் றுண்டுளி கண்டரு மருவிசொ ரிந்தனர்,
குண்டிகை குசையிசை தண்டுகள் கொண்டெதிர் குணலைம லிந்தனர்.

இ - ள். பண்டைய இருள் பறியும்படி பஙகய பதம் உதவும் பொழுது - அநாதியேயுள்ள ஆணவமலவிருள் நீங்கும்படி சிவபெருமான் செந்தாமரைமலர்போலுந் திருவடிகளை அருளிய பொழுது,—எண் திகழ் இருடிகள் - (நாற்பத்தெண்ணுயிரமென்னும்) எண் விளங்காநின்ற முனிவர்கள்—இன்பு உறு திரு நடம் அன்பொடு கண்டனர் கண்டனர் - இன்பம்பொருந்திய திருநிருத்தத்தை அன்போடு தரிசித்தார்கள் தரிசித்தார்கள்,—வெருவினர் - அஞ்சினுர்கள்,—றுண் துளி கண் தரும் அருவி சொரிந்தனர் - சிறுதுளிகளாகக் கண்களினின்றுந்தோன்றும் அருவியைப் பொழிந்தார்கள்,—குண்டிகை குசை இசை தண்டுகள் கொண்டு எதிர் குணலை மலிந்தனர் - கமண்டலங்களையுந் தருப்பை பொருந்

திய தண்டுகளையுங் கையிற்கொண்டு சந்நிதியிலே குணலைக் கூத்தாடினார்கள். எ - று.

மீமாஞ்சைநூல் பிரபஞ்சம் அநாதி நித்தியமெனவும், ஆன்மாக்கட்கு வேறாகக் கருத்தா ஒருவரில்லையெனவும், சிவன் முதலாயினோரெல்லாரும் அநித்தியரெனவும், வேதம் அநாதி நித்தியமெனவும், வேதத்திற்கூறப்பட்ட சிவன் முதலிய சத்தங்களே பிரமமெனவும், அச்சத்தங்களின் வேறாகிய தேவர்களை அச்சத்தங்கள் அறிவிப்பனவல்லவெனவும், வேதம் விதித்த இட்டி முதலிய கருமங்களே இருமைப் பயன்களையும் பயக்குமெனவுங் கூறும். இந்நூல் செய்தவர் சைமினிமுனிவர்.

தேவதாருவனத்து இருடிகள், மீமாஞ்சைநூலே உண்மைநூலெனக் கொண்ட மயக்கத்தினாலே, சுவதந்திரராகிய சிவபிரான்மாட்டன்பு செய்தலையொழித்து, வேதம் விதித்த கருமங்களை அநுட்டித்துத் தங்கள் மனைவியர்கட்கும் மீமாஞ்சகமதத்தைப் போதித்து, அவர்களைக் கற்பின்வழி நிறுவிப் பரதந்திரர்களாகிய தங்களைச் சுவதந்திரர்களெனத் துணிந்து ஒழுகினார்கள். இதனையறிந்த பெருங்கருணைக்கடலாகிய சிவபெருமான் அவ்விருடிகட்கும் அவர்களுடைய பத்தினிகட்கும் மீமாஞ்சகமதமே மெய்யெனக் கொண்ட மயக்கத்தை ஒழித்து அவர்களை ஆட்கொண்டருளத் திருவுளங்கொண்டு தாம் பிக்ஷாடனமூர்த்தியாகி விட்டுணுவை மோகினியாக்கியருளினார். இருடிகள் மோகினியுடைய பேரழகைக் கண்டவழித் தாங்கள் காமத்தான் மீதூரப்பட்டு நியமமிழந்து கருமாநுட்டானங்களெல்லாம் விடுத்தமையானும், சிவபெருமானைக் கோறற்பொருட்டுத் தாங்கள் செய்த அபிசாரவேள்வி முதலியனவெல்லாம் பயன்படாதொழிந்தமையானும், தாங்கள் கொண்ட மீமாஞ்சகமதம் பொய்யெனத் தெளிந்து, தாங்கள் பரதந்திரரெனவும், சுவதந்திராகிய கருத்தா ஒருவர் உண்டெனவும், அவர் சிவபெருமானேயெனவும், அவரது திருவருள்வயத்தானன்றிப் பாவத்தினீங்

கலும் புண்ணியஞ்செய்தலும் இயலாவெனவும், "பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்" எனவுந் துணிந்து, அவரை வழிபட்டுய்ந்தார்கள். இருடிபத்தினிகள் பிக்ஷாடன மூர்த்தியுடைய பேரழகைக் கண்டவழி முன்னர்க் காமவயத்தர் களாகி, மீமாஞ்சகமதம் பொய்யெனத் தெளிந்து, பின்னர்ச் சிவ ஞானவயத்தர்களாகிப் பேரின்பம் பெற்றுய்ந்தார்கள். இதுகா றுங் கூறியவாற்குற சிவபெருமான் செய்தனவெல்லாம் ஆன் மாக்கட்கு முத்தியின்பம் பயத்தற்பொருட்டாமென்பது தெள் ளிதிற்பெறப்படுதலானும், அவர் இருடிபத்தினிகளைக் காமித்த லுங் கூடலுஞ் செய்யாமையானும், அவர்செயல்கள் குற்றமா காமைதெளிக. சுவதந்திரர் தம்வயமுடையவர். பரதந்திரர் பிறர்வயமுடையவர். (சச)

சூடினர் கரமல ரஞ்சலி சூழ்வுற வமரர்து தைந்தனர்
நாடிய கருவிகொ டும்புரு நாரத ரிசைபடி யும்படி
பாடிலர் தெளிவிலர் நின்றனர் பாரிட நிலவு துணங்கைகொ
டாடின கரணமி டுந்தொழி லாயினர் கணபர நாதர்கள்.

இ - ள். அமரர் கரமலர் அஞ்சலி சூடினர்-தேவர்கள் கைக ளாகிய மலர்களை அஞ்சலியாகச் சூடிக்கொண்டு—சூழ்வு உறத் துதைந்தனர் - பக்கங்களிலே பொருந்த நெருங்கினார்கள்;— நாடிய கருவி கொள் தும்புரு நாரதர் - ஆராயப்பட்ட யாழைக் கையிற்கொண்ட தும்புரு நாரதர்கள்—தெளிவு இலர் - (திருத் தானந்தத்திலே) பரவசர்களாயினமையால்—இசை படியும்படி பாடிலர் நின்றனர் - கீதத்தைத் திருந்தும்படி பாடாதவர்களாய் நின்றார்கள்;—பாரிடம் நிலவு துணங்கை கொடு ஆடின - பூதங் கள் விளங்காநின்ற துணங்கைக்கூத்தாடின;—பரகண நாதர்கள் கரணம் இடும் தொழில் ஆயினர் - மேலாகிய கணநாதர்கள் கூத்தின் விகற்பங்களைச் செய்யுந் தொழிலையுடையர்களாயினார் கள். எ - று. (சரு)

அங்கரி பிரமபு ரந்தர ரண்டர்கண் முனிவர கண்டமு,
மிங்கெம தினியந டஞ்சிவ லிங்கம திசையநி னைந்தொளிர்,
கொங்கலர் பலமல ரன்பொடு கொண்டடி வழிபடுமென்றுயர்,
மங்குலி னிடைவிடை தங்கிய மங்கையொ டிறைவன்ம
றைந்தனன்.

இ - ள். இறைவன் - சிவபெருமான்—அங்கு - அவ்விடத்திலே—அரி பிரம புரந்தரர் அண்டர்கள் முனிவர் அகண்டமும்- விட்டுணு பிரமா இந்திரன் தேவர்கள் முனிவர்களாகிய எல்லீரும்— இங்கு எமது இனிய நடம் சிவலிங்கமது இசைய நினைந்து- இங்கே நம்முடைய இன்பநிருத்தத்தைச் சிவலிங்கத்திலே பொருந்தத் தியானித்து—ஒளிர் கொங்கு அலர் பல மலர் கொண்டு அன்பொடு அடி வழிபடும் என்று-விளங்குகின்ற மணம் விரிந்த பல பூக்களைக்கொண்டு அன்போடு (நம்முடைய) திருவடிகளை வழிபடுங்கள் என்று பணித்து,—உயர் மங்குலினிடை- உயர்ந்த ஆகாயத்தின்கண்ணே—விடை தங்கிய மங்கையொடு மறைந்தனன - இடபவாகனத்தின்மேலே தங்கிய உமாதேவியாரோடு மறைந்தருளினார். எ - று.

லிங்க என்னுந்தாது சித்திரித்தலெனப் பொருள்படுதலின் படைத்தல் காத்தன்முதலியவற்றால் உலகத்தைச் சித்திரிப்பதாகிய சிவத்தினது பிரபாவமே லிங்கமெனப்படும். அவ்விலிங்கத்தினது விளக்கத்துக்கு இடமாகிய சைலம், வாணம், ஸ்பாடிகம், லோஹஜம், க்ஷணிகம் என்பனவும் உபசாரத்தால் இலிங்கமெனப்படும். (௪௯)

இறைமறை தருதிசை முன்றொழு தெவர்களு மகல்வுழி
வென்றிகொ, ளறிவுறு மொருமைய னந்தநின னமளியி
னெருநல மர்ந்தொளிர், கறைவளர் மிடறன டந்தொழு
கலவியி னலமொடு கண்படு, முறைதரு துயரமொ ழிந்தன
னெனமுக மலரமொ ழிந்தனன்.

இ - ள். இறை மறை தரு திசை முன் தொழுது எவர்களும் அகல்வுழி - சிவபெருமான் மறைந்தருளிய திக்கு முன்னாக நமஸ்கரித்து யாவர்களும் அகன்றபொழுது,—வென்றி கொள் அறிவு உறும் ஒருமை அனந்த - வெற்றியைக் கொண்ட ஞானத்திலே பொருந்திய ஒருப்பாட்டையுடைய ஆதிசேடனே,—நின் அமளியில் நெருநல் அழுந்து - நான் நீயாகிய சயனத்திலே நேற்றுப் பொருந்தி—ஒளிர் கறை வளர் மிடறன் நடம் தொழு கலவியின் நலமொடு-விளங்குகின்ற நஞ்சு பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமானது திருநிருத்தத்தை வணங்குஞ் சேர்க்கையினது இன்பத்தினாலே—கண் படு முறை தரு துயரம் ஒழிந்தனன் என - நித்திரைசெய்தலினால் முறையே நிகழாநின்ற துன்பத்தை ஒழிந்தேன் என்று—முகம் மலர மொழிந்தனன் - முகம் மலரும் படி சொல்லியருளினார் விட்டுணு. எ - று. (சஎ)

அண்டன துயர்நட மென்றனு மஞ்சலி சிரமுற வன்பொடு, கண்டவ ரெனமிக நுண்டுளி கண்டர வுருகுதல் கண்டரி, தொண்டின ரிவர்பணி யென்பணி சுந்தர னடிபணி யென்பணி, பண்டென தனையிவ ரென்று கொள் பண்பொழி வினியென நொந்தனன்.

இ - ள். அண்டனது உயர் நடம் என்றனும் - சிவபெருமானுடைய உயர்ந்த திருநிருத்தம் என்றமாத்திரத்திலே,—அஞ்சலி சிரம் உற - அஞ்சலியானது சிரசிலே பொருந்த—அன்பொடு கண்டவர் என - அன்போடு தரிசித்தவர்போல—கண் நுண் துளி மிகத் தர உருகுதல் - கண்களானவை சிறிய நீர்த்துளிகளை மிகப் பொழியும்படி (ஆதிசேடர்) மனமுருகுதலை—அரி கண்டு - விட்டுணுவானவர் கண்டு,—தொண்டினர் இவர் - சிவபெருமானுக்குத் தொண்டர் இவர்,—பணி - (இவர்) தொழிலாவது—என்பு அணி சுந்தரன் அடி பணி - எலும்பை அணிந்த சிவபெருமானுடைய திருவடிக்குத் தொண்டுசெய்தலாம்,—என் பணி -

என்னுடைய தொழிலாவது—பண்டு இவர் எனது அணை என்று கொள் பண்பு இனி ஒழிவு என - முன்னே இவர் எனக்குச் சயனமென்று கொண்ட தன்மையை இனி நீங்குதல் என்று சொல்லியருள;—நொந்தனன் - (அது கேட்ட ஆதிசேடர்) வருந்தினர். எ - று. (சஅ)

இனியணை யெனநனி துஞ்சுத லிசைவில தெனதுள நின் பணி, தனயனை முயலமொ ழிந்துயர் தவமுயல் வதுதரு மென்றலு, மனமிக வுருகிய னந்தனும் வரதன தினியந டந் தொழு, துணைவினி தெனினுமக ன்றிடு தொழினினை வரி தென நொந்தனன்.

இ - ள். இனி அணை என நனி துஞ்சுதல் எனது உளம் இசைவு இலது - இனி நீ சயனமாக (நான் உன்மீது) மிக நித்திரைசெய்தற்கு என்மனசில் உடன்பாடில்லை,—நின் பணி முயலத் தனயனை மொழிந்து - உன்னுடைய தொழிலைச் செய்தற்கு உன்பிள்ளையைக் கறபித்து—உயர் தவம் முயல்வது தரும் என்றலும்-நீ மேலாகிய தவத்தைச் செய்வதே தரும் என்று விட்டுச் சொல்லியருளலும்;—அனந்தனும் மனம் மிக உருகி - ஆதிசேடரும் நெஞ்சமிகக்கரைந்து,—வரதனது இனிய நடம் தொழுதுணைவு இனிது எனினும் - சிவபெருமானுடைய இன்பநிருத்தத்தை வணங்குதற்கண் விரைதல் மிகவினியது என்றலும்—அகன்றிடு தொழில் நினைவு அரிது என நொந்தனன்-(உம்மைப்) பிரியுஞ் செய்கை நினைத்தற்கும் அரியது என்று துக்கமுற்றார். எ - று. (சகூ)

மாதவன் மிகவுமகிழ்ந்திறை வாழ்வட கயிலைமருங்குற
நீதவ முயல்கயல் கொண்டக ணோரிழை யதிபனும் வந்துநின்
னுதர வமரவ ரம்பல வாசற வருடரு மென்றபி
னேதமில் பொருவில னந்தனு மேசறு மரியை யிறைஞ்சினன்.

இ - ள். மாதவன் மிகவும் மகிழ்ந்து - விட்டுணு மிகவுமு வந்து,—இறை வாழ் வட கயிலை மருங்கு நீ தவம் உற முயல் - சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் உத்தரகைலாசத்தின் பக்கத்திலே நீ தவத்தை மிகச்செய்வாயாக;—கயல் கொண்ட கண் நேரிழை அதிபனும் வந்து - கயல்போன்ற கண்களையுடைய உமாதேவிக்கு நாயகராகிய சிவபெருமானும் எழுந்தருளிவந்து—நின் ஆதரவு அமர வரம் பல ஆசு அற அருள் தரும் என்ற பின் - உன்னுசை தீர (வேண்டிய) வரங்கள் பலவற்றைக் குற்றமற அருளிச்செய்வார் என்று சொல்லிய பின்பு,—ஏதம் இல் பொருவு இல் அனந்தனும் - குற்றமில்லாத ஒப்பில்லாத ஆதிசேடரும்—ஏசு அறும் அரியை இறைஞ்சினன் - குற்றமற்ற விட்டுணுவை வணங்கினார். எ - று. (௩௦)

விரவரி யருள்கொ டனந்தனும் விரைவொடு தகவிடை
கொண்டபின், மருவரு தலைவன்ம கிழ்ந்துறை வளர்வட கயி
லைம ருங்குற, விரிபண மணிவெயில் சிந்திட விரிவிழி கதி
ரைவி ழுங்கிட, வெரியெரி திசைதொறு மண்டிட விகழ்வற
தவமதி சைந்தனன்.

இ - ள். அனந்தனும் விரவு அரி அருள் கொடு - ஆதிசேடரும் (தம்மோடு) கலந்த விட்டுணுவினுடைய அநுமதியைப் பெற்று,—விரைவொடு தக விடை கொண்ட பின் - சடிதியாக (க் கருணை) தக விடைகொண்டபின்பு,—மருவு அருதலைவன் மகிழ்ந்து உறை வளர் வட கயிலை மருங்கு - (யாவராலும்) அடைதற்கரிய சிவபெருமான் (திருவுள) மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் உயர்ந்த உத்தரகைலாசத்தின் பக்கத்திலே (பொருந்தி,)—விரி பண மணி வெயில் உறச் சிந்திட - அகன்ற (ஆயிரம்) படங்களிலுமுள்ள இரத்தினங்கள் வெய்யிலை மிகச் சிந்த,—விரி விழி கதிரை விழுங்கிட - இடவிய கண்கள் ஆதித்தியனை (த் தங்கள் பிரகாசத்தினுள்ளே) அடக்க,—எரி எரி திசை தொறும் மண்டிட - சுவாலிக்கின்ற அக்கினி திக்குகடோறுஞ்

செறிய,—இகழ்வு அறு தவமது இசைந்தனன் - குற்றமற்ற தவத்தைச் செய்தார். எ - று. (ருக)

வே று.

தவமிக முயலும் போது தன்னுயிர்ப் புமிழ்வ தன்றிப்
பவனெனு முணவுங் கொள்ளான் பலபக லகல்வும் பாரான்
சிவனடி காணுங் கண்க டிப்பிய மாக்கு வான்போ
லுவமனில் கதிரோ னுள்புக் குருக நேரோட வைத்தான்.

இ - ள். தவம் மிக முயலும் போது - தவத்தை மிகச் செய்யும் பொழுது,—தன் உயிர்ப்பு உமிழ்வது அன்றி - தம்முடைய சுவாசத்தை இரேசித்தலொழிந்து—பவன் எனும் உணவும் கொள்ளான்-வாயுவென்னும் உணவையுங் கொள்ளாதவராகி,—பல பகல் அகல்வும் பாரான் - நெடுங்காலஞ் செல்வதையுஞ் சிந்தியாதவராகி,—சிவன் அடி காணும் கண்கள் திப்பியம் ஆக்குவான்போல் - (மேலே) சிவபெருமானுடைய திருவடிகளைத் தரிசித்தற்குரிய கண்களைத் தெய்வத்தன்மையுடையனவாகச் செய்வார்போல—உவமன் இல் கதிரோன் உள் புக்கு உருக நேர் ஓட வைத்தான் - ஒப்பில்லாத சூரிய மண்டலத்தினுள்ளே புகுந்து உருகும்படி நேரேசெல்ல வைத்தார். எ - று.

யோகாங்க மெட்டனுள் ஒன்றாகிய பிராணாயாமமாவது பிராணவாயுக்களைத் தடுத்தலாம். ஆயாமம் தடுத்தல். அது இரேசகம், பூரகம், கும்பகம் என மூன்று பகுதியை உடைத்து. அவற்றுள், இரேசகமாவது அகத்துள்ள அசுத்தவாயுவைப் புறத்தே கழித்தல். பூரகமாவது புறத்துள்ள சுத்தவாயுவினாலே இயன்றமட்டுஞ் சரீரத்தை நிறைவித்தல். கும்பகமாவது கழித்தலையும் உட்கொள்ளலையும் ஒழித்து உள்ளே உள்ள வாயுவைத் தடுத்து நிறுத்தல். பாம்புக்கு உணவு வாயுவாதலானும், ஆதிசேடர் பாம்பாதலானும், அவர் பூரககும்பகங்கள் செய்யின் உணவு கொண்டாராவராதலானும், உணவு உடம்பை வாட்டுங்

தவத்திற்கு விலக்காதலானும், அப்பூரககும்பகங்களை ஒழித்து இரேசகமாத்திரஞ் செய்தாரென்க.

இன்னவா றருந்த வங்க ளிவணியற் றிடந டஞ்செய்
மன்னன்மா முனிவரைப் போல் வாய்மைக ளளப்பா னாகி
முன்னய னாகி யன்ன முதுகிட மாக வேறி
யன்னவ னெதிரே சென்றா னவனுமா தரங்கள் செய்தான்.

இ - ள். இன்ன ஆறு இவன் அருந் தவங்கள் இயற்றிட - இந்தப்பிரகாரம் இவ்வாதிசேடர் அருமையாகிய தவங்களைப் பண்ண,—நடம் செய மன்னன் - திருநிருத்தஞ்செய்தருளுஞ் சிவபெருமான—மா முனிவரைப் போல் வாய்மைகள் அளப்பான் ஆகி - (தேவதாருவனத்துள்ள) பெரிய முனிவர்களைப் (பரீக்ஷித்தாற்) போல (இவருடைய உண்மைகளையும் பரீக்ஷிப்பாராகி,—முன் அயன ஆகி அன்னம் முதுகு இடம் ஆக ஏறி - முன்னே பிரமாவாகி அன்னவாகனத்தின் முதுகே இடமாக வேறி,—அன்னவன் எதிரே சென்றான் - அவரெதிரே போயருளினார்;—அவனும் ஆதரங்கள் செய்தான் - அவருஞ் சற்காரங்கள் செய்தார். எ - று. (ருரு)

செய்தவன் றன்னை நோக்கிச் சினவர வுருவோய் செல்
லன், மெய்திகழ் தவங்கள் போதும் விரவுபோ கங்கள் வீடு,
பொய்தகா வித்தை சித்தி பொருந்துவ தொன்றெ மக்குக்,
கொய்துரை தருதி யென்று கூறினன் முனிவர் கோமான்.

இ - ள். செய் தவன்றன்னை நோக்கி-(சற்காரங்கள்) செய்த ஆதிசேடரைப் பார்த்து,—சின அரவு உருவோய் - கோபத்தைப் பொருந்திய சர்ப்பவடிவையுடையவனே,—செல்லல் மெய் திகழ் தவங்கள் போதும் - துன்பத்தைச் சரீரத்துக்கு விளைக்கும் விளங்காநின்ற தவங்கள் (இனி) அமையும்;—விரவு போகங்கள் - பொருந்திய (சுவர்க்காதி) போகங்களும்—வீடு - (நம்மு

டைய) பதமுத்தியும்—பொய் தகா வித்தை - பொய் சேராத (பதினான்கு) வித்தைகளும்—சித்தி - (அட்டமகா) சித்திகளுமாகிய இவைகளுள்—பொருந்தாவது ஒன்று எமக்குக் கொய்து உரை - (உனக்கு) வேண்டுவதொன்றை நமக்குத் தெரிந்து சொல்வாயாக,—தருதும் என்று முனிவர் கோமான் கூறினான் - (நாம் அதனைத்) தருவேம் என்று முனிவர்களுக்குத் தலைவராகிய பிரமதேவர் சொல்லியருளினார். எ - று. (றுச)

வாசகங் கேட்ட னந்தன் மகிழ்ந்தியான் புகழ்ந்த ழைத்த
ஈசனை யென்ன வேண்டிற் றெவர்தரி னன்று னக்குப்
பேசுகென் றனைத்தும் வேண்டாப் பெற்றி கண்டயனிகழ்ந்திங்
கேசறு தவஞ்செய் வான்வே றென்பெற வியம்பு கென்ன.

இ - ள். அனந்தன் வாசகம் கேட்டு - ஆதிசேடர் அவ்வார்த்தையைக் கேட்டு,—யான் மகிழ்ந்து புகழ்ந்து அழைத்தது ஈசனை என்ன - நான் (காண) விரும்பித் துதித்து அழைத்தது சிவபெருமானை என்று சொல்ல,—அயன் - (அது கேட்ட) பிரமதேவர்—உனக்கு வேண்டிற்று எவர் தரின் நன்று பேசுக என்று - உனக்கு வேண்டியதொன்றை யாவர் தரினும் நல்லது (அதனைச்) சொல்வாயாக என்று சொல்லி,—அனைத்தும் வேண்டாப் பெற்றி கண்டு - (தாம் வினவிய) யாவையும் (அவருக்கு) வேண்டாத கருத்தையறிந்து,—இகழ்ந்து - (அவரைப்) பழித்து,—இங்கு ஏசு அறு தவம் செய்வான் வேறு என் பெற இயம்புக என்ன - நீ இங்கே குற்றமற்ற தவத்தைச் செய்வது வேறியாது பெறுதற்கு? (அதனைச்) சொல்வாயாக என்று வினவியருள. எ - று.

முத்தியு முடிவி லாத போகமு நாலி ரண்டாஞ்
சித்தியும் வித்தை யாவுஞ் செய்வதென் றிகழ்வ னத்தி
லத்தனன் றெவர்க்கு நல்கு மானந்த நிருத்தங் காணும்
பித்துமே விட்ட தென்று பேசினு னேசி லாதான்.

இ - ள். முத்தியும் - (உம்முடைய) பதமுத்தியும்—முடிவு இலாத போகமும் - அளவில்லாத (சுவர்க்காதி) போகங்களும்—நாலிரண்டாம் சித்தியும - அட்டமகாசித்திகளும் — வித்தை யாவும் - (வேதமுதலிய) சகலவித்தைகளும்—செய்வது என் - தரும பயன யாது?—திகழ் வனத்தில் அத்தன் அன்று எவர்க்கும் நல்கும் ஆனந்த நிருத்தம காணும் பித்து மேலிட்டது - விளங்காநின்ற தேவதாருவனத்திலே சிவபெருமான் அப்போது யாவர்க்கும் தரிசிப்பித்தருளிய ஆனந்த நிருத்தத்தைத் தரிசிக்க வேண்டுமெனனும மோகம மிகுந்தது—என்று ஏசு இலாதான் பேசினன் - என்று குற்றமில்லாதவராகிய ஆதிசேடர் சொல்லினர். எ - று. (நிசு)

முந்தய னவனை நோக்கி முடியநீ முடியா தொன்றைச்
சிந்தனை செய்த பித்துத் தீர்தரா தெனந கைத்தங்
கந்தமில் சுதந்தி ரத்தோ ஞர்சொல வனத்தி லன்று
வநதரு ணடம்பு ரிந்தான் மதியிலா யெனவு ரைத்தான்.

இ - ள். முந்து அயன் அவனை நோக்கி - முற்பட்ட பிரம தேவர் அவ்வாதிசேடரைப் பார்த்து,—நீ முடியாது ஒன்றை முடியச் சிந்தனை செய்த பித்துத் தீர்தராது என அங்கு நகைத்து - நீ ஒருகாலும முடியாததொன்றை முடியவேண்டுமென்று கருதிய பிராநதி நீஙகாது என்று அஙகே சிரித்து,— அன்று வனத்தில் - அந்நாளில் அத்தேவதாருவனத்திலே—அந்தம் இல் சுதந்திரத்தோன் - முடிவில்லாத சுவதந்திரசத்தியை யுடைய சிவபெருமான்—ஆர் சொல வநது அருள் நடம் புரிந்தான் - யாவர் சொல்ல வநது காருண்ணிய நிருத்தஞ் செய்தருளினர்—மதி இலாய் என உரைத்தான் - புத்தியில்லாதவனே என்று சொல்லியருளினர். எ - று. (நிஎ)

ஆலவா யனந்த னென்று மாடுவா னவனே யன்றோ
சாலவா தரித்தாற் றனே தருபவன் றூா னென்று

லெனுமிங் கென்ன வன்னத் திறையவ னந்தோ வந்தோ
காலமு மநேகஞ் சென்றுங் கழிந்தில தாசை யென்றான்.

இ - ள். ஆலவாய் அனந்தன் - நஞ்சைப் பொருந்திய வாயை யுடைய ஆதிசேடர்—என்றும் ஆடுவான அவனே அன்றோ - எக்காலத்தும் இடையறாது திருநிருத்தஞ்செய்தருளுவார் அச்சிவ பெருமானேயன்றோ—(அவர் எனக்கு நிருத்தஞ்செய்தருளார் என்பது யாதுக்கொக்குமெனின)—தானே தருபவன் சால ஆதரித்தால் தாரான் என்றல் இங்கு ஏலும் என்ன - தானே (கொடி கட்டி எக்காலத்தும் யாவருக்கும அன்னங்).கொடுப்பவன் (ஒருவன) மிக விரும்பிக் கேட்டாற கொடான என்று கூறின் இதற கொக்கும் என்று சொல்ல,—அன்னத்து இறையவன் - அன்ன வாகனத்தையுடைய பிரமதேவர்—அந்தோ அந்தோ காலமும் அநேகம் சென்றும் ஆசை கழிந்திலது என்றான் - ஐயோ ஐயோ அநேககாலம் போகியும் (இவனுடைய) ஆசை நீங்கிற் றில்லை என்றார். எ - று. (௫௮)

நொந்தபங் கயனை நோக்கி நுடங்குட லளவே யன்றோ
வந்தமில் காலஞ் செய்த்தன் றதுவுமென் றயரக் கண்டு
மிந்தநீ யிறந்தாற் பேறிங் கென்னென வனந்த னின்றென்
சிந்தையிங் கிதுவாச் செத்துந் திருநடங் காண்பே னென்றான்.

இ - ள். நொந்த பங்கயனை நோக்கி - (தம்மை) நொந்த பிரமதேவரைப் பார்த்து,—அந்தம் இல் காலம் நுடங்கு உடல் அளவே அன்றோ - நீர் முடிவில்லாத காலம் என்றது (என்னுடைய) நுடங்கிய சரீரமுள்ளமட்டேயன்றோ!—அதுவும் செய்த்து அன்று - அதுவும் தூரமன்று—என்று அயரக் கண்டும் - என்று ஆதிசேடர் சொல்லி உணர்வழியக் கண்டும்,—இந்த நீ இறந்தால் இங்குப் பேறு என் என - (பிரமதேவர்) இத் தன்மையையுடைய நீ இறந்தாயாயின் இங்கே பெறும் பயன் யாது என்று வினவ,—அனந்தன் - ஆதிசேடர்—இன்று என்

சிந்தை இங்கு இதுவா - இப்பொழுது என்மனம் இங்கே இத் திருநிருத்தத்தினிடத்ததாதலால்,—செத்தும் திருநடம் காண்பேன் என்றான் - (நான்) இறந்தேனாயினும் (இவ்வவாவே வித்தாக மற்றொரு சரீரத்தை யெடுத்துத்) திருநிருத்தந்தரிசிப்பேன் என்றார். எ - று. (௫௯)

ஆங்கவ னுறுதி கேளா வன்னமே யாறு நல்கித்
தீங்கில்பங் கயனே முன்னைத் தேவர்கண் மலர்கள் சிந்த
வோங்கிருங் கணங்கள் சூழ வொண்ணுதற் றிலக வல்லி
பூங்குழ லுமையாள் பாகம் புரந்தர னாயி ருந்தான்.

இ - ள். ஆங்கு அவன் உறுதி கேளா - அவ்வாதிசேடருடைய உறுதியைக் கேட்டு,—அன்னமே ஆறு நல்கி - அன்னமே இடபமாகச் செய்து,—தீங்கு இல் பங்கயனே - குற்றமில்லாத பிரமதேவரே—முன்னைத் தேவர்கள் மலர்கள் சிந்த - முதன்மையாகிய தேவர்கள் பூக்களைச் சொரிய,—ஓங்கு இரும் கணங்கள் சூழ - உயர்ந்த பெரிய கணங்கள் சுற்ற,—ஒள் நுதல் திலக வல்லிப் பூங் குழல் உமையாள் பாகம் புரந்தரன் ஆய் இருந்தான் - ஒள்ளிய நெற்றியிலே திலகத்தையுடைய கொடிபோலும் புட்பகேசியென்னுந் திருநாமத்தையுடைய உமாதேவியினது பாகத்தைத் (தமது) திருமேனியிற் கொண்டவராகி எழுந்தருளியிருந்தார். எ - று. (௬௦)

கண்டபோ தனந்த னஞ்சிக் கரசர ணாதி கம்பித், தண்
டனே போற்றி யாண்ட வமலனே போற்றி திங்கட், டுண்
டனே போற்றி நாயேன் சொன்னவை பொறுப்பாய் போற்றி,
கொண்டனோர் கண்டா போற்றி கூத்தனே போற்றி போற்றி.

இ - ள். கண்ட போது அனந்தன் அஞ்சி - கண்டபொழுது ஆதிசேடர் பயப்பட்டு,—கர சரணாதி கம்பித்து - கை கால் முதலியவை நடுங்கி,—அண்டனே போற்றி - அண்டங்களை யுடைய

வரே காத்தருளும்—ஆண்ட அமலனே போற்றி-தமியேனை ஆண்டருளிய அநாதிமலமுத்தரே காத்தருளும—திஙகட்டுண்டனே போற்றி - சந்திரனுடைய துண்டத்தை யணிந்தவரே காத்தருளும்—நாயேன் சொன்னவை பொறுப்பாய் போற்றி - அடியேன் (அறியாது) சொல்லியவற்றைப் பொறுத்தருள்வோரே காத்தருளும்—கொண்டல் நேர் கண்டா போற்றி - முகில்போலுங் கரிய திருமிடற்றையுடையவரே காத்தருளும்—கூத்தனே போற்றி போற்றி - நிருத்தராஜரே காத்தருளும் காத்தருளும். எ-று. ()

ஆண்டிட வேண்டி வந்த வமலனே போற்றி யென்று
மாண்டகு மனங்க ரைந்து மண்மிசை வீழ்ந்தி றைஞ்ச
நீண்டசெஞ் சடையா னானை நேர்செல வுகைத் தணைத்துக்
காண்டகு கருணை நல்கிக் கைத்தல முடிமேல் வைத்து.

இ-ள். ஆண்டிட வேண்டி வந்த அமலனே போற்றி என்று - (தமியேனை) ஆட்கொண்டருள விரும்பி எழுந்தருளி வந்த நிருமலரே காத்தருளும் என்று துதித்து,—மாண் தகும் மனம் கரைந்து - மாட்சிமை தக்க நெஞ்சமுருகி—மண் மிசை வீழ்ந்து இறைஞ்ச - பூமியின்மேல் விழுந்து வணஙக,—நீண்ட செஞ்சடையான் - நீண்ட சிவந்த சடையையுடைய சிவபெருமான—ஆனை நேர் செல உகைத்து - இடபத்தை (ஆதிசேடருககு) எதிரே செல்லும்படி செலுத்தி,—அணைத்து - (அவரைத்) தழுவி,—காண் தகு கருணை நல்கி - அழகு தக்க கருணையைக் கொடுத்து,—கைததலம் முடிமேல் வைதது - (தம்முடைய) திருக்கரத்தை (அவருடைய) தலைமேல்வைதது. எ-று.

இப்படித் தவங்கள் செய்தா லன்றிநம் மினிய கூத்து
மெய்ப்படத் தெரியா தன்று விளங்கிடக் கடவ துன்ற
னெய்ப்புறு துயரந் தீர்க வெனவுரைத் தெம்மை யுண்மை
செப்புது முணர்க வென்று கூறினன் றேவ தேவன்.

இ - ள். இப்படித் தவங்கள் செய்தால் அன்றி நம் இனிய கூத்து மெய்ப்படத் தெரியாது - இந்தப்பிரகாரந் தவங்கள் பண்ணினாலொழிய நம்முடைய இன்பநிருத்தம் உண்மையாகப் புலப்படாது;—அன்று விளங்கிடக்கடவது - (இனி நாஞ்சுட்டிக் கூறும்) அந்நாளில் (உனக்குப்) புலப்படக்கடவது,—உன்றன் எய்ப்பு உறு துயரம் தீர்க என உரைத்து - உன்னுடைய இளைப்புப் பொருந்திய துன்பத்தை ஒழிவாயாக என்று சொல்லி,—எம்மை உண்மை செப்புதும் உணர்க என்று கூறினான் தேவதேவன் - நமது சொரூபத்தை உள்ளபடியே சொல்வோம் அறிவாயாக என்று திருவாய்மலர்ந்தருளினார் தேவதேவராகிய சிவபெருமான். எ - று. (சு௩)

வையக மாயை யின்கண் வினைவழி வருங்க டாதி
செய்பவ ரொழியத் தோன்றாச் சீலத்த வுயிர்கள் சேர்தற்
கெவ்வகை யுணர்வுண் டென்னி னிலங்குமைந் தொழிலி யாவு
முய்வகை யாலி யற்றற் கியாமுளோ மெனவு ரைத்து.

இ - ள். வையகம் மாயையின்கண் வினை வழி வரும் - (காரியமாகிய) பிரபஞ்சம் (முதற்காரணமாகிய) மாயையினின்றும் (ஆன்மாக்களுடைய) இருவினை ஏதுவாகத் தோன்றும்;—கடாதி செய்பவர் ஒழியத் தோன்றாச் சீலத்த - குடமுதலியவை செய்பவராகிய குயவரையின்றித் தாமே தோன்றாத இயற்கையையுடையன (அதுபோலப் பிரபஞ்சமும் நிமித்தகாரணனாகிய ஒருகருத்தாவின்றித் தானே தோன்றாத வியற்கையையுடையது;—உயிர்கள் சேர்தற்கு உணர்வு எவ்வகை உண்டு என்னில் - (சிற்றறிவினையுடைய) ஆன்மாக்கள் (சடமாகிய பிரபஞ்சத்தைப்) பொருந்தி அனுபவித்தற்கு அறிவு எப்படி உண்டாமென்னின்,—உய்வகையால் இலங்கும் ஐந்தொழில் யாவும் இயற்றற்கு யாம் உளோம் என உரைத்து - (அவ்வான்மாக்கள்) உய்யும்பொருட்டு விளங்குகின்ற (படைத்தன்முதலிய) பஞ்ச

கிருத்தியமுழுதையுஞ் செய்தற்கு நாம் இருக்கின்றோம் என்று திருவாய்மலர்ந்து. எ - று.

குடமாகிய காரியத்துக்கு முதற்காரணம் மண்ணும் துணைக்காரணந் தண்டு சக்கரமும் நிமித்தகாரணங் குயவனுமாதல் போலப் பிரபஞ்சமாகிய காரியத்துக்கு முதற்காரணம் மாயையுந் துணைக்காரணஞ் சிவசத்தியும் நிமித்தகாரணஞ் சிவபிரானுமாதல் அறிக. (௬௪)

சகளநிட் களமெ மக்குத் தஞ்சமா மேனி யாநீ
யுகளமு முணரிற் சத்தி யுபாதான மாகப் பாச
நிகளம தகற்ற வன்பர் நேர்நிக ழுருவ மொன்றொன்
றகளமாய் ஞான மேயா யகண்டமா யமர்ந்த தன்றே.

இ - ள். சகளம் நிட்களம் எமக்குத் தஞ்சம் ஆம் மேனி ஆம் - சகளமும் நிட்களமுமாகிய இரண்டும் நமக்குப் பற்றுக்கோடாகிய வடிவங்களாம்;—நீ உகளமும் உணரின் - நீ இவ்விரண்டுவடிவமும் யாவையென்று ஆராயிற்சொல்வேம்;—சத்தி உபாதானம் ஆக - (நமது) சத்தியே முதற்காரணமாக—பாச நிகளமது அகற்ற அன்பர் நேர் நிகழ் உருவம் ஒன்று - பாசமாகிய விலங்கைச் சேதிக்கும்படி அன்பர்களெதிரே விளங்கும் உருவமொன்று;—ஒன்று அகளமாய் ஞானமேயாய் அகண்டமாய் அமர்ந்தது - மற்றொன்று அருவமாய் ஞானமயமாய்க் கண்டிக்கப்படாததாய் இருந்தது. எ - று. (௬௫)

இருவகை யிவைக டந்த வியல்புநம் மொளியா ஞான
வுருவமா னந்த மான வுயிரியாம் பெயரெ மக்குப்
பரபதம் பரம ஞானம் பராற்பர மிலது காத்த
னிருமிதி யிச்சை செய்தி நிழனட மாகு மன்றே.

இ - ள். இருவகை இவை கடந்த இயல்பு - (சகளமும் நிட்களமுமாகிய) இவ்விரண்டையுங் கடந்து நின்ற இயற்கைவடிவ

மாவது—நம் ஒளி ஆம் ஞான உருவம் - நமது சோதிமயமாகிய ஞானரூபமேயாம்;—ஆனந்தம் ஆன உயிர் யாம் - (அவ்வுருவத்துக்கு) ஆனந்தமாகிய ஆன்மா நாம்;—எமக்குப் பெயர் பரபதம் பரமஞானம் பராற்பரம் - நமக்குப் பெயர்களாவன பரபதமும் பரமஞானமும் பராற்பரமுமாம்;—இலது - சங்காரமும்—காதல் - திதியும்—நிருமிதி - சிருட்டியும்—இச்சைசெய்தி - திரோபவமும்—நிழல் - அநுக்கிரகமு (மாகிய பஞ்சகிருத்தியங்களு) மே—நடம் ஆகும் - (நமக்கு) நிருத்தமாகும். எ - று.

பரபதம் மேலாகிய பொருள். பராற்பரம் பரமாகிய சுத்தமாயையின் மேலாயது. இலதாகச் செய்தலை இலது என்றார். பஞ்சகிருத்தியமே திருநிருத்தமென்பது "தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற், சாற்றியிடு மங்கியிலே சங்கார - மூற்றமா, யூன்று மலர்ப்பதத்தே யுற்ற திரோத முத்தி, நான்ற மலர்ப்பதத்தே நாடு" என்னுந் திருவாக்கானுணர்க. (கூகூ)

ஆரண மனைத்து நாநின் றாடுது மென்று போற்றுங்
காரணங் காலந் திக்குக் கருத்திடங் காண மாட்டா
சீரணி தேவ தாரு வனத்திடைத் தெரிய நின்று
நாரணன் முதலோர் காண நாடக நடித்த ஞான்று.

இ - ள். ஆரணம் அனைத்தும் நாம் நின்று ஆடுதும் என்று போற்றும் - வேதங்களெல்லாம் நாம் (எக்காலமும்) நின்று நிருத்தஞ்செய்வோம் என்று துதிக்கும்;—காரணம் காலம் திக்குக் கருத்து இடம் காணமாட்டா - (ஆயின் அவை அந்நிருத்தத்திற்குக்) காரணத்தையும் காலத்தையும் திக்கையும் கருத்தையும் இடத்தையும் அறியமாட்டாவாம்;—சீர் அணி தேவதாரு வனத்திடைத் தெரிய நின்று - அழகு விளங்குகின்ற தேவதாருவனத்திலே வெளிப்பட நின்று—நாரணன் முதலோர் காண நாடகம் நடித்த ஞான்று - விட்டுணு முதலாயினோர் தரிசிக்க நிருத்தஞ் செய்த பொழுது. எ - று. (கூஎ)

அன்றரு வனம்பொ றாமை யலைந்தமை யறிந்து நாமும்
வென்றிகொ ணடங்க ணொய்தின் விட்டன முனக்கு மின்று
நின்றிட மிதுவாக் காட்டு நிலய மன்றது பொறுக்கு
மன்றுள தென்றா னிந்த வையகம் வாழ்வ தாக.

இ - ள். அன்று அரு வனம் பொறாமை அலைந்தமை அறிந்து - அந்நாளிலே பெரிய தேவதாருவனம் (பூமிக்கு நடுவன்மையால் அந்நிருத்தத்தைப்) பொறுக்கமாட்டாது அசைந்தமையைக் கண்டு—நாமும் வென்றி கொள் நடங்கள் நொய்தின் விட்டனம் - நாமும் வெற்றி பொருந்திய நிருத்தங்களை விரைவில் ஒழித்துவிட்டோம்;—உனக்கும் இன்று இது இடமா நின்று காட்டும் நிலயம் அன்று - உனக்கும் இப்பொழுது இதுவே இடமாக நின்று தரிசிப்பிக்கும் நிருததமன்று;—அது பொறுக்கும் மன்று உளது என்றான்-அந்நிருத்ததைப் பொறுக்க வல்ல சபை உண்டு என்று சொல்லியருளினார்—இந்த வையகம் வாழ்வது ஆக - இவ்வுலகம் வாழும்பொருட்டு. எ - று. (௬௮)

அனந்தனுந் தொழுது போற்றி யடியனே னுய்யத் தேவ
ரினந்தரு மறைகள் காணா திலகுமன் றுலகி லுண்டாய்
நினந்தமி லருளாற் காட்டு நினைவுமுண் டாகி நீயே
வனந்தனில் வந்தா யென்றால் வாழ்ந்தன னன்றே வென்றான்.

இ - ள். அனந்தனும் தொழுது போற்றி - ஆதிசேடரும் வணங்கித் துதித்து,—அடியனேன் உய்ய - அடியேன் உய்யும் பொருட்டு—தேவர் இனம் தரு மறைகள் காணாது இலகு மன்று உலகில் உண்டாய் - தேவர்களுங் கூட்டம் பொருந்திய வேதங்களுங் காணாவண்ணம் விளங்குகின்ற சபை உலகத்திலுண்டாய்—நின் அந்தம் இல் அருளால் காட்டும் நினைவும் உண்டாகி - உம்முடைய முடிவில்லாத திருவருளினால் (அதனைத்) தரிசிப்பிக்குங் கருத்துமுண்டாகி—நீயே வனந்தனில் வந்தாய் என்றால் - நீரே

வனத்தில் எழுந்தருளிவந்திரென்றால்—வாழ்ந்தனன் அன்றே என்றான் - (அடியேன்) வாழ்ந்தேனன்றே என்று விண்ணப்பஞ் செய்தார். எ - று. (கூக)

வலங்கைமான் மழுவோன் போற்றும் வாளர வரசை நோக்கி
யலைந்திடும் பிண்ட மண்ட மவைசம மாத லாலே
யிலங்கைநே ரிடைபோ மற்றை யிலங்குபிங் கலையா நாடி
நலங்கிள ரிமய நேர்போ நடுவுபோஞ் சுழுனை நாடி.

இ - ள். வலம் கை மான் மழுவோன் - வெற்றியையுடைய திருக்கரத்திலே மானையும் மழுவையுமுடைய சிவபெருமான்—போற்றும் வாள் அரவு அரசை நோக்கி - (தம்மைத்) துதிக்கும் ஒளியையுடைய நாகராசாவாகிய ஆதிசேடரைப்பார்த்து,—அலைந்திடும் பிண்டம் அண்டம் அவை சமம் ஆதலாலே - அசைகின்ற பிண்டமும் அண்டமும் (தம்முள்) ஒப்பனவாதலினாலே--[சரீரத்தில் இடைநாடி இடத்தினும், பிங்கலைநாடி வலத்தினும், சுழுமுனைநாடி நடுவினும் போதல்போல இப்பூமியில்]—இடை இலங்கை நேர் போம் - இடைநாடி இலங்கைக்கு நேரே போகும்;—இலங்கு மற்றைப் பிங்கலை ஆம் நாடி நலம் கிளர் இமயம் நேர் போம்-விளங்குகின்ற மற்றைப்பிங்கலைநாடி நன்மைமிக்க இமயமலைக்கு நேரே போகும்;—சுழுனை நாடி நடுவு போம்-சுழுமுனைநாடி (அவ்விரண்டிற்கும்) நடுவே போகும். எ - று.

நாடரு நடுவி னாடி நலங்கிளர் தில்லை நேர்போய்க்
கூடுமங் கதனின் மூலக் குறியுள ததற்குத் தென்னர்
மாடுறு மறைகள் காணா மன்னு மம்பலமொன் றுண்டங்
காடுது மென்று மென்றா னென்னையா ளுடைய வையன்.

இ - ள். நாடு அரு நடுவின் நாடி நலம் கிளர் தில்லை நேர் போய்க் கூடும் - நாடுதற்கரிய நடுநாடியாகிய சுழுமுனைநாடி நன்மைமிக்க தில்லைவனத்திற்கு நேரே போய்க் கூடும்;—அங்

கதனின் மூலக்குறி உளது - அந்தத்தலத்திலே மூலலிங்கம் இருக்கின்றது;—அதற்குத் தென்னர் - அந்தச் சிவலிங்கத்துக் குத் தெற்கே—மாடு உறும் மறைகள் காணு மன்னும் அம்பலம் ஒன்று உண்டு - நான்குபக்கத்தும் பொருந்திய வேதங்களும் காணாத நிலைபெற்ற சபையொன்றுண்டு;—அங்கு என்றும் ஆடு தும் என்முன் என்னை ஆள் உடைய ஐயன் - அங்கே நாம் எக் காலமும் திருத்தஞ்செய்தருள்வோம் என்று திருவாய்மலர்ந்தரு ளினார் என்னை அடிமையாகவுடைய சிவபெருமான். எ-று. (எக)

மற்றது சிதம்ப ரத்த வாய்மையான் மாயா நீர்மைப்
பற்றுட னழியா தென்றும் பயின்றுள துயிர்க ளெண்ணி
னற்றவஞ் செய்தா னீடு நாடரு ஞான நாட்டம்
பெற்றவர் காண்பர் காணப் பெறுதவர் பிறப்ப ரன்றே.

இ - ள். மற்று அது சிதம்பரத்த வாய்மையால் * அச்சபை ஞானாகாசமாகிய மெய்ப்பொருளாயிருத்தலால்—மாயா நீர்மைப் பற்றுடன் அழியாது - மாயாகாரியத் தன்மையையுடைய மற் றைப்பொருள்களோடு கூட அழியாது,—என்றும் பயின்றுளது- எக்காலமும் பொருந்தியுள்ளது,—உயிர்கள் எண் இல் நல் தவம் செய்தால் - ஆன்மாக்கள் எண்ணில்லாத நல்ல புண்ணியங்களைச் செய்தால்,—நாடு அரு நீடு ஞானநாட்டம் பெற்றவர் காண்பர் - (அவர்களுள்ளே) நாடுதற்கரிய ஒழியாத ஞானக்கண்ணைப் பெற் றவர் (சிதம்பரத்தைத்) தரிசிப்பார்,—காணப் பெறுதவர் பிறப் பர் - தரிசிக்கப் பெறுதவர் பிறப்பர். எ - று. (எஉ)

நீயினிக் காள வாயு நிலவெரி கதிரார் கண்ணு
மாயிரஞ் சிரமுங் கண்டா லஞ்சிடு மகில முன்னே
தூயவத் திரியுந் தாரந் துலங்கன சூயை தானுஞ்
சேயென நின்னை வேண்டித் திருந்தருந் தவம்பு ரிந்தார்.

இ - ள். நீ இனி - நீ இனி ஒருபாயஞ் சொல்லக் கேள்;— காளவாயும் நிலவு எரி கதிர் ஆர் கண்ணும் ஆயிரம் சிரமும்

கண்டால் அகிலம் அஞ்சிடும் - நஞ்சைப்பொருந்திய வாயையும் சந்திரன் அக்கினி சூரியன் என்னும் முச்சுடரினும் மிகுத்த ஒளியையுடைய கண்களையும் ஆயிரம் பணமகுடங்களையுங்கண்டால் உலகம் பயப்படும்;—முன்னை - (நெடுங்காலத்துக்கு) முன்னே—தூய அத்திரியும் தாரம் துலங்கு அனசூயை தானும்-சுத்தனாகிய அத்திரிமுனிவனும் (அவனுக்கு) மனைவியாகி விளங்குகின்ற அனசூயையும்—நின்னைச் சேய் என வேண்டி - உன்னை (த் தங்களுக்கு) ப் பிள்ளையாகும்படி விரும்பி—திருந்து அருந் தவம் புரிந்தார் - (விட்டுணுவைநோக்கித்) திருத்தமுற்ற அரிய தவத்தைச் செய்தார்கள். எ - று. (எ௩)

அரியவர்க் குன்னை யீந்தா னன்றுநீ பிறத்த லஞ்சி
யிருதுவாய்ப் புனிதை யாய்வந் தேற்றவஞ் சலிப்பா லெய்தி
மருவுமைந் தலையோர் பால மாசுண மாகக் கண்டு
பரிவினாற் பயத்தா னீப்பப் பதஞ்சலி யான பண்பால்.

இ - ள். அரி உன்னை அவர்க்கு ஈந்தான்-விட்டுணு உன்னை அவர்களுக்குப் பிள்ளையாகக் கொடுத்தான்;—அன்று நீ பிறத்தல் அஞ்சி - அப்பொழுது நீ (யோனிவாய்ப்பட்டுப்) பிறத்தற்கு அஞ்சி—இருது ஆய்ப் புனிதை ஆய் வந்து ஏற்ற அஞ்சலிப்பால் எய்தி - (அவ்வனசூயை) இருதுமதியாய் ஸ்நானத்தினாலே) சுத்தியடைந்தவளாய் (க் கரையிலே) வந்து ஏற்ற அஞ்சலியினிடத்தே பொருந்தி—ஐந்தலை மருவும் ஓர் பால மாசுணம் ஆகக் கண்டு - ஐந்து தலை பொருந்திய ஒரு சிறு பாம்பாகக் கண்டு—பரிவினால் பயத்தால் நீப்ப - அனபினாலும் அச்சத்தினாலுங்கைவிட—பதஞ்சலி ஆன பண்பால் - நீ பதஞ்சலியாகிய தன்மையினால். எ - று.

பதஞ்சலி அஞ்சலியினின்றும் விழுந்தவர். இரண்டுகைகளையுங்கூட்டி மேலாக விரித்து உள்ளங்கைகளைக் குழியாக்கின், அஞ்சலியெனப்படும். (எச)

ஆங்கது வாகி யிந்த வனந்தனா நினைவி னோடும்
பாங்கினா னீங்க லாகாப் பதஞ்சலி யென்னு நாமந்
தாங்கிநீ நாக லோகந் தருவழி சார்க நாப்ப
ணோங்க லொன் றுளது தென்பா லுயர்பில வழியுமுண்டால்.

இ - ள். ஆங்கது ஆகி-(இப்பொழுதும்) அந்தவடிவமாகி— இந்த அனந்தன் ஆம் நினைவினோடும் - இந்த ஆதிசேடரூபத் துக்கு உரியதாகிய புத்தியுடனே—பாங்கினால் நீங்கல் ஆகாப் பதஞ்சலி என்னும் நாமம் தாங்கி - நற்குணத்தினால் விடப்படாத பதஞ்சலியென்னும் பெயரைத் தரித்து—நீ நாகலோகம் தரு வழி சார்க - நீ நாகலோகத்துக்குப் பொருந்தியவழியே போவா யாக;—நாப்பண் ஓங்கல் ஒன்று உளது - (அந்நாகலோகத்துக்கு) நடுவே ஒருபருவதமுண்டு;--தென்பால் உயர் பிலவழியும் உண்டு- (அதற்குத்) தெற்குப் பக்கத்திலே உயர்ந்த பிலத்துவாரமு முண்டு. எ - று. (௭௫)

இடமதன் முடிவு தில்லைத் திகழ்வன மாகும் வாய்தல்
விடவட பாலி லால மென்னிழ றன்னி லந்தத்
தடவரைக் கொழுந்து மூலத் தானமார் குறியா யிந்தப்
புடவியி லமரர் போற்றும் பொற்பம ரற்பு தத்து.

இ - ள். அதன் முடிவு திகழ் தில்லைவனம் ஆகும் இடம் - அப்பிலத்துவாரத்தின் முடிவு விளங்குகின்ற தில்லைவனமாகும் இது சத்தியம்;—வாய்தல் விட - அப்பிலத்துவாரநீங்க—வட பாலில் - (அதற்கு) வடபக்கத்திலே—ஆலமென்னிழறன்னில் - ஆலமரத்தினது குளிர்மையாகிய நிழலிலே—அந்தத் தடவரைக் கொழுந்து - அப்பெரியமலையின் கொழுந்தானது—மூலத்தானம் ஆர் குறி ஆய் - திருமூலத்தானத்திலே பொருந்திய இலிங்க மாய்,—இந்தப் புடவியில் அமரர் போற்றும் பொற்பு அமர் அற்புதத்து - இந்தப் பூமியிலே தேவர்கள் துதிக்கும் அழகு பொருந்திய ஆச்சரியத்தை யுடைத்தாயிருக்கும். எ - று. (௭௬)

பூசையங் கியற்றிக் கூத்தும் புந்திசெய் தரும்பு லிக்கா
லாசிலா முனியி ருந்தா னவனுட னமர்க நாமு
மோசை கொள்பூசம் பொன்னோ டுறுதினம் பொருந்து முச்சி
தேசுறு நடநீர் காணச் செய்துமென் றருளிச் செய்தான்.

இ - ள். ஆசு இலா அரும் புலிக்கால் முனி - குற்றமில்லாத பெரிய வியாக்கிரபாதமுனிவன்—அங்குப் பூசை இயற்றிக் கூத்தும் புந்தி செய்து இருந்தான் - அங்கே (அவ்விலிங்கத்தைப்) பூசைசெய்து (நமது) நிருத்தத்தைத் (தரிசித்தல் வேண்டுமென்று) சிந்தித்துக்கொண்டிருந்தான்,—அவனுடன் அமர்க - (நீயும் போய்) அவனோடிருப்பாயாக;—நாமும் - நாமும்—ஓசை கொள் பூசம் பொன்னோடு உறு தினம் பொருந்தும் உச்சி - பிரசித்தி பெற்ற (தைப்) பூசம் குருவாரத்தோடுகூடும் (சித்தயோக) தினத்திற் பொருந்திய மத்தியானத்திலே—தேசு உறும் நடம் நீர் காணச் செய்தும் என்று அருளிச்செய்தான் - (அவ்விடத்தில்) ஒளி பொருந்திய ஆனந்த நிருத்தத்தை நீங்கள் தரிசிக்கச் செய்வோம் என்று அருளிச்செய்தார். எ - று. (எஎ)

திருவருள் பெற்று மற்றத் திகழனந் தனும்வீ ழுந்து
பரிவொடு பணிந்தெ ழுந்து பரவச னாகி நிற்பப்
புரிகுழ லுமையா ளோடும் பூதமுங் கணமும் போற்ற
விருவிசும் பதனில் விண்ணோ ரிறைய வனுற மறைந்தான்.

இ - ள். மற்றத் திகழ் அனந்தனும் திருவருள் பெற்று - விளங்குகின்ற அவ்வாதி சேடனும் திருவருளைப் பெற்று,—பரிவொடு விழுந்து பணிந்து எழுந்து பரவசன் ஆகி நிற்ப - (பூமியிலே) அன்போடு விழுந்து வணங்கி எழுந்து பரவசராகி நிற்க,—விண்ணோர் இறையவன் - தேவதேவராகிய சிவபெருமான்—பூதமும் கணமும் போற்ற - பூதங்களுங்கணநாதர்களுந் துதிக்க—புரி குழல் உமையாளோடும் - நெறித்த கூந்தலை

யுடைய உமாதேவியாரோடும்—இரு விசும்பதனில் உற மறைந்தான் - பெரிய ஆகாயத்திலே பொருந்த மறைந்தருளினார். எ-று.

அண்ணலார் மறைந்த போதங் காசைநே ராசை யோடு
மண்ணிலே வீழ்ந்தி றைஞ்சி வானவ னருளா லந்தத்
துண்ணெனு முருவ நீங்கித் தொழுபதஞ் சலியா மேனி
திண்ணமா ரிலங்க மாகச் சிலபகல் சிந்தை செய்தான்.

இ - ள். அங்கு அண்ணலார் மறைந்த போது - அங்கே சிவபெருமான் மறைந்தருளியபொழுது,—ஆசை நேர் ஆசை யோடும் மண்ணிலே வீழ்ந்து இறைஞ்சி - அந்தத்திக்குக்கு நேராக விருப்பத்தோடும் பூமியிலே விழுந்து வணங்கி,—வானவன் அருளால் - சிவபெருமானுடைய திருவருளினாலே—துண்ணெனும் அந்த உருவம் நீங்கி - (கண்டோர்) அஞ்சுகின்ற அந்தச் சேடரூபம் நீங்கி—தொழு பதஞ்சலி ஆம் மேனி - (கண்டோர்) வணங்குகின்ற பதஞ்சலிரூபமே—திண்ணம் ஆர் இலங்கம் ஆக - (தமக்கு) மெய்ம்மையாகிய கூடுதலாகும்படி—சில பகல் சிந்தை செய்தான் - சிலகாலஞ்சிந்தித்தார். எ - று. இலங்கம் கூடுதல்.

வேட்டுவற் குறித்த பச்சை மென்புழுப் போல நாதன்
காட்டிய மேனி கொண்டு கண்டது தொழுது பண்டை
நாட்டெதி ரணைய வண்ண னயந்தவா கேட்டு நாக
ரீட்டமுந் தலைவ ரானா ரியாவரு மெதிர்கொண் டார்கள்.

இ - ள். வேட்டுவற் குறித்த மென் பச்சைப் புழுப்போல - வேட்டை வாளியாகிய குளவியை நினைத்துக்கொண்டிருந்த மெல்லிய பச்சைப்புழுவானது அக்குளவியுருவங் கொண்டாற் போல—நாதன் காட்டிய மேனி கொண்டு - (பதஞ்சலி யுருவத்தைத் தியானித்துக்கொண்டிருந்த தாம்) சிவபெருமானாலே கூட்டப்பட்ட அப்பதஞ்சலி யுருவத்தைக் கொண்டு,—கண்டது தொழுது - (அதனைத் தமக்குச்) செய்த திருவருளை வணங்கி,—

பண்டை நாட்டு எதிர் அணைய - பழைய நாகலோகத்துக்குச் சமீபமாகச் சென்று பொருந்த,—நாகர் ஈட்டமும் தலைவரானோர் யாவரும் - நாகர் கூட்டமும் (வாசுகிமுதலிய) நாகராசாக்கள் யாவரும்—அண்ணல் நயந்தவாகேட்டு எதிர் கொண்டார்கள் - (தங்கள்) இராசாவாகிய ஆதிசேடர் விரும்பி வந்தமையைக் கேட்டு (அவரை) எதிர்கொண்டார்கள். எ - று. (அ0)

மண்டிவந் தெதிர்கொண் டார்க்கு மாசுண வரசர் சூழ
வண்டர்தம் பெருமா னல்கு மருவரை யமலன் மேனி
கண்டுவந் திறைஞ்ச நின்ற கார்க்கோடன் முதலோர் போற்றி
விண்டுநீ பணிவா னென்கொல் வேண்டிய தென்று ரைத்தார்.

இ - ள். மண்டி வந்து எதிர் கொண்டு ஆர்க்கும் மாசுண அரசர் சூழ - நெருங்கி வந்து எதிர்கொண்டு ஒலிக்கின்ற நாக ராசாக்கள் சுற்ற,—அண்டர்தம் பெருமான் நல்கும் அருவரை அமலன் மேனி கண்டு உவந்து இறைஞ்ச - (ஆதிசேடர்) தேவ தேவராகிய சிவபெருமான் அருளிச்செய்த பெரிய மலையாகிய திருமூலதத்தானமுடைய தம்பிரானார் திருமேனியைத் தரிசித்து மகிழ்ந்து வணங்க,—நின்ற கார்க்கோடன் முதலோர்-(அவரைச் சூழ்ந்து) நின்ற கார்க்கோடகன் முதலிய நாகராசாக்கள்—நீ விண்டு போற்றிப் பணிவான் வேண்டியது என்கொல் என்று உரைத்தார் - நீர் இம்மலையை (ஒருபொருளாக)த் துதித்து வணங்கவேண்டியதென்னை என்று சொல்லினார்கள். எ - று.

காதலி னோக்கி யுள்ள கைப்பொருள் கண்டோர் யார்க்கும்
பாதிடு முரவோர் போலிப் பருப்பதம் பாத லக்கீழ்ப்
போதமார் தான மெல்லை தில்லையாய்ப் பொருந்தி வாழு
நாதனார் காணு மென்று கூறினா னாக ராசன்.

இ - ள். காதலின் நோக்கி உள்ள கைப்பொருள் - விருப் பத்தினாலே (தாம்) தேடிய கைப்பொருளை—கண்டோர் யார்க்

கும் பாதிடும் உரவோர்போல் - கண்டவர் யாவருக்கும் (வரையாது) பகுத்துக்கொடுக்கும் அறிவுடையோர்போல,—நாகராசன் - நாகராசாவாகிய ஆதிசேடர்—இப்பருப்பதம் பாதலக்கீழ்ப் போதம ஆர் தானம - இந்தமலை பாதாளமேழினுக்குங்கீழாக நிறை ஞானமயமாகிய இடம்;—எல்லை தில்லை ஆய்ப் பொருந்தி வாழும்—இதன்மேலெல்லை தில்லைவனமாய்ப் பொருந்தியிருக்கும்;—நாதனுர் காணும் என்று கூறினுன் - இது சிவலிங்கப்பெருமான் அறியக்கடவீர் என்று சொல்லியருளினுர். எ - று.

அலைபணத் தலைவர் யாமு னறிந்தவா கேட்டி யாயிற்
றலைவனே மலையென் றெண்ணிச் சங்கித்து மிருந்து மிந்தப்
பிலவழி கீழுற் றெல்லை பெற்றில மேலுஞ் சாலச்
செலவரி தென்று மீண்டுந் தெளிவில மென்று செப்பி.

இ - ள். அலை பணத்தலைவர் - அசைகின்ற படத்தையுடைய நாகராசாக்கள்—தலைவனே யாம் முன் அறிந்தவா கேட்டியாயின் - இராசாவே நாங்கள் முன்னே அறிந்தமையைக் கேட்பீராயிற சொல்வோம்;—மலை என்று எண்ணிச் சங்கித்தும் இருந்தும் - (இதனை) மலையென்று நினைந்தும் ஐயுறறுமிருந்தேம்;—இந்தப் பிலவழி கீழ் உற்று எல்லை பெற்றிலம் - இநதப் பிலத்துவாரத்தின் வழியாகக் கீழே போய் இதன் முடிவெல்லையைக் காணப்பெற்றேமில்லை;—மேலும சாலச் செலவு அரிது என்று மீண்டும் - மேலேயும் முடியப்போதல் அரிதெனறு திரும்பிவிட்டேம்;—தெளிவு இலம் என்று செப்பி - (நாஙகள்) இதனை அறிதிலம் எனறு சொல்லி. எ - று. (அகூ)

அத்தகு வாய்மை யாலே யவர்களா தரித்துப் போற்றிப்
பத்தியா லிறைஞ்சக் கண்டு பதஞ்சலி யவரை நீங்கிச்
சுத்தமார் பிலம்வ ணங்கித் துணைவனே துணையா வுன்னி
யித்தலந் துயர நீங்க வேறுவா னேற லுற்றுன்.

இ - ள். அத்தரு வாய்மையாலே - (அம்மலை சிவலிங்கமென்னும்) அந்தத்தருதியாகிய உண்மையினாலே—அவர்கள் ஆதரித்துப் பததியால் போற்றி இறைஞ்சக கண்டு - அந்நாகர்களெல்லாரும் (அம்மலையை) விரும்பி அன்போடு துதித்து வணங்கும்படி செய்து,—பதஞ்சலி அவரை நீங்கி - பதஞ்சலி மகாமுனிவர் அவர்களைப் பிரிந்து,—சுத்தம் ஆர் பிலம் வணங்கி-சுத்தநிறைந்த பிலத்துவாரததை நமஸ்கரித்து,—துணைவனே துணையா உன்னி-உயிர்த துணைவராகிய சிவபெருமானையே வழித்துணைவராகத் தியானிததுக்கொண்டு,—இத்தலம் துயரம் நீங்க ஏறுவான் - இவ்வுலகத்தார்கள் (தங்கள்பிறவித்) துன்பநீங்கும்படி (சிவலோகததில்) ஏறும்பொருட்டு—ஏறல் உற்றான் - (தாம் நாகலோகததினின்றும் பூலோகததில்) ஏறததொடங்கினார். எ - று.

அரவரை யாட வாடு மண்ணலஞ் செழுத்துங் கண்ணாக்
கரவிலா வழியா லெண்ணில் காலங்கள் கழிய வேறிக்
குரைகடன் மணியு முத்தும் பவளமுங் கலமுங் கொண்டு
திரைநிரை வணங்குந் தில்லைத் திருவெல்லை சேர வந்தான்.

இ - ள். அரை அரவு ஆட ஆடும் அண்ணல் அஞ்செழுத்தும் கண்ணா - திருவரையிலே சருப்பமாட நடித்தருளுஞ் சிவபெருமானுடைய ஸ்ரீபஞ்சாக்ஷரமே கண்ணாக,—கரவு இலா வழியால் எண் இல் காலங்கள் கழிய ஏறி - மறைவில்லாத வழியினாலே அளவில்லாத காலங்கள் செல்லவேறி,—குரைகடல் - ஒலிக்கின்ற சமுத்திரமானது—மணியும் முத்தும் பவளமும் கலமும் கொண்டு - மாணிக்கத்தையும் முத்தையும் பவளத்தையும் மரக்கலத்தையும் (காணிக்கையாகக்)கொண்டு வந்திட்டு—திரை நிரை வணங்கும் தில்லை - திரையினது ஒழுங்கினாலே வணங்காநின்ற தில்லைவனத்தினது—திருவெல்லை சேர வந்தான் - திருவெல்லை சமீபிக்க வந்தார். எ - று. (அரு)

உருகிட வுள்ளங் கண்ணீ ரோவாம லொழுக வுச்சிக்
கரகம லங்கள் கூம்பக் கணபணா மணிவி ளங்கத்
திருவருள் வளர ஞாலஞ் சிவமய மாக மாயா
விருள்கெட ஞான பானு வெனநில மேலெ ழுந்தான்.

இ - ள். உள்ளம் உருகிட - மனங்கரைய,—கண் ணீர் ஓவாமல் ஒழுக - கண்ணீர் ஒழியாமற் பாய,—கர கமலங்கள் உச்சிக் கூம்ப - கைகளாகிய தாமரைமலர்கள் சிரசிலே குவிய,—கண பண மணி விளங்க - கூட்டமாகிய படத்திலுள்ள இரத்தினங்கள் பிரகாசிக்க,—திருவருள் வளர - திருவருளோங்க,—ஞாலம் சிவமயம் ஆக - பூலோகத்தான்மாக்கள் சிவமயமாக,—மாயா இருள் கெட - நீங்காத ஆணவமலவிருள் நீங்க,—ஞான பானு என நிலமேல் எழுந்தான் - ஞானசூரியர்போலப் (பிலத்துவாரத்தினின்றும்) பூமியிலே எழுந்தார். எ - று. (அகூ)

எழுந்தருள் வனமி றைஞ்சி யிருந்தவா கண்டு காணுச்
செழுந்தவ வுருவை நோக்கித் திருமுனி திகைப்பத் திங்கட்
கொழுந்தணி வேணி யண்ண லருளினுற் கொழும் புலிக்கா
லழுந்துமா தவனை நேர்சென் றாதர வதனுற் கண்டான்.

இ - ள். எழுந்து அருள் வனம் இறைஞ்சி - எழுந்து திருவருளையுடைய தில்லைவனத்தை வணங்கி,—இருந்தவா கண்டு - (அது) இருந்த தன்மையைக் கண்டு,—காணுச் செழுந்தவ உருவை நோக்கித் திருமுனி திகைப்ப - (முன்னொருபொழுதும்) காணுத மாட்சிமை பொருந்திய தவவேடத்தைப் பார்த்து வியாக்கிரபாதமகாமுனிவர் மயங்க,—திங்கட் கொழுந்து அணி வேணி அண்ணல் அருளினுல் - பிறையையணிந்த சடையையுடைய சிவபெருமானது ஆஞ்ஞையினுலே—கொழும் புலிக்கால் அழுந்து மாதவனை - கொழுவிய புலிக்கால் பொருந்திய அம்முனிவரை—நேர் சென்று ஆதரவதனுல் கண்டான் - அவரெதிரே போய் ஆசையினுலே கண்டார். எ - று. (அஎ)

மங்கல வுருவா மேனி மாமுனி யதிச யித்துச்
செங்கைக ளேந்தி மேனித் திகழ்வுகண் டுவந்து செல்வா
வெங்குறை வாய்நீ போவ தெவ்வள வேது நாமஞ்
சங்கைக ளகல வெல்லாஞ் சாற்றுக வென்று செப்ப.

இ - ள். மஙகல உரு ஆம் மேனி மா முனி அதிசயித்து - மங்கலரூபமாகிய திருமேனியையுடைய வியாக்கிரபாத மகா முனிவர் ஆச்சரியப்பட்டு,—மேனித் திகழ்வு கண்டு உவந்து செங்கைகள் ஏந்தி - (அவருடைய) திருமேனியினது விளக்கத்தைக் கண்டு மகிழ்ந்து இரண்டு சிவந்த கைகளையும் ஏந்தி,—செல்வா நீ எங்கு உறைவாய் - அருட்செல்வத்தையுடைய முனிவரே நீர் எங்கே உள்ளீர்?—போவது எவ்வளவு - (நீர் குறித்துப் போவது எவ்விடம்?—நாமம் ஏது-உமமுடைய பெயர் யாது?—சங்கைகள் அகல எல்லாம் சாற்றுக என்று செப்ப - (என்னுடைய) சந்தேகங்கள் நீங்கும்படி இவைகளெல்லாவற்றையும் சொல்லும் என்று சொல்ல. எ - று. (அஅ)

அடுபுலித் தாளோய் கேள்யா னனந்தனு னந்தமான
நடநெடு வனத்து ளண்ண னயந்தவா நல்கி யென்னை
நெடியவ னமளி கொள்ளா நீர்மையா னீப்ப நீங்கித்
தடவரை மருங்கே யானுந் தவம்பல காலஞ் சார.

இ - ள். அடு புலித் தாளோய் கேள் - (பாசத்தைச்) சேதித்த வியாக்கிரபாதமகாமுனிவரே கேளும்,—யான் அனந்தன - நான் ஆதிசேடன்;—நெடியவன் - விட்டுணுவானவர்—நெடு வனத்துள் அண்ணல் ஆனந்தம் ஆன நடம் நயந்தவா நல்கி - நெடிய தேவதாருவனததிலே சிவபெருமான் ஆனந்தமயமாகிய திருநிருததத்தை விரும்பிச் செய்தமையை (எனக்கு) அருளிச்செய்து—என்னை அமளி கொள்ளா நீர்மையால் நீப்ப - (திருநிருத்தத்தின்மேல் எனக்குள்ள ஆசையைக்கண்டு) என்னை முன்போலச் சயனமாகக் கொள்ளாவண்ணம் நீக்க,—யானும்

நீங்கி - நாளும் நீங்கி—தடவரை மருங்கே பலகாலம் தவம் சார - பெரிய திருக்கைலாசமலையின் பக்கத்திலே நெடுங்காலந் தவம்பண்ண. எ - று. (அகூ)

வாசமா மலரோ னாகி வாய்மைக ளளந்து தானுந்
தேசினி லணைந்து வந்தென் சிரமிசைக் கரமி ருத்திப்
பாசம தகல நாயேன் பதஞ்சலி யாக நல்கி
யாசிலா வுபதே சங்க ளளவிலா வகைய ளித்து.

இ - ள். வாச மா மலரோன் ஆகி வாய்மைகள் அளந்து - (முன்பு) மணத்தையுடைய பெரிய செந்தாமரைமலரிலிருக்கும் பிரமாவாகி வந்து (என்னுடைய) உண்மைகளைப் பரீக்ஷித்து,—தானும் தேசினில் அணைந்து - (பின்பு) தாமாகிய ஒளிவடிவத்தோடு பொருந்தி,—வந்து - (எனக்கு நேரே இடபத்தைச் செலுத்திக்கொண்டு) வந்து,—பாசமது அகல என்சிரமிசைக் கரம் இருத்தி - பாசநீங்கும்படி என் சிரசின்மீது திருக்கரத்தை வைத்து,—ஆசு இலா உபதேசங்கள் அளவு இலாவகை அளித்து - குற்றமில்லாத உபதேசங்களினாலே (ஒன்றாலும்) அளவிடப்படாத (தமது) உண்மையை அறிவித்து,—நாயேன் பதஞ்சலி ஆக நல்கி - சிறியேன் பதஞ்சலி வடிவினனாக அருளிச்செய்து. எ - று. (கூ0)

வேண்டிநங் கூத்துக் காண வியாக்கிர பாத னென்னு
மாண்டகு முனியுந் தில்லை வனத்தின னவனு நீயுந்
தாண்டவங் காண்டிர் நாகத் தலத்துயர் பிலத்தா லேறி
யாண்டிரு வென்று னென்று னருமுனி யயர்ந்து வீழ்ந்தான்.

இ - ள். வியாக்கிரபாதன் என்னும் மாண் தகு முனியும் - வியாக்கிரபாதனென்கின்ற மாட்சிமை தக்க முனிவனும்—நம் கூத்துக் காண வேண்டித் தில்லைவனத்தினன் - நமது நிருத்தத்தைத் தரிசிக்க விரும்பித் தில்லைவனத்தின்க ணிருக்கின்

றான்;—அவனும் நீயும் தாண்டவம் காண்டிர் - அவனும் நீயும் (நமது) நிருத்தத்தைத் தரிசிக்கக்கடவீர்கள்;—நாகத் தலத்து உயர் பிலத்தால் ஏறி ஆண்டு இரு என்றான் - நாகலோகத்தி லுள்ள உயர்ந்த பிலத்துவாரத்து வழியாலேறி அங்கே இருப்பா யாக என்று (சிவபெருமான) திருவாய்மலர்ந்தருளினார்—என் றான் - என்று பதஞ்சலிமகாமுனிவர் சொல்லினார்;—அரு முனி அயர்ந்து வீழ்ந்தான் - (உடனே) பெரிய வியாக்கிரபாதமகா முனிவர் மூர்ச்சித்து விழுந்தார். எ - று. (கூக)

அருள்புரி கருணை வெள்ளத் தழுத்தினு னென்னை யண்ண
றிருவுளம் பற்ற யான்முன் செய்தவ மென்னோ வென்றென்
றுருகினான் கண்ணீர் வார வுயர்பதஞ் சலிநீ தந்த
கரவிலா வருளா மென்று கைகளாற் கட்டிக் கொண்டான்.

இ - ள். அண்ணல் அருள் புரி கருணை வெள்ளத்து என்னை அழுத்தினான் - சிவபெருமான் தாம் அருளிச்செய்த காருண்ணிய மாகிய வெள்ளத்திலே என்னை முழுகுவித்தார்;—திருவுளம் பற்ற யான் முன் செய் தவம் எனனோ என்று என்று - (எம பெருமான் இங்ஙனந்) திருவுளம்பற்ற நான் முன்செய்த சிவ புண்ணியம் யாதோ என்று (பலகாலுஞ்) சொல்லிச் சொல்லி,— கண் நீர் வார உருகினான் - கண்ணீர்பொழிய (நின்று) உருகி னார்;—உயர் பதஞ்சலி நீ தந்த கரவு இலா அருள் ஆம் என்று - உயர்ந்த பதஞ்சலிமகாமுனிவரே நீர் (கொண்டு வந்து) தந்தது (பிரியவார்த்தையன்று) மறைப்பில்லாத திருவருளேயாம் என்று— கைகளால் கட்டிக்கொண்டார் - (அவரைத் தம்முடைய) கைகளி னாலே கட்டிக்கொண்டார். எ - று. (கூஉ)

திண்ணமார் சிறியோன் பெற்ற செல்வமா மென்ன ஞானக்
கண்ணினு லமலன் கூத்துக் கண்டுளங் களித்தான் போல
வெண்ணிலா வின்ப முற்றங் கிலங்குபொற் கயத்து மூழ்கப்
பண்ணிநாண் மலரான் மூலப் பரமர்தாள் பணிய வுய்த்தான்.

இ - ள். திண்ணம் ஆர் சிறியோன் பெற்ற செல்வம் ஆம் என்ன - உறுதி பொருந்திய தரித்திரன் பெற்ற செல்வம்போல வும்—அமலன் கூத்து ஞானக் கண்ணினல் கண்டு உளம்களித் தான் போல - சிவபெருமானுடைய திருநிருத்தத்தை ஞானக் கண்ணினுலே தரிசித்து மனமகளித்தவர்போலவும்—எண் இலா இன்பம் உறறு - அளவில்லாத இன்பத்தை அடைந்து,—அங்கு இலங்கு பொற் கயத்து மூழ்கப் பண்ணி - (பதஞ்சலிமகாமுனி வரை) அஙகே விளஙகுகின்ற பொற்றுமரை வாவியாகிய சிவ கஙகையிலே ஸ்நானஞ்செய்யப்பண்ணி,—நாள் மலரால் மூலப் பரமர் தாள் பணிய உய்த்தான் - அன்றலர்ந்த பூக்களினுலே திருமூலட்டானேசுரருடைய திருவடிகளைப் பூசித்து வணங்கும் படி ஏவினுர். எ - று. (கூங)

வலங்கொண்டு குடபாற் றெய்வ வாவியின் மூழ்கு வித்து
நலங்கிளர் தன்னை யாண்ட நாதனை வணங்க நல்கித்
தலம்புணர் பன்ன சாலை தகுவித்துச் சாக மூல
பலங்களு மிலங்கப் பின்னுட் பரிந்தரு விருந்த ளித்தான்.

இ - ள். வலம் கொண்டு குடபால் தெய்வ வாவியின் மூழ் குவித்து - (திருமூலட்டானேசுரரைப்) பிரதக்ஷிணஞ்செய்து மேறகுப்பக்கததிலுள்ள தெய்வததன்மை பொருந்திய வாவி யிலே ஸ்நானஞ்செய்யப்பண்ணி,—நலம் கிளர் தன்னை ஆண்ட நாதனை வணஙக நல்கி - விருப்பமிக்க தம்மை ஆண்டருளிய திருப்புலீச்சுரரையும் வணஙகச் செய்து,—தலம் புணர் பன்ன சாலை தகுவித்து - அவ்விடத்துப் பொருநதிய பன்னசாலையிலே கொண்டுபோய்,—பின் நாள் - (அன்றுபோக) மற்றைநாளிலே— பரிந்து - அன்புகூர்ந்து,—சாகமூல பலங்களும் - சாகமூலபலங் களினுலே—இலஙக அருவிருந்து அளித்தான் - விளங்கும்படி பெருவிருந்து செய்தார். எ - று. (கூச)

மனக்களி கூரு நாளில் வனமதன் குடபாற் றெய்வப்
புனற்றடங் கண்டு மூழ்கிப் புணர்குண கரைமேற் போற்றத்

தனக்கு மோர் நாயனாரைத் தாபித்து வணங்கித் தங்க
வனித்தமில் சாலை வாவி யதன்வட பால மைத்தான்.

இ - ள். மனக் களி கூரும் நாளில் - நெஞ்சத்தின்கண்ணே களிப்பு மிக்கிருக்குநாளிலே,—வனமதன் குடபால் - அந்தத் தில்லைவனத்தின் மேல்புறத்திலே—தெய்வப் புனல் தடம்கண்டு மூழ்கி - தெய்வத்தன்மை பொருந்திய சலத்தையுடைய ஒருவாவியைக் கண்டு (அதிலே) ஸ்நானஞ்செய்து,—புணர் குண கரை மேல் - பொருந்திய (அவ்வாவியின்) கீழ்கரையிலே—போற்றத் தனக்கும் ஓர் நாயனாரைத் தாபித்து வணங்கி - (தாம் நாடோறும்) வணங்கும்பொருட்டுத் தமக்கும் ஒரு சிவலிங்கப்பெருமானைத் தாபித்து நமஸ்கரித்து,—தங்க - (தாம்) இருக்கும்பொருட்டு—அநித்தம் இல் சாலை - நிலையுள்ள ஒரு பன்னசாலையை—வாவி அதன் வடபால் அமைத்தான் - அவ்வாவியின் வடபக்கத்திலே கட்டினார் பதஞ்சலிமகாமுனிவர். எ - று. (கரு)

ஆங்கிட மாக நாளு மமர்ந்தனந் தீச்சு ரத்துந்
தீங்கில்வண் புலீச்சு ரத்துந் திகழ்சீர்மூ லத்தா னத்து
மோங்கிய நாதன் பாத முறவுற வணங்கி யாட
லீங்களித் தருளு கென்றங் கிருவரு மிருந்தா ரன்றே.

இ - ள். ஆங்கு இடம் ஆக அமர்ந்து - அங்கே இருப்பிடமாக இருந்துகொண்டு,—நாளும் - நாடோறும்—அனந்தீச்சுரத்தும் - திருவனந்தீச்சுரத்தினும்—தீங்கு இல் வண் புலீச்சுரத்தும் - குற்றமில்லாத அழகிய திருப்புலீச்சுரத்தினும்—சீர் திகழ் மூலத் தானத்தும் - அழகு விளங்குகின்ற திருமூலத்தானத்தினும்—ஓங்கிய நாதன் பாதம் உறவு உற வணங்கி - விளங்காநின்ற சிவபெருமானுடைய திருவடிகளை அன்புபொருந்தப் பூசித்து நமஸ்கரித்து,—ஈங்கு ஆடல் அளித்து அருளுக என்று - இங்கே திருநிருத்தத்தைத் தரிசிப்பித்தருளும் என்று (பூசாந்தத்

தில்) வேண்டிக்கொண்டு,—அங்கு இருவரும் இருந்தார் - அந்தத் தில்லைவனத்தில் இருவரும் இருந்தார்கள். எ - று. (௯௯)

வெண்டிரை யொலியார் தில்லை மிருவன விலங்கு யாவும்
பண்டைநம் புலிய னன்றிப் பாம்பனும் வந்தா னென்று
திண்டிறற் களநி மிர்த்துச் செவிகளுஞ் சிலிர்த்தி யேங்கி
மண்டிய காலஞ் செல்ல மருங்குற வணைந்த வன்றே.

இ - ள். வெண்டிரை ஒலி ஆர் தில்லை மிரு வன விலங்கு யாவும் - வெண்மையாகிய திரைகளினுடைய ஓசை நிறைந்த தில்லைமரங்கள் செறிந்த வனத்தினுள்ள மிருகங்களெல்லாம்— பண்டை நம் புலியன் அன்றிப் பாம்பனும் வந்தான் என்று - முன்னுள்ள நம்முடைய புலியனேயன்றி (இப்பொழுது) ஒரு பாம்பனும் வந்தான் என்று (பயப்பட்டு,)—திண்டிறற் களம் நிமிர்த்து - திண்ணிய வலியையுடைய கழுத்தைத் நிமிர்த்து (வெறித்துப் பார்த்து)—செவிகளும் சிலிர்த்தி ஏங்கி - செவிகளையுஞ் சிலிர்த்திப் (பார்த்து) அஞ்சி (அகல நின்று)—மண்டிய காலம் செல்ல - மிகுந்த காலஞ் சென்றபின்—மருங்கு உற அணைந்த - (அவர்கள்) பக்கத்திலே பொருந்தச் சஞ்சரித்தன. எ - று. (௬எ)

நாடொறு மமையந் தோறு நவநவ மாக வந்து
கூடின ரநேக ராகிக் குழகனை வழிபட் டேத்தித்
தாடலை யுறப்ப ணிந்தோர் தழைநிழற் சார்ந் திருந்தென்
பூடுரு கிடுமா றண்ண லுரைத்தவா விரித்த வாயில்.

இ - ள். நாள் தொறும் அமையம் தோறும் நவம் நவம் ஆக வந்து கூடினர் அநேகர் ஆகி - தினந்தோறும் காலந்தோறும் புதுமை புதுமையாக வந்து கூடினவர்கள் பலராகி,—குழகனை வழிபட்டு ஏத்தித் தாள் தலை உறப் பணிந்து - சிவபெருமானைப் பூசித்துத் துதித்து (அவருடைய) திருவடிகளைச் சென்னி

பொருந்த வணங்கி,—ஓர் தழை நிழற் சார்ந்து இருந்து - ஒரு தழைத்த மரநிழலைப் பொருந்தியிருந்து,—என்பு ஊடு உருகிடுமாறு - எலும்பூடுருகும்படி—அண்ணல் உரைத்தவா விரித்த வாயில் - சிவபெருமான் அருளிச்செய்தபடி விரித்துச் சொல்லிய பொழுதில். எ - று. (௬௮)

வந்தவர் சொல்லக் கேட்ட மன்றுள தென்ற வெல்லை
சிந்தையா லிறைஞ்சிச் சென்று சிரமுறப் பணிந்து கூத்துப்
புந்தியால் வணங்கி மேனி புளகமும் பொலியப் போந்தங்
கிந்தவா றெண்ணில் கால மிரு வரு மேகுவித்தார்.

இ - ள். வந்தவர் சொல்லக் கேட்ட மன்று உளது என்ற எல்லை சிந்தையால் இறைஞ்சி - வந்த முனிவர்கள் சொல்லக் கேட்ட சபை இருக்கின்றதென்று சுட்டப்பட்ட திருவெல்லையை மனத்தால் வணங்கி,—சென்று சிரம் உறப் பணிந்து - அவ்விடத்திலே போய்ச் சென்னி பொருந்த வணங்கி,—கூத்துப் புந்தியால் வணங்கி - (அங்கே) ஆனந்தநிருத்தத்தைப் புத்தியினாலே (பாவித்து)நமஸ்கரித்து,—மேனி புளகமும் பொலியப் போந்து- உடம்பிலே புளகம் மிகும்படி மீண்டு,—அங்கு இந்தவாறு எண் இல் காலம் இருவரும் ஏகுவித்தார் - அங்கே இந்தப்பிரகாரம் எண்ணில்லாத காலத்தை இருவரும் போக்கினார்கள். எ - று.

பதஞ்சலிச்சருக்கமுற்றிற்று.

ஆக செய்யுள் - க௫௮.

# நடராசச்சருக்கம்.

காலமு மநேகஞ் சென்று கழிந்தபின் கடவுள் கூறுஞ்
சீலமார் சித்த யோகந் தெளிவுற நாடிச் சிந்தை
சாலவு மகிழ்ச்சி பொங்கத் தருக்குமிக் கிருக்கு மிக்குப்
பாலமு தனைய நாமம் பயில்வுமாய் முயலு நாளில்.

இ - ள். காலமும் அநேகம் சென்று கழிந்த பின் - இப்படி அநேக காலம் போய்க் கழிந்தபின்பு,—கடவுள் கூறும் சீலம் ஆர் சித்தயோகம் தெளிவு உற நாடி - சிவபெருமான் அருளிச் செய்த குணமிக்க சித்தயோகத்தை விளக்கம் பொருந்த ஆராய்ந்து,—சிந்தை மகிழ்ச்சி சாலவும் பொங்க - உள்ளத்திலே மகிழ்ச்சி மிகவும் ஓங்க,—தருக்கு மிக்கு இருக்கும் - களிப்பு மிகுந்திருத்தற்கு ஏதுவாகிய—இக்குப் பால் அமுது அனைய நாமம் பயில்வும் ஆய் முயலும் நாளில் - கருப்பஞ்சாற்றையும் பாலையும் அமுதத்தையும் போன்ற ஸ்ரீபஞ்சாக்ஷரத்தினைச் செபித்தலையுடையாகளாய் (த்தவ) முயலுநாளில். எ - று. (க)

இங்கிவர் தம்பா லன்பா லிறைநடக் கருத்த ராய்முற்
றங்கிய வாறைஞ் ஞாறு தாபத ரனைய நீரிம்
மங்கல தினத்து வாழ வம்மினென் றுரைத்துத் தாமும்
பங்கமி லதுக ணத்திற் பன்முறை யெண்ணி யெண்ணி.

இ - ள். இங்கு இவர் - இங்கே இம்முனிவர்கள்—தம்பால்-தங்களிடத்தே—அன்பால் இறை நடக் கருத்தராய் முன் தங்கிய ஆறைஞ்ஞாறு தாபதர் அனைய - அன்பினாலே சிவபெருமானுடைய திருநிருத்தத்தைத் தரிசிக்குங் கருத்தையுடையவர்களாய் முன்னே வந்திருந்த மூவாயிரமுனிவர்கள் வந்துகூட,—நீர் இம்மங்கல தினத்து வாழ வம்மின் என்று உரைத்து - நீங்களும் இந்தமங்கலமாகிய (சித்தயோக) தினத்திலே (ஆனந்த நிருத்தத்தைத் தரிசித்து) வாழும்பொருட்டு வாருங்கள் என்று சொல்லி,—தாமும் பங்கம் இல் அது கணத்தில் பன்முறை

எண்ணி எண்ணி - தாஙகளுங் குற்றமில்லாத அந்தச் சித்த யோகததை ஒருகணப்பொழுதிலே (பலதரம் அலகிட்டு) எண்ணி எண்ணிப் பார்த்து. எ - று. (உ)

கறவையான் வரவு பார்க்குங் கற்றின மெனவுங் கார்சே
ருறையுண வுணர்ந்து நோக்கி யோய்ந்த புள்ளெனவு மோங்கற்
செறிமுகின் முழவு கேட்குந் திகழ்மயிற் றிரளும் போல
விறையவ னடமே சிந்தித் திடைத்தினங் கடத்தி னார்கள்.

இ - ள். கறவை ஆன் வரவு பார்க்கும் கற்றினம் எனவும் - கறவைப்பசுவினது வரவை எதிர்பார்க்கும் கன்றுக்கூட்டம் போலவும்,—கார் சேர் உறை உணவு உணர்ந்து நோக்கி ஓய்ந்த புள் எனவும் - மேகத்திலே பொருந்திய மழைத்துளியாகிய உணவை எண்ணி எதிர்பார்த்து வாடிய சாதகப்புட்கள் போலவும்,—ஓஙகல் செறி முகில் முழவு கேட்கும் திகழ் மயில் திரளும் போல - மலையினமேலே நெருஙகிய மேகத்தினது முழக்கத்தைக் கேட்கும் விளங்குகின்ற மயிற்கூட்டம்போலவும்,—இறையவன் நடமே சிந்தித்து இடைத் தினம் கடத்தினார்கள் - சிவபெருமானுடைய திருநிருத்தத்தையே நினைந்து நினைந்து நடுவுள்ள நாட்களைக் கழித்தார்கள். எ - று. (ஈ)

வென்றிகொ ளந்நாண் முன்னாள் வெய்யவன் விரைந்து வெள்ளிக்
குன்றினை நண்ணி யண்ணல் கூத்தயர் தரவ சுன்று
னென்றமை யறிந்தான் போலங் கிராவழி போந்து தில்லை
யொன்றிய சடற்பாற் றோன்றி யெழுந்தவன் றுச்சி யுற்றான்.

இ - ள். வென்றி கொள் அந்நாள் முன்னாள் - (தைப்பூசமுங் குருவாரமுங்கூடிய சித்தயோகமாகிய) வெற்றி பொருந்திய அந்நாளுக்கு முதனாளிலே—வெய்யவன் விரைந்து வெள்ளிக் குன்றினை நண்ணி - சூரியன் விரைந்து போய் வெள்ளிமலை

யைப் பொருந்தி,—அண்ணல் கூத்து அயர்தர அகன்றான் என்றமை அறிந்தான்போல் - சிவபெருமான் (தில்லைவனத்திலே) திருநிருத்தஞ் செய்யும்பொருட்டு எழுந்தருளினாரென்றமையை அறிந்தவன்போல—அங்கு இரா வழிபோந்து - அங்குநின்றும் இராவழி போய்,—தில்லை ஒன்றிய கடற் பால் தோன்றி எழுந்து வந்து உச்சி உற்றான் - தில்லைவனம் பொருந்திய கீழ்கடலிலே தோன்றி எழுந்து (ஆகாயமார்க்கமாக) வந்து உச்சியிலே பொருநதினான். எ - று. (ச)

இரவியு முச்சி யெய்த விருகர முச்சி யெய்த
வருபவ ரெதிரோம் வந்தான் றேவர்க டேவன் வந்தா
னரியயர் பெருமான் வந்தா னென்றெழு வதற்குப் பின்னே
பரவிய வொலியுங் கேளாப் பார்மிசைப் பதறி வீழ்ந்தார்.

இ - ள். இரவியும் உச்சி எய்த - சூரியனும் உச்சியிலே பொருநத,—இருகரம் உச்சி எய்த வருபவர் - இரண்டு கைகளும் சிரசிலே பொருந்த வருவோர்கள்,—எதிர் - தஙகளெதிரே— ஓம் வந்தான் - ஓம் வந்தார்—தேவர்கள் தேவன் வந்தான் - தேவதேவர் வந்தார்—அரியயர் பெருமான் வந்தான் - அரிபிரமர்களுடைய கடவுள் வந்தார்—என்று எழுவதற்குப்பின்னே - என்று (சின்னங்கள்) ஒலித்தற்குப் பின்பு—பரவிய ஒலியும் கேளா - பரந்த (தாளம் மிருதஙகம் சஙகு முதலிய மற்றை வாத்தியஙகளின்) ஒலியையுஙகேட்டு,—பார் மிசைப்பதறி வீழ்ந்தார் - பூமியினமேலே பதறி விழுந்தார்கள். எ - று. (௫)

ஆயிர மதியு தித்த வருவரை போல வேத
மாயிரம் வகையா லோது மதுதகப் பானு கம்ப
ராயிர முகத்தி ரண்டா யிரங்கரத் தால ணைத்த
வாயிரஞ் சங்கு மோமென் றறைந்தன தழங்க வங்கண்.

இ - ள். ஆயிரம் மதி உதித்த அரு வரை போல - ஆயிரஞ் சந்திரர் உதித்த பெரிய மலைபோலவும்,—வேதம் ஆயிரம் வகை

யால் ஓதுமது தக - வேதம் ஆயிரம் விதமாக ஒலிப்பதுபோல வும்,—பாணுகம்பர் ஆயிரம் முகத்து இரண்டாயிரம் கரத்தால் அணைத்த ஆயிரம் சங்கும் - பாணுகம்பர் ஆயிரமுகங்களினும் இரண்டாயிரங் கைகளிளுலும் வைத்த ஆயிரஞ் சங்குகளும் - அங்கண ஓம் என்று அறைந்தன தழங்க - அங்கே ஓம் என்று உச்சரித்து ஒலிக்க. எ - று.

மலைபோலும் அவர் சரீரம், சந்திரர்போலும் சங்குகள், வேதம்போலும் ஓசை எனக்கொள்க. (சு)

நடமுயல் விரகுந் தாள கதியுநல் லருளாற் பெற்ற
வடகுவ டனைய தோள்க ளாயிர முடைய வாணன்
சுடர்விடு கடகக் கையாற் றொம்மெனப் பன்முகத்த
குடமுழ வெழு முழக்கங் குரைகடன் முழக்கங் கொள்ள.

இ - ள். நடம் முயல் விரகும் தாள கதியும் நல் அருளால் பெற்ற - நிருத்தஞ்செய்யுங் கிரமங்களையும் தாளமார்க்கங்களை யுஞ் சிவபெருமானுடைய நல்ல திருவருளினுல் அறியப்பெற்ற— வடகுவடு அனைய தோள்கள் ஆயிரம் உடையவாணன் - மகா மேருமலையைப்போன்ற ஆயிரந்தோள்களையுடைய வாணுசுரனு டைய—சுடர் விடு கடகக் கையால் - ஒளிவிடாநின்ற கடகங் களை அணிந்த கைகளினுலே—தொம் எனப் பன்முகத்த குட முழவு எழும் முழக்கம் - தொம்மென்னும் அனுகரண வோசை யோடு பல முகங்களையுடைய குடமுழாவில் எழுகின்ற ஓசையா னது—குரை கடல் முழக்கம் கொள்ள - ஒலிக்கின்ற கடலின தோசையை உள்ளடக்க. எ - று. (எ)

ஐந்துதுந் துபியு மாசி லருமறை யொலியு நீடு
கந்தரு வத்தர் கூடுங் கானமுங் கடவுள் பாதத்
தந்தமி றிருச்சி லம்பி னரவமுங் கேட்டா ரும்பர்
சிந்திய மந்தா ரத்தின் செழுமலர் தெரியக் கண்டார்.

இ - ள். ஐந்து துந்துபியும் - பஞ்சவாத்திய வொலியை யும்—ஆசு இல் அரு மறை ஒலியும் - குற்றமில்லாத அரிய வேத வோசையையும்—நீடு கந்தருவத்தர் கூடும் கானமும் - மிகுந்த கந்தருவர்கள் பாடுங்கீதத்தையும்—கடவுள் பாதத்து அந்தம் இல் திருச் சிலமபின் அரவமும் கேட்டார் - சிவபெருமானு டைய திருவடிக்கணுள்ள ஒழிவில்லாத திருச்சிலம்பினொலி யையுங் கேட்டார்கள்,—உம்பர் சிந்திய மந்தாரத்தின் செழு மலர் தெரியக் கண்டார் - தேவர்கள் பொழிந்த மந்தாரவிரு க்ஷத்தின் செழுமையாகிய பூக்களை (ப் பூமியிலே) தோன்றக் கண்டார்கள். எ - று.

பஞ்சதுந்துபிகளாவன தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக் கருவி, கஞ்சக்கருவி, கண்டக்கருவி என்பனவாம். (அ)

தாகத்திற் றண்ணீ ரோசை தகவொலி செவிமடுத்து
மோகித்தா ரெழுந்தா ராற்றார் முகமெலாங் கண்ணீர்வாரச்
சோகித்தார் தொழுதார் போற்றித் துணைவனே போற்றி தோ
வாகத்தா யருளா யென்றென் றலறினார் வாய்கள ளார. [ன்று

இ - ள். தாகததில் தண்ணீர் ஓசை தக - (சுரவழி நடப் போன) தாகமேலிட்டபொழுது தண்ணீரருவி யோசையைக் கேட்டும் அருந்தப்பெறாது விடாய்த்து விழுதல்போல—ஒலி செவி மடுத்து மோகிததார் - (சிவபெருமான் எழுந்தருளும்)ஆர வாரத்தைக் கேட்டும் (திருநிருத்தத்தைத் தரிசிக்கப்பெறாது) மோகித்து விழுந்தார்கள்,—எழுந்தார் - (சிறிது தெளிந்து) எழுந்திருந்தார்கள்,—ஆற்றார் - பொறுத்தலாற்றார்கள்,—முகம் எலாம் கண் நீர் வாரச் சோகித்தார் - முகமுழுதினுங் கண்ணீர் பொழியப் பொருமினார்கள்,—தொழுதார்-நமஸ்கரித்தார்கள்,— போற்றி - துதித்து,—துணைவனே போற்றி - உயிர்த்துணைவரே காத்தருளும்—தோன்று ஆகத்தாய் அருளாய் - தோன்றுந் திரு மேனியையுடையவரே அருள்செய்யும்—என்று என்று வாய்கள்

ஆர அலறினார் - என்று சொல்லிச்சொல்லி வாய்களினாலே மிக வலறினார்கள். எ - று. (கூ)

எண்ணருங் காதல் கூரு மிருவருங் காண ஞானக்
கண்ணினை நல்க முன்னைக் காரிருள் கழிவுற் றின்ன
வண்ணமென் றறிய வாரா வளரொளி மன்றுண் மாதோ
டண்ணனின் றாடு கின்ற வானந்த நிருத்தங் கண்டார்.

இ - ள். எண் அருங் காதல் கூரும இருவரும் காண - எண்ணுதற்கரிய ஆசை மிக்க (வியாக்கிரபாதமகாமுனிவர் பதஞ்சலி மகாமுனிவர் என்னும்) இருவரும் தரிசிக்கும்பொருட்டு—ஞானக் கண்ணினை நல்க - ஞான திருட்டியை அருளிச்செய்ய,—முன்னைக் கார் இருள் கழிவுறு - அநாதியேயுள்ள கரிய இருள்போலும் ஆணவமலத்தை நீங்கி,—இன்ன வண்ணம் என்று அறிய வாரா ஒளி வளர் மன்றுள் - இன்ன தன்மையை உடையதென்று அறிய முடியாத ஒளி வளராநின்ற சபையிலே—மாதோடு அண்ணல் நின்று ஆடுகின்ற ஆனந்த நிருத்தம் கண்டார் - உமாதேவியாரோடு சிவபெருமான் நின்று நடிக்கின்ற ஆனநதநடனத்தைத் தரிசித்தார்கள். எ - று. (கO)

திருவடி நிலையும் வீசுஞ் செய்யகா லுஞ்சி லம்பு
முருவள ரொளியும் வாய்ந்த வூருவு முடுத்த தோலு
மரைதரு புரிவுங் கச்சி னணிகளு மழகா ருந்தி
மருவிய வுதரபந்தக் கோப்புநூல் வாய்ப்பு மார்பும்.

இ - ள். நிலைத் திருவடியும் - நின்றருளிய ஸ்ரீபாதமும்,—வீசும் செய்ய காலும் - தூக்கியருளிய சிவந்த ஸ்ரீபாதமும்,—சிலம்பும் - ஸ்ரீபாதங்களிற் சாத்தியருளிய திருச்சிலம்பும்,—உருவளர் ஒளியும் - திருமேனியிலே மிகுத்த பிரகாசமும்,—வாய்ந்த ஊருவும் - சிறந்த திருத்தொடையும்,—உடுத்ததோலும் - உடுத்தருளிய புலித்தோலாடையும்,—அரை தரு புரிவும் - திருவரை

யிலே பொருந்திய நெறிப்பும்,—கச்சின் அணிகளும் - (திருவரையிற்சாத்தியருளிய) கச்சினழகுகளும்,—அழகு ஆர் உந்தி மருவிய உதரபந்தக்கோப்பும் - அழகு நிறைந்த திருவுந்தியிலே பொருந்திய உதரபந்தனச்சேர்வையும்,—நூல் வாய்ப்பு மார்பும்- உபவீதம் பொருந்துதலையுடைய திருமார்பும. எ - று. (௧௧)

வீசிய செய்ய கையும் விடதரக் கரங்க வித்த
தேசும் வண் டுடியு மங்கிச் செறிவுமுன் றிரண்ட தோளுங்
காசை கொண் மிடறுந் தோடார் காதும்வெண்குழையுங்காண
மாசிலா மணிவாய் விட்டு வழங்கிடா நகைமயக்கும்.

இ - ள். வீசிய செய்ய கையும் - வீசியருளிய சிவந்த திருக்கரமும்,—விடதரக் கரம் கவித்த தேசும்-பாம்பையுடைய திருக்கரத்தைக் கவித்தருளிய பிரகாசமும்,—வண் துடியும் - வளவிய தமருகமும்,—அங்கிச் செறிவும் - தீயகலும்,—முன் திரண்ட தோளும் - முன்னே திரண்ட திருததோள்களும்,—காசை கொள் மிடறும் - காயாமலர்போலும் நீலநிறத்தைப் பொருந்திய திருமிடறும்,—தோடு ஆர் காதும் - திருத்தோடு பொருந்திய திருக்காதும்,—வெண் குழை (ஆர் காதும்) - வெள்ளிய சஙகக் குண்டலம் பொருந்திய திருக்காதும்,—காண மாசு இலா மணி வாய் விட்டு வழங்கிடா நகை மயக்கும் - வெளிப்படும்படி குற்றமில்லாத பவளம்போலுந் திருவாயிலே நீக்க மறத் தோன்றுந் திருமுறுவலினது மோகனமும். எ - று. (௧௨)

ஓங்கிய கமலச் செவ்வி யொளிமுக மலருங் கண்கள்
பூங்குழ லுமையை நோக்கும் புரணமும் புருவப் பொற்பும்
பாங்கமர் நுதலும் பின்றாழ் படர்சடைப் பரப்பும் பாம்பு
நீங்கருந் தாரு நீரு நிலவுமே னிலவு நீறும்.

இ - ள். ஓங்கிய கமலச் செவ்வி ஒளி முக மலரும் - மேலாகிய செந்தாமரைமலர்போலும் அழகையும் ஒளியையுமுடைய

திருமுகத்தினது மலர்ச்சியும்,—கண்கள் பூங் குழல் உமையை நோக்கும் புரணமும் - திருக்கண்கள் பூவை முடித்த அளகத்தையுடைய உமாதேவியாரைப் பார்த்தருள்கின்ற அசைவும்,—புருவப் பொற்பும் - திருப்புருவங்களின் அழகும்,—பாஙகு அமர் நுதலும் - அழகு பொருநதிய திருநெற்றியும்,—பின தாழ் படர் சடைப் பரப்பும் - பின்னே தாழநத விரிந்த சடையினது கற்றையும்,—பாம்பும் - சருப்பமும்,—நீங்கு அருந் தாரும்-நீங்காத கொன்றை மாலையும்,—நீரும் - கங்கையும்,—நிலவும் - சந்திரனும்,—மேல் நிலவு நீறும் - திருமேனியில் விளங்குகின்ற விபூதியுமுடையவராகி. எ - று. (கங)

கடிமல ரணைய வாரிக் காரிரு ளளகஞ் சேர்த்த, முடியுநன் னுதலும பொட்டு முயங்கிரு புருவ வில்லும், வடிகொள் வேல் விழியுங் காதும் வளர்குமிழ் மலருந் தொண்டைப், படிவவா யிதழு முத்த நகையுமெய்ப் பசுமை வாய்ப்பும்.

இ - ள். கார் இருள் அளகம் கடிமலர் அணைய வாரிச் சேர்தத முடியும் - கரிய இருள்போலுந திருக்குழலின்கண்ணே மணத்தையுடைய பூக்களைப் பொருந்த வாரிச் சேர்த்துச் சொருகிய திருமுடியும்,—நல் நுதலும் பொட்டும - நல்ல திருநெற்றியும் (அதிலிட்ட) திலகமும்,—முயஙகு இரு புருவவில்லும் - பொருந்திய இரண்டுவில்லையொத்த திருப்புருவஙகளும்,—வடிகொள் வேல் விழியும் - கூர்மை பொருந்திய வேல் போலுந் திருக்கண்களும்,—காதும் - திருச்செவிகளும்,—வளர் குமிழ் மலரும் - விளங்குகின்ற குமிழமலர்போலுந திருமூக்கும்,—தொண்டைப் படிவ வாய் இதழும் - கொவ்வைக்கனிபோலும் செந்நிறத்தையுடைய திருவாயினதரங்களும்,—முத்த நகையும் - முத்துப்போலுந் திருநகையும்,—பசுமை மெய் வாய்ப்பும்- பசுமையாகிய திருமேனியினழகும். எ - று. (கச)

பூங்கமு கமர்க ழுத்திற் பொலிந்தமங் கலநாண் பொற்பும்
பாங்கம ரமையார் தோளும் பங்கயச் செங்கை தாங்கு
மோங்கு செங்கழுநீர்ச் செவ்வி யொளிதரு மலருந் தாருங்
கோங்கரும் பவைப ழித்த கொங்கையுங் குலவு பூணும்.

இ - ள். பூஙகமுகு அமர் கழுததில் பொலிந்த மங்கல நாண் பொற்பும் - பொலிவாகிய கமுகுபோலுந் திருக்கழுத்திலே பொருந்திய திருமஙகல சூத்திரத்தினழகும்,—பாங்கு அமர் அமை ஆர் தோளும் - பக்கததிலே பொருநதிய மூஙகில்போலுந் திருத்தோள்களும்,—பங்கயச் செங்கை தாங்கும் ஓஙகு செவ்வி ஒளி தரு செஙகழுநீர் மலரும் - செந்தாமரை மலர்போலுஞ் சிவந்த திருக்கரததிலேந்திய மேலாகிய செவ்வி விளங்குகின்ற செஙகழுநீர்ப்பூவும்,—தாரும் - செஙகழுநீர்த் திருமாலையும்,—கோஙகு அரும்பவை பழித்த கொங்கையும் - கோங்கரும்புகளை நிந்தித்த திருமுலைகளும்,—குலவு பூணும் - விளஙகுகின்ற திருவாபரணஙகளும். எ - று. (கரு)

துடியம ரிடையும் பாந்தட் டொகுபணந் தகுநி தம்ப
வுடையமர் துகிலு மல்க வொல்கிய நிலையுஞ் செய்ய
வடிமலர் மிசைய ணிந்த வாடகப் பாட கக்கீழ்
விடுசுடர்ச் சிலம்பும் வாய்ந்த மெல்லியல் வியந்து காண.

இ - ள். துடி அமர் இடையும் - தமருகம்போலுந் திருவிடையும்,—பாநதள் தொகு பணம தகு நிதம்ப உடை அமர் துகிலும் - பாம்பிலே பொருநதிய படமபோலும் திருநிதம்பததிலே உடையாகப் பொருந்திய திருப்பரிவட்டமும்,—மல்க ஒல்கிய நிலையும் - மிகவொடுஙகிய திருநிலையும்,—செய்ய அடி மலர் மிசை அணிந்த ஆடகப் பாடகக் கீழ் - சிவந்த திருவடிததாமரைகளிலே சாத்தியருளிய பொறபாடகங்களின் கீழே—விடு சுடர்ச் சிலம்பும் வாய்ந்த மெல்லியல் - காலாநின்ற ஒளியையுடைய

திருச்சிலம்புகளும் பொருந்திய சிவகாமியம்மையார்—வியந்து காண - அதிசயித்துத் தரிசிக்கும்படி. எ - று. (கசு)

ஆடிய பெருமான் வெய்யோ னலர்கதி ராயி ரத்துக்
கூடிய மண்ட லம்போற் குறைவிலா வகைநி றைந்து
நாடரு ஞான மன்று ளுய்ய வயன்மான் முன்பு
தேடரு மேனி கொண்டு திருநடஞ் செய்யக் கண்டார்.

இ - ள். ஆடிய பெருமான் - நடித்தருளிய சிவபெருமான்—வெய்யோன் அலர் கதிர் ஆயிரத்துக் கூடிய மண்டலம்போல் - பரந்த ஆயிரமாதித்தப்பிரகாசம் ஒன்றாகக் கூடிய மண்டலம் போல—குறைவு இலா வகை நிறைந்து நாடு அரு ஞான மன்றுள் - குறைவில்லாதபடி நிறைந்து அறிதற்கரிதாயுள்ள ஞான சபையிலே—நாம் உய்ய - நாம் உய்யும்பொருட்டு—அயன் மால் முன்பு தேடு அரு மேனி கொண்டு - பிரமாவும விட்டுணுவும் முன்னே தேடிக் காணாத திருமேனியைக்கொண்டு—திரு நடம் செய்யக் கண்டார் - திருநிருத்தஞ் செய்தருளக் கண்டார்கள். எ - று. (கஎ)

வேறு.

பொருவில் புயங்கப் புனித னடங்கட் புலன்மேவத்
தெரிபொழு தங்கத் தொருசெய லின்றிச் சிரமேவக்
கரமலர் நுந்தப் புனல்விழி கம்பித் துரைகாணு
விருவரு மின்பக் கடலு ளலைந்தா ரென்செய்தார்.

இ - ள். பொருவு இல் புனிதன் புயங்கநடம் - ஒப்பில்லாத சுத்தராகிய சிவபெருமானுடைய புயங்கநிருத்தம்—கட் புலன் மேவத் தெரி பொழுது - கண்ணுக்குப் புலப்படத் தெரிந்த பொழுது,—அங்கத்து ஒரு செயல் இன்றி - சரீரத்திலே யாதொரு தொழிலுமற்று,—கரமலர் சிரம் மேவ - செந்தாமரைமலர் போலும் கைகள் (வாசனையினாலே) சிரசின்மேலே பொருந்த,—விழி புனல் நுந்த - கண்கள் நீரைப் பொழிய,—கம்பித்து -

நடுங்கி,—உரை காறு இருவரும் - உரை குழறுகின்ற (வியாக்கிரபாதமகாமுனிவர் பதஞ்சலிமகாமுனிவர் என்னும்) இருவரும்—இன்பக் கடலுள் அலைந்தார் - இன்பமாகிய சமுத்திரத்திலே மிதந்தார்கள்,—என் செய்தார் - எஞ்சிநின்ற வேதபுருடர் பிரமா விட்டுணு முதலாயினோர் என்செய்தார்கள். எ - று. ()

தற்பர மாகுந தலைவன தண்மைத் தன்மைப்பொற்
சிற்பர மாமம் பரவொளி யுந்தன் றிருமேனிப்
பொற்புட னுடிம பொலிவும் விழிக்குட் புணராதா
லற்புத னேயிங் கார்கில மென்றென் றயர்கின்றார்.

இ - ள். தறபரம் ஆகும் தலைவனது - ஆன்மாவுக்கு மேலாகிய சிவபெருமானுடைய—உண்மைத தன்மை - சத்திய சுவபாவமாகிய—பொற சிறபரம ஆம் அம்பர ஒளியும் - அழகிய சிதம்பரப்பிரகாசமும்—தன் திருமேனிப பொறபுடன் ஆடும் பொலிவும - (அவர்) தமது திருமேனியழகோடு நடித்தருளும் பொலிவும்—விழிக்குள புணராதால் - (தங்கள்) கண்களுக்கு அடங்காமையினால்,—அற்புதனே இங்கு ஆர்கிலம் எனறு என்று அயர்கின்றார்-ஆச்சரியமாகிய திருமேனியையுடையவரே இங்கே அடியேங்கள் கருதது முற்றுப்பெறுகின்றிலேம் என்று சொல்லிச் சொல்லி வருந்துகின்றார்கள். எ - று. (கக)

காரண னேமுன் காமனை வேவக் கண்வைத்த
பூரண னேநின் புகழ்நடம் யாரும் புணர்வெய்தப்
பாரிருண் மோகந் தீரருண் ஞானம் பணியென்றென்
றூரண மோதுஞ் சாகைக ளோரா யிரமாக.

இ - ள். காரணனே - நிமித்தகாரணரே,—முன் காமனை வேவக் கண் வைத்த பூரணனே - ஆதிகாலத்திலே மன்மதனை எரிந்து விழும்படி பார்த்தருளிய பரிபூரணரே,—நின் புகழ் நடம் யாரும் புணர்வு எய்தப் பார் - உமது புகழையுடைய திருநிருத்

தத்தை யாவருந் தரிசிக்கும்பொருட்டுப் பார்த்தருளும்,—இருள் மோகம் தீர் - ஆணவவிருளையும் மயக்கத்தையுந் தீர்த்தருளும்,— அருள் ஞானம் பணி என்று என்று-திருவருளினாலே ஞானத்தை அருளிச்செய்யும் என்று சொல்லிச் சொல்லி,—ஆரணம் ஓராயிரம் சாகைகள் ஆக ஓதும் - வேதங்கள் ஆயிரஞ்சாகைகளாக விண்ணப்பஞ்செய்கின்றன. எ - று. வேதஙகளென்றது வேத புருடர்களை. (உ0)

ஒருவனை நேரே யிருவரு முன்னான் மறையஞ்சா
திரவுறு மாறே ழையமினி யெட்டும் படியின்பந்
தரைமுத லாறு றெனவரு நாதா தியின்மீதேல்
பரதப ராவா பரிபுர பாதா பணியென்றார்.

இ - ள். ஒருவனை நேரே இருவரும் - ஒப்பில்லாத சிவபெருமானை அவர் சந்நிதியிலே (பிரமாவும் விட்டுணுவுமாகிய) இருவரும் அடைந்து நின்று,—முன் நான்மறை அஞ்சாது இரவு உறும் ஆறு - முன்னே நான்குவேதங்களும் அஞ்சாது வேண்டிக்கொண்டபடியே,—ஏழையம் இனி இன்பம் எட்டும்படி - சிறியேங்களும் இனி இன்பத்தையடையும்பொருட்டு,—தரை முதல் ஆறு என வரு நாதாதியின்மீது ஏய் பரத - பிருதிவிமுதன் முப்பத்தாறென்று சொல்லவாராநின்ற நாதமாகிய ஆதிதத்துவத்தின்மேலே பொருந்திய திருநிருத்தத்தையுடையவரே—பரா வா- மேலானவரே வாரும்—பரி புர பாதா பணி என்றார் - திருச்சிலம்பணிந்த திருவடிகளை யுடையவரே பணித்தருளும் என்று விண்ணப்பஞ்செய்தார்கள். எ - று. (உக)

கரணம னைத்தும் புலனிவை காணு கைவிட்டான்
மரணமெ மக்கிங் கிதுதமி யோம்வாழ் வருண்மாறிற்
றிரணமு மெய்ச்சஞ் சலமில தென்று லொன்றுநின்
புரணமெ னக்கொண் டருளுக வென்றார் நின்றார்கள்.

இ - ள். கரணம் அனைத்தும் புலன் இவை காணு - தத்து வங்களெல்லாம் (கூடினும்) விஷயங்களை அறியமாட்டாவாம்,— கைவிட்டால் எமக்கு மரணம் - தத்துவங்கள் கூடாதபொழுது எங்களுக்குக் கேவலாவத்தை பொருந்தும்,—இங்குத் தமியோம் வாழ்வு இது - இவ்விடத்துத் தமியேங்களுடைய வாழ்வு இது,—அருள் மாறில் திரணமும் மெய்ச் சஞ்சலம் இலது என்றால் - உமது திருவருளில்லாவிடத்துத் துரும்பும் உண்மை யாக அசையாது என்றால்,—ஒன்று நின் புரணம் எனக் கொண்டு அருளுக - எல்லாம் ஒருங்கே உம்முடைய அசைவாகக் கொண்டு அடியேங்களையும் இயக்கியருளுக—என்றார் நின்றார்கள் - என்று விண்ணப்பஞ்செய்தார்கள் ஒழிந்துநின்ற இருடிகண்முதலாயி னோர். எ - று. (உ௨)

இவ்வகை யேநான் மறைமுத லேனோ ரிரவெய்தப்
பைவிர வாரப் பணியணி நாதன் பரிவாலிப்
பொய்விர வாமெய்ப் பொலிவினர் யாரும்புணர் வெய்தத்
திவ்விய மாமம் பரபத ஞானந் தெரிவித்தான்.

இ - ள். இவ்வகையே நான்மறை முதல் ஏனோர் இரவு எய்த - இப்படியே நான்கு வேதபுருடர்களும் பிறரும் வேண் டிக்கொள்ள,—பை விரவு ஆரப் பணி அணி நாதன் - படம் பொருந்திய சருப்பாபரணத்தையணிந்த சிவபெருமான்,—பரி வால் - கருணையினாலே—இப் பொய் விரவா மெய்ப் பொலி வினர் யாரும் புணர்வு எய்த - இங்ஙனம் பொய்மை பொருந்தாத மெய்மையாகிய பக்குவத்தையுடையவர்கள் யாவரும் பொருந் துதலுற,—திவ்வியம் ஆம் அம்பர பத ஞானம் தெரிவித்தான் - திவ்வியமாகிய சிதம்பரத்தானத்திலே ஞானத்தைத் தரிசிப்பித் தருளினார். எ - று. (உ௩)

நாரணன் வேதா வாசவன் வானோர் நவைசேரா
வாரண மேலோர் தாபதர் மூவா யிரவோர்நற்

சாரணர் தாவா நாரதர் பூதா திகளாசைக்
காரண ரேனோ ராடலை நேரே கண்டார்கள்.

இ - ள். நாரணன் - விட்டுணுவும்—வேதா - பிரமாவும்—வாசவன் - இந்திரனும்—வானோர் - தேவர்களும்—நவை சேரா ஆரண மேலோர் - குற்றம் பொருந்தாத வேதபுருடராகிய மேலோர்களும்—தாபதர் மூவாயிரவோர் - மூவாயிர முனிவர்களும்—நற சாரணர் - நல்ல சாரணர்களும்—தாவா நாரதர் - கெடாத நாரதரும்—பூதாதிகள - பூதர் முதலாயினோரும்—ஆசைக் காரணர் - திக்குப்பாலகர்களும்—ஏனோர் - பிறரும்—ஆடலை நேரே கண்டார்கள் - ஆனந்தநிருத்தத்தைப் பிரத்தியக்ஷமாகக கண்டார்கள். எ - று. (உச)

கண்டனர் கண்ணுக் கின்புற முன்னே கரமுச்சிக்
கொண்டன ருள்ளக் கொள்கைத தும்பக் குறியாரப்
பண்டரு வேதப் பாடலொ டாடிப் பரபோகத்
தண்டன தாமெய்க் கருணையி னூடுற் றலைவுற்றார்.

இ - ள். கண்ணுக்கு இன்பு உற முன்னே கண்டனர் - கண்களுக்கு இன்பமுண்டாக எதிரே கண்டார்கள்,—கரம் உச்சிக் கொண்டனர்-கைகளைச் சிரசில் வைத்தார்கள்,—உள்ளக் கொள்கை ததும்ப - தமகள் உள்ளத்தில் அன்பு ததும்புதலினாலே—குறி ஆர - (கண்ணீரும் புளகமுமாகிய) அடையாளஙகள் நிகழ,—பண் தரு வேதப் பாடலொடு ஆடி - கீதம் பொருந்திய சாமவேதத்தைப் பாடுதலோடு கூத்தாடி,—பர போகத்து அண்டனது ஆம் மெய்க் கருணையின் ஊடு உற்று அலைவு உற்றார் - பர போகததைததருஞ் சிவபெருமானுடையதாகிய மெய்ம்மையைப் பொருநதிய காருண்ணியமாகிய சமுத்திரத்தினுள்ளே பொருந்தி மிதந்தார்கள். எ - று. (உரு)

பரபத கங்கா தரவர விந்தா சனனுச்சிச்
சிரமரி கண்டா விருடரு கண்டா மிகுதெவ்வர்

புரமெரி கண்டா பவமிரி கண்டா வெனவோதிக்
கரமலர் சிந்தா வரகர வென்றார் கணநாதர்.

இ - ள். பரபத - மேலாகியபொருளாயுள்ளவரே—கங்கா தர - கங்கையைத்தரித்தவரே—அரவிந்த ஆசனன் உச்சிச் சிரம் அரி கண்டா - தாமரையாசனனாகிய பிரமனுடைய உச்சிச்சிரசை அரிந்து துண்டப்படுத்தினவரே—இருள் தரு கண்டா - கருநிறத்தைக் காட்டுங் கழுத்தையுடையவரே—மிகு தெவ்வர் புரம் எரி கண்டா-மிக்கபகைவர்களுடைய புரங்களையெரித்த வீரரே—பவம் இரி கண் தா என ஓதி - பிறவியைக் கெடுக்கின்ற ஞானக் கண்ணைத் தாரும் என்று விண்ணப்பஞ்செய்து,—கரமலர் சிந்தா - கைகளிலுள்ள பூக்களைச்சொரிந்து,—அரகர என்றார் கணநாதர் - அரகர என்றார்கள் கணநாதர்கள். எ - று. (உசு)

ஆடினரெந்தா யாகம சிந்தா மணியேயென்
றோடினர் நின்றா ரோகைம லிந்தா ரொளிர்கண்ணீர்
வீடினர் குன்றா மூடிய வெந்தீ வினைதீரத்
தேடும ருந்தே தாவரு ளென்றார் சிலதேவர்.

இ - ள். ஆடினர் - கூத்தாடினார்கள்,—எந்தாய் ஆகம சிந்தாமணியே என்று ஓடினர் - எம்முடைய பிதாவே ஆகம சிந்தாமணியே என்று சொல்லி ஓடினார்கள்,—நின்றார் - (பரவசர்களாய்) நின்றார்கள்,—ஓகை மலிந்தார் - மகிழ்ச்சி மிக்குற்றார்கள்,—ஒளிர் கண் நீர் வீடினர் - விளங்குகின்ற கண்ணீரை விட்டார்கள்,—குன்றா மூடிய வெந் தீவினை தீரத் தேடு மருந்தே - மலைபோல (எங்களை) மேலிட்ட கொடிய தீவினைகள் தீரும்படி தேடப்படும் மருந்தே—அருள் தா என்றார் சில தேவர் - கருணையைத் தாரும் என்றார்கள் சிலதேவர்கள். எ - று. (உஎ)

மாலயன் மேலா வாசவ னேசா மதியேசெங்
கோலநி லாவா பாலன நீறு கோவேதிண்

காலனி லாவா காதிய காலா கதியேவண்
பாலநி லாவா காவென நேரே பணிவுற்ருர்.

இ - ள். மால் அயன் மேலா - விட்டுணுவுக்கும் பிரமாவுக்கும் மேலானவரே—வாசவன் நேசா - இந்திரனுக்குச் சிநேகரே—மதியே - (எல்லாவான்மாக்களுக்கும்) அறிவே—செங்கோல நிலாவா - சிவந்த திருமேனிப் பிரகாசத்தையுடையவரே—பால் அன நீறு - பால்போன்ற விபூதியையுடையவரே—கோவே - தேவராசாவே—திண் காலன் இலாவாகாதிய காலா - திண்ணிய இயமன் இல்லையாகும்படி கொன்ற திருவடியையுடையவரே—கதியே - (அன்பர்களுக்குப்) புகலிடமே—வண் பாலநிலாவா - வளவிய பாலசந்திரனை யணிந்தவரே,—கா என நேரே பணிவுற்ருர் - காத்தருளும் என்று சந்நிதியிலே வணங்கிஞர்கள். எ - று.

இலாவாறு இலாவா எனக் கடைக்குறைந்து நின்றது. (உ௮)

திகழ்தரு செய்புன் றலைதிரி முண்டஞ் சேர்சங்கந்
தகுகுழை நுண்கண் சிறுநகை தந்தந் தாழ்பண்டி
பகுசக னந்திண் டொகுசர ணந்தண் பார்தங்கப்
புகழ்கர ணங்கொண் டயர்வவ னந்தம் பூதங்கள்.

இ - ள். திகழ்தரு செம் புன்றலை - விளங்குகின்ற சிவந்த சிறுதலையும்—திரிமுண்டம் - (நெற்றியிலே பொருந்திய) திரிபுண்டரமும்—சங்கம் சேர் தகு குழை - சங்கக்குண்டலம் பொருந்திய தக்க காதுகளும்—நுண் கண் - நுண்ணிய கண்களும்—சிறு நகை - சிறிய பற்களும்—தந்தம் - (பெரிய) பற்களும்—தாழ் பண்டி - தாழ்ந்த வயிறும்—பகு சகனம் - பிரிந்த சகனமும்—திண் தொகு சரணம் - வலிய குறுந்தாள்களும்—தண் பார் தங்க - குளிர்மையாகிய பூமியிலே பொருந்த—புகழ் கரணம் கொண்டு அயர்வ அனந்தம் பூதங்கள் - புகழப்படுகின்ற

உற்புலுதிகரணங் கொண்டாடுவன எண்ணில்லாத பூதஙகள். எ - று. (உகூ)

மலரெரி முச்சிக் குழிவிழி யொட்டற் கவுள்வாய்விட்
டிலகெயி றொட்டைக் களமிரு நெட்டைக் கரமீர
லுலருத ரஞ்சிற் றரையுயர் தெற்றற் பதமோடும்
பலவல கைக்கொத் திடுகுண லைக்கொத் தினபாணி.

இ - ள். மலர் எரி முச்சி - சுவாலிக்கின்ற அக்கினிபோன்ற குஞ்சியையுடைய தலையும்—குழி விழி - ஆழ்ந்த கண்ணும்—ஒட்டற் கவுள் - (ஒன்றாக) ஒட்டின தாடையும்—வாய்விட்டு இலகு எயிறு - வாய்க்குப் புறத்திலே புறப்பட்டு விளங்குகின்ற பல்லும்—ஒட்டைக் களம் - ஒட்டகத்தின் கழுத்துப்போன்ற கழுத்தும்—இரு நெட்டைக் கரம் - இரண்டு நெடுமையாகிய கைகளும்—ஈரல் உலர் உதரம் - ஈரல் உலர்ந்த வயிறும்—சிற்றரை - சிறிய அரையும்—உயர் தெற்றற் பதமோடும் - உயர்ந்த முட்டிக் காலுமாகிய இவைறோடு கூடிய—பல அலகைக் கொத்து - பல பேய்க்கூட்டங்கள்—இடு குணலைக்குப் பாணி ஒத்தின - (பூதங்கள்) ஆடுகின்ற குணலைக்கூத்துக்குக் கைகொட்டின. எ - று. (௩௰)

தோடிறை யேவாய் வீடல ரூடார் சுரிகுழைப்
பாடளி யாழோ டேழிசை கோடா வகைபாடத்
தாடகு மாடா நூபுரம் வீடா வொலிசார்வித்
தாடினர் பாடா வாடினர் பீடா ரரமாதர்.

இ - ள். தோடு இறையே வாய் வீடு அலர் - இதழ் சற்றே வாய் மலர்ந்த பூக்கள்—ஊடு ஆர் சுரி குழைப் பாடு அளி - உள்ளே நிறையப்பெற்ற சுரிந்த அளகத்தின் பக்கத்திலுள்ள வண்டுகள்—யாழோடு ஏழிசை கோடாவகை பாட - (கையில்) யாழுடனே சத்தசுரங்களையும் மயங்காமற் பாட—தாள் தகு

மாடு ஆம் நூபுரம் - கால்களிலே தகுதியாகப் பொருந்திய பொன்னலாகிய சிலம்புகளை—வீடா ஒலி சார்வித்து ஆடினர் - நீங்காத ஓசையைப் பொருந்தச் செய்து கூத்தாடினார்கள்,—பாடா வாடினர் - பாடாது மயங்கினார்கள்—பீடு ஆர் அரமாதர் - பெருமை பொருந்திய தெய்வப்பெண்கள். எ - று. (௫க)

அண்டர்கண் மிண்டப் பண்டெழு நஞ்சுண் டமுதீயுங்
கண்டன கண்டப் பண்டைந டங்கண் குளிர்வித்துக்
குண்டிகை கொண்டைத் தண்டொடு மண்டிக் குலைவேணி
முண்டமி லங்கக் கொண்டயர் கின்றார் முதுவோர்கள்.

இ - ள். அண்டர்கள் மிண்டப் பண்டு எழு நஞ்சு உண்டு அமுது ஈயும் கண்டன் - தேவர்கள் நெருங்கி வந்து விண்ணப் பஞ்செய்ய முற்காலத்திலே (திருப்பாற்கடலினின்று) தோன்றிய விஷத்தையுண்டு அமுதத்தைக் கொடுத்தருளிய நீலகண்டருடைய—அகண்டப் பண்டை நடம் கண் குளிர்வித்து - கண்டிக்கப்படாததாகிய அநாதிதிருத்தத்தினாலே (தங்கள) கண்களைக் குளிர்வித்து,—குண்டிகை கொண்டைத் தண்டொடு மண்டி - கமண்டலங்கள் சோமன் கட்டிய தண்டுகளோடு நெருங்கி—குலை வேணி முண்டம் இலங்க—அவிழ்ந்த சடையும் திரிபுண்டரமும் விளங்க—கொண்டு அயர்கின்றார் முதுவோர்கள் - (வெகுவிதமாகக்) கொண்டு கூத்தாடுகின்றார்கள் பழையோர்களாகிய தில்லைமூவாயிரமுனிவர்கள். எ - று. (௫௨)

வீரத ராவான் மேருக ராகான் விரிகொன்றைத்
தாரவ ராவா காவென நேரே தகவாரா
நாரத ரோரார் சாரண ரேனோர் நசையாழின்
பாரக ராரா வார்வமொ டாடும் பணியுற்றார்.

இ - ள். வீர தரா - வீரத்தைத் தரித்தவரே—வான் மேரு கரா - மேலாகிய மேருமலையைக் கையிலுடையவரே—கான் விரி

கொன்றைத் தார - மணம் விரிந்த கொன்றைமாலையையுடைய வரே—அராவா கா என - சருப்பாபரணரே காததருளும் என்று— நேரே தக வாரா - சந்நிதியிலே தகுதியாகவந்து,—நாரதர் - நாரதரும்—ஏர் ஆர் சாரணர் - அழகு நிறைந்த சாரணரும்— ஏனோர் - பிறரும்—நசை யாழின் பாரகர் - ஆசையைத் தரும் யாழநூலின் கரைகண்டோரும்—ஆரா ஆர்வமொடு ஆடும் பணி உற்றார் - ஆராத இன்பத்துடனே ஆடுந்தொழிலைப் பொருந்தி னார்கள். எ - று. (நந)

குடமுழ வங்கொக் கரைபொரு தாளங் குழல்வீணை
படகநெ டுங்கத் திரிகைத டாரி பணிலங்க
டுடிகர டஞ்சச் சரிபல கொண்டோர் தொகவாரா
நெடுமுகி லஞ்சக் கடலொலி யெஞ்ச நிகழ்வித்தார்.

இ - ள். குடமுழவம் - குடமுழாவும்,—கொக்கரை-கொக்கரையும்,—பொரு தாளம் - ஒத்தப்படுந் தாளமும்,—குழல் - குழலும்,—வீணை - வீணையும்,—படகம் - படகமும்,—நெடுங் கத்திரிகை - நெடுமையாகிய கத்திரிகையும்,—தடாரி - தடாரியும்,—பணிலங்கள் - சங்குகளும்,—துடி - தமருகமும்,—கரடம் - கரடிகையும்,—சச்சரி - சச்சரியுமாகிய—பல கொண்டோர் தொக வாரா - பலவாத்தியங்களைக் கைக்கொண்டவர்கள் நெருங்க வந்து,—நெடு முகில் அஞ்ச - பெரிய முகில்கள் திடுக்கிடவும்—கடல் ஒலி எஞ்ச - சமுத்திரத்தினது ஆரவாரங்குறையவும்—நிகழ்வித்தார் - ஒலி நிகழச்செய்தார்கள். எ - று. ()

பரிவுட னாடுந் தொழிலின ராய்முன் பலர்வாழத்
தெரிவுற நீடும் புலிமுனி யோனுந் திகழ்வெய்து
மரவர சோனும் பரவச ராய்நின் றழநேரே
வரமெவை கூறுந் தரவென நாதன் மகிழ்வுற்றான்.

இ - ள். முன் பலர் பரிவுடன் ஆடும் தொழிலினராய் வாழ - சந்நிதியிலே பலரும் அன்புடனே கூத்தாடுந் தொழிலை

புடையவர்களாய் (ஆனந்தம் பெற்று) வாழ,—தெரிவு உற நீடும் புலிமுனியோனும் - அறிவு மிகவோங்கிய வியாக்கிரபாதமகா முனிவரும்—திகழ்வு எய்தும் அரவரசோனும் - விளக்கம்பொருந்திய நாகராசாவாகிய பதஞ்சலிமகாமுனிவரும்—நேரே பரவசராய் நின்று அழ - சந்நிதியிலே பரவசர்களாய் நின்று அழ,—வரம் எவை தரக் கூறும் என நாதன் மகிழ்வுற்றான் - (உங்களுக்கு வேண்டிய) வரங்கள் யாவை நாம் தருதற்குச் சொல்லுங்கள் என்று சிவபெருமான் மகிழ்ந்து திருவாய்மலர்ந்தருளினார். எ - று. (௩௫)

அண்டர்பி ரான்முன் புண்டரி கத்தாண் முனியன்பிற்
கண்டுளி சோரக் கைதொழு துள்ளங் கசிவெய்திப்
பண்டுட னாளுங் கண்டிடு மாறென் பயில்பூசை
கொண்டருள் வேறிங் குண்டலவேதுங் கொள வென்றான்.

இ - ள். அண்டர் பிரான் முன் - தேவதேவராகிய சிவபெருமான்றிருமுன்னே—புண்டரிகத் தாள் முனி - வியாக்கிரபாத மகாமுனிவர்—அன்பில் உள்ளம் கசிவு எய்தி - அன்பினாலே மனங்கரைவுற்று,—கண் துளி சோரக் கை தொழுது - கண்ணீர் சொரியக் கைகுவித்து நின்று,—கண்டிடும் ஆறு பண்டுடன் நாளும் பயில் என் பூசை கொண்டு அருள் - (சிவாகமத்திற்) கண்டபடியே முன்பு போல நாடோறும் பண்ணுகின்ற என் பூசையை உண்மையாகக் கொண்டருளும்;—இங்குக் கொள வேறு ஏதும் உண்டு அல என்றான் - தமியேன் இங்கே வேண்டிக்கோடற்கு (இஃதொழிந்து) வேறியாதும் உள்ளதன்று என்று விண்ணப்பஞ்செய்தார். (௩௬)

ஆடுக வென்றங் காடும ரன்சீ ரருள்செய்யக்
கூடும னந்தன் கூடும னந்தங் கொடுவெம்மை
நீடும னந்தங் கேத நினைந்தோ நிலன்மேவுஞ்
சேடர்க டன்பந் தீரநி னைந்தோ தெரியாது.

இ - ள். அங்கு ஆடும் அரன் - அங்கே திருநிருத்தஞ் செய்தருளுஞ் சிவபெருமான்—ஆடுக என்று சீர் அருள் செய்யக்கூடும் அனந்தன் - (நீ வேண்டிய வரத்தைச்) சொல்வாயாக என்று நன்மையாகிய அநுஞ்ஞையைச் செய்யப்பெற்ற பதஞ்சலிமகாமுனிவர்—கூடும் அனந்தம் கொடு வெம்மை - (தம்மைப்) பொருந்திய முடிவில்லாதனவாகிய கொடிய தீவினைகள்—நீடும் மனம் தங்கு ஏதம் நினைந்தோ - பரந்த மனத்திலே (ஒழியாமற்) பொருந்தியிருந்த (வாசனையாகிய) குற்றத்தினாலே (மீட்டும் வந்து பொருந்துமென்று) எண்ணியோ,—நிலன் மேவும் சேடர்கள துன்பம் தீர நினைந்தோ - பூமியிலே பொருந்திய மற்றையடியார்களுடைய துன்பம் நீங்கும்படி எண்ணியோ—தெரியாது - (நமக்குத்) தெரிந்திலது. எ - று.

ஆடல் சொல்லல். (கூஎ)

சென்றுவ ணங்கித் திகழுமன ந்தத் திறலோனு
மின்றிகழ் வாழ்வோர் விழிபுணர் காலந் தொறுமன்றந்
துன்றிய ஞானச் சோதியு ணேசத் துணையொடு
மென்றுந டந்தந் தருளவி ரங்கா யினியென்றான்.

இ - ள். திகழும் அனந்தத் திறலோனும் சென்று வணங்கி - விளங்குகின்ற வலியையுடைய பதஞ்சலிமகாமுனிவரும்போய் நமஸ்கரித்து,—மின் திகழ் வாழ்வோர் விழி புணர் காலந் தொறும் - மின்போலும் வாழ்க்கையையுடைய ஆன்மாக்கள் கண்களினாலே தரிசிக்கும் காலந்தோறும்—துன்றிய ஞானச் சோதி மன்றத்துள் - நிறைந்த ஞானவொளியாகிய இச்சபையிலே—நேசத் துணையோடும் - அன்பையுடைய துணைவியாகிய உமாதேவியுடனே—இனி என்றும் நடம் தந்து அருள இரங்காய் என்றான் - இன்று முதல் எக்காலமும் ஆனந்தநிருத்தம் புலப்படுத்தியருளும்பொருட்டுத் திருவுளமிரங்கும் என்று வேண்டிக்கொண்டார். எ - று. (கூஅ)

தேவர்க டேவன் றிருவரு ளங்கப் படிசெய்ய
மேவிய போதங் கிருவரு மிக்கா டினர்மிக்கோ
ராவென வேழெண் கடலொலிபோல்வைத் தலைவுற்றார்
பூவல யம்பூ மலைதக வானோர் பொழிவுற்றார்.

இ - ள். தேவர்கள் தேவன் அங்கு அப்படித் திருவருள் செய்ய மேவிய போது - தேவதேவராகிய சிவபெருமான் அங்கே அந்தப்பிரகாரமே திருவருள் செய்யும்பொருட்டுத் (திருவுளம்) பொருந்திய பொழுது,—அங்கு இருவரும் மிக்கு ஆடினர் - அவ்விடத்தில் அவ்விருவரும் (களிப்பு) மேலிட்டாடினார்கள்;—மிக்கோர் - ஒழிந்த மறைமிருடிகள்—ஆ என - ஆகாவென்று—ஏழ் எண் கடல் ஒலிபோல் வைத்து அலைவு உற்றார் - ஏழென்னுமெண்ணையுடைய சமுத்திரத்தினதோசைபோல ஆனந்தவொலி செய்து பரவசர்களாயினார்கள்;—வானோர் - தேவர்கள்—பூவலயம் பூ மலை தகப் பொழிவுற்றார் - பூமண்டலத்திலே பூக்களை மலைபோலாகும்படி சொரிந்தார்கள். எ - று. (நக)

எங்குமு ழங்கத் துந்துபி சங்கத் தொலிநீடச்
சங்கையி லின்புற் றும்பர்க ளேனோர் தாம்வாழப்
பங்கமி லின்பத் தோருப தேசம் பரிவான்மிக்
கங்கவர் தங்கட் கெங்கள் பிரானா ரருள்செய்வார்.

இ - ள். துந்துபி எங்கும் முழங்க - தேவதுந்துபிகள் எங்குமொலிக்க,—சங்கத்து ஒலி நீட - சங்குகளினோசை தழைக்க,—உம்பர்கள் ஏனோர் தாம் சங்கை இல் இன்பு உற்று வாழ - தேவர்களும் பிறரும் ஐயமில்லாத ஆனந்தத்தைப் பொருந்தி வாழும்பொருட்டு,—பரிவால் மிக்கு - (அவர்களிடத்துள்ள) இரக்கத்தினாலே மிகுந்து,—பங்கம் இல் இன்பத்து ஒருபதேசம் - இடையறுதலில்லாத ஆனந்தத்தை விளைக்கும் ஒருபதேசத்தை—அங்கு அவர் தங்கட்கு எங்கள் பிரானார் அருள் செய்வார் -

அங்கே அவர்களுக்கு எங்கள் சிவபெருமானார் அருளிச்செய்வா ராயினார். எ - று. (சo)

ஞானந மக்குத் திகழ்விட நம்மிற் பிறிவின்றொன்
றானது சித்துச் சத்தமர் ஞாலத் தகலாது
தானுட லுட்பட் டிடுமுயி ரிற்றங் குதல்போல்வோம்
வானவர் சுற்றிக் கோலுமி னென்றான் மன்றாடி.

இ - ள். நமக்கு ஞானம் திகழவு இடம் - நமக்கு ஞானமே விளக்கம் பொருந்திய இடமாம;—சிதது நம்மில் பிறிவு இன்று ஒன்று ஆனது - அந்தஞானம நமமினின்றும் நீக்கமின்றி (நம மோடும்) ஒன்றாயுள்ளது;—சத்து அமர் ஞாலத்து அகலாது - அது உண்மையாக (இஙகே) பொருந்திய பூமியினின்றும் பிரி யாது [பூமிக்கு இருதயஸ்தானமாயிருக்கும் எனறபடி.]—தான உடலுட்பட்டிடும் உயிரில் தங்குதல் போல்வோம் - (இப்பூமியி லே தஙகிய ஞானத்திலே நாம் தஙகுதல) சரீரத்தினுளளே தங் கிய ஆன்மாவிலே நாம தஙகுதலையொப்பேம்;—(ஆதலினால்)— வானவர் - தேவர்களே,—சுறறிக்கோலுமின் என்றான் மனறு ஆடி - (இநதததலததை) வளைதது (ஒரு சபை) நிருமியுஙகள என்று திருவாய்மலர்ந்தருளினார் சபையிலே நிருத்தஞ்செய்வா ராகிய சிவபெருமான். எ - று. (சக)

தொன்மைய ஞானம் பெற்றது சுற்றும் பொருளாய்வான
முன்மலர் தூவித் தொழுநட ராசன் முதுநூலிற்
சின்மய மாமன் றிரண்மய மொன்றுண் டதுசேரப்
பொன்மய மாகும் புவியினர் காணும் பொழுதென்றான்.

இ - ள். தொன்மைய ஞானம் பெற்று - பழமையாகிய ஞானமயமாயுள்ள தலத்தை அறியப் பெற்று—அது சுறறும பொருள் ஆய்வான் - அந்தத்தலத்தை வளைத்துச் சபைசெய்தற் குரிய திரவியம் இது என்று அறியும்பொருட்டு—முன் மலர் தூவித் தொழ - சந்நிதியிலே பூக்களைத் தூவித் (தேவர்கள்)

வணங்க,—நடராசன் - நிருத்தராசரானவர்—முது நூலில் சின்மயம் ஆம் மன்று இரண்மயம் ஒன்று உண்டு - பழைய வேதாகமநூல்களிலே ஞானமயமாகிய சபைக்கு இரண்மயகோசமென்று ஒருபெயருண்டு,—அது புவியினர் காணும் பொழுது சேரப் பொன்மயம் ஆகும் என்றான் - அது பூவுலகத்தார் காணும்பொழுது முழுமையும் பொன்மயமாகும் என்று திருவாய் மலர்ந்தருளினார். எ - று. (சஉ)

என்றருளுஞ்சீ ரருடலைமேல் கொண்டிமை யோர்பொன்
சென்றழ றங்கித் தேசுட னோடிச் செலவற்று
நின்றது கொண்டங் கருள்படி மாவா நிகழ்வித்தார்
மன்றகு மென்றங் கதுபடி மாவா மலிவித்தார்.

இ - ள். என்று அருளும் சீர் அருள் - என்று (தங்களுக்கு) அருளிச்செய்த நன்மையாகிய திருவருளை—இமையோர் தலைமேல் கொண்டு - தேவர்கள் சிரமேறகொண்டு,—அழல் சென்று தங்கித் தேசுடன் ஓடிச் செலவு அற்று நின்றது பொன்கொண்டு - அக்கினியைப் போய்ப் பொருந்திக் (களங்கநீங்கி) ஒளியுடனே (கூடி) யோடி ஓட்டற்று நின்றதாகிய பொன்னைக்கொண்டு—அங்கு அருள் படி - அங்கே (சிவபிரான்) அருளிச்செய்த பிரகாரம்—மாவா நிகழ்வித்தார் - மகாசபையாக விளங்கச் செய்வார்களாகி,—மன் தகும் என்று - இது எம்பெருமானுக்குத் தகும் என்று—அது படிமாவா அங்கு மலிவித்தார் - அந்த ஞானசபை ஒப்பாக அவ்விடத்திலே (ஒரு கனகசபையை) நிருமித்தார்கள். எ - று.

பிரதிமா என்னும் வடமொழி படிமா என்றாயிற்று. (சங)

பொன்னசை லஞ்சேர் பொருளள முய்க்கும் புற்போன்முற்
பன்னரு ளேயப் பரபத ஞானந் தருபான்மைச்
சின்னிலை மன்றந் தேவர்கள் செய்யுந் திருமன்றந்
தன்னையு மன்றே செய்தது ஞானந் தானாக.

இ - ள். பொன் அசலம் சேர் பொருள் (போல்) - பொன் மலையானது தன்னை அடைந்த பொருளைப் பொன்மயமாக்கிறாற் போலவும்,—அளம் உய்க்கும் புற்போல் - உப்பளமானது தன்னிடத்தே இடப்பட்ட புல்லை உப்பாக்கிறாற்போலவும்,—முன்பன் அரு ஞேயப் பரபத ஞானம் தரு பான்மைச் சித்திலை மன்றம் - முன்னே சொல்லுதற்கரிய ஞேயமாகிய சிவத்துக்கு மேலாகிய இடமாயுள்ள ஞானத்தை விளக்கும் பிரகுதியையுடைய நிலைபெறற சிறசபையானது—தேவர்கள் செய்யும் திரு மன்றந் தன்னையும் - தேவர்கள் செய்த அழகிய கனகசபையையும்—அன்றே ஞானந்தான் ஆகச் செய்தது - அப்பொழுதே ஞான சபையாகப பண்ணிறறு. எ - று. (சச)

அன்றுதொ டங்கித் தேவர்க ளுஞ்சீ ரரவோனுந்
துன்றுபு லிக்கான் முனிமுத லாகுந் தூயோருஞ்
சென்றுவ ணங்கித் திசைதொறும் வாழத் திருவாளன்
மன்றின டந்தந் தென்றும கிழ்ந்தான் மாதோடும்.

இ - ள். அன்று தொடங்கி - அந்நாட்டொடங்கி,—தேவர்களும் - (பிரமா விட்டுணு முதலிய) தேவர்களும்—சீர் அரவோனும் - புகழையுடைய பதஞ்சலிமகாமுனிவரும்—துன்று புலிக்கால் முனி முதல் ஆகும் தூயோரும் - பொருந்திய வியாக்கிர பாதமகாமுனிவர் முதலாகிய முனிவர்களும்—சென்று வணங்கித் திசை தொறும் வாழ - போய் நமஸ்கரித்துத் திக்குகடோறும் வாழும்படி,—திருவாளன் மாதோடும் மன்றில் என்றும் நடம் தந்து மகிழ்ந்தான் - அருட்செல்வத்தையுடைய சிவபெருமான் சிவகாமியம்மையாரோடு கனகசபையிலே எக்காலமும் திருநிருத்தத்தைத் தரிசிப்பித்து மகிழ்ந்தருளினார். எ - று.

கரவி னிருத்தம் புரியவி ருத்தங் கழிகானின்
மிருகம னைத்தும் பறவைகண் முற்று மிகுநாதப்

பரிபுர சத்தம் பருகிம தித்தம் பிகைபாத
மருவி நிரக்கம் பெருகி யிரக்க மலிவுற்ற.

இ - ள். கரவு இல் நிருத்தம் புரிய - மறைப்பில்லாத திரு நிருத்தஞ் செய்தருள,—விருததம் கழி கானின் மிருகம் அனைத்தும் - (ஒன்றோடொன்றுள்ள) மாறுபாடு நீங்கிய காட்டிலுள்ள மிருகங்கள் யாவையும்—பறவைகள் முற்றும் - பக்ஷிகள் யாவையும்—மிகு நாதப் பரிபுர சத்தம் பருகி - மிக்க பரநாத சொரூபமாகிய திருச்சிலம்போசையைக் கேட்டு,—மதித்து - களிப்புற்று,—அம்பிகை பாதம் மருவி - சிவகாமியம்மையாருடைய திருவடியை அடைந்து,—நிரக்கம் பெருகி - சுட்டறிவு நீங்கி,—இரக்கம் மலிவுற்ற - சீவகாருண்ணிய மிகுத்தன. எ - று. நிரக்கம் சுட்டறிவினமை. (சசு)

அரவர சன்சொற் றகவர முன்பெற் றனனாகக்
கரவில்க ணங்கட் புனன்மிக நுந்தக் கரநாலுந
திரிநய னம்பொற் சுரிகைபி ரம்பொப் பருசெம்மை
மருவிய நந்தித் தலைவனை வந்தித் தெதிர்நின்றார்.

இ - ள். அரவு அரசன் சொல் தக வரம் முன் பெற்றனன் ஆக - நாகராசாவாகிய பதஞ்சலிமகாமுனிவர் (தமது) விண்ணப்பத்துக்கேற்ப வரத்தை முன்னே பெற்றவராக,—கரவு இல் கணம் - (அது கண்ட) பொய்மையில்லாத கணநாதர்கள்,—கட்புனல் மிக நுந்த - கண்ணீர் மிகச் சொரிய,—கரநாலும் - நான்கு திருக்கரங்களையும்—திரிநயனம் - மூன்று திருக்கண்களையும்—பொற் சுரிகை பிரம்பு - அழகிய உடைவாளையும பிரம்பையும்—ஒப்பரு செம்மை மருவிய - ஒப்பில்லாத சாரூப்பியத்தையும் பொருந்திய—நந்தித் தலைவனை வந்தித்து எதிர் நின்றார் - திருநந்திதேவரை நமஸ்கரித்து எதிரே நின்றார்கள். எ - று. (சஎ)

பன்னுக ணத்தோர் தலைவன் வருத்தம் பாராதே
நின்னில யத்திந் நிலைதக நாளு நில்லென்றற்
கென்னை யுரைக்கோ மிதுபிணி கைக்கு மெனிலெய்த்தோர்
தன்னைந ருக்கிச் சாறுகொள் வானுந் தருமென்றார்.

இ - ள். பன்னு கணத்தோர் - சொல்லப்பட்ட கணநாதர்கள்,—தலைவன் வருத்தம் பாராதே - சிவபெருமானுடைய திருமேனி வருத்தத்தை நோக்காது—நின் நிலயத்து இந்நிலை தக நாளும் நில் என்றற்கு - உம்முடைய திருநிருத்தத்திலே இந்தப் புயங்கநிலை பொருந்த எக்காலமும் நின்றருளும் என்று வேண்டிக்கொண்ட பதஞ்சலிமகாமுனிவருக்கு—என்னை உரைக்கோம்-யாது சொல்வோம்!—இது பிணி கைக்கும் எனில் - (வைத்தியன்) இம்மருந்து பிணியைப் போக்கும் என்றால்—எய்த்தோர் தன்னை நருக்கிச் சாறு கொள்வானும் தரும் என்றார் - (பிணியால்) வருந்தினோர் அம்மருந்தை (வேரோடுபிடுங்கி) நருக்கிச் சாறுகொள்ளுதலைப்போலும் (இங்கு அவர் செய்த காரியம்) என்றார்கள். எ - று. (௪௮)

தாணுவை முன்னர்ச் சாருநர் கண்ணிற் றகநட்டம்
பேணுவ தாகப் பெருகு வரம்பெற் றனரென்றா
லாணையெ னுமென் றாரறி வார்நா மினியன்பிற்
காணுநர் காணுங் காலம் வருத்தல் கடனென்றா.

இ - ள். (அது கேட்ட திருநந்திதேவர்)—தாணுவை - சிவபெருமானை—முன்னர்ச் சாருநர் கண்ணில் தக - சந்நிதியிலே பொருந்துஞ் சருவான்மாக்களுடைய கண்ணுக்கும் புலப்படும்படி—நட்டம் பேணுவது ஆகப் பெருகு வரம் பெற்றனர் என்றால் - அனவரததாண்டவஞ் செய்தருளும்பொருட்டுப் பதஞ்சலிமகாமுனிவர் மிக்க வரம் பெற்றாரென்றால்—ஆணை என் ஆம் என்று ஆர் அறிவார் - (சிவபெருமானுடைய) ஆஞ்ஞை எப்படியாகும் என்று யாவர் அறியவல்லவர்!—நாம் இனி அன்பிற்

காணுநர் காணும காலம வருததல் கடன் என்று - நாம் இனி அன்பினோடு தரிசிப்பவர்களுக்குத் தரிசிக்குங்காலங்களை வருத்தல் கடனும் என்று நினைந்து. எ - று. (சகூ)

அங்கக முற்றுந் தங்கிளர் காவ லயற்காவ
லெங்கணு மொய்க்கும் பாரிட முப்பரி டைக்காவல்
பொங்குசி னத்தின் கூளிகள் காளிபு றக்காவ
றங்குவ ருக்கந் தம்மினெ ருக்கந் தருவித்து.

இ - ள். அங்கு அகம் முற்றும் தம்கிளர் காவல் - அங்கே சபைமுழுதும் தஙகளுடைய விளங்கிய காவலாகவும்,—அயற்காவல் எங்கணும் மொய்க்கும் பாரிடம் - அப்பாற் பிராகாரத்துக்காவல் எவ்விடத்தும் நெருங்கிய பூதஙகளுடைய காவலாகவும்,—உம்பர் இடைக் காவல் பொஙகு சினத் திண் கூளிகள் காளி - (அதற்கு) அப்பாற்பட்ட நடுப்பிராகாரம் இரண்டின் காவல்களும் மிக்க கோபத்தையுடைய வலிய பேய்களுங்காளிகளுமாகிய இவற்றினுடைய காவல்களாகவும்,—புறக் காவல் தஙகு வருக்கம் - புறக்காவல் பொருந்திய வர்க்கததாராகிய வைரவாதிகளுடைய காவலாகவும்,—தம்மின் நெருக்கம் தருவித்து - தஙகள் தங்களுள்ளே செறிந்து காக்கும்படி கற்பித்து. எ - று. (டு௦)

காலையு முச்சிக் காலமும் வானோ ரேனோர்சீர்
மாலையின் மைக்கட் பூவையர் தாமே வளர்கங்குன்
ஞாலந ரர்க்கெக் காலமும் யாரு நணுகாத
வேலைக ளத்தற் கிச்சையி ருப்பா மிகுவித்தார்.

இ - ள். காலையும் உச்சிக்காலமும் வானோர் - பிராதக்காலமும் மத்தியானமும் தேவர்கட்குச் சேவாகாலமாகவும்,—சீர் மாலை ஏனோர் - சிறப்பையுடைய சாயங்காலம் சித்தர் கந்தருவர் யக்ஷர் என்னும் மற்றையோர்கட்குச் சேவாகாலமாகவும்,—வளர்

குறுதல் இனை மைகளட் பூவையா - வளாகினை இராத்திரிகாலம இனிய மையிட்ட கண்களையுடைய தெய்வப்பெண்கட்குச் சேவா காலமாகவும்,—எக்காலமும் ஞாலநரர்க்கு - (முற்கூறிய) எல்லாக்காலமும் பூமியிலுள்ள மனிதர்கட்குச் சேவாகாலமாகவும்,—யாரும் நணுகாத வேலைகள் அத்தற்கு இச்சை இருப்பாமிருவித்தார் - ஒருவரும் போய்ச் சேவியாத நடுயாமமிரண்டும் சிவபெருமானுக்கு இச்சைப்படி (திருவிளையாடல் செய்துகொண்டு) இருக்குங் காலமாகவும் கற்பித்தார். எ - று. (௫௧)

நிலையமி தற்கிங் கிதுநிலை யென்றான் மன்றேறி
யலைவற நிற்கும் படியுமு வந்தா னென்றான்முற்
கலைஞரு ரைக்கும் பொருளள வன்றோ வந்தோவித்
தலைவன்மு யக்கஞ் சகலம யக்கந் தானுமால்.

இ - ள். நிலயம் இதற்கு இங்கு இது நிலை என்றான் - (சிவபெருமான்) இந்த நிருத்தத்துக்கு இந்தச் சுழுமுனைத்தானமாகிய சிதம்பரமே தானம் என்று அருளிச்செய்தார்,—மன்று ஏறி அலைவு அற நிற்கும் படியும் உவந்தான் என்றால் - கனக சபையிலே பொருந்தி (அனவரதமும்) அசைவற நிற்கும்படிக்கும் மகிழ்ந்து உடன்பட்டருளினாரென்றால்,—முற கலைஞர் உரைக்கும் பொருள் அளவு அன்றோ-முன்னே வேதாகமங்களை யுணர்ந்தவர்கள் (பிரளயகாலங்களிலே பிருதிவிமுதல் நாதமீறாகிய தத்துவங்கள் ஒடுங்கித் தோன்றும எனக்) கூறிய பொருள் பிரமாணமன்றோ!—அந்தோ இத்தலைவன் முயக்கம் சகலமயக்கம் தானும் - இத்தலைவருடைய திருவுளப்பொருத்தம் யாவர்க்கும் மயக்கமாம். எ - று. (௫௨)

பூவமர் வோனும் பொருகட லோனும் புத்தேளுந்
தேவர்கள் கோனுந் திருமுனி தானுந் திகழ்நாகர்
காவல னேயிக் கருணைந டங்காண் வரவைத்தாய்க்
கேவல்செய் வோமற் றென் செயலல்லோ மென்றார்கள்.

இ - ள். பூ அமர்வோனும்-செந்தாமரைமலரிலிருக்கும் பிரமதேவரும்,—பொரு கடலோனும் - திரை பொருகின்ற திருப்பாற்கடலிலே துயிலும் விட்டுணுவும்,—புத்தேளும் - தேவர்களும்,—தேவர்கள் கோனும்-தேவேந்திரனும்,—திருமுனிதானும்-வியாக்கிரபாதமகாமுனிவரும்,—திகழ் நாகர் காவலனே-விளங்குகின்ற நாகராசாவாகிய பதஞ்சலிமகாமுனிவரே—இக் கருணை நடம் காண வர வைத்தாய்க்கு - இந்தக் காருண்ணிய நிருத்தத்தைச் (சருவான்மாக்களுந்) தரிசிக்கும்படி வைத்த உமக்கு—ஏவல் செய்வோம் மற்று என் செயவல்லோம் என்றார்கள் - நாங்கள் பணிவிடைசெய்வோம், இதுவன்றி வேறியாது செய்ய வல்லோம் என்றார்கள். எ - று. (௫௩)

இப்பரி சாமிங் கிவரொடு பூதம் பேய்காளி
முப்புரி நூலோர் பூமகள் விண்ணோர் முதலாகத்
தப்பரு மெல்லைக் குட்சிவ லிங்கந் தாபித்துத்
துப்புறழ் மேனிச் சோதியை நாளுந் தொழுநாளில்.

இ - ள். இப் பரிசு ஆம் இங்கிவரொடு-இவ்வியல்பையுடையர்களாகிய இவர்களோடும்,—பூதம் பேய் காளி - பூதங்களும் பேய்களும் காளிகளும்—முப்புரி நூலோர்-முப்புரிநூலையணிந்த மூவாயிரமுனிவர்களும்— பூமகள் - இலக்குமியும்—விண்ணோர் முதல் ஆக - தேவர்களும் முதலாக,—தப்பு அரும் எல்லைக்குள் சிவலிங்கம் தாபித்து - (முத்தி) வழுவுதலில்லாத தில்லையெல்லையினுள்ளே சிவலிங்கப்பிரதிட்டை பண்ணி,—துப்பு உறழ் மேனிச் சோதியை நாளும் தொழு நாளில்-பவளம்போலுந் திருமேனியையுடைய சிவபெருமானை நாடோறும் வணங்கிக்கொண்டிருக்குநாளில். எ - று. (௫௪)

வீசிய கங்கைக் கங்கைவி டாவந் தரவேதித்
தேசம்வி ளங்கத் திசைமுகன் யாகஞ் செய்தற்குப்

பூசைவ ழங்கிப் புவியுழு தப்புப் பூரித்துற்
றூசறு துங்கச் சாலைகளின்பத் தமைவித்து.

இ - ள். வீசிய கங்கைக் கங்கை விடா அந்தரவேதித்தேசம் விளங்க - திரை வீசிய கங்கைக்கரையை நீங்காத அந்தர்வேதித் தேசம் விளங்க—திசைமுகன் யாகம் செய்தற்கு - பிரமதேவர் யாகம் பண்ணற்பொருட்டு—பூசை வழங்கி - (இந்திரன் முத லாகிய தேவர்களுக்குப்) பூசைபண்ணி,—புவி உழுது அப் புப் பூரித்து உற்று - பூமியை உழுது சலநிறையக்கட்டி ஒருப் பட்டு,—ஆசு அறு துங்கச் சாலைகள் இன்பத்து அமைவித்து - குற்றமற்ற பெரிய யாகசாலைகளை மகிழ்ச்சியோடு செய்வித்து. எ - று. (௫௫)

திருமலி வித்துப் பறவைப டுத்துச் சிலகுண்டங்
கருதிநி றுத்திப் பசுநிரை கட்டப் பெறுகம்பஞ்
சருநெய்கு சைப்புற் சமிதைசு ருக்குச் சுருவந்தண்
பரிதிபொ ரிப்பொற் குவைபழ வெற்புப் பலகொண்டு.

இ - ள். திரு மலிவித்து - இலக்குமி முதலாயினோரைப் பிரதிட்டைபண்ணி,—பறவை படுத்து - பருந்துபடுத்து,—கரு திச் சில குண்டம் நிறுத்தி - (விதியை) ஆராய்ந்து (அக்கருடன் மீது) சில குண்டங்களை (அவ்வத்தானங்களில்) அமைத்து,— பசு நிரை கட்டப் பெறு கம்பம் - பசுநிரைகள் கட்டப்பெறு கின்ற கம்பங்களும்—சரு - சருவும்—நெய் - நெய்யும்—குசைப் புல் - தருப்பைப்புல்லும்—சமிதை - சமித்தும்—சுருக்குச் சுரு வம - சுருக்குச்சுருவமும்—தண் பரிதி - குளிர்ந்த பரிதியும்— பொற் பொரிக் குவை - பொலிவாகிய பொரிக்குவியல்களும்— பல பழ வெற்புக் கொண்டு - பல கனிமலைகளுமாகிய இவைக ளைக் கொண்டு. எ - று. (௫௬)

சிந்தைம கிழ்ந்தும் பரைவர வேள்விச் செயல்செய்வோர்
மந்திர மோதிப் பாவக சோமா வருணவா

முந்துமு ராரி வாதிமி ராரி வாமூவா
விந்திரன் வாவா சங்கரன் வாவா வென்றார்கள்.

இ - ள். சிந்தை மகிழ்ந்து வேள்விச் செயல் செய்வோர் - மனமகிழ்ந்து யாகத்தொழிலைச் செய்வோர்கள்—உம்பரை வர மந்திரம் ஓதி - தேவர்களை வருவிக்கும்பொருட்டு (அவரவர்) மந்திரங்களைச் சொல்லி,—பாவக சோமா வருணா வா - அக்கினியே சோமனே வருணனே வா—முந்து முராரி வா - முற்பட்ட விட்டுணுவே வா—திமிராரி வா - ஆதித்தனே வா—மூவா இந்திரன் வா வா - மூப்பில்லாத இந்திரனே வா வா—சங்கரன் வா வா என்றார்கள் - சங்கரனே வா வா என்று ஆவாகனம்பண்ணினார்கள். எ - று. (ருஎ)

யாருமணைந்தா ரின்றினி யென்னா மிதுவென்றென்
றோருமு னன்பார் யாவரு மின்பா ரொளிர்தில்லைச்
சேரவி ருந்தார் போதுமி னென்றே சென்றேயு
நாரத கொண்டே மீளுக வென்றான் மறைநாவான்.

இ - ள். யாரும் அணைந்தார் இன்று - (ஆவாகனம்பண்ணப்பட்ட தேவர்கள் முனிவர்கள்) யாவரும் இங்கே வந்து பொருந்தினார்களில்லை—இனி இது என் ஆம் என்று என்று ஒரு முன் - இனி இவ்வியாகம் யாதாய் முடியுமோ என்று பலகாலும் ஆராயுமளவில்,—அன்பார் யாவரும் இன்பு ஆர் ஒளிர் தில்லைச் சேர இருந்தார் - (இங்கு வரற்பாலர்களாகிய) அன்பையுடையோர்கள் யாவரும் இன்பநிறைந்த விளங்குகின்ற சிதம்பரத்தில் ஒருங்கே இருக்கின்றார்கள்,—நாரத சென்றேயும் போதுமின் என்று கொண்டு மீளுக என்றான் மறை நாவான் - நாரதனே நீ போயாயினும் வாருங்கள் என்று அவர்களை அழைத்துக்கொண்டு மீள்வாயாக என்றார் வேதத்தைப் பயின்ற நாக்கையுடைய பிரமதேவர். எ - று. (ருஅ).

நயமுனி யும்போய் நடவதி பன்றா டொழுதொல்லைச்
சயமலி தில்லைத் தாபதர் விண்ணோர் தமைநீர்கள்
பயன்மலி யாகத் தனைவரு மெய்தப் பணிநீயென்
றயனுரை செய்தா னென்றுரை செய்தா னனைவர்க்கும்.

இ-ள். நய முனியும் போய் - நன்மையையுடைய நாரத முனிவரும் (சிதம்பரத்திலே) சென்று,—நட *அதிபன் தாள் தொழுது - நடராசருடைய திருவடிகளை வணங்கி,—ஒல்லை - விரைவில் வந்து,—சயம் மலி தில்லைத் தாபதர் விண்ணோர் தமை - வெற்றி மிகுந்த தில்லைவாழந்தணர்களையும் தேவர்களையும் கண்டு,—நீர்கள் அனைவரும் பயன் மலி யாகத்து எய்த - நீங்களெல்லீரும் பயன் மிகுந்த யாகத்துக்கு வரும்பொருட்டு—நீ பணி என்று அயன் உரை செய்தான் - நீ சொல்வாயாக என்று பிரமதேவர் சொல்லி என்னை வரவிட்டார்—என்று அனைவர்க்கும் உரை செய்தான் - என்று அவர்களெல்லாருக்குஞ் சொல்லினார். எ-று. (ருக)

நாரத னார்சொற் றேவர்கள் கேளா நகைசெய்தெம்
பேரவி தீயிற் றூவுக யாமே பெறுவோமிப்
பாரினி னாளும் பேரரு ளாளன் பரதத்தே
னாரமு துண்போ மினியவி யுண்போ மன்றென்றார்.

இ-ள். நாரதனார் சொல் தேவர்கள் கேளா நகை செய்து - நாரதமுனிவருடைய வார்த்தையைத் தேவர்கள் கேட்டுச் சிரித்து,—எம் பேர் அவி தீயில் தூவுக - எங்களுடைய பெரிய அவிப்பாகத்தை (எங்கள் முகமாகிய அக்கினியிலே ஓமம் பண்ணுக,—யாமே பெறுவோம் - (அதனை) நாங்களே பெற்றுக் கொள்வோம்;—இப்பாரினில் நாளும் பேர் அருளாளன் பரதத் தேன் ஆர் அமுது உண்போம் - நாங்கள் இப்பூமியிலே நாடோறும் பெரிய திருவருளையுடைய சிவபெருமானது நிருத்தானந்த

மாகிய தேனிறைந்த அமிர்தத்தை உண்பேம்;—இனி அவி உண்பேம் அன்று என்றார் - இனி உங்களவியை உண்பேமல்லேம் என்றார்கள். எ - று. (௬௦)

மற்றவர் தஞ்சொற் பெற்றவனும் போய் மலரோன்முன்
சொற்றன னந்தக் கொற்றவன் யாமுஞ் சொன்னால்வந்
திற்றைமக ங்கைப் பற்றுவ ரென்றே யிறைவாழும்
பொற்றிகழ் தொல்லைத் தில்லையி னெல்லை புகுந்துற்றான்.

இ - ள். மற்றவர்தம் சொல் பெற்றவனும் போய் மலரோன் முன் சொற்றனன் - அவர்களுடைய வார்த்தையைக் கேட்ட நாரதமுனிவரும் (மீண்டு) சென்று பிரமதேவர் முன்னே சொல்லினார்;—அந்தக் கொற்றவன - அந்தப் பிரமதேவர்—யாமும் சொன்னால் வந்து இற்றை மகம் கைப் பற்றுவர் என்றே - நாமும் (போய்ச்) சொன்னால் (இரங்கி) வந்து இன்று (இங்கே) நடக்கின்ற யாகத்தைக் கைக்கொண்டு முடிப்பார்கள் என்று நினைந்து,—இறை வாழும் பொன் திகழ் தொல்லைத் தில்லையின் எல்லை புகுந்து உற்றான் - சிவபெருமான் வாழும் பொலிவு விளங்குகின்ற பழமையாகிய தில்லையினது திருவெல்லையைச் சென்று அடைந்தார். எ - று. (௬௧)

மலரவ னுந்தா பதரெதிர் கொண்டா ரெனவாழ்வுற்
றலைபுனல் சென்றா டியபி னெழுந்தா ரழலாடு
நிலையம்வ ணங்கா நிகழ்சிவ கங்கா தரநீரார்
தலைவபு யங்கா பரணவி ரங்காய் தகவென்றான்.

இ - ள். மலரவனும் தாபதர் எதிர் கொண்டார் என வாழ்வு உற்று - பிரமதேவரும் (தம்மைத்) தில்லைவாழந்தணர்கள் எதிர் கொண்டார்கள் என்று மகிழ்ச்சிகொண்டு,—அலை புனல் சென்று ஆடிய பின் எழுந்து - அலைகின்ற நீரையுடைய சிவகங்கையிலே போய் ஸ்நானஞ்செய்தபின் எழுந்து,—ஆர் அழல் ஆடும் நிலையம்

வணங்கா - நிறைந்த அக்கினியோடும் நடிக்கும் திருநிருத்தத்தை நமஸ்கரித்து,—திகழ் சிவ - விளங்குகின்ற சிவபெருமானே—கங்காதர - கங்கையைத் தரித்தவரே—நீறு ஆர் தலைவ - விபூதி நிறைந்த திருமேனியையுடைய நாயகரே—புயங்காபரண - சருப்பாபரணரே—தக இரங்காய் என்றான் - (தமியேனும் உம்முடைய அடியார்களோடு) கூடும்பொருட்டு இரங்கியருளும் என்று விண்ணப்பஞ்செய்தார். எ - று. (சுஉ)

வேதனும் வேள்விக் கேதிகழ் வானாய் விடைகொண்டே
தீதற மூலத் தானமி றைஞ்சிச் சிவலிங்கச்
சோதியை மேவச் செய்யிட மெங்குந் தொழுதன்பிற்
போதுக வென்றப் புலிமுனி சாலைக் குள்புக்கான்.

இ - ள். வேதனும் வேள்விக்கே திகழ்வான் ஆய் விடைகொண்டு - பிரமதேவரும் யாகத்தின்பொருட்டே விளங்குவாராகி விடைபெற்றுக்கொண்டு,—தீது அற மூலத்தானம் இறைஞ்சி - விக்கினம் வாராவண்ணம் திருமூலட்டானேசுரரை நமஸ்கரித்து,—சிவலிங்கச் சோதியை மேவச் செய் இடம் எங்கும் தொழுது - சிவலிங்கப்பெருமானைப் பிரதிட்டைசெய்த தலங்களெங்கும் வணங்கி,—அன்பிற்போதுக என்று அப்புலிமுனி சாலைக்குள் புக்கான் - அன்பினாலே வாரும் என்று அழைத்து அவ்வியாகக்கிரபாதமகா முனிவருடைய பர்ணசாலையினுள்ளே (அவர் கைப்பற்றிக்கொண்டு) போயினார். எ - று. (சுங)

இந்திரன் விண்ணோர் புலிமுனி நாகர்க் கிறையோன்மெய்ச்
சிந்தைய ரேனோர் சூழவி ருப்பத் திகழ்போத
னந்தமி லாதீர் மகமுயல் வேன்யா னனைவீரும்
வந்தணை வாலீர் தந்திடு வீரோ வரமென்றான்.

இ - ள். இந்திரன் - இந்திரனும்—விண்ணோர் - தேவர்களும்—புலிமுனி - வியாக்கிரபாதமகா முனிவரும்—நாகர்க்கு

இறையோன் - பதஞ்சலிமகாமுனிவரும்—மெய்ச் சிந்தையர் - மெய்மையாகிய சித்தத்தையுடைய மூவாயிரமுனிவர்களும்—ஏனோர் - பிறரும்—சூழ இருப்ப - (தம்மைச்) சூழவிருப்ப,—திகழ் போதன் - (நடுவே) விளங்கிய பிரமதேவர்—அந்தம் இலாதீர் - (சிவபத்தியிலே) முடிவில்லாதவர்களே—யான் மகம் முயல்வேன் - நான் ஒரு யாகஞ்செய்கின்றேன்;—அனைவீரும் வந்து அணைவான் நீர் வரம் தந்திடுவீரோ என்றான் - (அதற்கு) எல்லீரும் வந்து சேரும்படி நீங்கள் வரந்தருவீர்களோ என்று கேட்டார். எ - று. (கூ௪)

பூமக னெண்ணம் புகறரு போதுட் பொருளுன்னி
யோமென வோதா தவனத ராறு ரயனும்பர்
கோமக னீயுட் கொண்டதெ னென்னக் குளிர்கஞ்சத்
தேமலி தாரோய் செப்பிய தன்றோ செயலென்றான்.

இ - ள். பூமகன் எண்ணம் புகறரு போது - பிரமதேவர் (தமது) கருத்தைச் சொல்லியபொழுது,—உட்பொருள் உன்னி - (யாகம் புத்திக்கன்றி முத்திக்கேதுவாகாது என்னும்) உட்பொருளை நினைந்து,—ஓம் என ஓதாது அவனதர் ஆறுர் - ஆம் என்று சொல்லாது தலைகவிழ்ந்திருந்தார்கள்;—அயன் - (அப்பொழுது) பிரமதேவர் (இந்திரனை நோக்கி)—உம்பர் கோமகன் நீ உட்கொண்டது என் என்ன - தேவராசனே நீ எண்ணியது யாது என்று வினவ,—குளிர் தே மலி கஞ்சத்தாரோய் - குளிர்கின்ற மணமிகுந்த தாமரைப்பூமாலையை யுடையவரே—செப்பியது அன்றோ செயல் என்றான் - நீர் சொல்லியதன்றோ (எனக்குப் பொருந்திய) செய்கை என்றான் இந்திரன். எ - று.

அவனதர் தலையிறக்கமுடையவர். (கூ௫)

அங்கவ னின்சொற் கொண்டு துவண்டுள் ளயன்வேள்விக்
கெங்கணு மின்பத் தாபத ருண்டா யினுமெந்தைக்

குங்கட மன்புக் கொப்பவ ரின்றென் றன்றோயா
னிங்குவ ருந்திற் றின்றென நின்றங் கிரவுற்று.

இ - ள். அங்கு அயன் அவன் இன்சொற் கொண்டு - அங்கே பிரமதேவர் அவ்விந்திரனுடைய இனிய வார்த்தையை உட்கொண்டு,—உள் துவண்டு-(தில்லைவாழந்தணர் ஒன்றுஞ் சொல்லாமைக்கு) மனங்கலங்கி,—வேள்விக்கு இன்பத் தாபதர் எஙகணும் உண்டு ஆயினும் - யாகத்துக்கு அகமகிழ்ச்சியையுடைய முனிவர்கள் எவ்விடத்திலும் உண்டாயினும்—எந்தைக்கு உஙகடம் அன்புக்கு ஒப்பவர் இன்று என்று அன்றோ - எமது பிதாவாகிய சிவபெருமானிடத்தே உங்களுடைய அன்புக்கு ஒப்பாகிய அன்புடையவர்கள் இல்லையென்றன்றோ—யான் இங்கு இன்று வருந்திறது என - நான் இங்கே இப்பொழுது வருந்தி வேண்டிக்கொண்டது என்று—அஙகு நின்று இரவுற்று - அஙகே பலகாலும் வேண்டிக்கொண்டு. எ - று. (சுசு)

பூவமர் வோனப் புலிமுனி கைப்பொன் முகிழ்பற்றி
யாவதெ னானே தூதனு மானு லமர்தில்லைத்
தாவத ராஞர் யாரையு மாவாழ் தரும்வேள்விக்
கேவுத னீயே மேவுத லன்றோ வியல்பென்றான்.

இ - ள். பூ அமர்வோன் அப்புலிமுனி பொன் கை முகிழ் பற்றி - செந்தாமரைமலரில் இருக்கும் பிரமதேவர் அவ்வியாக்கிரபாதமகாமுனிவருடைய பொலிவாகிய கைமலரைப் பிடித்து,—ஆவது என் - (இனி) ஆவதென்னே!—நானே தூதனும் ஆனால் - நானே தூதனுமாய் வந்து என் காரியத்தைச் சொல்லிக்கொண்டால்,—மா வாழ் தரும் வேள்விக்கு - பெருமைதஙகிய யாகத்துக்கு—அமர் தில்லைத் தாவதர் ஆனூர் யாரையும் ஏவுதல் - பொருந்திய தில்லைவாழந்தணர்களெல்லாரையும் விடுத்தல்—நீயே மேவுதல் அன்றோ இயல்பு என்றான் - (அல்லது) நீரே வருதலன்றோ முறைமை என்றார். எ - று. (சுஎ)

கோகன தன்சொற் கொண்டுபு லிக்கான் முனிகோப
மோகமி லின்பத் தாபதர் மூவா யிரவோரு
மாகரு மன்றத் தேகனை யாமிங் கினிநுங்கட்
காகவ ணங்கப் போய்வரு வீரென் றறிவித்து.

இ - ள். புலிக்கால் முனி கோகனதன் சொற கொண்டு - வியாக்கிரபாதம்காமுனிவர் பிரமதேவருடைய வார்த்தையை உட்கொண்டு,—கோபம் மோகம் இல் இன்பத் தாபதர் மூவாயிரவோரும் - கோபமும் மோகமுமில்லாத ஆனந்தத்தையுடைய மூவாயிரமுனிவர்களும்—மாகரும்-தேவர்களும் கேட்பீர்களாக--இனி இங்கு நுங்கட்கு ஆக மன்றத்து ஏகனை யாம் வணங்க - இனி இங்கே உங்களுக்காகக் கனகசபையின்கணுள்ள சிவபெருமானை நாம் நமஸ்கரிக்க—போய் வருவீர் என்று அறிவித்து - (நீங்கள்) போய் வாருங்கள் என்று அறிவித்து. எ - று. (௯அ)

போதுக வென்றப் புலிமுனி போதன் பொதுமேவுஞ்
சோதியை வந்தித் தருள்விர வெய்தத் தொழுதொல்லோர்
நாதனொ டன்புற் றகலநி னைப்போர் நமனோடு
மேதகு மெய்யும் போமினி யென்றே விடைகொண்டார்.

இ - ள். போதுக என்று அப்புலிமுனி போதன் - வருக என்று அவ்வியாக்கிரபாதமகா முனிவரும் பிரமதேவரும்—பொது மேவும் சோதியை வந்தித்து - கனகசபையிலே பொருந்திய சிவபெருமானை வணங்கி—அருள் விரவு எய்த - (அவருடைய) திருவருளைப் பொருந்துதலுற,—நாதனொடு அன்பு உற்று அகல நினைப்போர் - சிவபெருமானுடனே அன்பினாலே கலந்திருந்து பிரிய நினைப்பவர்களாய்—தொழு தொல்லோர் - (விடைகொள்ளற்பொருட்டு அவரை) வணங்கும் பழையோர்களாகிய முனிவர்களும் தேவர்களும்—நமனோடு மேதகு மெய்யும் இனிப் போம் என்றே விடை கொண்டார் - இயமனுடனே (எங்களு

டைய) மேன்மை தக்க தூலசரீரமும் இனிப்போய்விடும் என்றே விடைகொண்டார்கள். எ - று. (சுக)

சென்றபி னந்தத் திருமுனி யுஞ்சீ ரரவோனும்
பின்றிகழ் வேணிப் பிஞ்சகன் மன்றம் பிரியாத
வொன்றிய சிந்தைத் தாபதர் மீள்வுற் றுடன்வாழ்வ
தென்றுகொ லோவந் திடுநெறி யேதோ வென்நொந்து.

இ - ள். சென்ற பின் - (அவர்கள்) போய பின்பு,—அந்தத் திருமுனியும் - அந்த வியாக்கிரபாதமகாமுனிவரும்—சீர் அரவோனும் - புகழையுடைய பதஞ்சலிமகாமுனிவரும்—பின் திகழ் வேணிப் பிஞ்சகன் மன்றம் பிரியாத ஒன்றிய சிந்தைத் தாபதர்-பின்னே தாழ்ந்து விளங்குகின்ற சடையையுடைய சிவபெருமானது கனகசபையைப் பிரியாத ஒன்றிய சித்தத்தையுடைய தில்லைவாழந்தணர்கள்—மீள்வுற்று உடன் வாழ்வது என்றுகொலோ - மீண்டு வந்து எங்களோடு வாழ்வது எந்நாளோ—வந்திடு நெறி ஏதோ என நொந்து - (அவர்கள்) வருதற்கு உபாயம் யாதோ என்று துக்கமுற்று. எ - று. (எ0)

அந்தமி லின்பத் தெந்தைபி ரானு ரமர்நாளிற்
சிந்தைவி ளங்கத் தில்லைவி ளங்கத் தேனூருங்
கந்தவ லங்கற் சுந்தர சிங்கக் கவுடேசன்
வந்தமை சந்தச் செந்தொடை யான்மேல் வருவிப்பாம்.

இ - ள். அந்தம் இல் இன்பத்து எந்தை பிரானுர் அமர் நாளில் - முடிவில்லாத இன்பத்தையுடைய எமது பிதாவாகிய வியாக்கிரபாதமகாமுனிவர் இருக்குநாளிலே,—சிந்தை விளங்க-(ஆன்மாக்களுடைய) சித்தம் விளங்கவும்,—தில்லை விளங்க - சிதம்பரம்விளங்கவும்,—தேன் ஆரும் கந்த அலங்கற் சுந்தர சிங்கக் கவுடேசன் வந்தமை - தேனிறைந்த மணத்தையுடைய மாலை

யையணிந்த அழகினையுடைய சிங்கவர்மராகிய கவுடராசா வந்தமையை—செஞ்சந்தத் தொடையால் மேல் வருவிப்பாம் - செவ்விய செய்யுட்டொடையினால் இனிச்சொல்வாம். எ - று. (எக)

நடராசச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - உஉகூ.

---

## இரணியவன்மச்சருக்கம்.

முற்காலத் திமையவர்கண் முன்பணிந்து தொழமுதல்வ
னற்காலத் துடனவில்வா னால்வகைமா யையுநடத்திச்
சொற்காரும் பொருளெவையுந் தொல்லூழி யுறத்தொகுத்த
வற்கால நிலைவிடிவ தாமளவா மமையத்து.

இ - ள். முற்காலத்து இமையவர்கள் முன் பணிந்து தொழ- ஆதிகாலத்திலே தேவர்கள் சிவபெருமான் சந்நிதியில் வணங்கிக் கும்பிட்டுச் (சிருட்டித்தொடக்கத்தை அருளிச்செய்யவேண்டும் என்று) விண்ணப்பஞ்செய்ய,—முதல்வன் நற் காலத்துடன் நவில்வான் - அச்சிவபெருமான் (தமக்குத் துணைக்காரணமாகிய) நல்ல காலதத்துவத்தோடு கூடி அருளிச்செய்வார்:—நால்வகை மாயையும் நடத்தி - (தனு கரண புவன போகமென்னும்) நால்வகைமாயாகாரியங்களையுஞ் சேட்டிப்பித்து,—சொற்கு ஆரும் பொருள் எவையும் உறத் தொகுத்த - சொல்லுக்குப்பொருந்திய அக்காரியங்களெல்லாவற்றையும் (மாயையிலே) பொருந்தும்படி ஒடுக்கிய—தொல் ஊழி அற்கால நிலை விடிவது ஆம் அளவு ஆம்-அமையத்து பழைய சங்காரகாலமாகிய இராக்காலநிலை விடியுமவசரமாகிய காலத்தில். எ - று. (க)

சத்திகளிற் கருத்திருத்தித் தாவிலரு மாமாயை
யுய்த்ததனி னாதாதி யைவகையு முதிப்பித்து
வைத்தெழுத்து மொழிமறைநூன் மந்திரமே முதலாய
சுத்தவழி விரித்தசுத்த தத்துவங்க டொகுமுதலில்.

இ - ள். சத்திகளில கருத்து இருத்தி - (சிருட்டியிலே இச்சைகொண்டு) ஞானக்கிரியாசத்திகளிலே கருத்து வைத்து,—தாவு இல் அரு மாமாயை உய்த்து - அழிவில்லாத அருவமாகிய சுத்தமாயையைச் செலுத்தி,—அதனின் நாதாதி ஐவகையும் உதிப்பித்து-அதனினின்றும் நாதம் விந்து சாதாக்கியம் ஈசுவரம் சுத்தவித்தை என்னும் ஐந்து தத்துவங்களையுந் தோற்றுவித்து,—வைத்த எழுத்து மொழி மறைநூல் மந்திரமே முதலாய சுத்தவழி விரித்து - (முன்) ஒடுங்கிய வர்ணம் பதம் வேதமுதலிய நூல்கள் மந்திரம் முதலாகிய சுத்தாத்துவாக்களை உதிப்பித்து,—அசுத்த தத்துவங்கள் தொகு முதலில் - அசுத்ததத்துவங்கள் ஒடுங்கிய முதற்காரணமாகிய அசுத்தமாயையினின்றும். எ-று.

வைத்த என்பதனீற்றகரம் விகாரத்தாற்றொக்கது.        (உ)

கலைமுதலா நிலன்முடிவாக் கண்டுணர்வங் கதிற்கருதிப்
பலவுயிர்க ளிருவினையாற் பயனுலகம் பெறப்பயிற்றி
மலரயன்மால் வரநல்கி மற்றிவைநீர் பற்றிவிரித்
தலைகடலும் வடவரையு மாள்வீரென் றளித்தருளி.

இ - ள். கலை முதலா நிலன் முடிவாக் கண்டு - கலை முதலாகப் பிருதிவியீறாகப் படைத்து,—உணர்வு அங்கதில் கருதி-நமது சத்தியை அவைகளிலே நின்று பிரேரிக்கும்படி கற்பித்து,—பல உயிர்கள் இருவினையால் பயன் உலகம் பெறப் பயிற்றி - பல வான்மாக்களும் இருவினைகளினாலே பெறப்படும் பயனாகிய போகங்களை அவ்வப்புவனங்களில் அநுபவிக்கும்படி செய்து,—மலரயன் மால் வர நல்கி - (பிரமாண்ட சிருட்டி திதிகட்கு அதி

காரிகளாகிய) பிரம விட்டுணுக்களை உதிக்கச்செய்து,—மற்றிவை நீர் பற்றி விரித்து அலை கடலும் வடவரையும் ஆள்வீர் என்று அளித்தருளி - இப்பிரமாண்ட சிருட்டிதிதிகளை நீங்கள் பொருந்திச் செய்துகொண்டு அலையாநின்ற திருப்பாற்கடலையும் மகா மேருமலையையும் ஆளக்கடவீர்கள் என்றுகொடுத்தருளி. எ - று.

அந்தணர்க ளுளராஞ ராகுதிக்கா மாதாக்க
டந்தனமந் திரமுன்னே சாற்றினமித் தன்மையினுன்
முந்துமவி பெறத்திங்கண் மும்மாரி யிமையவர்கள்
சிந்துமுண வுளவாகி யகிலமெலாந் துயர்தீர.

இ - ள். அந்தணர்கள் உளர் ஆனார் - பிராமணர்கள் படைக்கப்பட்டார்கள்,—ஆகுதிக்கு ஆ மாதாக்கள் தந்தனம் - ஓமத்தின்பொருட்டு ஐந்து கோமாதாக்களையும் படைத்தோம்;—மந்திரம் முன்னே சாற்றினம் - மந்திரங்களை முன்னே (சுத்தமாயா சிருட்டியிலே படைத்தோம்;—இத்தன்மையினால் - (மந்திரமும் பிராமணவருணமும் பசுவும் விருத்தியாகின்ற) இத்தன்மையினாலே—முந்தும் அவி இமையவர்கள் பெற - (யாகத்திலே) முற்பட்ட அவிப்பாகத்தைத் தேவர்கள் பெற,—திங்கள் மும்மாரி சிந்தும் - மாசந்தோறும் மும்மழைபெய்யும்,—உணவு உள ஆகி - (அதனால் அன்னமுதலிய) உணவுகள் உண்டாகி—அகிலம் எலாம் துயர் தீர - சருவான்மாக்களுக்குந் துன்பநீங்க. எ - று.

பஞ்சகோமாதாக்களாவன நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்பனவாம். (ச)

சுருதிவழி யொழுகினர்கள் சுவர்க்கத்தா ராகமநூற்
சரியைகிரி யாயோகர் சாலோக சாமீப
வுருவுவமை யினராக வுதவுதுமெம் முடனுகும்
பெருகியஞா னிகளெம்மைப் பெற்றூர்போக் கற்றூரே.

இ - ள். சுருதி வழி ஒழுகினர்கள் சுவர்க்கத்தார் - வேத மார்க்கத்தில் ஒழுகினவர்கள் சுவர்க்கத்தையுடையவர்கள்;—ஆகம நூற் சரியை கிரியா யோகர் - சைவாகமநூலிலே விதிக்கப்பட்ட சரியை கிரியை யோகங்களை அநுட்டித்தவர்கள்—சாலோக சாமீப உரு உவமையினர் ஆக உதவுதும் - (முறையே) சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய பதங்களை உடையவர்களாகும்படி அருளிச்செயவோம்;—எம்முடன் ஆகும் பெருகிய ஞானிகள் - நம்முடனே ஒருமைப்பட்ட பூரணஞானத்தையுடையவர்கள்—எம்மைப் பெறுநர் போக்கு அற்றார் - நம்மைப் பெற்றவர்களும் (நம்முடனே) நீக்கமற்றவர்களுமாவர்கள். எ - று. (ரு)

மண்ணுலகின் முறைபுரியா மடவரைநால் வகைத்தண்டம்
பண்ணிநெறி நடத்திடவும் பலரறியா வகைபுரிந்த
வெண்ணில்வினை விதிவழியே நுகர்விக்கு மியல்பிற்குந்
திண்ணியரா மிருதருமருளராகச் செய்துமென.

இ - ள். மண்ணுலகின் முறை புரியா மடவரை - பூலோகத்திலே வேதாகமமார்க்கத்தில் நடவாத அறிவிலிகளை—நால்வகைத் தண்டம் பண்ணி - நான்குவகைத்தண்டங்கள் செய்து—நெறி நடத்திடவும் - அம்மார்க்கங்களிலே நடத்துதற் பொருட்டும்,—பலர் அறியாவகை புரிந்த எண் இல் வினை - பலர் அறியாதபடி (இரகசியமாகச்) செய்த எண்ணில்லாத தீவினைகளை—விதி வழியே நுகர்விக்கும் இயல்பிற்கும் - விதிப்படியே (நரகங்களிலே) புசிப்பித்தற்பொருட்டும்,—திண்ணியர் ஆம் இருதருமர் உளர் ஆகச் செய்தும் என - வலியர்களாகிய இரண்டுதருமர்கள் உள்ளவர்களாகச் செய்வோம் என்று. எ - று. (சு)

வானவர்கோ னுழைத்திரவி மைந்தர்களி லொருவனுக்கு
ஞானவிழி நல்கிநம னற்பதியுங் கொடுத்தகற்றி
யீனமிலா வொருவனுக்கங் கிலகுமணி முடியளித்துத்
தேனகுதா ரணிவித்துத் தேவர்கடங் கைக்கொடுத்தான்

இ - ள். வானவர் கோன் உரைத்து - தேவதேவராகிய சிவபெருமான் தேவர்களுக்கு அருளிச்செய்து,—இரவி மைந்தர்களில் ஒருவனுக்கு ஞான விழி நல்கி - சூரியனுடைய புத்திரர்களுள் ஒருவனுக்கு (ஆன்மாக்கள் செய்யுங் கருமங்களையும் அவற்றின் பலங்களையும் அறியும்பொருட்டு) ஞானக்கண்ணைக் கொடுத்து,—நல் நமன் பதியும் கொடுத்து அகற்றி - நல்ல யமபூமியதிகாரத்தையுங்கொடுத்து விடுத்து,—ஈனம் இலா ஒருவனுக்கு அங்கு இலகு மணி முடி அளித்து - குற்றமில்லாத ஒருவனுக்கு அங்கே விளங்குகின்ற இரத்தினமகுடத்தைச் சூட்டி,—தேன் நகு தார் அணிவித்து - வண்டுகள் மகிழ்கின்ற ஆத்திமாலையையணிவித்து,—தேவர்கள் தம் கைக்கொடுத்தான் - தேவர்கள் கையில் ஒப்பித்தருளினார். எ - று. (எ)

மற்றவருங் கொடுபோந்து வடவரைப்பால் வருவிக்கும்
பெற்றியினு லணைந்துநாற் பெருங்கடலுட் படும்புவிக்குக்
கொற்றவனாய் மனுநாமங் கொண்டுநடத் தினனடைவே
முற்றிகழ வருமனுக்க ளொருநால்வர் முடிந்ததற்பின்.

இ - ள். மற்றவரும் கொடு போந்து வடவரைப் பால் வருவிக்கும் பெறறியினால் - அந்தத் தேவர்களும் கொண்டுசென்று மகாமேருமலைப்பக்கத்திலுள்ள கௌடதேசத்திலே சேர்த்ததன்மையினால்,—அணைந்து - (அவன் அந்தத்தேசத்தைப்) பொருந்தி,—நாற் பெருங் கடலுட்படும் புவிக்குக் கொற்றவன் ஆய் - நான்கு பெரிய கடலினுட்பட்ட பூமிக்கு இராசாவாய்,—மனு நாமம் கொண்டு நடத்தினன் - மனுவென்னும் பெயரைக்கொண்டு அரசியற்றினான்;--அடைவே-அந்தப்பிரகாரமே —முன் திகழவரு மனுக்கள் ஒருநால்வர் முடிந்ததற்பின் - முன்னே விளங்கவருகின்ற மனுக்கள் நால்வர் (ஒருவர்பின் ஒருவராகத் தனித்தனியே எழுபத்தொரு சதுர்யுகம் அரசியற்றி) முடிந்தபின்பு. எ - று.()

அன்னவர்கள் பின்னவனு மனுவாங் யவனுக்கு
மன்னுமழனை வியரிருவ ருளராகி மற்றவரின்

முன்னவள்பா லுடன்மடங்கன் முழுநிறமா மகவுதிப்பப்
பின்னவள்பா லெழிலினரா யிருதனயர் பிறந்தார்கள்.

இ - ள். அனனவாகள பின்னவனும் மனு ஆகி - அந்த நான்குமனுக்களுக்குப் பின் வந்தவனும் மனுவாகி,—அவனுக்கு மன்னும் மனைவியர் இருவர் உளர் ஆகி - அவ்வைவந்தாமனுவுக்குக் கற்பிலே நிலைபெற்ற மனைவியர்கள் இருவருண்டாகி,—மற்றவரின் முன்னவள் பால் - அவர்களுள்ளே மூததாளிடத்து—உடல் மடங்கல் முழு நிறம் ஆம் மகவு உதிப்ப - சரீரமுழுதும் சிங்கநிறமுடையதாக ஒரு குமாரர் பிறக்க,—பின்னவள்பால் எழிலினர் ஆய் இரு தனயர் பிறநதார்கள் - இளையாளிடத்தில் அழகினையுடையர்களாகி இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். எ - று. (கூ)

விரவுசிங்க வருமன்பின் வேதவன்மன் சுமதியென
வருதனயர் மூவர்களு மறைமுறையின் மலிசடங்கு
பெருகியபின் படைபயின்று பிறங்குமத கரிபரிதேர்
கருதியுகைத் திடுமாறு மொன்றாகக் கற்றார்கள்.

இ - ள். விரவு சிங்கவருமன் பின் வேதவன்மன் சுமதி என வரு தனயர் மூவர்களும் - பொருந்திய சிங்கவன்மா அவன் பின் வேதவன்மா அவன்பின் சுமதிவன்மா எனவுதித்த குமாரர் மூவர்களும்,—மறை முறையின் மலி சடஙகு பெருகியபின் - வேதமார்க்கத்திலே பொருந்திய சடங்குகள் முற்றியபின்,—படை பயின்று - ஆயுதபரீக்ஷைசெய்து,—பிறங்கு மத கரி பரி தேர் கருதி உகைத்திடும் ஆறும் - விளஙகுகின்ற மதத்தையுடைய யானையையும் குதிரையையும் தேரையும் ஆராய்ந்து ஓட்டு முறைமையையும—ஒன்று ஆகக் கற்றார்கள் - குறைவற முழுதுங்கற்றார்கள். எ - று. (க0)

கற்றதற்பின் முன்னவன்மெய்க் களங்கத்தா லரசாள்கைக்
குற்றமுள தினியுலகிற் குலமைந்த ரிருவரினும்

பெற்றவர்கள் பெறுகின்றார் மனுவிசைவாற் பெருந்தவங்க
ளுற்றொடுங்கு மிதுசால வுறுதிநமக் கெனவுணர்ந்து.

இ - ள். கற்றதற்பின் - கற்றதன்பின்பு,—முன்னவன்-மூத்தவராகிய சிங்கவருமா—மெய்க் களங்கத்தால் அரசு ஆள்கை குற்றம் உளது - (நம்முடைய) சரீரத்திற் குற்றத்தினாலே இராச்சியம்பண்ணுகையிலே குற்றமுண்டு,—இனி உலகில் குலமைந்தர் இருவரினும் - இனி இப்பூமியிலே குலபுத்திரராகிய நம்முடைய தம்பிமாரிருவருள்ளும்—மனு இசைவால் பெற்றவர்கள் பெறுகின்றார் - மனுவினுடைய அநுமதியினாலே (அவருக்குப்பின் இவ்விராச்சியத்தைப்) பெற்றவர் பெறுகின்றார்,—பெருந் தவங்கள் உற்று ஒடுங்குமிது - பெருமையாகிய தவங்களைப பொருந்தி மனமொடுங்கியிருத்தலே—நமக்குச் சால உறுதி என உணர்ந்து - நமக்கு மிக உறுதி பயப்பது என்று தெளிந்து. எ - று. (கக)

மனுவின்மல ரடிவணங்கி மன்னவனே யடியேனற்
புனிதமிகு தீர்த்தங்க ளெங்குளவும் புகுந்தாடிப்
பனிமதியம் வளர்சடையோன் பதிகளுநின் றிருமேனி
யினிதமரும் படிதொழுதிங் கெய்தவரு ளெனவிசைத்தான்.

இ - ள். மனுவின் மலர் அடி வணங்கி - மனுவினுடைய செந்தாமரைமலர்போலும் பாதத்தை நமஸ்கரித்து,—மன்னவனே - மகாராஜாவே—அடியேன் நற் புனிதம் மிகு தீர்த்தங்கள் எங்கு உளவும் புகுந்து ஆடி - அடியேன் எவ்விடங்களினுமுள்ள நல்ல சுத்தமிகுந்த தீர்த்தங்களெல்லாவற்றினும் போய் ஸ்நானஞ்செய்து—பனி மதியம் வளர் சடையோன் பதிகளும் - குளிர்மையாகிய பிறை தவழ்கின்ற சடையையுடைய சிவபெருமானுடைய தலங்களையும்—நின் திருமேனி இனிது அமரும்படி தொழுது - உம்முடைய திருமேனி நன்றாக இருக்கும்படி வணங்கிக்கொண்டு—இங்கு எய்த அருள் என இசைத்தான் - இங்கே

வரும்பொருட்டு அருள்செய்யும் என்று விண்ணப்பஞ்செய்தார். எ - று. (கஉ)

மன்னவனு மிகநொந்து மைந்தர்மழ விதுமுதிர்ந்த
வென்னுடைய தளர்விதுநீ யிசைந்ததவ மினியாமோ
பொன்னணியும் பொருகரியும் புரவிகளும் புணர்தேருங்
கொன்னவிலும் படையுநெடுங் குவலயமுங் கைக்கொண்டு.

இ - ள். மன்னவனும் மிக நொந்து - கௌடராசாவும் மிகத் துக்கமுற்று,—மைந்தர் மழவு இது - இளையகுமாரர்களுடைய இளமை இது—முதிர்ந்த என்னுடைய தளர்வு இது - வயசின்மேலிட்ட என்னுடைய தளர்ச்சி இது—நீ இசைந்த தவம் இனி ஆமோ - (ஆதலின்) நீ (செய்ய) உடன்பட்ட தவம் இனி யாகுமோ!—பொன் அணியும் - பொன்னாபரணங்களையும்—பொரு கரியும் - பொருகின்ற யானைகளையும்—புரவிகளும் - குதிரைகளையும்—புணர் தேரும் - பொருந்திய தேர்களையும்—கொன் நவிலும் படையும் - அச்சத்தைச் செய்கின்ற படைகளையும்—நெடுங் குவலயமும் கைக்கொண்டு - பெரிய பூமியையுங் கைக்கொண்டு. எ - று. (கங)

திருந்தநடத் திடுமதுகாண் டவமென்று செப்புதலும்
பரந்தபணு மணிப்பாந்தட் பாரந்தா ரெனப்பரித்த
பெருந்தடந்தோ ளிவையின்னும் பேரூழி பொறுத்தற்கென்
னருந்தவமே தருமென்று னரசனவ னதனுனன்.

இ - ள். திருந்த நடத்திடுமது தவம் காண் என்று செப்புதலும் - (நீதியிலே) திருத்தமுறும்படி (இராச்சியத்தை) நடத்துவதே தவங்காண் என்று சொல்லலும்,—பரந்த பணுமணிப் பாந்தட் பாரம் - விரிந்த படங்களிலே இரத்தினங்களையுடைய ஆதிசேடனது பாரமாகிய இப்பூமியை—தார் எனப் பரித்த பெருந் தடந் தோள் - மாலைபோலத் தாங்கிய பெரிய விசால

மாகிய உம்முடைய புயங்கள்—இவை இன்னும் பேர் ஊழி பொறுத்தற்கு - (நீர் சொல்லியவற்றை) இன்னும் பெரிய கற் பாந்தமளவுந் தாங்கும்பொருட்டு—என் அருந்தவமே தரும் என் முன் - என்னுடைய அருமையாகிய தவமே பண்ணும் என்று சிங்கவருமாச் சொன்னார்,—அரசன் அவனதன் ஆனன் - அது கேட்ட கௌடராசன் தலைகவிழ்ந்திருந்தான். எ - று. (கச)

வேறு.

அங்கதிசை வாகவிர வேதனிய கன்று
கங்கைகடல் கூடுதுறை காதலுட னாடிச்
சிங்கவரு மாவரு டிருந்தவரு மாமுற்
றங்கிமிகு வங்கமுயர் சாவக மடைந்தான்.

இ - ள். அங்கு அது இசைவு ஆக-அஙகே அத்தலைகவிழ்ந் திருத்தலே உடன்பாடாகக் கொண்டு,—சிஙகவருமா - சிங்கவரு மாவானவர்—இரவே தனி அகன்று - அவ்விராத்திரியிற்றானே தனியே (ஊரெல்லையை) நீங்கிப் போய்,—கங்கை கடல் கூடு துறை காதலுடன் ஆடி - கங்காநதி சமுத்திரத்தைப் பொருந்துந் துறையிலே அன்போடு ஸ்நானஞ்செய்து,—அருள் திருந்த வருமா முன் தங்கி - (தமக்குத்) திருவருள் திருத்தமுறக் கிடைக்கும் படி (காசித்திருப்பதியிலே) முன்பு வசித்து,—மிகு வங்கம் உயர் சாவகம் அடைந்தான் - மிகுத்த வங்கதேசத்தையும் உயர்ந்த சாவகதேசத்தையும் அடைந்தார். எ - று. (கரு)

மற்றதுக டந்துவள ரொட்டியவ ரைப்பிற்
பெற்றமுயர் பீமமிகு நாதனடி பேணி
யெற்றுபுன லார்பதிக ளெங்கணுமி றைஞ்சித்
தெற்றடவி யூடியர்தெ லுங்கமத ணைந்தான்.

இ - ள். மற்றது கடந்து-அந்தச்சாவகதேசத்தை நீங்கி,— வளர் ஒட்டியவரைப்பில் பெற்றம் உயர் பீமம் மிகு நாதன் அடி

பேணி - வளர்ந்த ஒட்டியதேசத்திலே இடபக்கொடியை உயர்த்த பீமேசுரருடைய திருவடிகளை வழிபட்டு,—எற்று புனல் ஆர்பதிகள் எங்கணும் இறைஞ்சி - (அங்கே) திரையெறியாநின்ற தீர்த்தங்கள் நிறைந்த திருப்பதிகளெங்கும் போய் வணங்கி,—தெற்று அடவி ஊடு உயர் தெலுங்கமது அணைந்தான் - நெருங்கிய காடுகளினிடையே உயர்ந்த தெலுங்கதேசத்தை அடைந்தார். எ - று. (கசு)

பருப்பதமி றைஞ்சிவிழி சோதிபயில் வித்துத்
திருத்தகு நதிப்பொருவி றீர்த்தமதைவ யாடி
யருத்திமிகு காளனுட னத்திபணி நித்தன்
பொருப்புற வுடன்றொழுது போதலுறு நாளில்.

இ - ள். பருப்பதம் இறைஞ்சிச் சோதி விழி பயில்வித்து-ஸ்ரீசைலத்தை வணங்கி (அங்குள்ள) சோதிலிங்கத்தைக் கண்களினாலே தரிசித்து,—திருத தகு நதிப் பொருவு இல் தீர்த்தமவை ஆடி - அழகு தக்க நதிகளாகிய ஒப்பில்லாத தீர்த்தங்களினாலே ஸ்நானம்பண்ணி,—அருத்தி மிகு காளனுடன் அத்தி பணி நித்தன் பொருப்பு - (முத்தியில்) ஆசை மிகுந்த பாம்போடு யானை வணங்கிய சிவபெருமானுடைய திருக்காளத்தி மலையை—உறவு உடன் தொழுது போதலுறும் நாளில் - அன்போடு நமஸ்கரித்துக்கொண்டு போகுநாளிலே. எ - று. (கஎ)

காடதனி னூடுசிலை யோடுதனி யோடும்
வேடனை யழைத்துநிழல் மேவியிரு வென்றிக்
கோடுமலி கானிலுயர் குன்றுகளின் வென்றிச்
சேடுள வியப்புநனி செப்பெனவு ரைத்தான்.

இ - ள். காடதனின் ஊடு சிலையோடு தனி ஓடும் வேடனை அழைத்து - (வழியிலுள்ள) காட்டினிடையே வில்லோடு தனியே ஓடுகின்ற ஒருவேடனைக் கண்டழைத்து,—நிழல் மேவி இரு

என்று - இந்தமராமிழலிலே (என்னோடு) பொருந்தி இரு என்று சொல்லி,—கோடு மலி இக் கானில் - கொம்புகள் மிகுந்த இக்காடுகளிலும்—உயர் குன்றுகளின் - உயர்ந்த மலைகளிலு முள்ள—வென்றிச் சேடு உள வியப்பு நனி செப்பு என உரைத் தான் - வெற்றியையுடைய பெருமைபொருந்திய புதுமைகளை (எனக்கு) மிகச் சொல்வாயாக என்று சொல்லினுர். எ - று. ()

வேடனும்வ ணங்கியடி யேன்மிருக நேடுங்
காடிதுவ ளைந்துகரு நாய்கொடொரு காளை
யோடுமிர வும்பகலு முண்ணிலுயி ருண்ணீர்
நீடுதட முண்டமுத நீருமுள வெங்கும்.

இ - ள். வேடனும் வணங்கி - வேடனுங்கும்பிட்டு,—அடி யேன் மிருகம் நேடும் காடு இது - அடியேன் மிருகங்களைத் தே டுங்காடு இது,—ஒரு காளை கரு நாய் கொடு இரவும் பகலும் வளைந்து ஓடும் - ஒரு காளையானவன் கறுத்த நாயைக் கொண்டு இரவும் பகலும் (இந்தக்காட்டைச்) சூழ்ந்து ஓடித்திரிவன்.— உண்ணில்-உயிர் உண் நீர் நீடு தடம் உண்டு - குடித்தால் உயிரை வாங்குகின்ற சலமிகுந்த குளமுண்டு,—அமுதநீரும் எங்கும் உள - (குடித்தவர்களுக்கு) மரணத்தை யொழிக்குங் குளங்க ளும் எங்குமுண்டு. எ - று. (கக)

எண்டிசைமய ங்குமொரு தாரியெழி னீழல்
விண்டகல்வி லாததரு மேவுமொரு தாரி
கண்டவர்க ரந்துரைக றங்குமொரு தாரி
கொண்டநிழல் கண்டுவிழு கூவலொரு தாரி.

இ - ள். ஒரு தாரி எண்டிசை மயங்கும் - ஒருவழியே போ னால் எட்டுத்திக்குந்தெரியாது மயங்கும்,—ஒரு தாரி எழில் நீழல் விண்டு அகல்வு இலாத தரு மேவும் - ஒருவழியே போனால் அழ கையுடைய நிழல் (காலையும் மாலையும் தன்னை) விட்டு (க் கிழக்

கும் மேற்கும்) நீங்குதலுண்டாகாத மரம்பொருந்தும்,—ஒரு தாரி கண்டவர் கரந்து உரை கறங்கும் - ஒரு வழியே போனால் முதற்காணப்பட்டவர் (பின்பு காணப்படாது) மறைய அவர்வார் த்தைமாத்திரம் ஒலிக்கும்,—ஒரு தாரி கொண்ட நிழல் கண்டு விழு கூவல் - ஒருவழியே போனால் (எட்டிப் பார்த்துத் தமது) சரீரத்திலே பொருந்திய நிழலைக் கண்டு (நிழலோடு தாமும்) விழப்பெறுங்கிணறு பொருந்தும். எ - று. (உ0)

ஒலிடலி லோசையொரு பாலெழுந திப்பான்
மாவடிவி டாதவொரு தேவருளர் மாடே
கூவன்முழை யால்வழி குலாவியொரு பச்சைப்
பாவையிரு போதும்விரி போதுபயில் விக்கும்.

இ - ள். ஒலிடல் இல் ஓசை ஒரு பால் எழு நதிப்பால் - ஒழிவில்லாத ஓசையையுடைய ஒருபக்கத்தில் எழாநின்ற ஓராற் றங்கரையிலே—மா அடி விடாத ஒரு தேவர் உளர் - மாமரத்தி னடியை நீங்காத ஒரு தேவர் இருப்பார்,—மாடே கூவல் முழை யால் வழி குலாவி - அவரருகே கிணற்றுவடிவாகிய ஒருபிலத்தி னால் வழிக்கொண்டு வந்து—ஒரு பச்சைப்பாவை இருபோதும் விரி போது பயில்விக்கும் - ஒரு பச்சைப்பெண் இரண்டுபொழு தும் (அவர்மேலே) மலர்ந்த பூக்களைச் சொரிவாள். எ - று. ()

துரங்கமிசை கொண்டுவளை செண்டனொரு சொண்டன்
பரந்துலவும் வெள்ளமலி பன்னதிபு குந்துட்
கரந்தவிட முன்னரிது காணமிதன் மேன்மை
யிருந்தபடி சொல்லிலவை யெல்லையில வென்றான்.

இ - ள். துரங்க மிசை கொண்டு வளை செண்டன் ஒரு சொ ண்டன் பரந்து உலவும் - குதிரைமேலேறிக்கொண்டு வளைசெண் டுங் கையிலே பிடித்துக்கொண்டு ஒரு செருக்கன் (நித்தமும்) உலாவித்திரிவன்,—பல் வெள்ளம் மலி நதி புகுந்து உட் கரந்த

இடம் உன் அரிது - (அவன்) பலவெள்ளமிருந்த நதியினுள்ளே (சித்தமும்) வந்து புகுந்து உள்ளே மறைந்தவிடம் இதுவென்று அறிவரிது,—கானம் இதன் மேன்மை இருந்த படி சொல்லில் அவை எல்லை இல என்றான் - இக்காட்டின் பெருமைகளை இருந்த பிரகாரஞ் சொல்லப்புகின் அவைகள் முடிவில்லாதன என்றான். எ - று. (உஉ)

மற்றவரை யெய்தவழி செய்கவென வேடன்
றுற்றசரி யூடுகொடு போகியிவர் சொன்ன
கொற்றவரெ னக்குமர னுங்குறுகி னன்முற்
கற்றமறை சொற்றமறை கம்பர்திரு முன்பு.

இ - ள். மற்றவரை எய்த வழி செய்க என - (நீ சொல்லிய) அம்மாவடித்தேவரை (நான்) அடையும்பொருட்டு வழி காட்டுவாயாக என்று சிங்கவருமாச்சொல்ல,—வேடன் துற்ற சரி ஊடு கொடு போகி - வேடனவன் நெருங்கிய வழியினூடாகக் கொண்டு சென்று,—இவர் சொன்ன கொற்றவர் என - இவரே (நான்) சொன்ன தேவர் என்று காட்ட,—குமரனும் - சிங்கவருமாவும்—முன் கற்ற மறை சொற்ற மறை கம்பர் திருமுன்பு குறுகினன் - (தாம்) முன்னே கற்ற வேதங்களினாலே சொல்லப்பட்ட இரகசியப்பொருளாகிய திருவேகம்பர் திருமுன்னே அணுகினார். எ - று. (உ௩)

பேசரிய வன்பொடுப ணிந்துபெரு வாழ்வுற்
றாசையுடன் முக்கணரை யங்கணரெ னக்கண்
டேசில்புகழ் கூறியிரு போதுமக லாமெய்ப்
பூசனைகள் செய்தருள்பொ ருந்திடவி ருந்தான்.

இ - ள். பேசு அரிய அன்பொடு பணிந்து - சொல்லுதற்கரிய அன்போடு நமஸ்கரித்து,—பெரு வாழ்வு உற்று - பெரு வாழ்வைப் பொருந்தி,—ஆசையுடன் முக்கணரை அங்கணர்

எனக் கண்டு - விருப்பத்துடனே மூன்றுகண்களையுடைய சிவ பெருமானை அருட்கண்ணையுடையவராகத் தரிசித்து,—ஏசு இல் புகழ் கூறி - குற்றமில்லாத அவருடைய கீர்த்தியைத்துதித்து,— இருபோதும் அகலா மெய்ப் பூசனைகள் செய்து - இரண்டுபொழுதிலும் நீங்காத மெய்மையாகிய பூசைகளைப் பண்ணி,—அருள் பொருந்திட இருந்தான் - (அவருடைய) திருவருள் (தம்மிடத்தே) பொருந்தும்படி இருந்தார். எ - று. (உச)

அண்டர்பெரு மானழகு கண்டகல்வ தின்றிப்
பிண்டிகனி தேனுணவு பெற்றவையி டக்கொண்
டுண்டுறையு நாளிலொரு நாட்குமர னுண்மைத்
திண்டிறவி றுன்வருக வென்றுமொழி செய்வான்.

இ - ள். அண்டர் பெருமான் அழகு கண்டு - தேவதேவராகிய திருவேகம்பநாதருடைய திருமேனியழகைக் கண்டு,—அகல்வது இன்றி - பிரிதலின்றி,—பிண்டி கனி தேன் உணவு பெற்றவை இட - கிழங்கு பழம் தேன் முதலிய உணவுகளுள்ளே கிடைத்தவைகளை (வேடன்) கொண்டுவந்து தர,—கொண்டு உண்டு உறையும் நாளில் ஒருநாள் - (அவைகளை) வாங்கிப் புசித்துக்கொண்டிருக்குநாளிலே ஒருநாள்,—குமரன் - சிங்கவருமாவானவர்—உண்மைத் திண்டிறவிறுன் வருக என்று மொழி செய்வான் - மெய்மையையுடைய திண்ணிய சூரனே வருவாயாக என்றழைத்துச் சொல்வாராயினர். எ - று. (உரு)

தென்கடலி டைப்பொருவி றேசமது லாவிக்
கொன்கடறு டைக்குடக டற்கரைந டப்பா
னென்கடனெ னைக்கடறி யாவுமகல் விப்பா
னின்கடனெ னக்குமர னெண்ணநிகழ் வித்தான்.

இ - ள். தென் கடலிடைப் பொருவு இல் தேசமது உலாவி - தெற்குச்சமுத்திரத்துக்கு நடுவேயுள்ள ஒப்பில்லாத தேசங்

களிலே சஞ்சரித்து,—கொன் கடறு உடைக் குடகடற்கரை கடப்பான் என் கடன் - பெரிய காடுகளையுடைய மேற்குச்சமுத் திரக்கரைவழியாகப் பூப்பிரதக்ஷிணஞ் செய்தல் என்சங்கற் பம்,—எனைக் கடறு யாவும் அகல்விப்பான் நின் கடன் என - என்னைக் காடுகளெல்லாங்கடப்பித்தல் உன் கடன் என்று—குமரன் எண்ணம் நிகழ்வித்தான் - சிங்கவருமாத் தம்முடைய கருத்தை வெளிப்படுத்தினர். எ - று. (உசு)

அந்தவுரை கொண்டெயின னாகிலடி யேனுற்
றிந்தவன முங்கடறி யாவையும றிந்தே
வந்துகொடு போவனிரு மன்னவென முன்னே
வெந்திறலி னனடிப ணிந்துவிடை கொண்டான்.

இ - ள். அந்த உரை கொண்டு எயினன் - அவ்வார்த்தையைக் கேட்டு வேடனானவன்,—ஆகில் - (உம்முடைய திருவுள்ளம்)இதுவாயின்,--அடியேன் உற்று இந்த வனமும் கடறு யாவையும் அறிந்தே - அடியேன் போய் இந்தக்காடுகளையும் சுரவழிகள் யாவற்றையும் பார்த்தறிந்துகொண்டு—வந்து கொடு போவன் மன்ன இரு என—மீண்டு வந்து (உம்மை) அழைத்துக்கொண்டு போவேன மகாராசாவே நீர் (இங்கே) இரும் என்று சொல்லி,— முன்னே வெந்திறலினன் அடி யணிந்து விடை கொண்டான் - முன்னே வெவ்விய வலியினராகிய சிங்கவருமாவுடைய பாதத்தை வணங்கி விடைகொண்டான். எ - று. (உஎ)

காடுமலை யுங்கடறு மாடுதட மாடுங்
கூடுமடு மீனமென நீடுகுல வேட
ஞேடியல மந்துசில நாள்களொழி வித்துத்
தேடிவழி கண்டபடி செப்பவணை வுற்ருன்.

இ - ள். நீடு குல வேடன் - பொருந்திய சாதியால் வேடனாயுள்ளவன்—காடும் மலையும் கடறும் - காடுகளிலும் மலைகளி

லும் சுரவழிகளிலும்—ஆடு தடம் மாடும் - (இருடிகள் வேடர்கள் முதலாயினோர்) ஆடுகின்ற சுனைப்பக்கங்களிலும்—மடுக்கூடும் மீனம் என ஓடி அலமந்து - மடுவிலே திரிகின்ற மீன் போல ஓடியிளைத்து,—சில நாளகள் ஒழிவித்து - சில நாள்களைப் போக்கி,—தேடி வழி கண்ட படி செப்ப அணை வுற்றான் - (தான்) தேடி வழிகண்ட தன்மையைச் (சிங்கவருமாவுக்குச்) சொல்லும்பொருட்டு வந்து சேர்ந்தான். எ - று. (உஅ)

அங்கவன ணைந்தரசன் மைந்தனடி பேணித்
தங்கவன மங்கணுழை தொல்சரியு மில்சீர்ச்
சங்கவன முங்கவன மாறருவி தண்கா
னெங்கணுநெ ருங்கியுள வில்லைவழி செல்ல.

இ - ள். அங்கு அவன் அணைந்து அரசன் மைந்தன் அடி பேணி - அங்கே அவ்வேடன சேர்ந்து இராசகுமாரருடைய பாதத்தை வணங்கி,—தங்க வனம் - காடோ பெருங்காடு,—அங்கண் நுழை தொல் சரியும் இல் - அழகிய கண்கள் நுழையத்தக்க பழைய வழியுமில்லை,—சீர்ச் சங்க வனமும் - சிறப்பையுடைய சங்கமுகக்கடலும்—கவனம் மாறு அருவி - திரைப் பாய்ச்சலொழிந்த கழிமுகங்களும்—தண் கான் எங்கணும் நெருங்கி உள - குளிர்மையாகிய இளங்காடுகளும் எவ்விடத்துஞ் செறிந்துள்ளன,—செல்ல வழி இல்லை - (அப்பாலே) போக வழியில்லை. எ - று. (உகூ)

பின்னுமதன் மாடுசில நாணடைபெ ருக்கிச்
சென்னெறியின் முன்னொர்நதி சேரவளர் தில்லைத்
துன்னடவி யாயது துணுக்கெனமி கைத்தே
வென்னுள நடுங்கும்வகை யெங்குமுள வங்கண்.

இ - ள். பின்னும் அதன் மாடு சிலநாள் நடை பெருக்கிச் செல் நெறியின் - பின்பும் அந்தப்பக்கத்திலே சிலதினம் போக்கு

வரவுசெய்து சென்ற வழியிலே—முன் ஓர் நதி சேர - எதிரே ஓராறு குறுகிட,—வளர் தில்லைத் தன் அடவி ஆயது - (நெருங்கி) வளர்ந்த தில்லைக்காடு செறிந்திருந்தது,—என் உளம் துணுக்கென நடுங்கும் வகை அங்கண் எங்கும் மிகைத் தேவு உள - என் மனம் துணுக்கென நடுங்கும்படி அக்காடெங்கும் மிகுதியாகிய தெய்வங்களிருந்தன. எ - று. (௩௦)

புண்டரிகம் விண்டமலர் பொன்மலிசு னைப்பா
லொண்டனியி ருந்தோர்புலி யன்பெரிது றங்கக்
கண்டனன டுங்கினன்ம டங்கினனெ டுங்கான்
மண்டியிது வந்தபடி யென்றுரைவ குத்தான்.

இ - ள். விண்ட பொற் புண்டரிக மலர் மலி சுனைப் பால்—மலர்ந்த பொற்றாமரைப்பூக்கள் நிறைந்த ஒருசுனைக்கருகே—ஓர் புலியன் ஒண் தனி இருந்து பெரிது உறங்கக் கண்டனன் - ஒரு புலியனானவன் ஒள்ளிய தனித்தவிடத்திருந்துகொண்டு மிகத்துயிலக் கண்டேன்,--நடுங்கினன் மடங்கினன்-அப்பால் அடி(வைக்கப்) பயந்து திரும்பியோடிவந்தேன்,—நெடும் கான மண்டி வந்த படி இது என்று உரை வகுத்தான் - (அந்தப்பயமிகுதியினாலே) நெடுங்காட்டைக் கழித்து விரைந்து வந்தபடி இது என்று சொன்னான். எ - று. (௩௧)

கேட்டலும கிழ்ந்துவினை யொத்தகிளர் வெய்தித்
தேட்டமுறு வேட்கைமிகு சிங்கவரு மாமீ
காட்டுபுலி யன்றனையெ னக்கடிது போவான்
மீட்டுமுயர் கம்பரை வணங்கிவிடை கொண்டான்.

இ - ள். கேட்டலும் மகிழ்ந்து - (அவ்வேடன் வார்த்தையைக்) கேட்டலும் மனமகிழ்ந்து,—வினை ஒத்த கிளர்வு எய்தி - இருவினைகளும் ஒத்த விளக்கத்தைப் பொருந்தி,—தேட்டம் உறு வேட்கை மிகு சிங்கவருமா - (ஆசாரியரைத்) தேடுதலின்

கண்ணே பொருந்திய ஆசை மிகுத்த சிங்கவருமாவானவர்—நீ புலியன்றனைக் காட்டு என - நீ அந்தப்புலியனைக் காட்டுவாயாக என்று சொல்லி,—கடிது போவான் - சடிதியிற்செல்வாராகி,—மீட்டும் உயர் கம்பரை வணங்கி விடை கொண்டான் - திரும்பியும் மேலாகிய திருவேகம்பநாதரை நமஸ்கரித்து விடைகொண்டார். எ - று.

இருவினையொப்பாவது தீவினைகளையும் சுவர்க்கவின்பமுதலிய காமியங்களைப் பயப்பனவாகிய வேள்வி முதலிய நல்வினைகளையும் சமமாகக் கோடல். நல்வினையால் வரும் இன்பத்தினும் தீவினையால் வருந் துன்பத்தினும் சமபுத்திபண்ணலே இருவினையொப்பென்பாருமுளர். (௬௨)

அத்தனுட னுருயிர்கள் கூடவணை விக்குஞ்
சத்திதகு வேடனர சன்றனய னைக்கொண்
டெத்தகைய கானமு மியாறுமகல் வித்துச்
சித்தமலி தில்லைவன வெல்லைசெறி வித்தான்.

இ - ள். ஆர் உயிர்கள் அத்தனுடன் கூட அணைவிக்கும் சத்தி தகு வேடன் - நிறைந்த ஆன்மாக்களைச் சிவபெருமானோடு கூடும்படி சேர்க்குஞ் சிவசத்தியைப்போலும் வேடனானவன்—அரசன் தனயனைக் கொண்டு - இராசகுமாரரை அழைத்துக் கொண்டு,—எத் தகைய கானமும் யாறும் அகல்வித்து - எந்தப் பெரிய காடுகளையும் யாறுகளையுங்கடப்பித்து,—சித்தம் மலி தில்லைவன எல்லை செறிவித்தான் - (பூமிக்கு) இருதயஸ்தானமாய் நிறைந்த தில்லைவனத்தினது திருவெல்லையை அணுகுவித்தான். எ - று. (௬௩)

ஆவிகண்ம லங்கழுவு மாசிலருள் போல்வாழ்
வாவிகம லங்கணய னங்கண்மலி வித்துற்
றேவடுகொ டுஞ்சிலையன் முன்செல்பொழு திற்கொண்
டோவியமெ னும்பரிசி ருந்தவனை யுய்த்தான்.

இ - ள். ஆவிகள் மலம் கழுவும் ஆசு இல் அருள்போல் வாழ் வாவி - ஆன்மாக்களுடைய மலத்தைப் போக்குகின்ற குற்றமில்லாத அருட்சத்திபோன்றிருக்குஞ் சிவகங்கையையும்—கமலங்கள் - (அதன்கணுள்ள) பொற்றாமரைமலர்களையும்—நயனங்கள் மலிவித்து - அவர்கண்களுக்குக் காட்டி,—உற்று - (சமீபத்தில்) சென்று,—ஏ அடு கொடுஞ்சிலையன் - அம்பினாலே கொல்கின்ற வளைந்த வில்லையுடைய வேடனானவன்—முன் செல்பொழுதின்கொண்டு ஓவியம் எனும் பரிசு இருந்தவனை உய்த்தான் - (தான்) முன்னே சென்றுகண்ட பொழுதிலேபோலச் (சமாதியைப்) பொருந்திச் சித்திரமென்னும்படி இருந்த வியாக்கிரபாத மகாமுனிவரை அடைவித்தான். எ - று. (௩௪)

வே று.

ஏராருங் குமரன்முனி யிருந்தபடி கண்டஞ்சிச்
சேராதே யகலமனந் தெரியாது திருவுள்ளம்
போராத நிலைகலக்கல் பிழையாகு மெனவுய்த்தா
னாராத பெருங்காத லருஞ்சாபம் புரியச்சம.

இ - ள். ஏர் ஆரும் குமரன் - அழகு நிறைந்த சிங்கவருமா—முனி இருந்த படி கண்டு அஞ்சி - வியாக்கிரபாதமகாமுனிவர் இருந்த தன்மையைக்கண்டு பயப்பட்டு,—மனம் சேராதே அகல - மனமும் அணுகாது நீங்க நின்று,—திருவுள்ளம் தெரியாது - இவர்திருவுள்ளம் எப்படியாமோ தெரியாது.—போராத நிலை கலக்கல் பிழை ஆகும் என - (அதுவுமன்றி) நீங்காத சமாதி நிலையை நீக்குதல் அபராதமாகும் என்று,—ஆராத பெரும் காதல் அரும் சாபம் புரி அச்சம் உய்த்தான் - தெவிட்டாத பேராசையையும் அரிய சாபத்தை இடுவாரோ என்னும் பயத்தையும் பொருந்தினார். எ - று. (௩௫)

அச்சமிகு மிவனிருப்பு முணர்வுமிக வணித்தாகை
நிச்சயம்வற் கலையுலரா நீர்மையது பலாசிலையும்

பொச்சைதரு குசைப்புல்லும் பொலிசமித்தும் பூங்கலனும்
பச்சைபட மிசைப்புலரா படர்சடையும் பரப்புதலால்.

இ - ள். அச்சம் மிகும் இவன் இருப்பும் உணர்வும் மிக அனித்து ஆகை நிச்சயம்-(எனக்குப்) பயம் மிகுதற்கேதுவாகிய இவருடைய சமாதியிருக்கையும் (அது நீங்கி) விழித்தலும் மிகச் சடிதியின் நிகழ்வனவாதல் உறுதியாகும்;—வற்கலை உலரா நீர் மையது - (இவர் உடுத்த) மரவுரி (இன்னமும்) உலராத தன்மை யையுடையது ஆதலினாலும்,—பலாசு இலையும் பொச்சை தரு குசைப் புல்லும் பொலி சமித்தும் பூங்கலனும் மிசைப் பச்சை படப் புலரா - பலாசிலையுங் காட்டிலுண்டாகிய தருப்பைப்புல் லும் மிகுந்த சமிதமும் திருப்பூங்கூடையும் மேலிற்பச்சை கெட வாடாதிருக்கின்றன ஆதலினாலும்,—படர் சடையும் பரப்பு தலால் - நீண்ட சடையை விரித்திருக்கையினாலும். எ - று. ()

என்செய்வோ மிருவினைக ளினிவிடுமோ தவமெவைவு
முன்செய்யு முனிவர்களு முனிவர்களோ முனிவாகிற்
பின்செய்வ திவனருளாற் பெறுதுமெனக் குமரனவன்
றன்செய்ய கழலிறைஞ்சிக் கைதொழுது தனிநின்றான்.

இ - ள். இனி என் செய்வோம் இருவினைகள் விடுமோ - இனி யாது செய்வோம்! (நாஞ் செய்த) இருவினைகளும் (நம்மை) விட்டுப் போகுமோ!— தவம் எவையும் முன் செய்யும் முனிவர்களும் முனிவர்களோ - தவங்களெல்லாவற்றையும் நெடு ங்காலஞ்செய்யும் முனிவர்களுங் கோபிப்பார்களோ!—முனிவு ஆகில் - (இவருக்குக்) கோபம் உண்டாயின்—பின்செய்வது இவன் அருளால் பெறுதும் என - பின்பு அதனை நீக்கிக்கோட லையும் இவருடைய திருவருளினாலே பெறுவோம் என்று—கும ரன் அவன்றன் செய்ய கழல் இறைஞ்சிக் கைதொழுது தனி நின் றான் - கௌடேசகுமாரர் அவ்வியாக்கிரபாதமகாமுனிவருடைய

சிவந்த திருவடிகளை நமஸ்கரித்துக் கும்பிட்டுக்கொண்டு(வேடன் நீங்கத்) தனித்து நின்றார். எ - று. (கூஎ)

புந்தியினிற் பரபோகம் புணர்ந்தகன்று பொதுஞானம்
வந்தணுகி யதுகண்ணு மருவுமவன் றனைநோக்கிச்
சிந்தையினு லருமுனிவன் செல்கால மூன்றினையு
மந்தமிலா வுணர்வைவிரித் தாராய்வா னாயினான்.

இ - ள். அரு முனிவன் - பெரிய வியாக்கிரபாதமகாமுனிவர்—புந்தியினில் பரபோகம் புணர்ந்து அகன்று - உள்ளத்திலே (நிருவிகற்பக்காட்சியாலாகிய) சிவபோகத்தைப் பொருந்தி நீங்கி,—பொது ஞானம் வந்து அணுகி - சவிகற்பக்காட்சியை வந்து பொருந்தி,—அது கண்ணு - அது இடமாக யோகப்பிரத்தியட்சத்தினுலே—மருவும் அவன்றனை நோக்கி - (தமது சந்நிதியிலே) பொருந்திய அந்தச்சிங்கவருமாவைப் பார்த்து,—செல் காலம் மூன்றினையும் - நிகழாநின்ற (இறப்பு எதிர்வு நிகழ்வு என்னும்) மூன்றுகாலங்களையும்—சிந்தையினுல் அந்தம் இலா உணர்வை விரித்து ஆராய்வான் ஆயினன் - (தமது) சித்தத்தினுலே முடிவில்லாத ஞானத்தை விரித்து ஆராய்வாராயினர். எ - று. (கூஅ)

போனபல காலத்தின் பொலிவுகளு மினிப்புணர
மேனிகழுங் காலத்தின் விரிவுகளுஞ் செல்கின்ற
தானமலி காலத்தி னளவுகளு மாராய்ந்து
பான்மைதருங் கற்பமிது பாத்மமெனும் பரிசுணர்ந்து.

இ - ள். போன பல காலத்தின் பொலிவுகளும் - சென்ற பல காலங்களின் நிகழ்ச்சிகளையும்—இனிப் புணரமேல் நிகழும் காலத்தின்விரிவுகளும் - இனிப் பொருந்த மேலே வருங்காலத்தின் நிகழ்ச்சிகளையும்—செல்கின்றது ஆன மலி காலத்தின் அளவுகளும் ஆராய்ந்து - நிகழ்கின்றதாகிய மிகுத்த காலத்தின்

அளவுகளையும் ஆராய்ந்து,—பான்மை தரும் கற்பம் இது பாத்மம் எனும் பரிசு உணர்ந்து - முறையே வருகின்ற இந்தக்கற்பம் பாத்மகற்பம் என்னுந்தன்மையை அறிந்து. எ - று. (ருக)

அக்கால மணிகண்ட னுடலரு ளியகால
மெக்கால மெனக்கால மெய்தியவிக் காலத்து
மிக்காலுந் திரைத்தரைக்கு வேந்தாவான் வியன்கவுட
திக்கானவெய் யவன்மரபிற் றிகழ்மனுவாமெ னத்தெளிந்து.

இ - ள். அக்காலம் மணி கண்டன் ஆடல் அருளிய காலம் எக்காலம் எனக் காலம் எய்திய இக்காலத்து - அந்தப்பூதகாலத்திலே (தமக்கும் பதஞ்சலிமகாமுனிவருக்கும்) நீலகண்டராகிய சிவபெருமான் ஆனந்த நிருத்தந் தரிசிப்பித்தருளிய கற்பகாலம் எந்தக்கற்பகாலமோ என்று அறியாவண்ணம் நெடுங்காலஞ் செல்லப்பெற்ற இந்தக்கற்பத்திலே—மிக்கு ஆலும் திரைத் தரைக்கு வேந்து ஆவான் வியன் கவுடதிக்கான் - மிக்கொலிக்கின்ற திரையையுடைய கடலினாலே சூழப்பட்ட பூமிக்கு அரசனாவான் பெரிய கௌடதேசத்தான்—வெய்யவன் மரபில் திகழ் மனு ஆம் எனத் தெளிந்து - சூரியவமிசத்தில் விளங்குகின்ற ஐந்தாமனு என்றறிந்து. எ - று. (சுo)

மற்றவன்முப் புதல்வருள ரன்னவரின் முன்வந்த
வெற்றிமிகுங் குமரனிவ னெனவிளங்கி விழிகுளிரக்
கொற்றவன்சே யெதிர்நின்று குவித்தகரத் துடனடுங்கச்
செற்றமின்மா முனிமகிழ்ந்து சிங்கவன்ம னேயென்றான்.

இ - ள். மற்றவன் முப்புதல்வர் உளர் - அந்தமனுவுக்கு மூன்றுகுமாரர்கள் உண்டு,—அன்னவரின் முன் வந்த வெற்றி மிகும் குமரன் இவன் - அவர்களுள்ளே முன் பிறந்த வெற்றி மிக்க குமாரன் இவன்—என விளங்கி - என்று தெளிந்து,—விழி குளிர - (தம்முடைய) கண்கள் குளிரும்வண்ணம்—

கொற்றவன் சேய் எதிர் குவித்த கரத்துடன் நின்று நடுங்க - கௌடேசகுமாரர் (தமது) சந்நிதியிலே குவித்தகையோடு நின்று நடுங்க,—செற்றம் இல் மா முனி மகிழ்ந்து சிங்கவன்மனே என்றான் - கோபமில்லாத பெரிய வியாக்கிரபாதமகாமுனிவர் திருவுளமகிழ்ந்து சிங்கவருமனே என்றார். எ - று. (சக)

அடியனே னென்றஞ்சி யாராத காதலுட
னெடிதுவிழுந் திறைஞ்சிவிழி நீர்ததும்ப நின்றவனைச்
சடிலமுடித் திருமுனிமுன் னழைத்திருத்தித் தனிவந்த
படிதெளியும் படியெமக்குப் பகர்வாயென் றருள்செய்தான்.

இ - ள். அஞ்சி அடியனேன் என்று - பயப்பட்டு அடியேன் அடியேன் என்று சொல்லிக்கொண்டு—ஆராத காதலுடன் நெடிது விழுந்து இறைஞ்சி - தெவிட்டாத ஆசையுடனே நீள விழுந்து நமஸ்கரித்து—விழி நீர் ததும்ப நின்றவனை - கண்ணீர் பெருக நின்ற சிங்கவருமாவை—சடில முடித் திருமுனி முன் அழைத்து இருத்தி - சடாமுடியையுடைய வியாக்கிரபாதமகாமுனிவர் (தமது) திருமுன் அழைத்திருத்தி—தனி வந்த படி தெளியும்படி எமக்குப் பகர்வாய் என்று அருள்செய்தான் - நீ தனியே வந்த தன்மையை (நாம்) அறியும்படி நமக்குச் சொல்வாயாக என்றருளிச்செய்தார். எ - று. (சஉ)

அன்னவனுந் தொழுதடியே னாசில்கவு டேசமனு
வென்னுமவன் மைந்தனெனக் கெம்பியரு மிருவருளர்
நின்னுடைய திருவருளா னீள்பிறவிச் சிறைநீங்கிப்
பொன்னடிசேர் தவமியற்றப்போந்தனன்யானெனப்புகன்றான்.

இ - ள். அன்னவனும் தொழுது - அந்தச்சிங்கவருமாவும் வணங்கி,—அடியேன் ஆசு இல் கவுடேசமனு என்னுமவன் மைந்தன் - அடியேன் குற்றமில்லாத கௌடேசமனுவென்பானுடைய பிள்ளை,—எனக்கு எம்பியரும் இருவர் உளர் - எனக்குத் தம்பி

மாரும இருவருளா,—யான் - நான்,—நின்னுடைய திருவரு ளால் - உமது திருவருளினாலே—நீள் பிறவிச் சிறை நீங்கிப் பொன் அடி சேர் தவம் இயற்றப் போந்தனன் - (அநாதியே) நீட் டித்து வருகின்ற பிறவிச்சிறையினின்று நீங்கி (ச் சிவபெருமானு டைய) பொன்போலுந் திருவடியைச் சேர்தற்குரிய தவத்தைச் செய்ய வந்தேன்—எனப் புகன்றான் - என்று விண்ணப்பஞ் செய்தார். எ - று. (சஙு)

மறைமுனிவ னதுகேட்டு மன்னுமனு வழிசெலுத்து
முறையுனதா யவனுடல முதிர்ந்ததுமா யிருந்தமையாற்
பெறலரிய வரசாளும் பேறுபெற லாயிருக்க
நிறைதவநீ புரிவனெனு நினைவுதகா தெனவுரைத்தான்.

இ - ள். மறை முனிவன் அது கேட்டு - வேதத்தையறிந்த வியாக்கிரபாதமகாமுனிவர் அதைக் கேட்டு,—மன்னும் மனு வழி செலுத்தும் முறை உனது ஆய் - நிலைபெற்ற மனுவழியிலே செங்கோல் செலுத்தும் முறைமை உன்னுடையதாயும்—அவன் உடலம் முதிர்ந்ததும் ஆய் இருந்தமையால் - அவனுடைய சரீரம் வார்த்தகமுடையதாயும் இருந்ததனால்—பெறல் அரிய அரசு ஆளும் பேறு பெறல் ஆய் இருக்க - (யாவர்க்கும்) பெறுதற்கரிய அரசாளும் பேறு பெறற்பாலதாயிருக்க—நீ நிறை தவம் புரிவன் எனும் நினைவு தகாது என வுரைத்தான் - நீ நிறைந்த தவத்தைச் செய்வேன் என்று எண்ணுமெண்ணந் தகாது என்றருளிச்செய் தார். எ - று. (சச)

அரசாளு முருவல்ல வதிலாசை யினியில்லை
விரைசாருந் தொடைமனுமேன் மேவினனே லெம்பியர்க
டரைசால நடத்தியிடத் தகுவரடி யேனுமொரு
கரைசாரும் படியழகார் கடைக்கணளித் தருளென்றான்.

இ - ள். அரசு ஆளும் உரு அல்ல - என் வடிவு (குற்ற முடையதாதலினால்) அரசாளுதற்குரிய வடிவன்று,—இனி அதில்

ஆசை இல்லை - (ஆதலினால்) இனி இதிலே ஆசையில்லை,—விரை சாரும் தொடை மனு மேல் மேவினனேல் - மணம்பொருந்திய மாலையையணிந்த மனுவானவர் சுவர்க்கத்தை அடைந்தாராயின்—எம்பியர்கள் தரை சால நடத்திடத் தகுவர் - என்னுடைய தம்பிமார்கள் பூமியை (முன்னையினும்) மிக ஆளத்தக்கவர்கள்,—அடியேனும் ஒரு கரை சாரும் படி - அடியேனும் ஒப்பில்லாத முத்திக்கரையை அடையும்பொருட்டு—அழகு ஆர் கடைக்கண் அளித்தருள் என்றான் - அழகுநிறைந்த கடைக்கண்ணைத் தந்தருளும் என்று விண்ணப்பஞ்செய்தார். எ - று. ()

இன்பாரக் கேட்டிவன்ற னெழிற்குறைதீர் வுறிலரசாம்
வன்பாரம் பொறுத்தற்கு மனமுடையான் போன்றிருந்தான்
பொன்பாவும் பொதுமேவும் புனிதனருள் புரிந்தனனே
லன்பாரும் பணிக்குநமக் காளாவா னெனவுணர்ந்து.

இ - ள். இன்பு ஆரக் கேட்டு - (வியாக்கிரபாதமகாமுனிவர் அதனை) மகிழ்ச்சி நிறையக்கேட்டு,—இவன் தன் எழிற குறை தீர்வுறில் அரசு ஆம் வன் பாரம் பொறுத்தற்கு மனம் உடையான் போன்று இருந்தான் - இவன் தன்னுடைய வடிவிற் குற்றநீங்கினால் இராச்சியமாகிய வலியபாரத்தைத் தாங்குதற்கு மனமுடையவன்போன்றிருந்தான்,—பொன் பாவும் பொது மேவும் புனிதன் அருள் புரிந்தனனேல் - பொன்னொளி பரவிய சபையிலே பொருந்திய சுத்தராகிய சிவபெருமான் திருவருள் செய்தாராயின்—அன்பு ஆரும் பணிக்கு நமக்கு ஆள் ஆவான் என உணர்ந்து - பத்தி மிக்க திருப்பணியின்பொருட்டு நமக்காளாவான் என்றறிந்து. எ - று. (சுக)

வருமளவு நில்லென்று மற்றவனைக் கரைநிறுத்தித்
திருமலியும் பதஞ்சலிபாற் சென்றவனுக் கிவன்வரவு
பரிவினுட னுரைசெய்து பைம்பொனணி மணிமன்றிற்
கருணைநடந் தொழுதற்குக் காலமுமா யுள்புக்கார்.

இ - ள். வரும் அளவும் நில் என்று மற்றவனைக் கரை நிறுத்தி - (நாம்) வரும்வரையும் (இங்கே) நிற்பாயாக என்று அச் சிங்கவருமாவைக் கரையிலே நிறுத்தி, — திரு மலியும் பதஞ்சலிபால் சென்று - அருட்செல்வநிறைந்த பதஞ்சலிமகாமுனிவரிடத்தே போய், — அவனுக்கு இவன் வரவு பரிவினுடன் உரைசெய்து - அவருக்கு இந்தச் சிங்கவருமாவினுடைய வரவை அன்போடு சொல்லி, — பைம் பொன் அணி மணி மன்றில் - (இருவரும கூடி வந்து) பசுமையாகிய பொன் விளங்கும் அழகியசபையின் வாயிலிலே நின்று — கருணை நடம் தொழுதற்குக் காலமும் ஆய் உள் புக்கார் - காருண்ணிய நிருத்தத்தை வணங்குதற்குக் காலம் வர உள்ளே புகுந்தார்கள். எ - று. (சஎ)

பெருக்குவினை வலியார்கொல் பிழைப்பார்முன் பிழைப்பான
கருக்குழிவெஞ் சிறைநீங்கக் கடைக்கணளித் தருளாதே
யிருக்குமொழி முனியகன்றா னினியெங்கே யெனநொந்து
திருக்குளத்தின் கரைநின்றான் சிங்கவரு மன்றிகைத்து.

இ - ள். சிங்கவருமன் - சிங்கவருமாவானவர் — பெருக்கு வினை வலி யார் கொல் பிழைப்பார் - (ஒருவினையை நுகரும்போது பலவினைகளைப்) பெருகச்செய்யும் வினையின் வலிக்கு யாவர் தப்புவர்! — முன் பிழைப்பு ஆன கருக் குழி வெஞ் சிறை நீங்க - முன்பு செய்த வினையாலாகிய பிறவிக்குழிப்படுங் கொடுஞ்சிறை நீரும்பொருட்டு — இருக்கு மொழி முனி கடைக்கண் அளித்து அருளாதே அகன்றான் - வேதவாக்கியத்தையறிந்த மகாமுனிவர் கடைக்கண்ணை தந்தருளாது எழுந்தருளிவிட்டார், — இனி எங்கே என நொந்து - இனி (உய்வு) எங்கே என்று துக்கமுற்று, — திருக்குளத்தின் கரை திகைத்து நின்றான் - திருக்குளத்தின்கரையிலே மயங்கி நின்றார். எ - று. (சஅ)

நடங்தொழவந் துள்புகுந்த நன்முனிவ ரிறைவனுக்கு
மடங்கலெனு நிகழ்மன்னன் மைந்தன்வர வுரைசெய்தா

அருளதனாற் றடம்படியு மவன்கடன்மே லருக்கனென
விரவுபசுங் கானடைந்த மேருகிரியென விளங்கி
யிரணியமா முருவாகி யெழுந்ததுகண் டதிசயித்துப்
பரவியது பெயராக யாவர்களும் பயில்வித்தார்.

இ - ள். அருளதனால் தடம் படியும் அவன் - திருவருளினாலே சிவகங்கையிலே ஸ்நானம்பண்ணிய அச்சிங்கவருமா—கடன்மேல் அருக்கன் என - கடன்மேல் உதிக்குஞ் சூரியன் போலவும்—விரவு பசுங் கான் அடைந்த மேருகிரி என விளங்கி-பொருந்திய பசுமையாகிய காடு சூழ்ந்த மேருமலைபோலவும் பிரகாசித்து—இரணியம் ஆம் உரு ஆகி எழுந்தது கண்டு - பொன் வடிவமாகி எழுந்தமையைக் கண்டு,—யாவர்களும் அதிசயித்துப் பரவி அது பெயர் ஆகப் பயில்வித்தார் - யாவர்களும் ஆச்சரியப்பட்டுப் புகழ்ந்து அதுவேபெயர்க்காரணமாக (இரணியவன்மா என்னும் பெயரை) இட்டார்கள். எ - று. (௫௩)

மல்குபுலிக் கான்முனிவன் மற்றவன்றன் வலச்செவியி
னல்குதிரு வெழுத்தஞ்சு நவின்றவனைக் கொடுபோந்து
பல்குபுகழ்த் திருச்சிற்றம் பலமுன்பு பணிவித்தான்
செல்வனுமங் கவன்காணத் திருந்துநடந் தெரிவித்தான்.

இ - ள். மல்கு புலிக்கால் முனிவன் - (கருணை) நிறைந்த வியாக்கிரபாதமகாமுனிவர்—மற்றவன்றன் வலச்செவியில்-அவ்விரணியவன்மாவுடைய வலக்காதிலே—நல்கு திரு எழுத்து அஞ்சும் நவின்று - (முத்தியைக்) கொடுக்கும் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உபதேசித்து,—அவனைக் கொடு போந்து - அவனை அழைத்துக் கொண்டு போய்,—பல்கு புகழ்த் திருச்சிற்றம்பல முன்பு பணிவித்தான் - பெருகுகின்ற கீர்த்தியையுடைய திருச்சிற்றம்பலத்துக்கு முன்னே நமஸ்கரிப்பித்தார்,—செல்வனும் அங்கு அவன் காணத் திருந்து நடம் தெரிவித்தான் - சிவபெருமானும் அங்கே

அவ்விரணியவன்மாக் காணும்படி திருத்தமுற்ற திருநிருத்தத்தைப் புலப்படுத்தியருளினார். எ - று. (ருச)

திருநடமுன் றெரிபொழுதிற் றிறலரசன் புளகமுட
னருவியிரு விழிபொழிய வானந்த பரவசனா
யுருகியுள மிகத்துளங்கி யுரைகுழறி விதிர்விதிர்த்துக்
கரகமலஞ் சிரமுகிழ்ப்பக் காசினியின் மிசைவீழ்ந்தான்.

இ - ள். திரு நடம் முன் தெரி பொழுதில் - ஆனந்தத்திருநிருத்தம் முன்னே தெரிந்தபொழுது,—திறல் அரசன் - வலியையுடைய இரணியவன்மா—புளகமுடன் இருவிழி அருவி பொழிய ஆனந்தபரவசன் ஆய் - புளகத்துடனே இரண்டுகண்களினின்றும் அருவி சொரிய ஆனந்தபரவசராகி,—உளம் உருகி மிகத துளங்கி - மனமுருகி மிகவஞ்சி—உரை குழறி விதிர் விதிர்த்து - வாக்குத தழுதழுத்து நடுநடுங்கி—கரகமலம் சிரம் முகிழ்ப்பக் காசினியின் மிசை வீழ்நதான்-கைகளாகிய தாமரை மலர்கள் சென்னியிலே குவியப் பூமியின்மேல்விழுந்தார். எ-று.

வே று.

மாண்டகு மனங்க ரைந்து மண்மிசை வீழ்ந்தி றைஞ்சி
நீண்டசெஞ் சடையாய் போற்றி நின்மலா போற்றி துன்ப
மீண்டுகொண் டுயிரு மாயா வுடலையும் வேத கஞ்செய்
தாண்டவங் கணனே போற்றி யண்ணலே போற்றி போற்றி.

இ - ள். மாண் தகு மனம் கரைந்து மண் மிசை வீழ்ந்து இறைஞ்சி - மாட்சிமை தக்க மனமுருகிப் பூமியிலே விழுந்து நமஸ்கரித்து,—நீண்ட செஞ்சடையாய் போற்றி - நீண்ட சிவந்த சடையை உடையவரே காத்தருளும்—நின்மலா போற்றி - மலமில்லாதவரே காத்தருளும்—துன்பம் மீண்டு கொண்டு உயிரும் மாயா உடலையும் வேதகம் செய்து ஆண்ட அங்கணனே போற்றி- துன்பச்சிறையினின்று மீட்டுக்கொண்டு அடியேனுடைய ஆன்மா

வையும் மாயாகாரியமாகிய சரீரத்தையும் வேறுபடுத்தி ஆட்கொண்டருளிய அருட்கண்ணரே காத்தருளும்—அண்ணலே போற்றி போற்றி-பெருமையிற் சிறந்தவரே காத்தருளும். எ-று.

ஆன்மாவுக்குபசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவத்தையும் சரீரத்திறகுச் சிஙகநிறத்தை நீக்கிப் பொன்னிறத்தையுங் கொடுத்தருளினமையால், உயிரு மாயாவுடலையும் வேதகஞ் செய்தாண்ட என்றார். (ருக)

அடவியிற் பிறந்து துன்பா ராக்கைகொண் டுழன்று வீழக்
கடவிய வென்னை மீட்டுன் கருணைவெள் ளத்த ழுத்தித்
திடமிகு மறைகள் காணுத் திகழ்திரு மன்று ளாடு
நடநிலை காட்டி யாண்ட நாதனே போற்றி போற்றி.

இ-ள். அடவியில் பிறந்து - வனத்திலே பிறந்து—துன்பு ஆர் ஆக்கை கொண்டு உழன்று - துன்பநிறைந்த சரீரத்தைப் பொருந்தி அலைந்து திரிந்து—வீழக் கடவிய என்னை - (அதோகதியில்) வீழக்கடவேனாகிய சிறியேனை—மீட்டு உன் கருணை வெள்ளத்து அழுத்தி - மீட்டு உம்முடைய காருண்ணியசாகரத்தில் அழுத்தி—திடம் மிகு மறைகள காணுத் திகழ் திரு மன்றுள் ஆடும் நடநிலை காட்டி-உறுதி மிகுந்த வேதங்களுங் காணுத விளஙகுகின்ற திருச்சபையிலே நடிக்கும் திருநிருத்தத்தினது உண்மையைத் தரிசிப்பித்து—ஆண்ட நாதனே போற்றி போற்றி - ஆட்கொண்டருளிய நாயகரே காத்தருளும் காத்தருளும். எ-று.

முன்பருந் தவங்கள் செய்தேன் முயங்கிய புயங்கங்காணப்
பின்பருந் தவத்தோ ரொத்தேன் பிறங்கிடைக் கிடந்த கால
மென்பணி கொள்வா யென்னை யினிப்பணி கொள்வா யீறி
லன்பருள் செய்வா யென்றென் றடியிணைதொழுதுவீழ்ந்தான்.

இ-ள். என்பு அணி கொள்வாய் - எலும்பை ஆபரணமாகக் கொண்டருளும் எம்பெருமானே,—முயங்கிய புயங்கம் காண

முன்பு அருந்தவங்கள் செய்தேன் - (நீர்) பொருந்திய புயங்க நிருத்தத்தைத் தரிசிக்கும்பொருட்டுப் பூதகாலத்திலே அரிய தவங்களைப் பண்ணினேன்,—பின்பு பிறங்கு இடைக்கிடந்த காலம் அருந் தவத்தோர் ஒதத்தேன் - பின்பு விளங்காநின்ற நடு நின்ற இவ்வர்த்தமானகாலத்திலே (நிருத்தானந்தப்பேற்றினால்) இவ்வரியமுனிவர்களையொத்தேன்,—இனி என்னைப் பணிகொள் வாய - இனிப் பவிஷியகாலத்திலே தமியேனைத் தொண்டுகொண் டருளும்,—ஈறு இல் அன்பு அருள் செய்வாய் என்று என்று - முடிவில்லாத அன்பைத் தந்தருளும் என்றெனறு விண்ணப்பஞ் செய்து,—இணை அடி தொழுது வீழ்ந்தான் - இரண்டுதிருவடிக ளையும் நமஸ்கரித்து விழுந்தார். எ - று. (௫௰)

இவ்வகை புகழ வெந்தை யிரணிய வன்ம வன்பின்
மெய்வகை யுவந்தோ மிந்த வியாக்கிர பாத னுக்கும்
பைவளர் பதஞ்சலிக்கு மெமக்கும் வான் பணித வர்க்குஞ்
செய்கவென் றருளிச் செய்தான் றேவர்க டேவ தேவன்.

இ - ள். இவ்வகை புகழ - இந்தப்பிரகாரந் துதிக்க,—எந்தை - எம்முடைய பிதாவும்—தேவர்கள் தேவதேவன் - தேவ தேவர்க்குந் தேவருமாகிய சிவபெருமான்—இரணியவன்ம அன்பின் மெய்வகை உவந்தோம் - இரணியவன்மனே உன்னுடைய அன்பினது மெய்மைக்கு மகிழ்ந்தோம்,—இந்த வியாக்கிரபாத னுக்கும் - இந்தவியாக்கிரபாதமுனிவனுக்கும்—பைவளர் பதஞ் சலிக்கும் - படம் விரிந்த பதஞ்சலிமுனிவனுக்கும்—எமக்கும் - நமக்கும்—தவர்க்கும் - மூவாயிரமுனிவர்கட்கும்—வான் பணி செய்க என்று அருளிச்செய்தான் - மேலாகிய தொண்டு செய்வா யாக என்று அருளிச்செய்தார். எ - று. (௫௧)

ஆதிநா யகனை ளித்த வருடலை மேற்கொண் டாடித்
தீதிலாக் கோயில் காலஞ் சேவித்துத் திருமுன் போற்றிக்

காதலால் வணங்கி யேத்திக் கருமூல கார ணன்பாற்
கோதிலா முனிம கிழ்ந்து குறுகினன் குமர னோடும்.

இ - ள். கோது இலா முனி குமரனோடும் மகிழ்ந்து-குற்றமில்லாத வியாக்கிரபாதமகா முனிவர் இரணியவன்மரோடும் மகிழ்ந்து,—ஆதி நாயகன அளித்த அருள் தலைமேறகொண்டு ஆடி - சிவபெருமான் அருளிச்செய்த திருவருளைச் சிரமேற் கொண்டு கூததாடி,—தீது இலாக் கோயில் காலம சேவிதது் திருமுன் போற்றி - குறறமில்லாத திருககோயிலிலே அக்காலஞ் சேவைசெய்து சந்நிதியிலே தோததிரம்பண்ணி,—காதலால் வணஙகி ஏத்தி - அன்பினாலே வணஙகித துதித்து,—கரு மூல காரணன பால் குறுகினன் - (பிரபஞ்சமெல்லாவறறிறகும்) பிறப்பிடமாகிய ஸ்ரீமூலட்டானேசுரர் சந்நிதியை அடைநதார். எ - று. (கூ௦)

இரணிய வன்ம நாமுன் னிறைஞ்சிய தீங்கை யீங்காற்
றிருநடங் காணப் பெற்றே மென்றவன் றனக்குச் செப்பி
மருமலர் தூவு வித்து வளர்புலீச் சுரத்து மன்னு
மொருவன திருதாள் போற்றி யுறவுற விறைஞ்சு வித்தான்.

இ - ள். இரணியவன்ம நாம் முன் இறைஞ்சியது ஈஙகை - இரணியவன்மனே நாம் முன வழிபட்டது இந்தச் சிவலிஙகப் பெருமானை,—ஈஙகால் திரு நடம் காணப் பெறறோம் - இநதப் பெருமானாலே திருநிருத்தநதரிசிக்கப்பெற்றோம்,—என்று அவன் றனக்குச் செப்பி - என்று அவ்விரணியவனமாவுக்கு அருளிச் செய்து,—மரு மலர் தூவுவித்து - மணததையுடைய புட்பத்தைச் சொரிவித்து,—வளர் புலீச்சுரத்து மன்னும் ஒருவனது இருதாள் - உயர்ந்த திருப்புலீச்சுரததில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளையும்—உறவு உறப் போற்றி இறைஞ்சுவித்தான் - அன்பு பொருந்தத் துதித்து நமஸ்கரிப்பித்தார். எ - று. (கூக)

ஆதியைப் பதஞ்ச லிக்கா மண்ணலை யர்ச்சித் தற்குப்
போதுக வென்று கொண்டு போய்ப்பணி வித்துப் போந்து
காதலி னிறப் புகுந்து கருதுப மன்னி யன்பின்
பேதைநீ பெறுது பெற்றபிள் ளைகைக் கொள்க வென்றான்.

இ - ள். ஆதியைப் பதஞ்சலிக்கு ஆம் அண்ணலை அர்ச்சித் தற்குப் போதுக என்று - (எல்லார்க்கும்) முதல்வராகிய திரு வனந்தேச்சுரரை அருச்சித்தற்கு வா என்று—கொண்டுபோய்ப் பணிவித்து - அழைத்துக்கொண்டு போய் நமஸ்கரிப்பித்து,— போந்து காதலின் இற புகுந்து - (மீண்டு) வந்து அன்பினேடு பர்ணசாலையினுள்ளே புகுந்து,—பேதை நீ கருது உபமன்னியன் பின் பெறுது பெற்ற பிள்ளை கைக்கொள்க என்றான் - (தம்மனே வியை நோக்கிச்) சதியே, நீ கருதப்படுகின்ற உபமன்னியனுக் குப் பின்பு பெறுது பெற்ற இப்பிள்ளையைக் கைக்கொள்ளக்கட வாய் என்றார். எ - று. (கஎ௨)

என்றவ னருளக் கேட்ட விரணிய வன்ம னென்னும்
வென்றிகொள் குமர னன்னை வியன்மலர்ப் பாத மேத்தப்
பின்றிகழ் சடையா னமம் பேசுநாட் பிறந்த நாளா
மன்றுளா ரெமக் களித்த மணியென மகவைக் கொண்டாள்.

இ - ள். என்று அவன் அருளக் கேட்ட இரணியவன்மன் என்னும் வென்றி கொள் குமரன் - என்று அவ்வியாக்கிரபாத மகாமுனிவர் அருளிச்செய்யக் கேட்ட இரணியவன்மரென்னும் வெற்றி பொருந்திய குமாரர்—அன்னை வியன் மலர்ப் பாதம் ஏத்த - மாதாவுடைய பெரிய செந்தாமரைமலர்போலுந் திருவடி களை வணங்கித் துதிக்க,—பின் திகழ் சடையான் நாமம் பேசு நாள் பிறந்த நாளா - பின்னே (தாழ்ந்து) விளங்குகின்ற சடை யையுடைய சிவபெருமானது ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உபதேசித்த நாளே பிறந்த நாளாகக் கொண்டு—மன்று உளார் எமக்கு அளி த்த மணி என மகவைக் கொண்டாள் - சபாநாயகர் எமக்குத்

தந்தருளிய இரத்தினம் என்று அப்பிள்ளையைக் கைக்கொண்டாள். எ - று. (சுரு)

அந்தமி லின்ப மெய்தி யரசிளங் குமர னன்பான்
மைந்தனாய் வாழு நாளின் மறைமுனி கருணை யாலே
புந்தியா லுவந்தி ருந்து புதல்வனை யழைத்தி ருத்திச்
சிந்தையா ருபதே சங்க ளருளினாற் செப்ப லுற்றான்.

இ - ள். அரசு இளங்குமரன் - இளமையாகிய இராசகுமாரர் - அந்தம் இல் இன்பம் எய்தி - அளவில்லாத இன்பத்தைப் பொருந்தி,—அன்பால் மைந்தன் ஆய் வாழும் நாளில் - (பிதாவும் மாதாவும் தம்மேல் வைத்த) அன்பினாலே பிள்ளையாய் வாழு நாளிலே,—மறை முனி கருணையாலே புந்தியால் உவந்து இருந்து - வேதத்தையறிந்த வியாக்கிரபாதமுனிவர் கிருபையினாலே மனமகிழ்ந்திருந்து,—புதல்வனை அழைத்து இருத்தி - பிள்ளையை அழைத்து இருத்தி,—சிந்தை ஆர் உபதேசங்கள் அருளினால் செப்பல் உற்றான் - திருவுளததிலே பொருந்திய உபதேசங்களைக் கருணையினாலே சொல்வாராயினார். எ - று. (சுசு)

வாக்கொடு மனமி றந்த மன்னவ னெங்கு மாகி
நீக்கற நிறைந்தா னேனு நிகழ்தரா ததனான் முத்தி
போக்கெளி தல்ல வென்றப் புனிதனே புந்தி செய்தெம்
பாக்கிய வகையா லெண்ணில் பதிமிகும் பாரில் வைத்தான்.

இ - ள். வாக்கொடு மனம் இறந்த மன்னவன் - வாக்கையும் மனசையுங்கடந்த சிவபெருமான்—எங்கும் ஆகி நீக்கு அற நிறைந்தானேனும் - பிரபஞ்சம் எங்குமாகி நீக்கமற வியாபித்து நின்றாராயினும்,—நிகழ்தராது - (அவ்வுண்மை ஒருவருக்கும்) விளங்காது,—அதனால் முத்தி போக்கு எளிது அல்ல என்று - ஆதலினாலே முத்தியிற்போதல் எளிதன்று என்று—அப் புனிதனே புந்தி செய்து - அந்தச் சுத்தராகிய சிவபெருமானே திரு

வுளங்கொண்டு—எம் பாக்கியவகையால் எண் இல் பதி மிகும் பாரில் வைத்தான் - எம்முடைய புண்ணியவகையினாலே எண்ணில்லாத திருப்பதிகளை அகன்ற பூமியில் வைத்தருளினர். எ-று.

பதிகளெண் ணிலவுண் டென்று பகர்தரு மவற்று ளண்ணல்
கதிதர வறுபத் தெட்டாங் கற்பித மான தானத்
திதமலி தொகையி லோரா றேறுமா றும வற்று
ளதிகமா மாரூர் காசி யம்பல மென்று ரன்றே.

இ - ள். பதிகள் எண் இல உண்டு என்று பகர்தரும் - புண்ணியதலங்கள் எண்ணில்லாதன உண்டென்று (நூல்கள்) சொல்லும்;—அவற்றுள் அண்ணல் கதி தரக் கற்பிதம் ஆன அறுபத்தெட்டு ஆம - அவைகளுள்ளே சிவபெருமானாலே முத்தியைக் கொடுக்கும்படி கற்பிக்கப்பட்டனவாகிய தலங்கள் அறுபத்தெட்டாகும்;—தானத்து இதம் மலி தொகையில் ஓராறு ஏறும் - அந்தத்தலங்களினுடைய உரிமை மிக்க தொகையிலே ஆறுதலம் விசேடமாகும்,—ஆறு ஆம் அவற்றுள் ஆரூர் காசி அம்பலம் அதிகம் ஆம் என்றார் - ஆறுகிய அவைகளுள்ளே திருவாரூர் காசி சிதம்பரம் என்னும மூன்றும் விசேடமாகும் என்று பெரியோர்கள் கூறினார்கள். எ - று. (சுசு)

மெய்ம்மைநற் சரியை பத்தி விளங்கிய ஞான மேவா
வெம்மையொப் பவர்க்கு முத்தி யிறையிலி யாக விட்ட
மும்மைநற் பதிக டம்மின் முளைத்தவர் முடிந்தோர் மூவாச்
செம்மலர்க் கழல் கண்டோர்கள் சிவத்தினைச் சேர்வ ரன்றே.

இ - ள். மெய்ம்மை நற்சரியை பத்தி விளங்கிய ஞானம் மேவா எம்மை ஒப்பவர்க்கு - மெய்ம்மையாகிய நல்ல சரியையையும் கிரியையையும் (யோகத்தையும்) விளங்கிய ஞானத்தையும் பொருந்தாத எம்போல்வார்களுக்கு—இறை இலி ஆக முத்தி இட்ட - சிவம் (வேறாய் நிற்றல்) இல்லாததாகச் சாயுச்சிய முத்தி

யைக் கொடுத்தருளும்—நல் மும்மைப் பதிகள் தம்மின் - நல்ல மூன்று திருப்பதிகளுள்ளும்—மூளைத்தவர் - (திருவாரூரிலே) பிறந்தவர்களும்—முடிந்தோர் - (காசியிலே) இறந்தவர்களும்—மூவாச் செம் மலர்க் கழல் கண்டோர்கள் - (சிதம்பரத்திலே) அழியாத செந்தாமரைமலர்போலுந் திருவடிகளைத் தரிசித்தவர்களும்—சிவத்தினைச் சேர்வர் - சிவத்தை அடைவர்கள். எ - று.

பிறந்தில மாரூர் தன்னிற் பேசிய காசி மேவி
யிறந்தில மிரண்டு முத்தி யின்பமும் பின்ப தாநா
முறைந்திடுந் தில்லை ஞான யோகமார் தான மாமாற்
செறிந்தடி காணச் சீவன் முத்தராய்த் திரிய லாமே.

இ - ள். ஆரூர்தன்னில் பிறந்திலம் - திருவாரூரிலே பிறந்தேயில்லை,—பேசிய காசி மேவி இறந்திலம் - சொல்லப்பட்ட காசியிலே போய் மரித்தேயில்லை;—இரண்டு முத்தி இன்பமும் பின்பது ஆம் - (சனனமரணங்களாலாகும்) இவ்விரண்டு முத்தியின்பங்களும் (பெற விரும்பின் இப்போது சித்திப்பனவல்ல நெடுங் காலத்தின்) பின்பு சித்திப்பனவாம்,—நாம் உறைந்திடும் தில்லை ஞானயோகம் ஆர் தானம் ஆம் - நாம் வசிக்கின்ற தில்லைவனம் ஞானயோகம் பொருந்திய தலமாம்;—செறிந்து அடி காணச் சீவன் முத்தர் ஆய்த் திரியலாம் - (இதன்கண்ணே) பொருந்தித் திருவடியைத் தரிசிக்கச் சீவன் முத்தர்களாய்த் திரியலாம். எ - று. (கூஅ)

அரிவையூ ரழிவி லூரென் றலகிலால் பரவ மேருத்
திருவிலூ ரிரதத் தேர்சூழ்ஞ் செம்மையா னம்மை யாளும்
பரிவிலூர் புலிபோ னல்கிப் பருமைசெய் பெருமை யாலே
பிரிவிலூர் தனியூ ரெம்மூர் பெரும்பற்றப் புலியூ ராகும்.

இ - ள். அரிவை ஊர் அழிவு இல் ஊர் என்று அலகு இல் நூல் பரவ - சிவசத்திவடிவாகிய ஊர் அழிவில்லாத ஊர் என்று

எண்ணில்லாத சாத்திரங்கள் புகழ,—மேருத் திரு வில் ஊர் இர தத்து ஏந்தும் செம்மையான்-மகாமேருமலையாகிய அழகிய வில்லைத் தாம் ஊராநின்ற தேரிலே நின்று தாங்கிய செந்நிறத்தையுடைய சிவபெருமான்—நம்மை ஆளும் பரிவில் ஊர் புலிபோல் நல்கிப் பருமை செய் பெருமையாலே - எம்மையாண்டருளுங் கருணையினால் ஏறுகின்ற புலிபோலப் பண்ணிப் பெருமைப்படுத்திய மகிமையினாலே—பிரிவு இல் ஊர் - (நாம்) பிரிவில்லாதிருக்கும் ஊரும்—தனி ஊர் - ஒப்பில்லாத ஊரும் ஆகிய—எம் ஊர் பெரும் பற்றப்புலியூர் ஆகும் - எம்முடைய ஊர் பெரும்பற்றப் புலியூராம். எ - று. (௬௯)

தன்றனி மன்ற மென்றுஞ் சச்சிதா னந்தமாகு
மென்றரு மறைக ணான்கு மீரிரு திசையும் பற்றி
நின்றருள் பரவ நாத னேரிழை காண வேணி
பின்றிகழ் தரநின் றாடும் பெற்றிநீ பெற்றி யன்றே.

இ - ள். நாதன் - சிவபெருமான்,—தன் தனி மன்றம் - தம்முடைய ஒப்பில்லாத சபை—சச்சிதானந்தம் ஆகும் என்று - உண்மையறிவானந்தவடிவாகும் என்று—அரு மறைகள் நான்கும் - அரிய வேதங்கள் நான்கும்—என்றும் ஈரிரு திசையும் பற்றி நின்று அருள் பரவ - எக்காலத்தும் நான்குதிக்கினும் பொருந்தி நின்று திருவருளைத் துதிக்க,—நேரிழை காண - சிவகாமியம்மையார் தரிசிக்க,—வேணி பின் திகழ் தர - சடை பின்னே (தாழ்ந்து) விளங்க,—நின்று ஆடும் பெற்றி நீ பெற்றி - (அச்சபையிலே) நின்று திருநிருத்தஞ் செய்தருளுந் தன்மையை நீ தரிசிக்கப்பெற்றாய். எ - று. (எ0)

பாலக மிறந்த நாதன் பாதமுன் பணிக்க வந்தான்
றேவர்க டேவ னென்னுந் திகழ்திருச் சின்ன வோசை
மேவிய போதி லன்பு மென்புமை யுணர்வு மெய்யு
மாவியு முருக நம்மை யாண்டவா காண்டி யன்றே.

இ - ள். பாவகம் இறந்த நாதன் - தியானத்தைக் கடந்த சிவபெருமான்,—தேவர்கள் தேவன் பரதம் முன் பணிக்க வந்தான் என்னும் - தேவதேவர் திருநிருத்தத்தை எதிரே தரிசிப்பிக்க வந்தார் என்கின்ற—திகழ் திருச்சின்ன ஓசை மேவிய போதில் - விளங்கிய திருச்சின்னவொலி பொருந்தியபொழுதில்,—அன்பும் என்பும் ஐயுணர்வும் மெய்யும் ஆவியும் உருக - தம்மாட்டன்பும் எம்முடைய எலும்பும் ஐம்பொறியுணர்ச்சியும் சரீரமும் உயிரும் உருகும்படி—நம்மை ஆண்டவா காண்டி அன்றே - நம்மை ஆட்கொண்டருளினமையை நீ கண்டாயன்றே. எ - று. (எக)

தேசமார் மன்ற கன்று சிவகதி தேடி யுற்றாற்
காசியி லில்லை தில்லை கதிதரு மென்ற ணைந்தாற்
பாசம தகல முத்தி பணித்திடு மென்று ரென்று
லீசன தருளி ரக்கத் தெல்லையார் சொல்லு வாரே.

இ - ள். தேசம் ஆர் மன்று அகன்று சிவகதி தேடிக் காசியில் உற்றால் இல்லை - (தக்கிணதேசத்தார்) ஒளி நிறைந்த கனகசபையை நீங்கி முத்தியைத் தேடிக் காசியிலே சென்றால் (அது அங்கே) கிடைப்பதில்லை;—தில்லை கதி தரும் என்று அணைந்தால் - (உத்தரதேசத்தார்) சிதம்பரம் முத்தி தரும் என்று வந்து சேர்ந்தால்—பாசமது அகல முத்தி பணித்திடும் - (இது) பாசநீங்க முத்தியைக் கொடுக்கும்—என்றார் என்றால் - என்று (வேதாகமம் வல்லார்) சொனனாரென்றால்,—ஈசனது அருள் இரக்கத்து எல்லை யார் சொல்லுவார் - சிவபெருமானுடைய திருவருளிரக்கத்தினது எல்லையாகிய சிதம்பரத்தை யாவர் சொல்ல வல்லவர்! எ - று. (எஉ)

கன்றம ரன்பா லான்பால் கவர்தருங் காலமேனும்
வென்றிகொ ளம்பு வீழும் வேலையா யினுமி மைப்பிற்

சென்றுறு மமைய மேனுந் திருவடி தெளிய நோக்கி
நின்றவர் காண நின்றார் நீள்பவ நீங்கி னாரே.

இ - ள். கன்று அமர் அன்பால் ஆன் பால் கவர்தரு கால மேனும் - கன்றினிடத்தே பொருந்திய அன்பினாலே சுரக்கின்ற பசுவின் பாலைக் கறக்கின்ற நேரமாத்திரமாயினும்—வென்றி கொள் அம்பு வீழும் வேலை ஆயினும் - வெற்றிபொருந்திய பாணம் (ஆறி) விழுகின்ற நேரமாத்திரமாயினும்—இமைப்பில் சென்று உறும் அமையமேனும் - இமைத்தலிலே சென்று பொருந்திய நேரமாத்திரமாயினும்—திருவடி தெளிய நோக்கி நின்றவர்காண நின்றார் - திருவடியை விளங்கத் தரிசித்து நின்றவர்கள் காணும் படி அவர்கள் எதிர்ப்பட்டு நின்றவர்கள்—நீள் பவம் நீங்கினார் - (அநாதியே) தொடர்கின்ற பிறவி நீங்கினவர்களாவர்கள். எ-று.

ஆரண வுருவார் தில்லை யம்பல மெய்தப் பெற்றோ
ரோருணர் வாவ ரென்று மொன்றல ரொன்றா ரல்லர்
காரண ராகா ரொத்த கருத்திலர் நிருத்த வின்பப்
பூரண ரவர்கள் வாழும் புவனமும் பொதுவா மன்றே.

இ - ள். ஆரண உருவார் தில்லை அம்பலம் எய்தப் பெற்றோர் - வேதவடிவினராகிய சிவபெருமானுடைய தில்லையம்பலத்தை அடையப்பெற்றவர்கள்—என்றும் ஓருணர்வு ஆவர் - எக்காலமும் பரிபூரணஞானத்தை யுடையராவார்கள்,—ஒன்று அலர் - (சிவமுந்தாமும்) ஒன்றாயிரார்கள்,—ஒன்றார் அல்லர் - (சிவத்தோடும்) ஒன்றாதவரல்லர் [சிவத்தோடு இரண்டற்றிருப்பர்கள என்றபடி]—காரணர் ஆகார் - (ஆயினும்) பஞ்சகிருத்திய கருத்தாக்களாகார்கள்—(யாது காரணத்தா லெனின்,)—ஒத்த கருத்து இலர் - (கிருத்தியத்திலே) பொருந்திய இச்சை யில்லாதவர்களாதலால்;—நிருத்த இன்பப் பூரணர் - நிருத்தானந்தத்தினாலே நிறைந்தவர்கள்,—அவர்கள் வாழும் புவனமும் பொது ஆம் - அவர்கள் எழுந்தருளியிருக்கும் புவனமுஞ் சிற்சபையாம். எ - று.

ஆகாயமும் குடாகாயமும்போலப் பிரமமும் ஆன்மாவும் தம்மிற்சேர்ந்து ஒன்றும் என்பது மாயாவாதிகள் கருத்து. ஆன்ம போதமுங் கண்ணொளியும்போலச் சிவமும் ஆன்மாவும் தம்முள் இரண்டறக் கலக்கும் என்பது சைவசித்தாந்திகள் கருத்து. ()

கண்ணுத லாடல் வெற்பிற் காரிகை காணு மிந்தப்
புண்ணிய மன்றெ வர்க்கும் பொதுவெனு மதனாற் சூதன்
றண்ணளி வியாதன் மைந்தன் சவுனகன் றனய னென்றென்
றெண்ணரு முனிவர் தில்லை யெல்லையி னெய்தி னார்கள்.

இ - ள். கண்ணுதல் ஆடல் வெற்பிற் காரிகை காணும் இந்தப் புண்ணிய மன்று - நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானது திருநிருத்தத்தைப் பார்ப்பதிதேவியார் தரிசிக்கின்ற இந்தச் சுத்த சபை—எவர்க்கும் பொது எனும் அதனால் - யாவர்க்கும் பொது வென்று சொல்லப்படுதலினாலே,—சூதன் - சூதமுனிவரும்—தண்ணளி வியாதன் - கருணையையுடைய வியாசமுனிவரும்—மைந்தன் - அவர் குமாரராகிய சுகமுனிவரும்—சவுனகன் - சௌனகமுனிவரும்—தனயன் என்று என்று எண் அரு முனிவர் - அவர்குமாரரும் என்றென்று (பின்னும்) எண்ணுதற்கரிய முனிவர்கள்—தில்லை எல்லையின் எய்தினார்கள் - இத்தில்லைவனத்தினது திருவெல்லையிலே பொருந்தினார்கள். எ - று. (எ௫).

மார்கழி யாதி ரைத்தாய் வருவிழா வெழுதல் போற்றிச்
சீர்மலி கமல வாசந் திகழ்சிவ கங்கை யாடிப்
பார்திகழ் பரத மேத்திப் பணிந்தரு ளணைந்து சிந்தை
யார்தரு மன்பு நீடி யவருநற் றவர்க ளானார்.

இ - ள். மார்கழி ஆதிரைத்து ஆய் வரு விழா எழுதல் போற்றி - மார்கழிமாசத்துத் திருவாதிரை நக்ஷத்திரத்தினதாய் வருகின்ற திருவிழாவெழுச்சியைச் சேவித்து,—சீர் மலி கமல வாசம் திகழ் சிவகங்கை ஆடி - அழகு நிறைந்த பொற்றாமரை

மணம் விளங்குகின்ற சிவகங்கையிலே ஸ்நானம்பண்ணி,—பார் திகழ் பரதம் ஏத்திப் பணிந்து அருள் அணைந்து - பூமியில் விளங்குகின்ற திருநிருத்தத்தைத் துதித்து வணங்கித் திருவருளைப் பொருந்தி,—சிந்தை ஆர்தரும் அன்பு நீடி - சித்தத்திலே நிறைந்த அன்பு பெருகி,—அவரும் நற்றவர்கள் ஆனார் - அவர்களும் நல்ல தவத்தையுடையர்களாயினார்கள். எ - று. (எசு)

நற்றவ மைந்த வெந்தை நயந்தபே ரருளா னாமு
முற்றதிங் கலர்கள் கொய்வா னோங்குகோங் காதியேற
வெற்றிகொள் வரத்தா லிந்த வியாக்கிர பாத மேன்மை
பெற்றன மிதனா லெல்லாப் பெருமையும் பெற்றா மன்றே.

இ - ள். நற்றவ மைந்த - நல்ல தவத்தையுடைய குமாரனே,—நாமும் இங்கு உற்றது எந்தை நயந்த பேர் அருளால் - நாமும் இங்கே பொருந்தியது எமது பிதாவாகிய மத்தியந்தின மகாமுனிவருடைய விரும்பப்பட்ட பெரிய கருணையினாலாம்;—அலர்கள் கொய்வான் ஓங்கு கோங்கு ஆதி ஏற - பூக்கள் கொய்தற்கு உயர்ந்த கோங்கு முதலிய மரங்களில் ஏறும்பொருட்டு—வெற்றி கொள் வரத்தால் இந்த வியாக்கிரபாத மேன்மை பெற்றனம் - வெற்றி பொருந்திய வரத்தினாலே இந்த வியாக்கிரபாதனென்னும் மேன்மையைப் பெற்றோம்,—இதனால் எல்லாப் பெருமையும் பெற்றாம் - இதனால் (விதிப்படி பூவெடுத்துப் பூசித்து) எல்லாப் பெருமைகளையும் பெற்றோம். எ - று. (எஎ)

உன்னரு முனக்கு முன்னா மோங்குப மனிய னென்னு
மன்னுநம் புதல்வன் முந்தை மாதுலன் மனைப்பா லுண்டு
பின்னையிங் கெய்தி நம்பாற் பெறாதுபால் பெருமா னோடு
பன்னரு மன்பு நீடிப் பாற்கட லருளாற் பெற்று.

இ - ள். உன் அரும் உனக்கு முன் ஆம் ஓங்கு உபமனியன் என்னும் மன்னும் நம் புதல்வன் - நினைத்தற்கரிய உனக்கு முன்

ஞானாகிய உயர்ந்த உபமன்னியனென்கின்ற நிலைபெற்ற நம்முடைய குமாரன்—மூந்தை மாதுலன் மனைப்பால் உண்டு - முன்பு மாமனாராகிய வசிட்டமகாமுனிவருடைய ஆச்சிரமத்திலே தேனுவின் பாலைக் குடித்து (வளர்ந்து),—பின்னை இங்கு எய்தி-பின்பு இங்கே வந்து,—நம்பால் பால் பெறுது - நம்மிடத்திலே பால் பெறுமையால்—பெருமானோடு பன் அரும் அன்பு நீடி - சிவபெருமானிடத்திலே சொல்லுதற்கரிய அன்பு பெருகி—பாற்கடல் அருளால் பெற்று - திருப்பாற்கடலை அவர் திருவருளினாலே பெற்று. எ - று. (எஅ)

ஆண்டிடு சாபங் கொள்ளு மவரையுந் துவரையும் போய்க்
காண்டுமென் றூண்ட ணைந்தக் கரியவன் முடிமேற் பாத
நீண்டவன் புடனே வைத்து நீலகண் டரையு நல்கி
யீண்டுவந் தகன்று னின்னு மெய்துவ னின் று நாளே.

இ - ள். ஆண்டு இடு சாபம் கொள்ளும் அவரையும் - (பிருகுமுனிவருடைய ஆச்சிரமமாகிய) அவ்விடத்தே இடப்பட்ட சாபத்தைக் கொண்டவராகிய (விட்டுணுவினது அவதாரமாயுள்ள) கிருஷ்ணரையும்—துவரையும் போய்க் காண்டும் என்று ஆண்டு அணைந்து - துவராபுரியிலே போய்க் காண்பேம் என்று அவ்விடத்திலே பொருந்தி,—நீண்ட அன்புடனே அக்கரியவன் முடிமேல் பாதம் வைத்து - மிகுந்த கருணையோடும் அந்தக் கிருஷ்ணருடைய சிரசின்மேலே திருவடிசூட்டி,—நீலகண்டரையும் நல்கி - சிவலிங்கப்பெருமானை எழுந்தருளப்பண்ணிக் கொடுத்து,—ஈண்டு வந்து அகன்முன் - இவ்விடத்திலே வந்து (பின்பும்) போயினான்;—இன்னும் இன்று நாளை எய்துவன் - இன்னம் இன்று நாளைக்குள்ளே வருவன். எ - று. (எகூ)

பங்கயில் புகழ னந்தன் பதஞ்சலி யாகி யன்பா
லிங்கணைந் தெம்மோ டாகி யிருந்தபின் னிறை யெமக்கு

மங்கல நடமுந் தெய்வ மன்றமும் வழங்கி வானோர்
தங்களை யெங்க ளோடுந் தகும்பணி தந்து கொண்டான்.

இ - ள். பங்கம் இல் புகழ் அனந்தன் பதஞ்சலி ஆகி - குற்ற மில்லாத கீர்த்தியையுடைய ஆதிசேடர் பதஞ்சலிவடிவத்தை யுடையவராகி,—அன்பால் இங்கு அணைந்து எம்மோடு ஆகி இருந்த பின் - அன்பினால் இங்கே வந்து நம்மோடு கூடி (நெடுநாள்) இருந்தபின்பு,—இறை எமக்கு மங்கல நடமும் தெய்வ மன்றமும் வழங்கி - சிவபெருமான் எங்களுக்கு மங்கலத்தையுடைய திருநிருத்தத்தையும் தெய்வத்தன்மை பொருந்திய கனக சபையையும் புலப்படுத்தி,—வானோர் தங்களை எங்களோடும் தகும் பணி தந்து கொண்டான் - தேவர்களையும் எங்களோடும் தக்க தொண்டைத் தந்து ஆட்கொண்டருளினார். எ - று. (அ0)

சயமலி சாம வேதத் தலைவரி லொருவ னான
செயிமினி முனிவ னண்ணித் திருநடந் தொழுது வாழ்ந்து
வியன்மலர்ப் பாத மன்பால் வேதபா தத்த வத்தா
னயமிகப் பரவி யின்ப நண்ணினா னெண்ண மார.

இ - ள். சயம் மலி சாம வேதத் தலைவரில் ஒருவன் ஆன செயிமினி முனிவன் - வெற்றி மிகுந்த சாமவேதத்தலைவர்களுள் ஒருவராகிய சைமினிமுனிவர்—நண்ணித் திருநடம் தொழுது வாழ்ந்து - (இந்தச்சிதம்பரத்திலே) வந்து திருநிருத்தத்தை வணங்கி வாழ்வு பெற்று,—வியன் மலர்ப் பாதம் - மேலாகிய செந்தாமரை மலர்போலும் திருவடிகளை—அன்பால் வேதபாதத்தவத்தால் நயம் மிகப் பரவி - அன்பினோடு வேதபாதஸ்தவத்தினாலே இனிமை மிகத் துதித்து,—எண்ணம் ஆர இன்பம் நண்ணினான்- (தமது) கருத்து நிறைய இன்பத்தை அடைந்தார். எ - று.

வேதபாதஸ்தவமாவது முதன்மூன்றுபாதமும் தமது வாக்காகவும் நான்காம்பாதம் வேதமாகவும் சைமினிமுனிவராலே செய்யப்பட்ட தோத்திரம். ஸ்தவம் - தோத்திரம். (அக)

துற்கட னென்றோர் பாவி துணிதரு வணிக னென்போன்
கற்கட மனைய சிந்தைக் காதகன் மாக மாதத்
திற்கட லுரு நாளுற் றிறைதரு துறையிற் றில்லை
நற்கடற் படிய முத்தி நண்ணினு ரெண்ணி லார்கள்.

இ - ள். துற்கடன் என்ற ஓர் பாவி - துர்க்கடனெனப் பட்ட ஒருமகாபாதகன்—துணிதரு வணிகன் என்போன் - (பாவத்துக்குத்) துணிகின்ற செட்டியாயுள்ளவன்—கற் கடம் அனைய சிந்தைக் காதகன் - மலைப்பக்கத்துள்ள சுரவழிபோன்ற சித்தத்தையுடைய கொலைஞன்—தில்லை நற்கடல் - சிதம்பரத் துக்குச் சமீபத்தில் உள்ள நல்லசமுத்திரத்திலே—மாகமாதத் தில் கடன் ஆகும் நாள் உற்று இறை தரு துறையில் - மாசிமாச த்தில் (அதற்கு) உரியதாகிய மகநக்ஷத்திரத்திலே பொருந்திச் சிவபெருமான் (தீர்த்தத்துக்கு) எழுந்தருளும் பாசமறுத்தான் றுறையிலே—படிய - (ஒருநாட் படவோடு) தாழ,—எண் இலார் கள் முத்தி நண்ணினார் - எண்ணில்லாதவர்கள் (அவனுடனே) முத்தி பெற்றார்கள். எ - று. (அஉ)

மாசிலா வுலகிற் றீர்த்தம் வானவ ரனைய தில்லை
யாசிலா வேத கஞ்செ யகிலவா விகளெ வர்க்குந்
தேசமா ரயன்மால் போல்வ திகழ்திருக் குளமெ வர்க்கு
மீசனு மென்ன மேலா யெளிதுமா யிருக்கு மன்றே.

இ - ள். மாசு இலா உலகில் தீர்த்தம் வானவர் அனைய-குற் றமில்லாத புண்ணியதலங்களினுள்ள தீர்த்தங்கள் தேவர்களைப் போல்வன;—தில்லை ஆசு இலா வேதகம் எவர்க்கும் செய் அகில வாவிகள் - சிதம்பரத்திலே குற்றமில்லாத பரிசனவேதியை யாவ ருக்குஞ்செய்கின்ற சகலதீர்த்தங்களும்—தேசம் ஆர் அயன் மால் போல்வ-ஒளி நிறைந்த பிரம விட்டுணுக்களைப் போல்வன;— திகழ் திருக்குளம் - விளங்குகின்ற சிவகங்கை—எவர்க்கும் ஈசன் ஆம் என்ன மேல் ஆய் - எல்லாத்தேவர்களுக்குந் தலைவராகிய

சிவபெருமான்போல (எல்லாத்தீர்த்தங்களுக்கும்) மேலாகி,— எளிதும் ஆய் இருக்கும் - (தண்ணளியே வடிவாதலினாலே தன்னை அடைந்த யாவருக்கும்) எளிதுமாயிருக்கும். எ - று. ()

கங்கைகா ளிந்தி பொன்னி கன்னியா திகள்வ ணங்கும்
பங்கய வாவி தானே பழுதுக ளகற்ற வற்று
லிங்குநின் னவைக ழித்த விலஞ்சியிக் கனக மேனி
மங்கல மன்று ளாடு மன்னவ னருளா மன்றே.

இ - ள். கங்கை காளிந்தி பொன்னி கன்னி ஆதிகள் வணங்கும் - கங்கை காளிந்தி காவேரி கன்னி முதலிய சகல தீர்த்தங்களும் (தங்களிடத்துள்ள பாவங்கள் போகும்படி) வணங்குகின்ற—பங்கயவாவி தானே பழுதுகள் அகற்ற வற்று - பொற்றாமரைவாவியாகிய சிவகங்கையே சகல பாவங்களையும் போக்க வல்லது;—இங்கு நின் நவை கழித்த இக்கனகமேனி இலஞ்சி - இங்கே உன்னுடைய உடற்குற்றத்தைப் போக்கிய இப்பொன் வடிவத்தைத் தந்த திருக்குளம்—மங்கல மன்றுள் ஆடும் மன்னவன் அருள் ஆம் - மங்கலத்தையுடைய சபையிலே திருநிருத்தஞ் செய்தருளும் சிவபெருமானுடைய திருவருளாகும். எ - று. ()

மன்னவ னெமக்க ளித்த வாழ்வுகேள் வழாத மைந்த
கன்னலுஞ் சுவையும் போன்மெய்க் காட்சியுங் கருத்தி லின்பு
மன்னிய மின்மை காட்டி யகம்புற மென்றி ரண்டு
பின்னமி லருளுந் தந்த பெற்றியார் பெற்று ளாரே.

இ - ள். வழாத மைந்த - (நல்லொழுக்கத்தினின்றும்) வழுவாத குமாரனே,—மன்னவன் எமக்கு அளித்த வாழ்வு கேள் - நடராஜர் நமக்குத் தந்தருளிய வாழ்வைக் கேட்பாயாக;—கன்னலும் சுவையும் போல் - சருக்கரையும் அதன்சுவையும்போல— மெய்க் காட்சியும் கருத்தில் இன்பும் அன்னியம் இன்மை காட்டி - (தமது) திருமேனிப்பிரகாசமும் (நமது) உள்ளத்தில் விளையும்

நிருத்தானந்தமும் அன்னியமில்லாமையைப் புலப்படுத்தி—அகம் புறம் என்று இரண்டு பின்னம் இல் அருளும் தந்த பெற்றி - உள்ளும் புறமுமென்று இரண்டு பேதமில்லாத (ஒருநீர்மைய தாகிய) திருவருளையுந்தந்த கருணைத்திறத்தை—யார் பெற்று உளார் - வேறியாவர் பெற்றுள்ளவர்! எ - று. (அரு)

இன்றெமக் கிறைவன் முத்தி யிகபரத் தெளிதி னல்கு
மன்றிது வென்று தொல்லை மறைமுனி யுபதேசங்க
ளன்றருள் செய்ய மைந்த னருவிகண் சொரிய நைந்து
சென்றுமுன் பணிந்து தந்தை சேவடி சென்னி வைத்தான்.

இ - ள். இன்று எமக்கு இறைவன் முத்தி இக பரத்து எளிதின் நல்கும் மன்று இது என்று - இப்பொழுது நமக்குச் சிவபெருமான் முத்தியை இகத்தினும் பரத்தினும் எளிதிலே தந் தருளுஞ்சபை இது என்று—தொல்லை மறை முனி உபதேசங் கள் அன்று அருள் செய்ய - பழைய வேதத்தையறிந்த வியாக் கிரபாதமகாமுனிவர் உபதேசங்களை அப்போதருளிச்செய்ய;— மைந்தன் கண் அருவி சொரிய நைந்து - குமாரராகிய இரணிய வருமர் கண்களினின்றும் அருவி பொழிய நெக்குருகி,—தந்தை முன் சென்று பணிந்து - பிதாவாகிய அம்முனிவரெதிரே போய் நமஸ்கரித்து,—சேவடி சென்னி வைத்தான் - (அவருடைய) சிவந்த திருவடியைத் தமது சிரசில் வைத்தார். எ - று. (அசு)

சென்னிசேர் பாதங் கண்ணுஞ் சிந்தையுந் திகழ வைத்து
முன்னுற வணங்கி யேத்தி முகமிக மலர்ந்து ஞான
மென்னையும் பொருளா நல்கிற் றிறைவநின் கருணை யென்று
பன்னரு மன்பு நீங்காப் பரிவுளம் பெருகு வித்தான்.

இ - ள். சென்னி சேர் பாதம் கண்ணும் சிந்தையும் திகழ வைத்து - சிரசிலே பொருந்திய திருவடியைத் (தம்முடைய)கண் களினும் இருதயத்தினும் விளங்க வைத்து,—முன் உறவணங்கி

ஏத்தி முகம் மிக மலர்ந்து - (மீளவும்) திருமுன்னே பொருந்த நமஸ்கரித்துத் துதித்து முகமிகமலர்ந்து,—இறைவ நின் கருணை என்னையும் பொருளா ஞானம் நல்கிற்று என்று-எம்பெருமானே உமது காருண்ணியம் (பொருளல்லாத) தமியேனையும் பொருளாகக் கொண்டு ஞானத்தைத் தந்தருளியது என்று விண்ணப்பஞ் செய்து,—பன் அரும் அன்பு நீங்காப் பரிவு உளம் பெருகுவித்தான் - (தமது) சொல்லுதற்கரிய அன்பினுலே-ஒழியாத மகிழ்ச்சியை (அவர்) திருவுள்ளத்திலே பெருகச்செய்தார். எ - று. ()

ஆயபே ரருளால் வாழு மரசிளங் குமர னூருந்
தூயநீர்த் தடம்ப டிந்து துணைவனைத் தொழுது தந்தை
சாயைபோ லமர்ந்த னந்தன் றாள்களும் பணிந்த வர்க்காங்
கேயுமா றேவ லுஞ்செய் திளங்கதிர் போலி ருந்தான்.

இ - ள். ஆய பேர் அருளால் வாழும் அரசு இளங்குமரன் - இங்ஙனமாகிய பெரிய திருவருளினுல் வாழ்கின்ற இளமையாகிய இராசகுமாரர்—நாளும் தூய நீர்த் தடம் படிந்து - நாடோறும் சுத்தமாகிய தீர்த்தத்தையுடைய சிவகங்கையிலே ஸ்நானஞ் செய்து,—துணைவனைத் தொழுது - உயிர்த்துணைவராகிய சிவபெருமானை நமஸ்கரித்து,—தந்தை சாயை போல் அமர்ந்து - பிதாவாகிய வியாக்கிரபாதமகாமுனிவருக்கு நிழல்போலப் பொருந்தி,—அனந்தன் தாள்களும் பணிந்து - பதஞ்சலிமகாமுனிவருடைய திருவடிகளையும் வணங்கி,—அவர்க்கு அங்கு ஏயும் ஆறு ஏவலும் செய்து - அவர்களிருவருக்கும் அங்கே இயையும்படி தொண்டுகளுஞ்செய்து,—இளங் கதிர் போல் இருந்தான் - பாலசூரியர்போலிருந்தார். எ - று. (அஅ)

வே று.

இங்கி வன்றிகழ் வெய்து நாண்மனு வென்னு மன்னன்வ சிட்டனைச், சிங்க வன்மனை யென்னை நீதிசெ லுத்து மாறுசெ லுத்துகென், றங்க வன்றன்ம னந்தி ருத்திய ருத்தி

யோடுப ரித்தமெய்ச், சங்க முங்கழி வித்த ரும்புகழ் தாவி லாவுட லாயினுன்.

இ - ள். இங்கு இவன் திகழ்வு எய்தும் நாள் - இவ்விடத்திலே இவ்விரணியவருமர் விளக்கம் பொருந்திய நாளிலே,—மனு என்னும் மன்னன் - மனுவென்னும் அரசன்—வசிட்டனை - வசிட்டமுனிவரை (நோக்கி)—நீதி என்னைச் செலுத்தும் ஆறு சிங்கவன்மனைச் செலுத்துக என்று - (நீர்) நீதியிலே (இநநாள் காறும்) என்னை நடத்தியபடியே இனிச் சிங்கவன்மனை நடத்துவீராக என்று விண்ணப்பஞ்செய்து,—அங்கு அவன்றன் மனம் திருத்தி - அங்கே அம்முனிவருடைய திருவுள்ளத்தை இயைவித்து,—அருத்தியோடு பரித்த மெய்ச்சங்கமும் கழிவித்து - ஆசையோடு தாங்கிய பூதவுடம்போடு கூடுதலையொழித்து,—தாவு இலா அரும் புகழ் உடல் ஆயினுன் - அழிவில்லாத பெரிய புகழுடம்பை உடையவனுயினுன். எ - று. (அக)

இன்னு யிர்க்குல மாஞெ டண்ண லெடுத்து விட்டது றக்கநேர், மன்னு யிர்ப்படை பின்றொ டர்ந்தும யான வாழ்வுமு டித்துநற், பொன்னி லக்கமில் கூறை யாதிபொ ழிந்த ழிந்துவ சிட்டனீ, டுன்ன மைச்சர்கண் மன்னர் மைந்த ருடன்க டன்செய்தி ருந்துழி.

இ - ள். இன் உயிர்க்குலமாஞெடு அண்ணல் எடுத்துவிட்டதுறக்க நேர் - இனிய உயிர்போலும் குலஸ்திரியுடனே இராசா அடைந்த துறக்கத்துக்கு நேராக—மன் உயிர்ப் படை பின் தொடர்ந்து - நிலைபெற்ற உயிர்போலும் அடிமைகளோடு பின்றொடர்ந்து,—மயான வாழ்வு முடித்து - மயானகிருத்தியத்தை நிறைவேற்றி,—நற் பொன் இலக்கம் இல் கூறை ஆதி பொழிந்து - நல்ல கனகம் எண்ணில்லாத வஸ்திரமுதலியவற்றைத் தானஞ்செய்து,—அழிந்து - துக்கித்துக்கொண்டு,—வசிட்டன் - வசிட்டமகாமுனிவர்—நீடு உன் அமைச்சர்கள் - நெடுங்

காலத்துள்ள ஆராய்கின்ற மந்திரிமார்களும்—மன்னர் - குறுநில மன்னர்களும்—மைந்தருடன்-இராசகுமாரர்களும் ஆகிய இவர்களோடும்—கடன் செய்து இருந்துழி - மற்றைக் கிருத்தியங்களையும் முடித்துக்கொண்டு இருந்தபொழுது. எ - று. (கூ0)

யாது செய்குவ மென்ன மைந்தர்க ளெந்தை முந்த
விசைந்ததே, மேத கும்படி செய்க வென்ன, விசிட்டனான
வசிட்டன்யா, னீதி தங்கிய சிங்க வன்மனை நேடி யிங்கணை
விப்பனீர், றீத கன்றிட வென்றி செய்திரு மென்று தென்
றிசை செல்குவான்.

இ - ள். யாது செய்குவம் என்ன - இனி யாது செய்வோம் என்று வினவ;—மைந்தர்கள் எந்தை முந்த இசைந்ததே மேதகும்படி செய்க என்ன - குமாரர்கள் எம்முடைய பிதா முன்னே இசைந்ததையே மேன்மை தகும்படி செய்தருள்வீராக என்று விண்ணப்பஞ்செய்ய;—விசிட்டன் ஆன வசிட்டன் - மேலோராகிய வசிட்டமுனிவர்—யான் நீதி தங்கிய சிங்கவன்மனை நேடி இங்கு அணைவிப்பன் - நான் நீதி பொருந்திய சிங்கவன்மனைத் தேடி இங்கே அழைத்துக்கொண்டு வருவேன்,—நீர் தீது அகன்றிட வென்றி செய்து இரும் என்று - (நான் வருமளவும்) நீங்கள் குற்றநீங்க வெற்றிசெய்துகொண்டிருங்கள் என்றுசொல்லி,—தென்றிசை செல்குவான - தெற்குத் திக்கை நோக்கிப் போவாராயினர். எ - று. (கூக)

அங்க வங்கம டைந்து கங்கை படிந்த தன்கரை யானடைந்
தெங்கு நாடிவ ளங்கொள் காசியி றைஞ்சி விந்தம கன்றெழி
றங்கு மாளுவ குச்ச ராதி தகுந்தெ லுங்கு கடந்துநற்
சிங்க வன்ம னிருந்த வெல்லை யறிந்து தில்லை செறிந்தனன்.

இ - ள். அங்க வங்கம் அடைந்து - அங்கதேசத்தையும் வங்கதேசத்தையும் பொருந்தி,—கங்கை படிந்து - கங்கையிலே

ஸ்நானஞ்செய்து,—அதன் கரையால் நடந்து - அதன் கரைவழியாகச் சென்று,—எங்கும் நாடி - எவ்விடத்திலுந்தேடி,—வளம் கொள் காசி இறைஞ்சி - வளம்பொருந்திய காசியை வணங்கி,—விந்தம் அகன்று - விந்தமலையை நீங்கி,—எழில் தங்கு மாளுவ குச்சர ஆதி தகும் தெலுங்கு கடந்து - அழகு பொருந்திய மாளுவம் குச்சரமுதலிய தேசங்களையும் தக்க தெலுங்கதேசத்தையும் கடந்து,—நற் சிங்கவன்மன் இருந்த எல்லை அறிந்து - நல்ல சிங்கவருமா இருந்த எல்லையை உணர்ந்து,—தில்லை செறிந்தனன் - தில்லைவனத்தைப் பொருந்தினார். எ - று. (கஉ)

மன்னு மாறயர் வெம்மை யாற வசிட்டன் வண்களவார்நிழற், றன்னி னாதனை யெய்து மாறுணர் தண்புலிச்சரணத்தனீ, முன்ன மேவுக யானு மிந்த முயங்கு பூசைமுடித்துவந், துன்னொ டாகுவ னென்ன மைந்த னுவந்துசென்று பணிந்தனன்.

இ - ள். மன்னும் ஆறு அயர் வெம்மை ஆற - நிலைபெற்ற வழி நடந்த வெம்மை தீரும்படி—வசிட்டன் வண் களவு ஆர் நிழற்றன்னின் நாதனை எய்தும ஆறு உணர் - வசிட்டமகாமுனிவர் அழகிய திருக்களாமரத்தினது நிறைந்த நிழலின்கண்ணே எழுந்தருளியிருக்குஞ் சிவலிங்கப்பெருமானை அடைந்தமையை அறிந்த—தண் புலிச்சரணதத்ன் - தண்ணளியையுடைய வியாக்கிரபாதமகாமுனிவர் (இரணியவன்மரை நோக்கி),—நீ முன்னம் மேவுக - நீ முன்னே போவாயாக—யானும் முயங்கு இந்தப் பூசை முடித்து வந்து உன்னொடு ஆகுவன் என்ன - நானும் செய்கின்ற இந்தப் பூசையை முடித்துக்கொண்டு வந்து உன்னோடு கூடுவேன் என்றருளிச்செய்ய;—மைந்தன் உவந்து சென்று பணிந்தனன் - குமாரராகிய இரணியவருமர் மகிழ்ந்து போய் (வசிட்டமகாமுனிவரை) நமஸ்கரித்தார். எ - று. (கங)

தொழுதல் கண்டவ னென்ற றிந்துமோர் தொன்மை நன்மைக ளின்மையால், வழுவி லாமக ளார்த டம்புயம் வாழி

யேயென மாமுனி, மொழிக ளுந்தரு கின்மை யாலழு முன்பு
துன்பு குவிப்பதொத், திழவ றிந்திடி மாகவிழ்ந்திட ரேறு
மாதரை கீறினன்.

இ - ள். தொழுதல் கண்டு - நமஸ்கரித்தலைக் கண்டு—அவன் என்று அறிந்தும் - (சிங்கவன்மா) அவரென்றறிந்தும்—தொன்மை நன்மைகள் இன்மையால் - முன்புபோல ஆசிர்வாதங்கள் செயப்படாமையால்—வழு இலா மகனார் தடம் புயம் வாழியே யென - குறறமில்லாத குமாரர் (தந்தையாருடைய) பெரிய புயங்கள் வாழ்கின்றனவா என்று வினவ,—மாமுனி மொழிகளும் தருகின்மையால் - வசிட்டமகாமுனிவர் எதிர்வார்த்தைகள் சொல்லாமையினால்—அழு முன்பு துன்பு குவிப்பது ஒத்து - அழுதற்கு முன்னே துன்பங்களைக் கூட்டுதல்போன்று—இழவு அறிந்திடிமா கவிழ்ந்து - (பிதாவின்)மரணத்தை அறிந்துகொளளும்படி தலை கவிழ்ந்து - இடர் ஏறுமா தரை கீறினன் - துக்கமேறும்படி தரையைக் கீறினார். எ - று. ஓ அசை. (கூச)

துன்பமெய்திய வாறு ணர்ந்தணை தொல்பு லிச்சர ணத்தனீள்
வன்ப ணீசனொ டெய்த நீதி வசிட்ட னேர்வர வந்துதா
முன்பு செய்வகை யாலு ஞான முதிர்ச்சி யாலு முயங்கினோ
ரன்பு நீடிய தத்த மிற்றிக ழாத ரங்கள் பெருக்கினார்.

இ - ள். துன்பம் எய்திய ஆறு உணர்ந்து அணை தொல் புலிச்சரணத்தன் - (இரணியவன்மருக்குத்) துக்கம் வந்தமையை அறிந்து வந்த பழைய வியாக்கிரபாதமகாமுனிவர்—நீள் வன் பணீசனொடு எய்த - உயர்ந்த வலிய பதஞ்சலிமகாமுனிவரோடும் அணுக,—நீதி வசிட்டன் நேர் வர - நீதியையுடைய வசிட்டமகாமுனிவர் (அவர்கள்) எதிரே வர,—வந்து முயங்கினோர் - (இப்படி) வந்து கூடிய மூவரும்—தாம் முன்பு செய் வகையாலும் ஞானமுதிர்ச்சியாலும் - தாங்கள் முன்பு செய்த பிரகாரத்தினாலும் ஞானத்தின் முதிர்ச்சியினாலும்—அன்பு நீடிய தத்தமில்

திகழ் ஆதரங்கள் பெருக்கினர் - அன்பு மிகும்படி தங்கள் தங்க ளுள்ளே விளங்காநின்ற சற்காரங்களை மிகச்செய்தார்கள். எ-று.

மன்னு நற்றவர் தம்மி லுய்த்தபின் மைந்தன் வந்து வணங்கநா, மென்னு ரைத்து முடிந்த வாறிது வென்று தந்தை யெடுத்துமேன், மின்னி லைத்துள தன்னின் மொக் குளும் வேறி தற்குவ மித்திடிற், றன்னை யொத்துள தென் னின் யாருட றஞ்ச மாநினை நெஞ்சரே.

இ - ள். மன்னும் நற்றவர் தம்மில் உய்த்த பின் - நிலைபெ ற்ற நல்ல தவத்தையுடைய முனிவர்கள் தம்மிற் கூடியிருந்த பின்பு,—மைந்தன் வந்து வணங்க - குமாரராகிய இரணியவன் மர் வந்து நமஸ்கரிக்க;—நாம் என் உரைத்தும் முடிந்த ஆறு இது என்று - நாம் யாது சொல்வோம் முடிந்தபடி இது என்று சொல்லி,—தந்தை எடுத்து - பிதாவாகிய வியாக்கிரபாதமகா முனிவர் (மார்பிலே பொருந்த) எடுத்தணைத்து,—மேல் மின் நிலைத்துள - ஆகாயத்துள்ள மின் (வெளிப்படத் தோன்றிநின்று கெடுதலாற் சிறிதுபொழுதாயினும்) நிலைத்துள்ளது;—தன்னின் மொக்குளும் - அதுபோலவே நீர்க்குமிழியும் (வெளிப்படத் தோன்றி நின்று கெடும்)—இதற்கு உவமித்திடில் வேறு-(அவை களை) இச்சரீரத்துக்கு உவமித்தாற் பொருந்தாத வேறுபடும்;— தன்னை ஒத்துளது என்னின் - (நிலையாமைக்குச் சரீரம்) தன் னைத் தானே ஒத்துளதெனின்,—உடல் தஞ்சமா நினை நெஞ்சர் யார் - சரீரத்தை நிலையுடையதாக நினைக்கும் உள்ளத்தையுடை யவர் யாவர்! எ - று. (௬௬)

பிரமரேமுத லான தந்தி பிறங்கெ றும்பிடை பே ணுசீ, ருருவி னோர்களில் யாரு ளோர்சரு கோடு வாடை யொதுக்கவுற், றிரிய நூறிய சூறை மாருத மென்ன வல் வினை நல்குமா, லருளி லோரென நோத காதென வாறு மாமுனி கூறினன்.

இ - ள். பிரமரே முதல் ஆன தந்தி பிறங்கு எறும்பு இடை பேணு சீர் உருவினோர்களில் யார் உளோர் - பிரமாக்கள் முதலாக உண்டாகிய யானை விளங்குகின்ற எறும்பு இவற்றின் இடைப்பட்டனவாகக் குறிக்கப்பட்ட சிறப்புப் பொருந்திய சரீரத்தையுடையவர்களுள்ளே யாவர் நசியாதவர்!—சருகு ஓடு வாடை ஒதுக்க - சருகுகளை ஓடுகின்ற வாடைக்காறறு (ஓரிடத்திலே) ஒதுக்க—உறறு இரிய நூறிய சூறை மாருதம் என்ன - (அவைகளைப்) பொருந்தி (அவை) பிரியுமபடி அழிக்கின்ற சூறைக் காற்றுப்போல—வல்வினை நல்கும் - (தாய் தநதை மனைவி மைந்தர் முதலிய பாசங்களை மெலவினை கூட்ட) வலவினை பிரிக்கும்,—அருள் இலோர் என நோக்காது என - அருளில்லாதவர் போலத் தூக்கமுறுதல் தகாது என்று—ஆறு மாமுனி கூறினான் - (இரணியவனமர்) ஆறும்படி (வியாக்கிரபாதமகாமுனிவர் அருளிச்செய்தார். எ - று. (கூஎ)

மருவ ருப்புகழ் வாய்மை நீடு வசிட்டன் மாதவ மன்னிநீ, ரிருவ ரும்பெறு நன்மை பொன்னுரு வெய்து மைந்தனும் யாமுமிப், பொருவ ரும்புவி யோரு மேலமர் போக ரும்பிரி யாவருங், கருவ ரம்பு கடக்க நல்கினி ரென்று நன்றி கதித்தனன்.

இ - ள். மருவு அரும் புகழ் வாய்மை நீடு வசிட்டன் - பொருந்துதற்கரிய கீர்த்தியும் மெய்ம்மையும் மிக்க வசிட்டமகாமுனிவர்—நீர் இருவரும் மா தவம் மன்னிப் பெறும் நன்மை - நீங்களிருவிரும் பெரிய தவத்தைச் செயது பெற்ற பெருவாழ்வை—பொன் உரு எய்தும் மைந்தனும் - பொன்னுருவத்தையடைந்த குமாரனும்—யாமும் - நாமும்—இப் பொருவு அரும் புவியோரும் - இநத ஒப்பில்லாத பூமியிலுள்ளோர்களும்—மேல் அமர் போகரும் - சுவர்க்கத்திலே பொருந்திய தேவர்களும்—பிரியா அரும் கரு வரம்பு கடக்க - நீங்காத அரிய பிறவியெல்லை

யைக் கடக்கும்பொருட்டு—நல்கினீர் என்று நன்றி கதித்தனன்- அருளிச்செய்தீர்கள என்று நன்றி பாராட்டினார். எ - று. (கஅ)

தில்லை யெல்லை புகுந்தி வன்பெறு சீர்கொ ணீடருள் கூறிலோ, ரெல்லை யில்லை வசிட்ட நீயு மிறைஞ்ச வெய்துக வென்றுநற், றொல்லை மல்ல லிலஞ்சி மேவு தொழுந்த கைப் புன லாடுவித், தொல்லை மல்கிய மன்ற வாய்மை யுணர்த்தி முன்பணி வித்தனன்.

இ - ள். (அது கேட்ட வியாக்கிரபாதமகாமுனிவர்)— இவன் தில்லை எல்லை புகுந்து பெறு சீர் கொள் நீடு அருள் கூறில் ஓர் எல்லை இல்லை - இந்தவிரணியவன்மன் சிதம்பரத்தெல்லையிலே புகுந்து பெற்ற சிறப்புப் பொருந்திய மிக்க திருவருளைச் சொல் லப்புகின் ஓரளவில்லை;—வசிட்ட நீயும் இறைஞ்ச எய்துக எனறு - வசிட்டமுனிவரே நீரும் நமஸ்கரிக்க வாரும் என்று (அழைத்துக்கொண்டு போய்,)—நல் தொல்லை மல்லல் இலஞ்சி மேவு தொழும் தகைப் புனல் ஆடுவித்து - நல்ல பழைய வளத் தையுடைய திருக்குளத்திலே பொருந்திய வணங்கப்படுந் தகை மையையுடைய தீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணுவித்து,—ஒல்லை மல்கிய மன்ற வாய்மை உணர்த்தி - பழைமை பொருந்திய சிற் சபையினது உண்மையை உபதேசித்து.—முன் பணிவித்தனன் - (நடராஜர்) சந்நிதியிலே நமஸ்கரிப்பித்தார். எ - று. (கக)

கரவி லாடல் வணங்கி வண்கரு மூல கார ணனாரணப் பொருவில்லாத மிறைஞ்சி நீடு புலீச்சு ரந்தொழுதெங்கணும் பரவி நீடு வசிட்ட மாமுனி பாய்பு லிச்சர ணத்தன்வாழ் விரவு மாச்சிர மத்தின் மேவி விருந்த ருந்தி யிருந்தனன்.

இ - ள். நீடு வசிட்டமாமுனி - உயர்ந்த வசிட்டமகாமுனி வர்—கரவு இல் ஆடல் வணங்கி - மறைப்பில்லாத திருநிருத் தத்தை நமஸ்கரித்து,—வண் கரு மூலகாரணன் ஆரணப் பொ

ருவு இல் பாதம் இறைஞ்சி - (பிரபஞ்சத்துக்கு) மெய்மையாகிய கருவாயுள்ள ஸ்ரீமூலட்டானேசுரருடைய வேதத்திலுலே துதிக்கப்படும் ஒப்பில்லாத திருவடிகளை வணங்கி,—நீடு புலீச்சுரம் தொழுது - பழைய திருப்புலீச்சுரததை நமஸ்கரித்து,—எங்கணும் பரவி - திருவெல்லையெங்கும் (உள்ள சிவலிங்கங்களைத்) துதித்து,—பாய புலிச் சரணத்தன வாழ விரவும் ஆச்சிரமத்தின் மேவி - பாய்கின்ற புலிக்கால்போலும் பாதத்தையுடைய முனிவர் வாழ்வுபொருந்தும் ஆச்சிரமததிலே பொருந்தி,—விருந்து அருந்தி இருந்தனன் - விருந்துண்டிருந்தார். எ - று. (க00)

அந்தி வந்தனை தந்த னந்தன தாசி லாச்சிர மத்திலுற்
றெந்தைபாத மிறைஞ்சி வந்திரு ளெல்லி செல்லவெழுந்துநற்
சந்தி சேர்பணி ராச னுந்தகு சைவ ராசனு மெய்தவே
வந்த வைதிக ராச னான வசிட்டன் மன்னி யிருந்தனன்.

இ - ள். அந்தி வந்தனை தந்து - சாயங்காலத்திலே சந்தியாவந்தனம் பண்ணி,—அனந்தனது ஆசு இல் ஆச்சிரமத்தில் உற்று - பதஞ்சலிமகாமுனிவருடைய குற்றமில்லாத பர்ணசாலையிலே போய்,—எந்தை பாதம இறைஞ்சி வந்து - எம்முடைய பிதாவாகிய திருவனந்தேச்சுரருடைய திருவடிகளை நமஸ்கரித்து (மீண்டு வியாக்கிரபாதமகாமுனிவருடைய பர்ணசாலைக்கு) வந்து,—இருள் எல்லி செல்ல எழுந்து - இருண்ட இராத்திரி செல்ல (வைகறையில்) எழுந்து,—நற சந்தி சேர் பணிராசனும் தகு சைவராசனும் எய்த - நல்ல சந்தியாவந்தனததைப் பொருந்திய நாகராசராகிய பதஞ்சலிமகாமுனிவரும் தக்க சைவராசராகிய வியாக்கிரபாதமகாமுனிவரும் (வந்து) பொருந்த,—வந்த வைதிகராசன் ஆன வசிட்டன் மன்னி இருந்தனன் - வந்த வைதிகராசராகிய வசிட்டமகாமுனிவர் பொருந்தியிருந்தார். எ - று. (க0க)

தீதி லாத விராச ராசனும் வந்து வந்தனை செய்துநா
னேதி லாரென வோத கேனரு ளெந்தை மாரிவர் மைந்தன்யா

ஞாத லாலுயர் வீடு மெய்துவ னென்று முன்ன ரமர்ந்தபின்
கோதி லாத் வசிட்டன் வந்தமை கூறு வானிட ராறுவான்.

இ-ள். தீது இலாத இராசராசனும் வந்து வந்தனை செய்து - குற்றமில்லாத இராசராசராகிய இரணியவன்மரும் (முனிவர்கண் முன்னே) வந்து நமஸ்காரம்பண்ணி,—நான் ஏதிலார் என நோகேன் - தமியேன் பிறர்போலத் துக்கமடையேன்,—அருள் எநதைமார் இவர் - அருட்பிதாக்கள் இவர்கள்—மைந்தன் யான் - (இவர்களுக்குப்) பிள்ளை நான்;—ஆதலால் உயர் வீடும் எய்துவன் என்று - ஆதலினாலே மேலாகிய மோக்ஷத்தையும் அடைவேன் என்று சொல்லி—முனனர் அமர்ந்தபின் - (அவர்கள்) சந்நிதியில் இருந்தபின்பு,—கோது இலாத வசிட்டன் வந்தமை இடர் ஆறுவான் கூறுவான - குறறமிலலாத வசிட்டமகாமுனிவர் (தாம் எண்ணி) வந்த காரியததைத் துக்க நீஙகும்படி சொல்வாராயினர். எ - று. (க0உ)

அருந்த திக்கிறை யோனெ மக்கிவ னுக்கு ஞாலமளித்
துநீ, திருந்த வுய்த்து நடத்து கென்றுரை செய்து மனனு
யிர் சென்றபின், றருந்த மன்னுயிர் போன மேனி தகக்கி
டந்தது தம்பிமா, ரிரந்து கொண்டனர் கொண்டு போதரு
விங்கு வந்தன மென்றனன்.

இ-ள். அருந்ததிக்கு இறையோன் - அருந்ததிக்கு நாயகராகிய வசிட்டமுனிவர்—இவனுக்கு ஞாலம் அளிதது நீ திருந்த உய்த்து நடத்துக என்று எமக்கு உரைசெய்து மன் உயிர் சென்ற பின் - இச்சிஙகவன்மனுக்குப் பூமியைக் கொடுத்து நீர் இவனைத் திருத்தமுற நீதியிலே செலுத்தி நடத்துவீராக என்று எமக்குச் சொல்லிக் கௌடராசா உயிர் நீங்கியபின்பு—தரும் தம் மன் உயிர் போன மேனி தகக் கிடந்தது - (அவன் இவனுக்குக்) கொடுத்த இராச்சியம் நிலைபெற்ற உயிர் நீங்கிய உடம்பு போலக் கிடந்தது;—தம்பிமார் இரந்து கொண்டனர் - (இவனு

டைய) தம்பிமார்கள் வேண்டிக்கொண்டார்கள்,—கொண்டு போதர இங்கு வந்தனம் என்றனன் - (இவனை) அழைத்துக் கொண்டு போக இங்கே வந்தேம் என்றார். எ - று. தம் - செல்வம். (௧0௩)

வன்பு லிச்சர ணத்த னீடு வசிட்டன் வந்தமை சிந்தை செய், தென்செ யத்தகு மென்று மைந்தனை யெய்த வாள் விழி செய்ய முன், றன்க ருத்தறி வித்த லான்மொழி தந்தி டான தறிந்துமே, னின்செ யற்கிசை யத்த குந்திற நீப கர்ந்திடு கென்றலும்.

இ - ள். வன் புலிச்சரணத்தன் - வலிய வியாக்கிரபாத மகாமுனிவர்—நீடு வசிட்டன் வந்தமை சிந்தை செய்து - பழைய வசிட்டமகாமுனிவர் வந்த காரியத்தைச் சிந்தித்து,—என் செயத் தகும் என்று மைந்தனை எய்த வாள் விழி செய்ய - (இதற்கு) யாது செய்யத்தகும் என்று குமாரராகிய இரணிய வன்மரைப் பொருந்தும்படி ஒளியையுடைய கண்களினாலே பார்க்க,—தன் கருத்து முன் அறிவித்தலால் மொழி தந்திடான் - (அவ்விரணியவன்மர்) தமது கருத்தை முன்னே விண்ணப்பஞ் செய்துகொண்டமையால் உத்தரங்கொடாதிருந்தார்,—அது அறிந்து - (வியாக்கிரபாதமகாமுனிவர்) அதனை யறிந்து,—மேல் நின் செயற்கு இசையத் தகும் திறம் நீ பகர்ந்திடுக என்றலும் - இனி உன் செய்கைக்குப் பொருந்தத் தக்க காரணத்தை நீ சொல்வாயாக என்று அருளிச்செய்தலும். எ - று. (௧0௪)

## வேறு.

அந்தமி லரசுஞ் சித்தி யனைத்துநீ டமரர் வாழ்வு
மிந்திர சால நீர்மே லெழுத்து மின்கொப்பு ளிப்பொய்ச்
சிந்தனை வேண்டே னுண்ட திருமுனி திருமு னிந்த
வந்தனை வழுவா வாழ்வு வழங்குவா யாக வென்றான்.

இ - ள். அந்தம் இல் அரசும் - முடிவில்லாத இராச்சிய மும்—சித்தி அனைத்தும் - சகலசித்திகளும்—நீடு அமரர் வாழ் வும் - ஒழியாத தேவர்கள் பதங்களும்—இந்திரசாலம் - (மயக் கப்பொருளாகிய) இந்திரசாலத்தையும்—நீர்மேல் எழுத்து - (தோன்றும்பொழுதே அழிகின்ற) நீர்மேலெழுத்தையும்—மின்- (தோன்றி அழிகின்ற) மின்னலையும்—கொப்புள் - (தோன்றி நின்றழிகின்ற) நீர்க்குமிழியையும் போல்வனவாம்;—இப்பொய்ச் சிந்தனை வேண்டேன் - இந்தப்பொய்ப் பொருள்களை நினைத் தலையும் விரும்பேன்;—ஆண்ட திருமுனி - (சிறியேனை) ஆண் டருளிய திருமுனிவரே,—திருமுன் இந்த வந்தனை வழுவா வாழ்வு வழங்குவாயாக என்றனை-உமது சந்நிதியிலே யான் செய் துகொண்டுவருகின்ற இந்தவழிபாட்டிலே தவறுமையாகிய வாழ் வையே தந்தருள்வீராக என்று விண்ணப்பஞ்செய்தார். எ - று.

ஆகினீ முனிவ னோடு மாண்டணைந் தரச மௌலி
நாகமா விரதந் தானை நவமணி நிதியு ளிட்ட
போகமார் பொருள மைச்சர் பேதையர் பொருந்தக் கொண்டு
வேகமாய் வருவா யென்று வியாக்கிர பாதன் கூறி.

இ - ள். ஆகில் - (உன்கருத்து) இங்ஙனமாயின்,—நீ முனி வனோடும் ஆண்டு அணைந்து - நீ வசிட்டமகாமுனிவருடனே அங்கே போய்,—அரச மௌலி - இராசகிரீடத்தையும்—நாகம் மா இரதம் தானை - யானை குதிரை தேர்காலாட்களையும்—நவ மணி நிதி உள்ளிட்ட போகம் ஆர் பொருள் - நவரத்தினம் பொன்னுள்ளிட்ட போகநுகர்தற்குரிய திரவியங்களையும்— அமைச்சர் பேதையர் பொருந்தக் கொண்டு - மந்திரிமார்களையும் ஊழியக்காரிகளையும் பொருந்தும்படி கைக்கொண்டு—வேகம் ஆய் வருவாய் என்று வியாக்கிரபாதன் கூறி - சீக்கிரம் வருவா யாக என்று வியாக்கிரபாதமகாமுனிவர் அருளிச்செய்து. எ-று.

மன்றமர் நடமுன் போற்றி யெம்முடன் மருவி னோரின், முன் றிகழ் முனிவர் மூவா யிரவரை முதுவேள் விக்கென், றன்

றயன் வேண்டிக் கொண்டா னவர்களை யந்தர் வேதி, சென்றுடன் கொணர்வா யென்று திருமுனி யருளிச் செய்தான்.

இ - ள். மன்று அமர் நடம் முன் போற்றி எம்முடன் மருவினோரின் - கனகசபையிலே பொருந்திய திருநிருத்தத்தை ஆதியில் வணங்கிக்கொண்டு நம்மோடு இருந்தவர்களுள்ளே— முன் திகழ் முனிவர் மூவாயிரவரை - முதன்மையாக விளங்குகின்ற மூவாயிரமுனிவர்களை— முது வேள்விக்கு என்று அன்று அயன் வேண்டிக் கொண்டான் - பழைய யாகத்துக்கென்று அந்நாளிலே பிரமா வந்து (நம்மை) வேண்டி அழைத்துக்கொண்டு போயினர்;— அந்தர்வேதி சென்று அவர்களை உடன் கொணர்வாய் என்று திருமுனி அருளிச்செய்தான் - அந்தர்வேதிக்குப் போய் அவர்களை உன்னுடனே கொண்டுவருவாயாக என்று வியாக்கிரபாதமகாமுனிவர் அருளிச்செய்தார். எ - று.

அந்தர்வேதியாவது கங்கைக்கும் யமுனைக்கும் நடுவேயுள்ள தேசம். அந்தர் - நடு. வேதி - சமபூமி. (௧0எ)

திருவுள மான தொன்று செய்தவ மென்று செப்பப்
பொருபுலி முனிமகிழ்ந்து பொதுநட முடனே போற்றி
யருள்புரி பெருமா னிந்த வடிகளேம பணிநடத்த
விரைவொடு வருவானேக வேண்டும் விண்ணப்ப மென்றான்.

இ - ள். திருவுளம் ஆனது ஒன்று செய் தவம் என்று செப்ப - (உமது) திருவுளத்துக்குப் பொருந்தியது யாதொன்றுண்டு அதுவே அடியேனாலே செயற்பாலதாகிய தவம் என்று (இரணியவன்மர்) விண்ணப்பஞ்செய்ய;—புலி பொரு முனி மகிழ்ந்து - (கையினாலுங்காலினாலும்) புலியைப் போன்ற முனிவர் மகிழ்ந்து,—உடனே பொது நடம போற்றி - (அவ்விரணியவன்மரோடும்) உடனே சபாநிருத்தத்தை வணங்கி—பெருமான் அருள் புரி - எம்பெருமானே திருவருள் செய்யும்,—இந்த அடிகளேம் பணி நடத்த விரைவொடு வருவான் ஏகவேண்டும் - இந்த

அடியேங்களுடைய பணிவிடைகளை நடத்துதற்கு விரைவோடு வரும்படி (இவன்) போதல் வேண்டும்,—விண்ணப்பம் என்றான்-(இது எங்கள்) விண்ணப்பம் என்றார். எ - று. (கஂ0அ)

கண்ணுத லோனு மெண்ணில் கருணையு மருளு நல்க
வெண்ணரு மின்பமெய்தியெந்தைதாள்சிந்தைசெய்து [தான்
விண்ணவ னிசைவான் மைந்தன் விடைகொண்டு மீண்டு போந்
மண்ணுற வண்ணல் பாதம் வசிட்டனும் வணங்கி வந்தான்.

இ - ள். கண்ணுதலோனும் எண் இல் கருணையும் அருளும் நல்க - நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானும் எண்ணில்லாத காருண்ணியத்தையும் அநுஞ்ஞையையுங் கொடுத்தருள;—மைந்தன் எண் அரும் இன்பம் எய்தி - குமாரராகிய இரணியவன்மர் அளவிடற்கரிய இன்பத்தை அடைந்து,—எந்தை தாள் சிந்தை செய்து - எமது பிதாவாகிய சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானஞ்செய்து,—விண்ணவன் இசைவால் விடை கொண்டு மீண்டு போந்தான் - அக்கடவுளுடைய சம்மதியினாலே விடை கொண்டு (வியாக்கிரபாதமகாமுனிவருடைய பர்ணசாலைக்கு) மீண்டு சென்றார்;—வசிட்டனும மண் உற அண்ணல் பாதம் வணங்கி வந்தான் - வசிட்டமுனிவரும் பூமியிலே (எட்டுறுப்பும்) பொருந்தும்படி சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி (விடைகொண்டு) வந்தார். எ - று. (கஂ0கூ)

அன்னைநீ றளிப்பப் போற்றி யாருயி ரவர்பா லாகப்
பன்னக வுரவோன் றானும் பணிந்துபோய்ப் பரமர் தில்லைப்
பொன்னம ரெல்லை போற்றிப் போதுவான் புகழ் புலிக்கான்
மன்னவன் றன்னை யாண்ட வகைமொழிவழியாச்சென்றான்.

இ - ள். அன்னை நீறு அளிப்பப் போற்றி - மாதா விபூதி தரித்துவிட வணங்கி,—ஆர் உயிர் அவர் பால் ஆக - (தம்முடைய) அரிய ஆன்மா (மாதாவும் பிதாவுமாகிய) அவர்களிடத்த

தாக,—பன்னக உரவோன் தானும் பணிந்து போய் - பதஞ்சலி மகாமுனிவருடைய திருவடிகளையும் வணங்கிச் சென்று,—பரமர் தில்லைப் பொன் அமர் எல்லை போற்றிப் போதுவான் - சிவபெருமானுடைய தில்லைவனத்தினது அழகுபொருந்திய திருவெல்லையை வணங்கிக்கொண்டு போவாராகிய இரணியவன்மர்—புகழ் புலிக்கால் மன்னவன் தன்னை ஆண்ட வகை மொழி வழி ஆச் சென்றுன் - (யாவராலும்) புகழப்படுகின்ற வியாக்கிரபாதமகாமுனிவர் தமமைத் (தீக்ஷைசெய்து) ஆண்டருளிய முறைமைகளை விரிக்கும் வார்த்தைகளே வழிமுழுதும் நிகழப்போயினார். எ-று.

விற்கழி யம்புந் தந்து மேவிய விகங்க மும்போற்
கற்கடங் கடித கன்று கவுடதே யத்துத் தங்க
ணற்கட கத்துக் கோயி னண்ணலு மெண்ணின் மாதர்
வற்கமுந் தம்பி மாரு மால்கடற் கிளர்ச்சி கொண்டார்.

இ - ள். விற் கழி அம்பும் - வில்லினின்று நீங்கிச் சென்ற பாணமும்—தந்து மேவிய விகங்கமும் போல் - கயிறு கட்டிவிட்ட காற்றாடியும்போல—கற் கடம் கடிது அகன்று - மலைகளையும் காடுகளையும் விரைவிலே கடந்து,—கவுடதேயத்துத் தங்கள் நற் கடகத்துக் கோயில் நண்ணலும் - கௌடதேசத்திலுள்ள தங்கள் நல்லபட்டணத்தின் மாளிகையிலே புகுதலும்,—எண் இல் மாதர் வற்கமும் தம்பிமாரும் மால் கடற கிளர்ச்சி கொண்டார் - அளவில்லாத பெண்கள் கூட்டத்தாரும் தம்பிமாரும் பெரிய கடலினது கிளர்ச்சிபோல அழுதார்கள். எ - று. ()

அழுந்திய துயர நீங்கி யநுசரை யாற்றி யாயு
மிழுந்தன ளுகா வண்ண மிவரிருந் தனரே யென்றச்
சழிந்தமெய்த் தாய ருள்ளத் தளர்வுக ளகற்றி மற்றை
யொழிந்தநற் சுற்றத் தார்க ளியாரையுந் துயரொ ழித்தான்..

இ - ள். அழுந்திய துயரம் நீங்கி - (தாம்) அழுந்திய துன்பம் நீங்கி,—அநுசரை ஆற்றி - தம்பிமாரை ஆறப்பண்ணி,—யாயும்

இழந்தனன் - (தந்தையையும்) தாயையும் இழந்தேன்—ஆகா வண்ணம் இவர் இருந்தனரே என்று - (இங்ஙனம) இழநதனனாகாதபடி இவர்கள் இருந்தார்களே என்று—அச்சு அழிநத மெய்த தாயர் உள்ளத் தளர்வுகள் அகற்றி - (சுமங்கலைக்குரிய) அடையாளம் நீங்கிய உடம்பையுடைய சிறிய தாயருடைய மனக்கிலேசங்களை நீக்கி,—ஒழிந்த மற்றை நற் சுற்றத்தார்கள் யாரையும் துயர் ஒழித்தான் - எஞ்சிய மற்றை நல்ல சுறறததார்களெல்லாரையும் துன்பத்தினின்று நீக்கினார். எ - று. (கக௨)

எண்டகு துறைகொண் மாக்களி யாரையு மினித ழைத்துக்
கண்டுதன் கனக மேனிக் கவினவர் காண நல்கி
யண்டர்தம் பெருமா னாடு மமபலத் தொழனி யுன்னி
யொண்டிறற் குமர னாளோ ரூழியா மெனவொ ழித்து.

இ - ள். ஒண் டிறற் குமரன் - ஒள்ளிய வலியையுடைய குமாரராகிய இரணியவனமர்—எண் தகு துறை கொள் மாக்கள் யாரையும் இனிது அழைத்து - மதிக்கத்தக்க இடந்தோறுமுள்ள மனிதர்களெல்லாரையும் பிரீதியோடும் அழைதது,—கண்டு தன் கனக மேனிக் கவின் அவர் காண நல்கி - (அவர்களைத் தாம்) கண்டு தமது பொனமேனியழகை அவர்கள் காணும்படிகாட்டி,—அண்டர் தம் பெருமான் ஆடும அம்பலத் தொழனி உன்னி - தேவதேவராகிய சிவபெருமான் நடிக்கின்ற சபையின்கணுள்ள ஒலியைச் சிநதித்து,—நாள் ஓர் ஊழி ஆம் என ஒழித்து - ஒருநாள் ஒருழிக்காலமாம் எனறு சொல்லும்படி போக்கி. எ- று. (ககங)

பன்னுமந் திரிக டம்மைப் பார்த்தினி யிங்குப் பன்னாண்
மன்னிநான் வைக லேனென் வழுவுடற் பழுத கற்றிப்
பொன்னுரு வாகச் செய்த புலிமுனி சரணம போற்றற்
கென்னுடன் போதுவீரே லெய்துமென் றவர்க்கிசைத்தான்.

இ - ள். பன்னும் மந்திரிகள் தம்மைப் பார்த்து - சொல்லப்பட்ட மந்திரிமார்களை நோக்கி,—இனி இங்கு நான பல் நாள்

பன்னி வைகலேன் - இனி இங்கே நான் பலநாட்பொருந்தியிரேன்,—என் வழு உடற பழுது அகற்றிப் பொன் உரு ஆகச் செய்த புலிமுனி சரணம் போற்றற்கு-எனது குற்றத்தையுடைய சரீரத்திறபழுதை நீக்கிப் பொன்வடிவமாகச் செய்தருளிய வியாக்கிரபாதமகாமுனிவருடைய திருவடிகளை வழிபடும்பொருட்டு—என்னுடன் போதுவீரேல் எய்தும என்று அவர்க்கு இசைத்தான் - என்னோடு வருவீர்களாயின வாருங்கள் என்று அவர்களுக்குச் சொல்லினார். எ - று. (௧௧௪)

போதுவீ ராகின் மாயா போகமே யன்று மன்றில்
வேதனான் முகன்மால் காணா விண்ணவன் வெளியே நண்ணி
மாதொரு பாக மாக மகிழ்ந்துநின் றாடும வாழ்வு
மேதிலீர் பெறுவீ ரென்றங் கிரணிய வன்மன் சொன்னான்.

இ - ள். போதுவீர் ஆகில்-(இங்ஙனம்)வருவீர்களாயின்,—மாயா போகமே அன்று - மாயாகாரியமாகிய போகங்களை மாத்திரமன்று,—வேதம் நான்முகன் மால் காணா விண்ணவன் - வேதமும் பிரமாவும் விட்டுணுவுங்காணாத சிவபெருமான்—மன்றில் வெளியே நண்ணி - கனகசபையினகண்ணே வெளியே பொருந்தி—மாது ஒரு பாகம் ஆக மகிழ்ந்து நின்று ஆடும் வாழ்வும் - சிவகாமியம்மையார் ஒருபாகமாகத் திருவுள மகிழ்ந்து நின்று நடிக்கும் வாழ்வையும—ஏதிலீர் பெறுவீா என்று அங்கு இரணிய வன்மன் சொன்னான் - (இதற்கு) அன்னியராகிய நீங்களும் பெறுவீர்கள் என்று அங்கே இரணியவன்மர் சொல்லினார். எ-று.

மொழியது கேட்ட மைச்சர் முகமக மிகம லர்ந்து
வழுவிலா வெம்மை யாளு மன்னநீ சொன்ன தொன்று
தொழுதியா முயல்வோமென் றுசொல்லித்தென் றில்லைநோக்கி
யெழுகவான் பயண மென்றங் கெழுமுர சியம்பு வித்தார்.

இ - ள். அமைச்சர் மொழி அது கேட்டு முகம் அகம் மிக மலர்ந்து - மந்திரிமார்கள் அவ்வார்த்தையைக் கேட்டு முகமும்

மனமும் மிகமலர்ந்து,—எம்மை ஆளும் வழு இலா மன்ன - எம்மை ஆள்கின்ற குற்றமில்லாத மகாராசாவே,—நீ சொன்னது ஒன்று யாம் தொழுது முயல்வோம் என்று சொல்லி - நீர் கற்பித்த தொன்மையே நாயகள் வணங்கிச் செய்வோம் என்று விண்ணப்பஞ்செய்து,—தென்றில்லை நோக்கி வான் பயணம் எழுக என்று - தக்ஷிணதேசத்திலுள்ள தில்லைவனத்தை நோக்கிப் பெரிய பிரயாணம் புறப்படக்கடவீர்கள் என்று—அங்கு எழு முரசு இயம்புவித்தார் - அங்கே எழுச்சி முரசை அறைவித்தார்கள். எ - று. (ககசு)

அந்தமில் கனக வெற்பு மருநவ மணிப்பொ ருப்பு
மெந்திரத் தேரி னீட்ட மொட்டக மிவுளி யானை
தந்திரம் பண்டி வண்டி பரித்தெழத் தயங்கு நாட்டு
மைந்தர்கண் மகளிர் சைவர் வைதிகர் மகிழ்ந் தெழுந்தார்.

இ - ள். அந்தம இல் கனக வெற்பும் - முடிவில்லாத பொன்னாகிய குன்றுகளையும்—அரு நவ மணிப் பொருப்பும் - அரிய நவரத்தினங்களாகிய குன்றுகளையும்—எந்திரத் தேரின் ஈட்டம்-யந்திரத்தையுடைய தேர்க்கூட்டங்களும்—ஒட்டகம் - ஒட்டகங்களும்—இவுளி - குதிரைகளும்—யானை - யானைகளும்—தந்திரம்-காலாட்களும்—பண்டி வண்டி - இடவிய வண்டிகளும்—பரித்து எழ - தாங்கிச் செல்ல,—தயங்கு நாட்டு மைந்தர்கள் மகளிர்-விளங்குகின்ற கௌடதேசத்திலுள்ள ஆடவர்களும் பெண்களும்—சைவா வைதிகர் மகிழ்நது எழுந்தார் - சைவமார்க்கத்தார்களும வைதிகமார்க்கததார்களும் மகிழ்ந்து புறப்பட்டார்கள். எ - று. (ககஎ)

அன்னைய ரநுசர் மைந்த ரரிவையர் கணிகை மார்க
ளுன்னுமெய்க் காவ லாள ராரிய ருரிமை யோர்க
ளின்னுமெண் ணிலர்க ளோடு மிரணிய வன்ம னேகி
மன்னுசீ ரந்தர்வேதி மாதவர் தம்மைச் சார்ந்தான்.

இ - ள். அன்னையர் - சிறிய தாயர்கள் — அநுசர் - தம்பியிருவர்கள் — மைந்தர் - மற்றைக்குமாரர்கள் — அரிவையர் - குமாரத்திகள் — கணிகைமார்கள் - ஊழியக்காரிகள் — உன்னும் மெய்க் காவலாளர் - ஆராய்கின்ற மெய்காப்பாளர்கள் — ஆரியர் - ஆரியர்கள் — உரிமையோர்கள் - அகத்தடியார்கள் — இன்னும் எண் இலர்களோடும் - இன்னும் அளவில்லாதவர்களோடும் — இரணிய வன்மன் ஏகி - இரணியவன்மா சென்று, — மன்னு சீர் அந்தர் வேதி மாதவர் தம்மைச் சார்ந்தான் - நிலைபெற்ற புகழையுடைய அந்தர்வேதியிலிருந்த முனிவர்களை அடைந்தார். எ-று. (கக௮)

மும்மையா யிரவர் நீங்கண் முதுபதிப் பொதுவி லாடு
நம்மை யாளுடையான் பாத நாடொறு நயந்து போற்றற்
கெம்மை நீர்பிரியா தெய்தற்கெழின்முனியிசைத்தானென்று
செம்மையா ரிரவி போலத் தேர்பல சேர வுய்த்தான்.

இ - ள். மும்மை ஆயிரவர் நீங்கள் - மூவாயிரராகிய நீங்கள் — முது பதிப் பொதுவில் ஆடும் நம்மை ஆள் உடையான் பாதம் நாடொறும் நயந்து போற்றற்கு - பழைய தில்லைப்பதியிலுள்ள கனகசபையின்கண்ணே நடித்தருளும் நம்மை ஆளாக உடைய சிவபெருமானுடைய திருவடிகளை நாடோறும் விரும்பி வணங்கும்பொருட்டு — எம்மை நீர் பிரியாது எய்தற்கு - எம்மை நீங்கள் பிரியாது வரும்படி — எழில் முனி இசைத்தான் என்று - அழகையுடைய வியாக்கிரபாதமகாமுனிவர் அருளிச்செய்தார் என்று விண்ணப்பஞ்செய்து, — செம்மை ஆர் இரவிபோலப் பல தேர் சேர உய்த்தான் - செவ்வொளி நிறைந்த மலைகள்போல மூவாயிரமாணிக்கத்தேர்களை (அவர்களெதிரே) ஒருங்கே நிறுத்தினார். எ - று. (கக௯)

அங்கவர் தங்க டங்க வங்கிக ளாத ரித்து
மங்கையர் மகளிர் மைந்தர் வான்கலை யரணி மற்று
மெங்கணு நிறைய வேற்றி யிரதமுற் புரவி பூட்டிப்
பொங்கிய வோமதேனுப் போதுவ தொடர்ந்து போத.

இ - ள். அங்கு அவர் தங்கள் தங்க அங்கிகள் ஆகரித்து - அங்கே அம்முனிவர்கள் தங்களுடைய உயர்வாகிய வைதிகாக்கினிகளை அன்போடு கொண்டேறி,—மங்கையர் மகளிர் மைந்தர்-பத்தினிகளையும் புதல்வியர்களையும் புதல்வர்களையும்—வான் கலை அரணி மற்றும் - மேலாகிய கலைமான்றோலையும் தீக்கடைகோலையும் பிறவற்றையும்—எங்கணும் நிறைய ஏற்றி - எவ்விடத்திலும் நிறையவேற்றி,—இரத முன் புரவி பூட்டி - தேருக்கு முன்னாகக் குதிரைகளைப் பூட்டிக்கொண்டு (செல்ல,)—பொங்கிய ஓமதேனுப் போதுவ தொடர்ந்துபோத - உயர்ந்த ஓமத்துக்கு வேண்டும் பசுக்களுள்ளோ போகத்தகுவன தொடர்ந்து போக. எ - று. (கஉ0)

அந்தமில் பரிச னஞ்சூ ழரவமு மரசர் போற்றும்
வந்தனைத் துவைப்புந் தெய்வ மறையவர் மலிதே ரார்ப்புந்
தந்திரச் செருக்கும் வேழத் தமரிப்புஞ் சைந்த வங்கண்
முந்திய வொலியு முந்நீ ரேழினு மிகமு ழங்க.

இ - ள். அந்தம் இல் பரிசனம் சூழ் அரவமும் - முடிவில்லாத அடியார்கள் சூழ்ந்து சேவிக்கின்ற ஒலியும்—அரசர் போற்றும் வந்தனைத் துவைப்பும் - அரசர்கள் துதிக்கின்ற வந்தனையினதொலியும்—தெய்வ மறையவர் மலி தேர் ஆர்ப்பும் - தெய்வதன்மையையுடைய முனிவர்கள் பொருந்திய தேர்களினொளியும்—தந்திரச் செருக்கும் - சேனைகளினொலியும்—வேழத் தமரிப்பும - யானைகளினொலியும்—சைந்தவங்கள் முந்திய ஒலியும் - குதிரைகள் முந்திச் செல்கின்ற ஒலியும்—முந்நீர் ஏழினும் மிக முழங்க - சமுத்திரமேழினும் மிகவொலிக்க. எ - று.

விழிநுழை யாத கானம் வியன்சரி யாகுஞ் சாயுங்
கழிவுற மடியு மானைக் காலுறுந் தேர்க்கா லோட
வழிபடு மவர்காற் றூளி வானமும் புனித மாகப்
பொழிபெரு வழியா மாறு புரவல ஒனடிது போந்தான்.

இ - ள். விழி நுழையாத கானம் வியன் சரி ஆகும் - (முன்னே கொடிப்படை நடக்கக்) கண் நுழையாத காடுகள் பெரிய வழிகளாகும்;—சாயும் - (பின்பு குதிரைகள் பாய்ந்து செல்ல மரங்கள்) சாய்ந்து விழும்;—ஆனைக் கால் கழிவுற மடியும் - (பின்பு) யானைக்கால்கள் மிதித்து நடக்க (அம்மரங்கள்) நருக்குண்டுபோம்;—உறும் தேர்க் கால் ஓட வழி படும் - (பின்பு) மிக்க தேர்க்கால்கள் செல்ல வழியாய்விடும்;—அவர் கால் தூளி வானமும் புனிதம் ஆகப் பொழி பெரு வழி ஆம் ஆறு - பின் வருமவர்களுடைய காலினால் உண்டாகிய தூளி தேவருலகமுஞ் சுத்தமாகப் பொழிகின்ற பெரிய வழியாகும் வண்ணம்—புரவலன் நெடிது போநதான் - இரணியவன்மர் நெடுந் தூரம் போயினார். எ - று. (கஉஉ)

மன்னவர் தத்த மெல்லை வழிவிட வடவி வாழுங்
கொன்னவில் விலங்கு மந்தக் கொடுவழி விடப்போந் துள்ள
வின்னநல் வளனெ னுமை லெடுத்துவந் தெங்கு மீண்டிப்
பன்னதி வெள்ள மல்கும் பரவைபோல் விரவிப் பொங்க.

இ - ள். மன்னவர் தத்தம் எல்லை வழி விட - அரசர்கள் தங்கள் தங்கள் தேசத்தின எல்லைவரையுஞ்சென்று வழிவிட,—அடவி வாழும் கொன் நவில் விலங்கும் அந்தக் கொடு வழி விடப் போந்து - காடுகளில் வாழும் அச்சத்தைச் செய்கின்ற விலங்குகளும் அந்தக்கொடிய மார்க்கத்தை விட (இங்ஙனம்) போய்,—உள்ள இன்ன நல்வளன் எனுமல் எடுத்து வந்து - (அங்கங்கு) உள்ள திரவியங்களை இன்னவை நல்ல திரவியங்கள் என்னுமல் எடுத்துக்கொண்டு வந்து,—எங்கும் ஈண்டிப் பன்னதி வெள்ளம் மல்கும் பரவை போல் விரவிப் பொங்க - எங்கு நெருங்கிப் பலநதிவெள்ளங்கள் நிறைந்த சமுத்திரம் போலப் பொருந்திப் பொலிய. எ - று. (கஉங)

எண்டகு நாடுங் காடு மலைகளும் யாறு நீங்கிக்
கண்டது வழியா மண்டிக் கடிதுவந் தலர்ந்த கண்டல்

வெண்டரு மடலு நீறும் விரை தரு சோறு நல்கித்
தெண்டிரைப் புலவு மாற்றுந் தில்லையி னெல்லை சேர்ந்தான்.

இ - ள். எண் தகு நாடும் காடும் மலைகளும் யாறும் நீங்கி - எண்ணத்தக்க நாடுகளையும் காடுகளையும் மலைகளையும் நதிகளையுங் கடந்து,—கண்டது வழியா மண்டிக் கடிது வந்து - (தமக்கு) நேரிட்டதே வழியாக நெருங்கி விரைவில் வந்து,—அலர்ந்த கண்டல் - அலர்ந்த தாழைமரங்கள்—வெண் தருமடலும் நீறும் விரை தரு சோறும் நல்கி - வெண்மையைத் தருகின்ற மடலையும் நீற்றையும் மணத்தைத் தருகின்ற சோற்றையுஞ் சொரிந்து—தெண்டிரைப் புலவு மாற்றும் தில்லையின் எல்லை சேர்ந்தான் - தெளிவாகிய திரையையுடைய கடலினது புலாலுற்றத்தை நீக்குகின்ற தில்லைவனத்தினது திருவெல்லையை அடைந்தார். எ - று.

புரவியை விரைந்து போந்து புதல்வன்முன் பணிந்துபோற்றி
வருபெருஞ் செல்வங் கூற மாமுனி மகிழ்ந்து வாழ்த்தித்
திருவுடை யந்த ணாள ரெழுந்தருள் சீர்மை காண்பா
னிருவரு மெதிரே சென்றா ரியாவருந் தேரி ழிந்தார்.

இ - ள். புதல்வன் புரவியை விரைந்து போந்து - குமாரராகிய இரணியவன்மர் குதிரையை விரையச்செலுத்திக்கொண்டு சென்று,—முன் பணிந்து போற்றி - (வியாக்கிரபாதமகாமுனிவர்) திருமுன்னே நமஸ்கரித்துத் துதித்து,—வரு பெரும் செல்வம் கூற - (தமக்குப் பின்) வருகின்ற பெருஞ் செல்வத்தை விண்ணப்பஞ் செய்ய;—மா முனி மகிழ்ந்து வாழ்த்தி-வியாக்கிரபாதமகாமுனிவர் மகிழ்ந்து ஆசிர்வதித்து,—திரு உடை அந்தணாளர் எழுந்தருள் சீர்மை காண்பான் இருவரும எதிரே சென்றார் - அருட்செல்வத்தையுடைய முனிவர்கள் எழுந்தருள்கின்ற சிறப்பைக் காணும்பொருட்டுத் (தாமும் பதஞ்சலிமகாமுனிவருமாகிய) இருவரும் அவர்களெதிரேசென்றார்கள்,—யாவரும் தேர்

இழிந்தார் - அவர்களெல்லாருந் தேர்களினின்றும் இறங்கினார்கள். எ - று. (கஉரு)

அங்கவ ரணைந்து வாழ்த்தி யணைப்பவாழ் தமல வுன்றன்
மங்கல வருளான் மீண்டு வருநெறி பெற்றோ மின்னம்
பங்கயன் வரினு மண்ணல் பாதபங் கயங்க ணீங்கா
விங்கெமை முனிவ போக வினிவிடா தொழிக வென்றார்.

இ - ள். அங்கு அவர் அணைந்து வாழ்த்தி - அங்கே அம்முனிவர்கள் (வியாக்கிரபாதமகாமுனிவரை) அடைந்து துதித்து,— அணைப்ப வாழ்ந்து - அவர் (தங்களைத்) தழுவ வாழ்வுற்று,— அமல உன்றன் மங்கல அருளால் மீண்டு வரு நெறி பெற்றோம் - மலமில்லாதவரே உம்முடைய மங்கலமாகிய கருணையினாலே இவ்விடத்துக்குத் திரும்பி வரும் வழியைப் பெற்றோம்;—இன்னம் பங்கயன் வரினும - இன்னும் பிரமா வந்தாலும்—முனிவ இனி இங்கு அண்ணல் பாத பங்கயங்கள் நீங்காப் போக எமை விடாது ஒழிக என்றார் - முனிவரே இனி இங்கே சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளைப் பிரிந்து போம்படி எங்களை விடாதொழிக என்றார்கள். எ - று. (கஉசு)

மாமணித் தேர்கண் மன்றின் வடகுட பாணி றுத்தித்
தாமணைந் தருமு னிக்குத் தம்பிரா னருளி னாலே
தூமலி வகையாற் காட்டத் தொகையிலோர் முனிவ ரங்குத்
தேமலி யலங்கன் மார்பன் கண்டிலன் றிகைத்து நின்றான்.

இ - ள். மா மணித் தேர்கள் மன்றின் வடகுடபால் நிறுத்தி - மாணிக்கத்தேர்களைக் கனகசபையின் வடமேற்குப்பக்கத்திலே நிறுத்தி,—தாம் அணைந்து அரு முனிக்குத் தம்பிரான் அருளினாலே தூ மலி வகையால் காட்ட - தாங்கள் இப்பால் வந்து பொருந்தி வியாக்கிரபாதமகாமுனிவருக்குச் சிவபெருமானுடைய திருவருளினாலே சுத்த மிகுந்த வகையினாலே (தங்களை

ளண்ணிக்) காட்ட,—தேம் மலி அலங்கல் மார்பன் - மணநிறைந்த மாலையணிந்த மார்பையுடைய இரணியவன்மர்—தொகையில் ஓர் முனிவர் அங்குக் கண்டிலன் திகைத்து நின்றான் - (மூவாயிரர் என்னும்) தொகையிலே ஒருமுனிவரை அங்கே காணாது திகைத்து நின்றார். எ - று. (கஉஎ)

செம்மைமெய்ப் பெரியோர் போலத் தேடரி தென்று மைந்தன், மெய்மையிற் றுயர நோக்கி விமலன் விண்ணவருங் கேட்ப, வெம்மையொப் பவர்கள் யாரும் யாமவர்க் கொட்பே மென்றே, யம்மையப் பனுமா வானு மவர்களி லொருவ ரென்றான்.

இ - ள். செம்மை மெய்ப் பெரியோர் போலத் தேடு அரிது என்று மைந்தன் மெய்மையின் துயரம் நோக்கி - செப்பமாகிய வாய்மையையுடைய இந்தப் பெரியோர்களைப்போலத் தேடுதலரிது என்று இரணியவன்மர் சத்தியமாகப் படும் வருத்தத்தைக் கண்டு,—விமலன் - அநாதிமலமுத்தராயும்—அம்மை அப்பனும் ஆவான் - (உயிர்களுக்கு) மாதாவும் பிதாவுமாவாராயும் உள்ள சிவபெருமான்—விண்ணவரும் கேட்ப - தேவர்களுங் கேட்கும்படி—யாரும் எம்மை ஒப்பவர்கள் - அம்முனிவர்கள் எல்லாரும் நமக்கொப்பாவார்கள்—யாம் அவர்க்கு ஒப்பேம் என்றே - நாம் அவர்களுக்கொப்பாவேம் என்று சொல்லி,—நாம் அவர்களில் ஒருவர் என்றான் - நாம் அவர்களுள்ளே ஒருவர் என்றருளிச்செய்தார். எ - று. (கஉஅ)

என்றருள் செய்த வாய்மை யாவருங் கேட்டுத் தில்லை
மன்றினின் றாடு கின்ற மறையவன் மறையோர் தம்மி
லொன்றெண லாகு மேன்மை யுடையரென் றுளந்து ளங்கிச்
சென்றடி பணிந்தான் மைந்தன் றேவர்பூ மாரி பெய்தார்.

இ - ள். என்று அருள் செய்த வாய்மை யாவரும் கேட்டு - என்றருளிச்செய்த உண்மையை எல்லாருங்கேட்ப,—தில்லை மன்

றில் நின்று ஆடுகின்ற மறையவன் - தில்லையினுள்ள கனகசபை யின்கண்ணே நின்று திருநிருத்தஞ்செய்தருளும் வேத கர்த்தா வாகிய சிவபெருமான்—மறையோர் தம்மில் ஒன்று எனல் ஆகும் மேன்மை உடையர் என்று - இம்முனிவர்களுள் (நாம்) ஒருவர் என்று சொல்லத்தக்க மேன்மையையுடையர்கள் (இவர்கள்) என்று—மைந்தன் உளம் துளங்கிச் சென்று அடி பணிந்தான் - குமாரராகிய இரணியவன்மர் மனநடுங்கிக்கொண்டு போய் அவர் களுடைய திருவடிகளை நமஸ்கரித்தார்;—தேவர் பூ மாரி பெய் தார் - தேவர்கள் பூமழையைப் பொழிந்தார்கள். எ-று. (கஉகூ)

அண்டர்நா யகன ளித்த வருளினாற் றம்மை யஞ்சி
மண்டனில் வீழ்ந்தெ ழுந்துவாழ்ந்துதாழ்ந்தயர்ந்துவாழ்த்தி
யெண்டிகழ் முனிவ ரெம்மை யெழுமையு மடிமை யாகக்
கொண்டரு ளென்று கொண்டைக்கோலொடுகுணலையிட்டார்.

இ-ள். எண் திகழ் முனிவர் - எண்ணால் விளங்குகின்ற முனிவர்கள்—அண்டர் நாயகன் அளித்த அருளினால் தம்மை அஞ்சி - தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமான்கொடுத்த திருவருளினாலே தங்களைத் தாங்களே அறிந்து பயப்பட்டு,—மண்டனில் வீழ்ந்து எழுந்து வாழ்ந்து - பூமியிலே விழுந்து நமஸ்கரித்தெழுந்து வாழ்வு பெற்று,—தாழ்ந்து அயர்ந்து வாழ்த்தி - தங்களுள்ளே தாங்கள் நமஸ்கரித்துப் பரவசர்க ளாய்த் துதித்து,—எம்மை எழுமையும் அடிமை ஆகக் கொண்டு அருள் என்று - எங்களை எழுபிறப்பினும் அடிமையாகக் கொண் டருளும் என்று—கொண்டைக்கோலொடு குணலை இட்டார் - சோமன் கட்டிய தண்டுடனே குணலைக்கூத்தாடினார்கள். எ-று.

மன்மகன் றொழுது நின்றிம் மறையவர்க் கேவல் செய்தற்
கென்னமா தவம்பு ரிந்தேன் யானென விறைஞ்சி யேத்தப்
பன்னரு மிருடி மைந்தன் பான்மையைப் பரவ மன்றிற்
பொன்னடி பணிந்து வாழ்த்தி யாவரும் புகழ்ந்து போந்தார்.

இ-ள். மன் மகன் தொழுது நின்று - கௌடேசகுமாரரா கிய இரணியவன்மர் கும்பிட்டு நின்று,—இம் மறையவர்க்கு ஏவல் செய்தற்கு யான் என்ன மா தவம் புரிந்தேன் என இறை ஞ்சி ஏத்த - இம்முனிவர்களுக்குத் தொண்டுசெய்தற்கு நான் என்னபெருந்தவஞ்செய்தேன் என்று வணங்கித் துதிக்க;—பன் அரும் இருடி மைந்தன் பான்மையைப் பரவ - சொல்லுதற்கரிய வியாக்கிரபாதமகாமுனிவர் இரணியவன்மருடைய குணத்தைப் புகழ;—யாவரும் மன்றில் பொன் அடி பணிந்து வாழ்த்திப் புகழ்ந்து போந்தார் - எல்லாரும் கனகசபையின்கணுள்ள பொன் போலுந்திருவடியை வணங்கித் துதித்து இரணியவன்மரைப் புக ழ்ந்துகொண்டு போயினார்கள். எ - று. (௧௩௧)

நடநிலை பிரியா தானோர் ஞானவா னிருந்தாற் பாச
மிடையிரு ளகன்று கோடி விற்கிடை வெளியா மென்றாற்
றிடமிகு தவர நேகர் செறிதலாற் றிகழுந் தில்லை
யடவியு மிருணீங் கிற்றென் றதிசய மாகா தன்றே.

இ-ள். நட நிலை பிரியாதான் ஓர் ஞானவான் இருந்தால் - திருநிருத்தநிலையைப் பிரியாதவனாகிய ஒருஞானி (ஓரிடத்து) இருந்தால்—பாச மிடை இருள் அகன்று கோடி விற்கிடை வெளி ஆம் என்றால் - பாசமாகிய நெருங்கிய அந்தகாரநீங்கிக் கோடிவிற்கிடை வெளியாகும் என்று (சாத்திரங்கள் சொல்லு மாயின்,)—திடம் மிகு தவர் அநேகர் செறிதலால் - உறுதிமிக்க தவத்தையுடைய முனிவர்கள் அநேகர் நெருங்கி இருத்தலி னாலே—திகழும் தில்லை அடவியும் இருள் நீங்கிற்று என்று அதி சயம் ஆகாது - விளங்குகின்ற தில்லைவனமும் இருணீங்கியது என்று சொல்லுவது அதிசயமாகாது. எ - று. (௧௩௨)

அருந்தவ ரடங்கத் தில்லை யம்பலஞ் சூழ வைகத்
திருந்திய குமரன் மன்றந் திகழ்குண திசையிற் சேரப்
பொருந்திய தானை மல்கப் புகழ்படை வீடு செய்தங்
கிருந்தனன் பின்பு செய்த வியல்புக ளியம்ப லுற்றாம்.

இ - ள். அரும் தவர் அடங்கத் தில்லை அம்பலம் சூழ வைக- அரிய தவத்தையுடைய முனிவர்களெல்லாருந் தில்லையம்பலத்தைச் சூழவிருப்ப,—திருநதிய குமரன் - திருத்தமுற்ற குமாரராகிய இரணியவன்மர்—மன்றம் திகழ் குணதிசையில் சேர - கனகசபைக்கு விளங்குகின்ற கிழக்குத்திக்கிலே பொருந்தும் படி—பொருந்திய தானை மல்கப் புகழ் படைவீடு செய்து அங்கு இருந்தனன் - (தம்மை) அடைந்த சேனைகள் நிறைந்திருக்கப் புகழப்படுகின்ற (கொற்றவன்குடி என்னும்) படைவீடு செய்து அங்கே இருந்தார்;—பின்பு செய்த இயல்புகள் இயம்பல் உற்றும்-பின்பு செய்த காரியங்களைச் சொல்லலுற்றும். எ-று. (க௩௩)

இரணியவன்மச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள் - ௩௬௨.

---

# திருவிழாச்சருக்கம்.

எண்ணி லிருந்தவ ரெந்தை நடந்தொழு தின்பார
மண்ணில் வணங்கி யிணங்கரு மன்பொடு வாழ்நாளிற்
றிண்ணிய சிந்தைக ளொன்ற நினைந்தரு டோர்வாரா
யண்ணன் மருங்குயர் புங்கவர் சங்க மமர்ந்தார்கள்.

இ - ள். எண் இல் இருந் தவர் எந்தை நடம் தொழுது - அளவில்லாத பெரிய முனிவர்கள் எம்முடைய பிதாவாகிய சிவபெருமானுடைய திருநிருத்தத்தைக் கும்பிட்டு—இன்பு ஆர மண்ணில வணங்கி இணங்கு அரும் அன்பொடு வாழ் நாளில் - இன்ப நிறையும்படி பூமியிலே நமஸ்கரித்து ஒப்பில்லாத அன்போடு வாழுநாளிலே,—உயர் புங்கவர் - உயர்ந்த அம் முனிவர்கள்—திண்ணிய சிந்தைகள் ஒன்ற நினைந்து அருள் தேர்வார் ஆய் -

உறுதியாகிய சித்தங்கள் ஒருப்பட ஆராய்ந்து திருவருளை அறியும் கருத்துடையவர்களாகி(வந்து,)—அண்ணல் மருங்கு சங்கம் அமர்ந்தார்கள் - நடராசர்பக்கத்திலே திருக்கூட்டமாகி இருந்தார்கள். எ - று. (க)

சங்க மிருந்தபி னங்கமர் புண்டரி கத்தாளோ
னிங்கர சன்றரு மைந்தரின் முந்தைய னிப்பார்மெய்ப்
பொங்கருள் கொண்டு புரப்பவ னிப்புவி முற்காவற்
பங்கமி றம்பியர் தம்பதி யென்றுரை பாரித்தான்.

இ - ள். சங்கம் இருந்த பின் - திருக்கூட்டமாகி இருந்த பின்பு,—அங்கு அமர் புண்டரிகத்தாளோன் - அங்கே இருந்த வியாக்கிரபாதமகாமுனிவர்—இங்கு அரசன் தரு மைந்தரின் முந்தையன் - இங்கே கௌடராசாப் பெற்ற குமாரர்கண் மூவருள்ளே மூத்தவனாகிய இரணியவன்மன்—இப் பார் மெய்ப் பொங்கு அருள் கொண்டு புரப்பவன் - இந்தப்பூமியை மெய்மையாகிய நிறைந்த திருவருளைக்கொண்டு காக்கக்கடவன்,—இப்புவி முன் காவல் பங்கம் இல் தம்பியர் - இப்பூமியை (இரணியவன மன் உடற்குற்றந்தீரு) முன் காத்தற்கு உரியர்களாயுள்ள குற்ற மில்லாத தம்பியர்கள்—தம் பதி என்று உரை பாரித்தான் - தங் கள் கௌடதேசத்தைக் காக்கக்கடவர்கள் என்று இவ்வார்த் தையை வெளிப்படுத்தினார். எ - று. (உ)

உருகு பதஞ்சலி மன்னுப மன்னிய னன்மாமன்
றிருவுடை யந்தணர் யாரு முவந்துரை செய்யச்சி
ரிரணிய வன்மனை மன்மர பின்மண மேய்வித்தே
மருவிய மன்றயன் மண்டப மொன்று வகுப்பித்தார்.

இ - ள். உருகு பதஞ்சலி - உருகுகின்ற பதஞ்சலிமகாமுனிவரும்—மன் உபமன்னியன் - நிலைபெற்ற உபமன்னியுமகாமுனிவரும்—நல் மாமன் - (அவருடைய) நன்மாமனாகிய வசிட்ட

மகாமுனிவரும்—திருவுடையந்தணர் - திருவுடையந்தணர்களாகிய மூவாயிரமுனிவர்களும்—யாரும் - (மற்றை) யாவர்களும்—உவந்து உரை செய்ய - மகிழ்ந்து (அப்படியே) ஆகுக என்று சொல்ல,—சீர் இரணியவன்மனை மன் மரபின் மணம் ஏய்வித்து-புகழையுடைய இரணியவன்மரை இராசமரபின்படி விவாகஞ் செய்வித்து,—மருவிய மன்று அயல் மண்டபம் ஒன்று வகுப்பித்தார் - அங்கே பொருந்திய கனகசபையின் பக்கத்திலே ஒரு மண்டபத்தைச் செய்வித்தார்கள். எ - று. (௩)

மற்றதின் மங்கல மாலைக டோரணம் வாழ்தீபம்
பொற்றவி செண்பல கைக்குல நெய்பொரி புற்பூநூல்
சுற்றிய கும்ப முடன்கல சம்பல சூழ்வித்தே
யற்றிகழ் வொன்று சடங்கதி வாச மமைத்தார்கள்.

இ - ள். மற்றதின் - அம்மண்டபத்திலே—மங்கல மாலைகள் - மங்கலமாகிய திருமாலைகளும்—தோரணம் - தோரணங்களும்—வாழ் தீபம் - (அவியாது) நிலைபெற்ற தூண்டாவிளக்குகளும்—பொற்றவிசு-கனகசிங்காசனமும்—எண் பலகைக்குலம்-அட்டமங்கலம் வகுத்த பலகையின் கூட்டமும்—நெய் - நெய்யும்—பொரி - பொரியும்—புல் - (தருப்பை அறுகு முதலிய) புற்களும்—பூ - புட்பமும்—நூல் சுற்றிய கும்பமுடன் - நூல் சுற்றிய கும்பத்தோடு—பல கலசம் சூழ்வித்து - பலகலசங்களும் அமைத்து,—திகழ்வு அல் ஒன்று-விளக்கத்தையுடைய ஓரிராத்திரி முழுதும்—அதிவாசச் சடங்கு அமைத்தார்கள் - அதிவாச கிருத்தியத்தைச் செய்தார்கள். எ - று. (௪)

காலை தொடங்கி நடந்து சடங்கு கணித்தோதும்
வேலையின் மங்கல நீடபி டேகம் வியந்தாடி
மூல முயங்கிய மாமுடி தார்முத வாள்பெற்றங்
கேல விருந்தபி னிட்டன ராண்டொன் றிரண்டென்று.

இ - ள். காலை தொடங்கிச் சடங்கு நடந்து - உதயகாலந் தொடங்கிக் கிருத்தியம் நடந்து முடிந்து,—கணித்து ஓதும் வேலையில் - (சோதிடர்கள்) எண்ணிச் சொல்லிய முகூர்த்தத் திலே—மங்கலம் நீடு அபிடேகம் வியந்து ஆடி - (இரணியவன் மர்) மங்கலம் பொருந்திய அபிடேகம் வியப்போடு செய்யப் பெற்று,—மூலம் முயங்கிய மா முடி தார் முது வாள் பெற்று - பாரம்பரியம் பொருந்திய பெரிய மகுடமும் (சுவர்ண) மாலையும் பழைய வீரகட்கமும் பெற்று,—அங்கு ஏல இருந்த பின் - அங்கே (சிங்காசனத்திலே) பொருந்த இருந்தபின்பு,—ஆண்டு ஒன்று இரண்டு என்று இட்டனர் - (அவ்விரணியவன்மர் பெயரால்) ஒருவருடம் இருவருடம் என்று திருவாண்டெழுத்திட்டார் கள். எ - று. (ரு)

சிந்தை மகிழ்ந்தெதிர் வந்தனை தன்றன யன்செய்யத்
தந்தை மகிழ்ந்து தழீஇவள ராசிக டாநல்கிப்
புந்தி யிலங்கு புலிப்பதி காவல் புரப்பாயென்
றந்தமின் முந்து புலிக்கொடி யங்கை யகத்துய்த்து.

இ - ள். தந்தை - தந்தையாராகிய வியாக்கிரபாதமகாமுனி வர்—தன் தனயன் சிந்தை மகிழ்ந்து எதிர் வந்தனை செய்ய - தம் முடைய குமாரராகிய இரணியவன்மர் மனமகிழ்ந்து (தமது) சந் நிதியில் வந்து நமஸ்காரம்பண்ண,—மகிழ்ந்து தழீஇ வளர் ஆசி கள் தாம் நல்கி - (திருவுள) மகிழ்ந்து (அவரைத்) தழுவிக் கொண்டு மிக்க ஆசீர்வாதங்களைப் பண்ணி,—புந்தி இலங்கு புலிப்பதி காவல் புரப்பாய் என்று - அறிவின்கண்ணே விளங்கு கின்ற இவ்வியாக்கிரபுரத்தைக் காத்தல்செய்யக்கடவாய் என்று அருளிச்செய்து,—அந்தம் இல் முந்து புலிக்கொடி அங்கை அகத்து உய்த்து - முடிவில்லாதமுற்பட்ட புலிக்கொடியை (அவ ருடைய) அழகிய கையினிடத்தே கொடுத்தருளி. எ - று. (சு)

போதுக வென்று வலங்கொடு புக்கருண் மிக்காடு
நாதன்மு னன்மலர் சிந்தி வணங்க நயந்தண்ணல்

பாத மிரண்டு மெடுத்தவன் முச்சி பரிப்பித்தா
னோத மெழுந்தன யாவரு மோகை யுரைத்தார்கள்.

இ - ள். போதுக என்று வலம் கொடு புக்கு - வருவாயாக என்று பிரதக்ஷிணமாகக் கொண்டு உள்ளே புகுந்து,—அருள் மிக்கு ஆடும் நாதன்முன் நல் மலர் சிந்தி வணங்க நயந்து - கருணை மிகுத்து நடித்தருளுஞ் சிவபெருமானுடைய சந்நிதியிலே நல்ல பூக்களைச் சொரிந்து நமஸ்கரிக்கப் பண்ணி,—அண்ணல் பாதம் இரண்டு எடுத்து அவன் முச்சி பரிப்பித்தான் - அநடராசருடைய திருவடிகளிரண்டையும் எடுத்து அவ்விரணியவன்ம ருடைய சிரசிலே தரிப்பித்தார்;—யாவரும் ஓதம் எழுந்து என ஓகை உரைத்தார்கள் - (அப்பொழுது) எல்லாரும் கடலெழுந் தாற்போலப் பிரீதிவார்த்தை சொல்லினார்கள். எ - று. (எ)

ஈறில் பெருந்தன மென்னவை நின்னவை யிப்பார்மே
லாறினி லொன்றுகொ ளஞ்சினி லொன்று கொளத்தாவிப்
பேறு பிறந்தடி யேன்மர போர்கள் பிழைத்தாலுங்
கூறரு மன்பு கொடுத்தடி மைப்பணி கொள்கென்றான்.

இ - ள். என்னவை ஈறு இல் பெரும் தனம் நின்னவை - (முன்னுள்ள) என்னுடையவைகளாகிய முடிவில்லாத பெருஞ் செல்வங்கள் உம்முடையவைகளாகக்கடவன;—இப் பார் மேல் ஆறினில் ஒன்று கொள் - (இனி) இப்பூமியின்கண்ணே ஆறி லொன்றாகிய இறைப்பொருளை நீரே ஏற்றருளும்,—அஞ்சினில் ஒன்று கொளத் தா - (இவ்விறைப்பொருளிலே) அஞ்சிலொன்றை (அடியேனுக்கும் சேனைகட்கும் சீவனத்தின் பொருட்டுக்) கொள் ளும்படி தந்தருளும்;—அடியேன் மரபு பிறந்தோர்கள் இப்பேறு பிழைத்தாலும் - அடியேன் வமிசத்திலே பிறந்தவர்கள் இப்பெற் றியில் வழுவினாலும்—கூறு அரும் அன்பு கொடுத்து அடிமைப் பணி கொள்க என்றான் - (அதனைப் பொறுத்துக்கொண்டு)

சொல்லுதற்கரிய பத்தியைக் கொடுத்து அடிமைத் தொழில் கொண்டருளும் என்று வேண்டிக்கொண்டார் (இரணியவன்மர்.) எ - று. (அ)

அண்ணலு மவ்வகை செய்குவ மென்றருள் செய்போதிற்
கண்ணமர் தாரைகள் காரை நிகர்ப்பக் கரைவுற்றங்
கெண்ணரு மின்னரு ளெய்தி யிறைஞ்சி யெழுஞ்சேயைத்
திண்ணிய நன்முனி கொண்டுடை யானடி சேர்வித்தான்.

இ - ள். அண்ணலும் அவ்வகை செய்குவம் என்று அருள் செய் போதில் - நடராசரும் அப்படியே செய்வோம் என்று திருவாய்மலர்ந்தருளியபொழுது,—கண் அமர் தாரைகள் காரை நிகர்ப்பக் கரைவுற்று - கண்களிலே பொருந்திய நீர்த்தாரைகள் மழையையொக்கும்படி அழுது—அங்கு எண் அரும் இன் அருள் எய்தி இறைஞ்சி எழும் சேயை - அங்கே அளவிடற்கரிய இனிய திருவருளைப் பெற்று நமஸ்கரித்தெழுந்த குமாரராகிய இரணியவன்மரை—திண்ணிய நல் முனி கொண்டு - உறுதியையுடைய நல்ல வியாக்கிரபாதமகாமுனிவர் அழைத்துக்கொண்டு (சென்று,)—உடையான் அடி சேர்வித்தான் - திருமூலத்தானமுடைய தம்பிரானுருடைய திருவடிகளை அடைவித்தார். எ - று. (க)

அங்கும் வணங்கி வணக்கரு மானையை மேல்கொண்டு
மங்கல மாநகர் சூழ்வர மாமுனி தானேவச்
சங்க மியங்கண் முழங்க வலங்கொடு தார்மார்பன்
பொங்கிய பங்கய மாதமர் கோயிலி னுள்புக்கான்.

இ - ள். அங்கும் வணங்கி - அவ்விடத்திலும் நமஸ்கரிப்பித்து—வணக்கு அரும் ஆனையை மேல்கொண்டு மங்கல மாநகர் சூழ்வர மா முனிதான் ஏவ - (பாகர்களாலும்) வணக்குதற்கரிய யானையை மேல்கொண்டு மங்கலத்தையுடைய பெரிய திருநகரத்தை வலஞ்செய்துவரும்பொருட்டு வியாக்கிரபாதமகாமுனி

வர் ஆஞ்ஞாபிக்க;—தார் மார்பன் - (ஆத்தி) மாலையை அணிந்த மார்பையுடைய இரணியவன்மர்—சங்க இயங்கள் முழங்க வலங் கொடு - சங்கு முதலிய வாத்தியங்கள் ஒலிக்க நகர்வலங் கொண்டு,—பொங்கிய பங்கய மாது அமர் கோயிலினுள் புக்கான் - உயர்ந்த செந்தாமரைமலரில் இருக்கும் இலக்குமி வசிக்கின்ற திருமாளிகையினுள்ளே புகுந்தார். எ - று. (௪௦)

தார்புனை யாரணி செம்பிய னெம்பியர் தாநல்கும்
பாருமதூருமதாக வெனுவணி தார்பட்டம்
போர்தரு சாமரை தோரைக ணீள்குடை பொற்பீடந்
தேரணி மாவய மாநிதி யாதிகள் சேர்வித்தான்.

இ - ள். தார் புனை ஆர் அணி செம்பியன - மாலையாகத் தொடுக்கப்பட்ட ஆத்திப்பூவை அணிந்த சோழராகிய இரணியவன்மர்—எம்பியர் தாம் நல்கும் பாரும் அது ஊரும் அது ஆக எனு - என்னுடைய தம்பிமார்கள் காக்குந்தேசமும் அந்தக் கௌடதேசமாகக்கடவது இராசதானியும் (அவர்கள் இருக்கும்) அந்த நகரமாகக்கடவது என்று சொல்லி,—அணி - ஆபரணங்கள்—தார் - மாலைகள்—பட்டம் - பட்டம்—போர் தரு சாமரை - பொருது வீசுகின்ற சாமரங்கள்—தோரைகள் - பீலிக்குடைகள்—நீள் குடை - நீண்ட குடைகள்—பொற்பீடம் - பொன்னாசனங்கள்—தேர் அணி - தேர் நிரைகள்—மா - யானைகள்—அயம் - குதிரைகள—மா நிதி ஆதிகள் சேர்வித்தான் - பெரிய திரவியங்கள முதலியவற்றைக் கொடுத்தார். எ - று. ()

வென்றி நடந்தொழு தம்பியர் வந்தடி மேல்வீழ்வுற்
றன்றவர் சென்றபின் மன்றம் வணங்கி யவன்றந்தை
முன்றொழு தந்தணர் வந்தனை மாளிகை முறைசெய்வா
னின்றரு ளென்றவை யெங்கு மிலங்க வெடுப்பித்தான்.

இ - ள். அன்று வென்றி நடம் தொழு தம்பியர் அவர் வந்து அடிமேல் வீழ்வுற்றுச் சென்றபின் - அத்தினத்திலே வெற்

றியையுடைய திருநிருத்தத்தை வணங்கிய தம்பிமாராகிய அவர்கள் வந்து (தம்முடைய) பாதங்களின்மேலே விழுந்து நமஸ்கரித்துக்கொண்டு போனபின்பு,—அவன் மன்றம் வணங்கித் தந்தைமுன் தொழுது - அவ்விரணியவன்மர் கனகசபையை நமஸ்கரித்து அருட்பிதாவாகிய வியாக்கிரபாதமகாமுனிவர் திருமுன்னே வணங்கி,—அந்தணர் வந்தனை மாளிகை முறைசெய்வான் இன்று அருள் எனறு - தில்லைவாழந்தணர்களுக்கு வழிபாட்டின்பொருட்டுத திருமாளிகைகளை விதிப்படி செய்விக்க இப்பொழுது அநுஞ்ஞைசெய்யும் என்று வேண்டிக்கொண்டு,— அவை எங்கும இவைக எடுப்பித்தான் - அவைகளை எவ்விடங்களினும் விளங்கும்படி கட்டத்தொடங்குவித்தார். எ - று. ()

ஏழ்நிலை மாளிகை சூளிகை சாளர மேரார்சீர்
வாழ்மதி றோரண வாயில்க டேரணி மாவீதி
சூழ்வுற மேருவி னேர்பல கோலிய சோழேசன்
றாழ்வுடன் மாதவர் யாரையு நீள்குடி சார்வித்தான்.

இ - ள். மா வீதி சூழ்வுற மேருவின் நேர் பல ஏழ்நிலை மாளிகை - பெரிய வீதியிலே சூழும்படி மகாமேருமலையைப் போலும் பல எழுநிலைமாளிகைகளையும்—சூளிகை - சூளிகைகளையும்—சாளரம் - பலகணிகளையும்—ஏர் ஆர் சீர் வாழ் மதில் - அழகு நிறைந்த நன்மை பொருந்திய மதில்களையும்—தோரண வாயில்கள் - நிலைதோரணங்கள் பொருந்திய வாயில்களையும்— தேர் அணி - நிலைத்தேர்வரிசைகளையும்—கோலிய சோழேசன் - கட்டுவித்த சோழராசாவாகிய இரணியவன்மர்—தாழ்வுடன் மாதவர் யாரையும் நீள் குடி சார்வித்தான் - பணிவோடு முனிவர்களெல்லாரையும் உயர்ந்த குடி புகுவித்தார். எ - று. (கஊ)

இற்றகு பண்ட மிலங்க நிலங்களி லேய்வித்து
மற்றவர் தம்மி லொருத்த னிருத்த மகிழ்ந்தாடும்

பற்றரு சின்மய வம்பர மும்பர் பரிந்தாகம்
பெற்ற பயன்றிரு வம்பல மொன்று செயப்பெற்ருன்.

இ - ள். இல் தகு பண்டம் இலங்க நிலங்களில் ஏய்வித்து- வீட்டுக்கு வேண்டும் பதார்த்தங்களை விளங்கும்படி நிலங்க டோறும் வைப்பித்து,—மற்றவர் தம்மில் ஒருத்தன் மகிழ்ந்து நிருத்தம் ஆடும் - அந்தத்தில்லைவாழந்தணர்களுள் ஒருவராகிய சிவபெருமான மகிழ்ந்து திருநிருத்தஞ்செய்தருள்கின்ற—பற்று அரு சின்மய அம்பரம் - அறிதற்கரிய ஞானமயமாயுள்ள ஆகாச மும்—உம்பர் பரிந்து ஆகம் பெற்ற பயன் - தேவர்கள் விரும் பிச் சரீரத்தைப் பெற்றதனுல் எய்தும் பயனுமாகிய—திருவம் பலம் ஒன்று செயப் பெற்ருன்-திருவம்பலமொன்றைத் (தாமும்) செயப்பெற்ருர். எ - று. (க௪)

பொன்னணி மாநவ மாமணி யாதி பொருப்பாக
முன்னர் கொணர்ந்து குவித்தருள்பெற்று முனிச்செல்வன்
றன்னிசை வோடுயர் வானவர் கம்மியர் தம்மைக்கொண்
டுன்னரு மம்பல மொன்று சமைத்தணி யொப்பித்து.

இ - ள். பொன் அணி மா நவம் ஆம் மணி ஆதி - பொன் னும் அழகிய பெரிய நவரத்தினமு முதலாயினவற்றை—பொரு ப்பு ஆக முன்னர் கொணர்ந்து குவித்து - மலைகளாக முன்னே கொண்டுவந்து குவித்து,—அருள் பெற்று - (நடராசருடைய) திருவருளைப் பெற்று,—முனிச் செல்வன்றன் இசைவோடு - வியாக்கிரபாதமகாமுனிவராகிய ஞானச்செல்வருடைய சம்மதி யுடனே—உயர் வானவர் கம்மியர் தம்மைக்கொண்டு - உயர்ந்த தெய்வத்தச்சர்களைக்கொண்டு—உன் அரும் அம்பலம் ஒன்று சமைத்து அணி ஒப்பித்து - நினைத்தற்கரிய திருவம்பலமொன் றைச் செய்து அழகு பெற ஒக்கப்பார்த்து. எ - று. (க௫)

காண விலக்க வொழுங்கணி வித்தவை கைக்கொண்டுட்
பூணு மணிக்குற டொத்த தளத்தியல் பொற்பாரத்

தூணிரை யுத்திர நற்பல கைத்திர டொல்கோவைக்
கோணமர் கைத்தொகை முச்சிய ணைத்தணி கொள்வித்து.

இ - ள். காண இலக்க ஒழுங்கு அணிவித்து - அறிந்துகொள்ளும்படி இலக்கவரிசையை இடுவித்து,—அவை கைக்கொண்டு - அவைகளைக் கைக்கொண்டு;—உள் பூணும் மணிக்குறடு - உள்ளே பொருந்திய இரத்தினக்குறட்டையும்—ஒத்த தளத்து இயல் - சமமாகிய தளவரிசையையும்—பொற்பு ஆர - அழகோடு பொருந்தச் செய்து,—தூண் நிரை - தூண்களின் நிரைகளையும்—உத்திரம் - உத்திரங்களையும்—நற பலகைத் திரள் - நல்ல பலகைக் கூட்டத்தையும்—தொல் கோவைக் கோண் அமர் கைத்தொகை - பழைய கோவையாகிய வளைவு பொருந்திய கைத்தொகையையும்—முச்சி - தூவிகளையும்—அணைத்து அணி கொள்வித்து - இசைத்து அழகு பொருந்தப் பண்ணி. எ - று. (கசு)

பன்மணி மாலைகள் கொண்டணி தொங்கல் பயிற்றிச்சூழ்
பொன்மலி முன்மதில் கோபுர வாயில் பொருந்தச்செய்
தென்மல மங்கவ ருங்கரு மூல விறைக்கும்பொற்
றன்மய மாமொளி ராலய மொன்று சமைப்பித்தான்.

இ - ள். பல் மணி மாலைகள் கொண்டு அணி தொங்கல் பயிற்றி - பல இரத்தினமாலைகளைக்கொண்டு அலங்கரிக்கப்பட்ட தூக்கங்களாகத் தூக்கி,—சூழ் பொன மலி முன் மதில் - சூழ்ந்த பொன்னாலாகிய முனமதிலையும்—கோபுர வாயில் பொருந்தச் செய்து - கோபுரவாயிலையும் பொருந்தும்படி பண்ணி,—என் மலம் மங்க வரும் கரு மூல இறைக்கும் - என்னுடைய மலங் கெடும்படி தோன்றியருளிய (பிரபஞ்சத்துக்குக்) கருவாகிய ஸ்ரீமூலட்டானேசுரருக்கும்—பொன் தன் மயம் ஆம் ஒளிர் ஆலயம் ஒன்று சமைப்பித்தான் - பொன்மயமாகிய விளங்குகின்ற ஒரு திருக்கோயில் செய்வித்தார். எ - று. (கஎ)

### வேறு.

இன்னவகை திருப்பணிகள் பலவுஞ் செய்த
விரணியவன் மனைமுனிவர் யாரு மேத்திப்
பன்னரிய புகழ்கூறி நீறு சாத்திப்
பரந்தகலை வழிவழிபா டதற்குப் பல்க
மன்னுவகை யினினிபந்த வகுப்பு நாதன்
வைத்தபணி யெனமுனியை வணங்கி வாழ்த்திச்
சென்னியிலஞ் சலிசெய்திங் களித்த தன்றோ
திருந்துதவ மெனக்கென்றான் செங்கோன் மன்னன்.

இ - ள். இன்னவகை திருப்பணிகள் பலவும் செய்த இரணியவன்மனை - இந்தப்பிரகாரம் திருப்பணிகள் பலவற்றையுஞ் செய்வித்த இரணியவனமரை—முனிவர் யாரும் ஏத்திப் பன்னரிய புகழ் கூறி நீறு சாத்தி - முனிவர்களெல்லாரும் வாழ்த்தி (அவருடைய) சொல்லுதற்கரிய கீர்த்தியைப் பாராட்டி விபூதி சாத்தி—பரந்த கலை வழி வழிபாடதற்குப் பல்க மன்னு வகையினில் நிபந்த வகுப்பும் நாதன் வைத்த பணி என - (இனி) விரிந்த சிவாகமவிதிப்படி பூசைக்குப் பெருக நிலைபெறும் வண்ணம் நியந்தம் வகுத்தலும் சிவபெருமான் விதித்த பணியேயாம் என்று சொல்ல;—செஙகோல் மன்னன் - செஙகோலையுடைய இரணியவன்மர்—முனியை வணஙகி வாழ்த்திச் சென்னியில் அஞ்சலி செய்து - வியாக்கிரபாதமகாமுனிவரை வணங்கித் துதித்துச் சிரசின்மேல் அஞ்சலிபண்ணி,—இங்கு அளித்தது அன்றோ எனக்குத் திருந்து தவம் என்றான் - இஙகே பணித்தருளப்பட்டதன்றோ அடியேற்குத் திருத்தமுற்ற தவமாவது என்று விண்ணப்பஞ்செய்தார். எ - று. (௧௭)

இத்தகைய முனிவருட னொருநாண் மன்ன
னிலங்கியபே ரம்பலத்தி னிருந்து நூலின்

வைத்தமுறை யிறைவற்கு மஞ்ச னந்தூ
மலரமுது முதலான மல்க வைத்து
நித்தவிழா வெழவேண்டுஞ் செல்வ நல்கி
நிலவுபதஞ் சலிமுனியா னிறுத்து வித்த
புத்தகமின் புறமுனிவர் யானை யேற்றிப்
பொற்கோயில் வலங்கொண்டு புகுவித் தார்கள்.

இ - ள். இத்தகைய முனிவருடன் - இவ்வியல்பையுடைய முனிவர்களோடும்—ஒருநாள் மன்னன் இலங்கிய பேரம்பலத்தின் இருந்து - ஒருநாள் இரணியவன்மர் விளங்கிய பேரம்பலத்திலே இருந்து,—நூலின் வைத்தமுறை - சிவாகமத்தில் விதித்த முறைப்படி—இறைவற்கு மஞ்சனம் தூ மலர் அமுது முதலான மல்க வைத்து - சிவபெருமானுக்குத் திருமஞ்சனம் சுத்தமாகிய புட்பம் திருவமுது முதலானவை நிறையும்படி கற்பித்து—நித்த விழா எழ வேண்டும் செல்வம் நல்கி - நித்தியோற்சவம் நடத்தற்கு வேண்டுந் திரவியங்கொடுத்து—நிலவு பதஞ்சலி முனியால் நிறுத்துவித்த புத்தகம் - விளங்குகின்ற பதஞ்சலிமகா முனிவராலே செய்வித்த சாத்திரத்தை—முனிவர் இன்பு உற யானை ஏற்றி - முனிவர்கள் இன்பம் பொருந்த யானைமேலேற்றி—பொற்கோயில் வலம் கொண்டு புகுவித்தார்கள் - அழகிய திருக்கோயிலைப் பிரதக்ஷிணஞ்செய்து (சபையினுள்ளே) பிரவேசிப்பித்தார்கள். எ - று. (கக)

மனங்குளிர வன்னவர்கள் பின்னு முன்னூன்
மருவியறை மித்திகங்கள் வகுப்பான் மாதத்
தினங்கடொறு முணர்ந்துமது மாத மேவத்
திருந்துதம னகவிதியைச் செலுத்து முன்னு
வனங்கனது வளநகர மனையுங் காலை
யந்நகர்போன் மன்னவனிங் கமைக்க வென்ன

வினங்கொளிருஞ் சனங்கள்பணிந் தின்ப மெய்தி
யெந்தைதிரு வசந்தவிழா வெழுவித் தார்கள்.

இ - ள். அன்னவர்கள் பின்னும் முன் நூல் மருவிய நைமித்திகங்கள் மனம் குளிர வகுப்பான் - அம்முனிவர்கள் பின்னும் முற்கூறிய சாத்திரத்திலே பொருந்திய நைமித்திகங்களை மனங் களிகூரும்படி வகுக்கும்பொருட்டு—மாதத் தினங்கடொறும் உணர்ந்து - மாசநக்ஷத்திரந்தோறும் செயப்படும் மாசபூசையை ஆராய்ந்து—மது மாதம் மேவ - சித்திரைமாசம் வர,—திருந்து தமனக விதியைச் செலுத்து முன்னு - திருத்தமுற்ற தமனக பூசையை நடத்துதற்கு முன்னாக—அனங்கனது வள நகரம் அணையும் காலை அந்நகர்போல் மன்னவன் இங்கு அமைக்க என்ன - மன்மதனுடைய வளம பொருந்திய நகரத்திலே (அவன்) பிரவேசிக்கும்பொழுது அந்நகரத்தை அலங்கரித்தல்போல இராசாவே இந்நகரத்தை அலங்கரிப்பிக்கக்கடவாய் என்று சொல்ல,-- இனம் கொள் இரும் சனங்கள் பணிந்து இன்பம் எய்தி - கூட்டமாகப் பொருந்திய மகாசனங்கள் வணங்கி ஆனந்தமடைந்து,— எந்தை திரு வசந்த விழா எழுவித்தார்கள் - எமது பிதாவாகிய சிவபெருமானுக்கு அழகிய வசந்தோற்சவம் நடத்துவித்தார்கள்.
எ - று. தமனகம் - மருக்கொழுந்து. (உ0)

விரிந்தபுதுப் புனல்விளையாட் டாடி மாதம்
விரவுதிரு வாண்டெழுந்து விழவு மோங்கப்
பொருந்தும்வகை புரிந்தாடி பூரட்டா திக்குட்
புகழ்பதினான் கட்டமிக வொன்றிற் பூசை
தகுந்தகுதி மிகுதிகுறை தவறு நீங்கத்
தந்துநவந் தருபந்தாச் சமைத்தி யாகம்
பரந்தவிர தாங்கமுடன் பவித்தி ரத்தைப்
பயில்வித்தைப் பசிப்பூரப் பரிச மைத்தார்.

இ - ள். ஆடிமாதம் - ஆடிமாதத்திலே—விரிந்த புதப்புனல் விளையாட்டு-பரந்த புதிய நீர்விளையாட்டுற்சவமும்—விரவு திருவாண்டெழுத்து விழவும் - பொருந்திய திருவாண்டெழுத்துற்சவமும்—ஓங்கப் பொருந்தும் வகை புரிந்து - விளங்கும்படி (விதிக்கு) இயையும்வண்ணஞ்செய்து,—ஆடி புரட்டாதிக்குள் - ஆடிமாசமுதற்புரட்டாதிமாதவரையினுள்ளே—புகழ்பதினான்கு அட்டமிகள் ஒன்றில் - புகழப்படுகின்ற சதுர்த்தசி அட்டமி என்னுந் திதிகளுள் ஒன்றிலே—பூசை தரும் தகுதி மிகுதி குறை தவறு நீங்க - நித்தியபூசைக்கு விதித்தகிரமத்தில் உண்டாகிய அதிகமும் நூனமுமாகிய குற்றம் நீங்கும்பொருட்டு—தந்து நவம் தரு பந்தாச் சமைத்து - (மூந்நூல் ஒருநூலாக இங்ஙனம் ஆகிய) நூல் ஒன்பதாயுள்ள (இருபத்தேழிழையையுடைய) பந்தாகப் பண்ணி,—யாகம் பரந்த விரதாங்கமுடன் - யாகத்தை விரிந்த விரதாங்கங்களோடு நடத்தி,—பவித்திரத்தைப் பயில்வித்து - பவித்திரத்தைச் சாத்தி,—ஐப்பசிப்பூரப் பரிசு அமைத்தார்-ஐப்பசிமாசத்துப் பூரத்திருவிழாவுக்கு வேண்டுவனவற்றை அமைத்தார்கள். எ - று. (உக)

அந்தமிலெண் ணான்கறமுந் திருக்கண் சாத்தி
யவற்றின்மிகத் தனித்தென்னை யாண்ட வன்னை
யெந்தைபிரான் மைந்தர்களோ டெழுச்சி கொள்ள
வெழுந்தருளி வருந்திருநோன் பியைய வைத்துச்
சிந்தையின்மா லயனுண வெழுந்த செந்தீத்
திரளுருவண் ணலைநோக்கித் திகழ்க ணங்கள்
வந்தெவையு மழலாகி மல்கல் போலும்
வளங்கொடிரு விளக்கீடு விளங்க வைத்தார்.

இ - ள். அந்தம் இல் எண்ணான்கு அறமும் சாத்தி - முடிவில்லாத முப்பத்திரண்டு தருமங்களையுந் திருக்கண் சாத்தியருளி—அவற்றின் மிகத் தனித்து என்னை ஆண்ட

அன்னை - அவைகளினும்பார்க்கப் (பிரீதி) மிகும்படி தனித்து என்னை ஆட்கொண்டருளிய மாதாவாகிய சிவகாமியம்மையார்— எந்தை பிரான் மைந்தர்களோடு எழுச்சி கொள்ள - எமது பிதாவாகிய சிவபெருமான் குமாரர்களோடும் திருவிழாக் கொண்டருள—எழுந்தருளி வரும் திரு நோன்பு இசைய வைத்து - எழுந்தருளிவருகின்ற சிறப்பையுடைய விரதோற்சவத்தை விதியோடு பொருந்த நடத்தி,—மால் அயன் சிந்தையில் நாணை எழுந்த செந்தீத் திரள் உரு அண்ணலை - விட்டுணுவும் பிரமாவும் உள்ளத்திலே நாணும்படி தோன்றிய சிவந்த அக்கினிப்பிழம்புவடிவாகிய சிவலிங்கப்பெருமானை—திகழ் கணங்கள் எவையும் வந்து நோக்கி அழல் ஆகி மல்கல் போலும் - விளங்குகின்ற கணங்களெல்லாம் வந்து தியானித்துத் தாங்களும் அக்கினிவடிவாகி நிறைந்திருத்தல்போலும்—வளம் கொள் திரு விளக்கீடு விளங்க வைத்தார் - வளமை பொருந்திய அழகிய தீபோற்சவத்தை விளங்கும்படி செய்தார்கள். எ - று.

தீபத்தண்டு சோதிலிங்கத்தையும் திருக்கோயில் எங்கும் இட்ட விளக்குகள் அக்கினிவடிவு பெறற கணங்களையும்போலுமென்றறிக. (உஉ)

மார்கழியா திரைநாளின் முனிவ ரெல்லாம்
வந்துதடம் படிந்துபொது வணங்கி வாழ்த்திப்
பார்தருமா தொழுதகன்றார் முன்ன மென்று
பன்னமுனி மன்னவனீர் பயிற்று மிந்தச்
சீர்தருமா தினமென்னத் தில்லை வாழுந்
திருவுடையந்த ணரெந்தை திருநா ளென்று
சார்தருமா நவதீர்த்த நீத்தங் கொண்டு
தஞ்சனமஞ் சனவிழவு தகுவித் தார்கள்.

இ - ள். முனிவர் எல்லாம் முன்னம் மார்கழி ஆதிரை நாளின் வந்து - இருடிகளெல்லாரும் முன்னாளிலே மார்கழிமா

சத்துத் திருவாதிரை நக்ஷத்திரத்தில் வந்து—தடம் படிந்து பொது வணங்கி வாழ்த்திப் பார் தகுமா தொழுது அகன்றார் என்று - சிவகங்கையிலே ஸ்நானஞ்செய்து கனகசபையை நமஸ்கரித்துத் துதித்துப் பூமியிலே தகும்படி கும்பிட்டுக்கொண்டு போயினார்கள் என்று—முனி பன்ன - வியாக்கிரபாதமகாமுனிவர் அருளிச்செய்ய;—மன்னவன் நீர் இந்தச் சீர்தரும் மா தினம் பயிற்றும் என்னே - இரணியவன்மர் நீங்கள் இந்தச் சிறப்புப் பொருந்திய பெரிய திருநாளை நடத்துங்கள் என்று சொல்ல;—தில்லை வாழும் திரு உடை அந்தணர் எந்தை திரு நாள் என்று - தில்லைவாழுந் திருவுடையந்தணர்கள் இது எமது பிதாவாகிய சிவபெருமானுடைய திருநக்ஷத்திரம் என்று,—சார்தரு மா நவ தீர்த்த நீத்தம் கொண்டு - (சிதம்பரத்திலே) பொருந்திய பெரிய நவதீர்த்தங்களையும் மற்றத்தீர்த்தங்களையும் கொண்டு—தஞ்சு அன மஞ்சன விழவு தருவித்தார்கள் - (ஆன்மாக்களுக்குப்) பற்றுக்கோடு போன்ற திருமஞ்சனத்திருவிழாவை நடத்தினார்கள். எ - று. (உ௩)

போனகமால் வரைபோன்மா நிவேத னத்தைப்
பொருந்தியதைப் பூசத்திற் புணர்வித் தேத்தி
யீனமிலா முனியரசன் றன்னை நோக்கி
யிமையவர்க ளனைவரும்வந் தேத்தி வாழ்த்து
மாணியென வருமாண்டி லாணி மாதத்
தருள்விரவுத் திரதினம்வந் தணுகிற் றென்னத்
தேனகுதா ரணிமன்ன னிறைஞ்சி யானித்
திருநாளிங் கெழுவிழவு செய்க வென்றான்.

இ - ள். பொருந்திய தைப் பூசத்தில் - பொருந்திய தைமாசத்துப் பூசநக்ஷத்திரத்திலே—மால் போனக வரை போல் மா நிவேதனத்தைப் புணர்வித்து ஏத்தி - பெரிய அன்னமலைபோலும் பெரிய நிவேதனமாகிய திருப்பாவாடையைத் திருவமுது

செய்வித்துத் துதித்து,—ஈனம் இலா முனி அரசன் றன்னை நோக்கி - குற்றமில்லாத வியாக்கிரபாதமகாமுனிவர் இரணியவன்மரைப் பார்த்து,—இமையவர்கள் அனைவரும் வந்து ஏத்தி வாழ்த்தும் ஆனி என - தேவர்களெல்லாரும் வந்து வணங்கித் துதிக்கின்ற ஆனியென்னும்படி—வரும் ஆண்டில் ஆனிமாதத்து அருள் விரவு உத்திர தினம் வந்து அணுகிற்று என்ன - வரும் வருடத்தில் ஆனிமாதத்தில் அருள் பொருந்திய • உத்திரநக்ஷத்திரம் வந்து அணுகியது என்று சொல்ல;—தேன் நகு தார் அணி மன்னன் இறைஞ்சி - வண்டுகள் மகிழும் மாலையை அணிந்த இரணியவன்மர் வணங்கி,—ஆனித் திருநாள் விழவு இங்கு எழச் செய்க என்றான் - ஆனித்திருநாளுற்சவம் இங்கே நடக்கும்படி பண்ணுக என்றார். எ - று. (உ௪)

தாரும்பா ருந்தரித்த தடந்தோ ளானுந்
 தாவிலரு முனிவர்களுந் தலைவன் முன்னின்
றீரொன்பான் முதலான வோரொன் பானா
 ளெந்தைபிரான் றிருவெழுச்சி யின்ப மெய்த
வாரும்பா ருள்ளோரும் வானுள் ளோரு
 மாலயனு மேலவரு மலங்க ணீங்கி
யாரும்பா தம்பணிதற் கென்று வாயி
 லிலங்கவிடைக் கொடிவலங்கொண் டேற்றுவித்தார்.

இ - ள். தாரும் பாரும் தரித்த தடம் தோளானும் - மாலையையும் பூமியையுந் தாங்கிய பெரிய புயங்களையுடைய இரணியவன்மரும்—தாவு இல் அரு முனிவர்களும் - குற்றமில்லாத அரிய முனிவர்களும்—தலைவன் முன் நின்று - சிவபெருமான் சந்நிதியிலே நின்று,—ஈரொன்பான் முதலான ஓரொன்பான் நாள் - பதினெட்டு நாண்முதலாகிய ஒன்பதுநாளாயுள்ள இருபத்தேழு நாளும்—எந்தை பிரான் திருவெழுச்சி இன்பம் எய்த - எம்முடைய பிதாவாகிய சிவபெருமானது திருவிழாவினால் ஆனந்த

மடைதற்கும்—மலங்கள் நீங்கிப் பாதம் பணிதற்கு - மலங்களி னின்று நீங்கித் திருவடிகளை வணங்குதற்கும்—பார் உள்ளோ ரும் வான் உள்ளோரும் மால் அயனும் மேலவரும் யாரும் வாரும் என்று - பூமியிலுள்ளவர்களும் சுவர்க்கத்திலுள்ளவர்களும் விட்டுணுவும் பிரமாவும் (உருத்திரர் முதலிய) மேலோர்களும் ஆகிய எல்லாரும் வாருங்கள் என்று—விடைக்கொடி வலங் கொண்டு வாயில் இலங்க ஏற்றுவித்தார் - இடபக்கொடியைப் பிரதக்ஷிணமாகக் கொண்டு வந்து சந்நிதியிலே விளங்கும்படி ஏற்றுவித்தார்கள். எ - று. (உ௫)

மண்ணுலகி னுண்ணிறைந்த மைந்தர் மாதர்
வானவர்க ளரமகளிர் மற்றுள்ளோரு
மெண்ணரிய மகிழ்ச்சியுடன் றிசைக டோறு
மெய்துவார் மெய்தகுநோ யிரித்தோ மென்பார்
கண்ணிறைபொற் கோபுரங்கை தொழுது வீழ்வார்
கனகமயத் திருவீதி கண்டு வாழ்வா
ரண்ணல் பொதுப் பணிந்தயர்வார் நடமுன்போற்றி
யாடுவார் பாடுவா ராயி னூர்கள்.

இ - ள். மண்ணுலகினுள் நிறைந்த மைந்தர் மாதர் - பூலோகத்தின்கண் நிறைந்த ஆடவர்களும் பெண்களும்—வான வர்கள் அரமகளிர் - (சுவர்க்கலோகத்தின்கணுள்ள) தேவர் களும் அரம்பையர்களும்—மற்று உள்ளோரும் - மற்றையோர் களும்—எண் அரிய மகிழ்ச்சியுடன் திசைகள் தோறும் எய்து வார் - அளவிடற்கரிய களிப்போடு திக்குகடோறும் வந்து பொருந்துவார்கள்,—மெய் தகு நோய் இரித்தோம் என்பார் - உண்மையாகவே (நமக்கு) உரிய பிறவிநோயை நீக்கினோம் என் பார்கள்,—கண் நிறை பொற் கோபுரம் கைதொழுது வீழ்வார் - காட்சிக்கு நிறைந்த பொற்கோபுரங்களைக் கையினாலே கும்பிட்டு நமஸ்கரிப்பார்கள்,—கனகமயத் திருவீதி கண்டு வாழ்வார் -

பொன்மயமாகிய திருவீதிகளைக்கண்டு வாழ்வார்கள்,—அண்ணல் பொதுப் பணிந்து அயர்வார் - சிவபெருமானுடைய கனக சபையை வணங்கிப் பரவசர்களாவார்கள்,—முன் நடம் போற்றி ஆடுவார் பாடுவார் ஆயினர்கள் - எதிரே திருநிருத்தத்தைக் (கண்டு) துதித்து ஆடுவோர்களும் பாடுவோர்களு மாயினர்கள். எ - று. (உகூ)

வேறு.

இப்பெற் றியின்வரு மெத்திக் கினருமி தெம்மிற் றரு
மென நம்மிற்றுத், துய்ப்பொய்ப் பிறவிக டுய்த்தற் கென
மகிழ் துணிவால் வருபவ ரணிவாழத், தப்பற் றுயர்தவ
மூவா யிரவர்க டாவா மறையொடு தேவாரக், கைப்பற் றிய
பணி முற்றப் புலிமுனி கழலான் விழவெழு தொழில்
செய்வான்.

இ - ள். இப்பெற்றியின் வரும் எத்திக்கினரும் - இவ்வியல்போடு வரும் எல்லாத்திசையினுளளோர்களும் — நம் இற்று இது எம்மின் தரும் என - நாமென்பது ஒழிந்து இப்பேறு நம்மால் அடையத்தகுவதோ என்று பாராட்ட,—பொய்த் துய்ப்பிறவிகள் துய்த்தற்கு என மகிழ் துணிவால் வருபவர் அணி வாழ - பொய்யாகிய சிற்றின்பத்தை அநுபவித்தலையுடைய இப்பிறவிகள் (இந்நிருத்தானந்தத்தை) அநுபவித்தற்கு வாய்த்தனவே என்று மகிழ்கின்ற உறுதியோடு வரும் அடியார்களுடைய நிரை வாழ்வுபெற,—தப்பு அற்று உயர் தவ மூவாயிரவர்கள் - தவறுதலின்றி உயர்ந்த தவத்தையுடைய மூவாயிரமுனிவர்கள்—தாவா மறையொடு - ஒழியாத வேதவொலியோடு,—தே வாரக் கைப் பற்றிய பணி முற்ற - சிவபெருமானுக்கு உரிமையாகிய கையினாலே செயற்பாலனவாகிய பணிகளை முடிக்க,—புலிமுனி கழலான் விழவு எழுதொழில்செய்வான் - வியாக்கிரபாதமகாமுனிவருடைய திருவடியை அடைந்தவராகிய

இரணியவன்மர் திருவிழா எழுதற்கு வேண்டுந் தொழில்களைச் செய்வாராயினார். எ - று. (உஎ)

நண்ணித் தினகரன் முதலோர் கிழமைகொ ணலமார் நவமணி யணிமேவப், பண்ணிப் பரிகல முதலா யினபகர் திருவா சிகையரி பயில்பீடம், விண்ணிற் றிகழ்தருமகரத் தொழிலின விரிவெண் குடைமிடை கொடியென்றென், றண் ணற் குரியன வெண்ணற் கரியன வம்பொற்படிதிரு முன் புய்த்தான்.

இ - ள். தினகரன் முதலோர் கிழமை நண்ணி நலம்கொள் ஆர் நவமணி அணி மேவப் பண்ணி - சூரியன் முதலிய நவக் கிரகங்களுக்கும் உரிமை பொருந்தி அழகு கொண்டு நிறைந்த நவரத்தினங்களினாலும் ஆபரணங்களைப் பொருந்தச்செய்து,— பரிகலம் முதலாயின - பரிகலமுதலாயினவைகளும்—பகர் திரு வாசிகை - சொல்லப்படுகின்ற திருவாசிகைகளும்—அரி பயில் பீடம் - சிங்கந்தாங்கும் ஆசனங்களும்—விண்ணில் திகழ் தரும் மகரத் தொழிலின - ஆகாயத்தில் விளங்குகின்ற மகரதோர ணங்களும்—விரி வெண்குடை - விரிந்த வெள்ளிய குடைக ளும்—மிடை கொடி என்று என்று - நெருங்கிய கொடிகளும் என்றென்று—அண்ணற்கு உரியன எண்ணற்கு அரியன - சிவ பெருமானுக்கு உரியவைகளாய் அளவிடற்கரியவைகளாய் உள் ளவைகளை—திரு முன்பு அம்பொற்படி உய்த்தான் - சந்நிதி யிலே அழகிய பொற்படியிற் சேர்த்தார். எ - று. (உஅ)

கடமா றெனவுமிழ் களியா னையினணி கதிர்மா மணி நிலை தருதேர்முற், றிடமாய் நடைபெறு வடமால் வரை புரை சிலதேர் கவரியி னிரைதோரை, மிடைவான் முகி றொடு கொடியா டைகள்விட விழியா ரிசைவளர் மொழியார் பொற், படகா திகணட மிடுவா ரொலிகடல் பலவாமெனநணி பயில்வித்தார்.

இ - ள். கடம் ஆறு என உமிழ் களி யானையின் அணி - மதத்தை நதிபோலப் பொழிகின்ற களிப்புப்பொருந்திய யானைகளுடைய நிரைகளையும்—கதிர் மா மணி தரு நிலைத் தேர் - ஒளியையுடைய பெரிய இரத்தினங்களாலே செய்யப்பட்ட நிலைத்தேர்களையும்—முன் திடம் ஆய் நடை பெறு மால் வடவரை புரை சில தேர் - முன்னே வலியையுடையனவாய் நடக்குந் தொழிலைப் பெற்ற பெரிய மேருமலைபோலுஞ் சில தேர்களையும்—கவரியின் நிரை - சாமரங்களுடைய நிரைகளையும்—தோரை - பீலிக்குடைகளையும்—மிடை வான் முகில் தொடு கொடி ஆடைகள் - நெருங்கிய ஆகாயத்துள்ள மேகத்தைத் தொடுகின்ற கொடிப்புடைவைகளையும்—விட விழியார் இசை வளர் மொழியார் - நஞ்சுபோலுங் கண்களையுடையர்களும் கீதம் பொருந்திய வார்த்தைகளையுடையர்களுமாகிய பெண்களையும்—பொற படகாதிகள் - பொலிவாகிய படக முதலிய வாத்தியங்களையும்—நடம் இடுவார் - நிருத்தஞ்செய்வோர்களையும்—ஒலி பல கடல் ஆம் என நனி பயில்வித்தார் - ஒலிக்கின்ற பல கடல்களாம் என்று சொல்லும்படி மிகப் பொருநதுவித்தார்கள். எ - று. (உக)

மேவும் பர்கண்மிடை மகுடஞ் சொரிமணி விலகிப்
பொலிதிரு வலகிட்டுத், தூவண் புனன்மது மலர்வெண்பொ
ரிநனிதுதைவித் தெழின் மறுகுயர் தெற்றிப், பாவுந் துகில்
பொதி யுறவங் கமுகணி பலகும் பழுநிலை வளர்செம்பொற்,
றீவங் களுமலி தரமங் கலவணி திகழத் திசைதொறு நிகழ்
வித்து.

இ - ள். மேவு உம்பர்கள் மிடை மகுடம் சொரி மணி - (திருவீதியிலே) பொருந்திய தேவர்களுடைய நெருங்கிய முடிகளினின்றும் உதிர்ந்த இரத்தினங்களை—விலகிப் பொலி திருவலகு இட்டு - (இருபக்கத்திலும்) தள்ளிப் பொலிந்த திருவலகினாலே

பெருக்கி,—எழில் மறுகு தூ வண் புனல் மது மலர் வெண் பொரி நனி தூவித்து - அழகையுடைய திருவீதியிலே சுத்த மாகிய வளம் பொருந்திய சலத்தையும் தேனையுடைய பூவையும் வெள்ளிய பொரிகளையும் மிக நிறைவித்து,—உயர் தெற்றி - உயர்ந்த திண்ணைகளிலே—பாவும் துகில் பொதி உற அங்கு அமுது அணி பல கும்பமும் - பரந்த பரிவட்டத்தினாலே சுற்று தல் பொருந்த அங்கே சலத்தினாலே பூரிக்கப்பட்ட பல பூரண கும்பங்களும்—நிலை வளர் செம்பொன் தீவங்களும் மலிதர - நிலைபொருந்திய செம்பொன்னாலாகிய தீபங்களும் நிறைய—திசைதொறும் மங்கல அணி திகழ நிகழ்வித்து - திக்குகடோ றும் மங்கலமாகிய அலங்காரம் விளங்க நடத்தி. எ - று. (௩௦)

பொற்பா லிகைமுளை பொலிவித் தளவறு களபப் புது விரை மெழுகிச்சீ, ரிற்பான் மணவணி தரவா யில்கள்கமு கேரார் கதலிகள் சேர்வித்து, வெற்பா மெனமுகில் வரவா ரணநிரை வெருவா தெதிர்பொரு கரமானக், கற்பா வியநெடு நிலைமா ளிகைமணி கட்டா வளர்கொடி விட்டார்கள்.

இ - ள். பொற் பாலிகை முளை பொலிவித்து - பொற்பா லிகைளிலே அங்குரார்ப்பணம் பண்ணி,—அளவு அறு புதவி ரைக் களபம் மெழுகி - அளவிறந்த புதிய வாசனைத்திரவியங் களாலாகிய கலவைச்சாந்தினால் மெழுகி,—சீர் இற்பால் மண அணி தர - அழகையுடைய வீடுகடோறும் கலியாணச்சிறப்பு விளங்க—வாயில்கள் கமுகு ஏர் ஆர் கதலிகள் சேர்வித்து - வாயில்கடோறும் கமுகுகளையும் அழகு நிறைந்த வாழைகளையும் நாட்டி,—வெற்பு ஆம் என முகில் வர - (இவைகள்) மலைகளாம் என்று மேகங்கள் (படிய) வர—வாரண நிரை வெருவாது எதிர் பொரு கரம் மான - யானைநிரைகள் அஞ்சாது எதிர்ந்து பொரு கின்ற துதிக்கைகள்போல—கற்பாவிய நெடு நிலை மாளிகை - கல்லினாலே செயப்பட்ட நெடுநிலைமாளிகைகடோறும்—வளர்

கொடி மணி கட்டா விட்டார்கள் - நீண்ட கொடிகளிலே மணிகளைக் கட்டிவிட்டார்கள். எ - று. (௬௧)

இடமால் வரைநிறை கணநா தர்களுட னிறையா
மெனவெழு நிலைநீடு, மடமா னவைதொறு மதிமாசுண நதி
மருவா வளர்சடை யினர்பாதத், தடைவார் வடகலை தொடர்
வார் திருவமு தடுவா ரடுவன வடைவாவைத், திடுவா ரரகர
விடுவார் வரவர வெண்டா னறவெதிர் கொண்டார்கள்.

இ - ள். இட மால் வரை நிறை கணநாதர்களுடன் இறை ஆம் என - இடமாகிய பெரிய திருக்கைலாசமலையின்கண் நிறைந்த கணநாதர்களோடு சிவபெருமான்போல—எழு நிலை நீடும் மடம் ஆனவை தொறும் - எழுநிலை பொருந்திய திருமடங்கடோறும் உள்ள—மதி மாசுணம் நதி மருவா வளர் சடையினர் - பிறையும் பாம்பும் கஙகையும் பொருந்தாத நீண்ட சடையையுடைய முனிவர்களும்—பாதத்து அடைவார் - (அவர்களுடைய) திருவடிகளிலே சேர்வோர்களும்—வடகலை தொடர்வார் - வடநூல்களைப் படிப்பவர்களும்—திருவமுது அடுவார் - திருவமுதைச் சமைப்பவர்களும்—அடுவன அடைவா வைத்து இடுவார் - சமைத்தவைகளைப் பந்தியாக வைத்துப் படைப்பவர்களுமாகிய இவர்கள்,—அரகர இடுவார் எண் தான் அற வர வர - அரகர என்று உச்சரிக்கும் அடியார்கள் அளவின்றி வர வர,—எதிர் கொண்டார்கள் - (அவர்களை) எதிர்கொண்டார்கள். எ - று. (௬௨)

விண்ணோர் வனிதையர் மகவான் முனிவர்கள் விரிபா
ரிடர்மிகு கணநாதர், மண்ணோ ரெனவுரு வினராய் வழிபட
மதமார் கயமுகன் முதனோ, ரெண்ணோ ரளவறு கனி
பான் முதலிய விசைவித் தவையவன் மிசைவித்துப், பண்
ணோ டியன்மொழி யவளோ டிறைதரு பரவும் பவனிகள்
பயில்வித்தார்.

இ-ள். விண்ணோர் - தேவர்களும்—வனிதையர் - அரம்பையர்களும்—மகவான - இந்திரனும்—முனிவர்கள் - இருடிகளும்—விரி பாரிடர் - பரந்த பூதர்களும்—மிகு கணநாதர்-மிக்க கணநாதர்களும்—மண்ணோர் என உருவினர் ஆய் வழிபட - மனிதர்கள் போல உருக்கொண்டவர்களாய்,வந்து வழிபட,—முதல் நாள் - முதற்றிரு நாளிலே—மதம் ஆர் கயமுகன் - மதம் பொருந்திய யானைமுகத்தையுடைய விக்கினேசுரரை—ஓரெண் ஓரளவு அறு கனி பால் முதலிய அவல் இசைவித்து அவை மிசைவித்து - ஒவ்வொன்று அளவிறந்தபழம் பால் முதலியவைகளை அவலோடு கூட்டி அவைகளைத் திருவமுதுசெய்வித்து,—பண்ணோடு இயல் மொழியவளோடு இறை தரு பரவும் பவனிகள் பயில்வித்தார் - பண்ணோடுபொருந்திய திருவார்த்தையையுடைய உமாதேவியாரோடு சிவபெருமான் எழுந்தருளிவரும் புகழப்படுந் திருப்பவனிகளை நடத்தினார்கள். எ-று. (௯௯)

செழுவான் மதிபுனை பவனு னியில்வரு திருநாள் விழவெழு பொழுதாரத், தொழுவார் பிறிவரு நிலைபா னினைவொரு துணிவான் மொழியொரு பொருடோய்வற், றெழலாலழிவுறு தொழிலால் விழிமழை யிசைவா லிருபய னிலவாவுற், றழியா தகமலி கசிவா லருளை யடைந்தா ரினையர் மிடைந்தார்கள்.

இ-ள். செழு வான் மதி புனைபவன் ஆனியில் வரு திருநாள் விழவு எழு பொழுது - செழுமை பொருந்திய ஆகாயத்துள்ள பிறையை அணிபவராகிய சிவபெருமான் ஆனிமாதத்தில் வரும் திருநாளிலே திருவிழாக்கொண்டருளும்பொழுது—ஆரத் தொழுவார் - (பூமியிலே எட்டுறுப்பும்) பொருந்தும்படி வணங்கும் அடியார்கள்,—பிறிவு அரு நிலையால் - (சிவத்தோடு) இரண்டற்ற நிலையினாலும்—நினைவு ஒரு துணிவால் - சித்தத்தில் ஒருணர்வே உடைமையாலும்—மொழி ஒரு பொருள் தோய்வு

அற்று எழலால் - (முன்னைவாசனையினாலே செயப்படும்) துதி வாக்கியங்கள் ஒரு பொருளைப் பொருந்துதலின்றி எழுதலாலும்—அழிவு உறு தொழிலால் நழுவுதலுற்ற (பிரதக்கிணம் நமஸ்காரம் முதலிய) கருமங்களினாலும்—விழி மழை இசைவால் - கண்களினின்றும் நீர் பொழிதலினாலும்—இரு பயன் இலவா உற்று அழியாது அகம் மலி களிவால் - (இன்பத் துன்பங்களாகிய) இருபயன்களும் இல்லனவாதலின் அவற்றைப் பற்றி மயங்காது உள்ளத்தின்கண் நிறைந்த களிப்பினாலும்—அருளை அடைந்தார் - திருவருளை அடைந்தார்கள்,—இனையர் மிடைந்தார்கள் - இத்திறத்தார்களே (எங்கும்) நெருங்கினார்கள். எ - று. (௬௪)

மன்றாடியதிருநடரா சனதுயர்மணிமா ளிகைவெளி
வளர் வானிற், குன்றா விறன்மணி முடிவா னவரணி குழு
மானுடர்திர ளொடுகூடி, நின்றா ளெனவகி னயமே வியவுரு
நேசத்தவரவர் பாசத்தே, சொன்றாய் நிழலெழு மொளிமே
னியிலென வுயருத் திரவிழ வயர்வித்தார்.

இ - ள். மன்று ஆடிய திரு நடராசனது உயர் மணி மாளிகை - கனகசபையின் கண்ணே நடிக்கின்ற திருநிருத்தராஜருடைய உயர்ந்த இரத்தினமாளிகையிலே—வெளி வளர் வானில் குன்று விறல் மணி முடி அணி வானவர் குழு - ஆகாயத்திற் பொருந்திய சுவர்க்கத்திலுள்ள குறையாதவீரத்தையும் இரத்தினகிரீடத்தையும் உடைய வரிசையாகிய தேவர்கள் கூட்டம்—மானுடர் திரளொடு கூடி நின்று ஆள் என - மனிதர்கள் கூட்டத்தோடு கூடி நின்று (அடியேங்களை) ஆண்டருளும் என்று விண்ணப்பஞ்செய்ய,— அகில் நயம் மேவிய உரு - (அக்கடவுளுடைய திருநெற்றியிலே சாத்தப்பட்ட கரிய) அகிற்சாந்தினது நன்மை பொருந்திய நிறத்தை—நேசத்து அவர் அவர் பாசத் தேசு ஒன்று ஆய் ஒளி மேனியில் நிழல் எழும் என - அன்பையுடைய அவரவரது பாசத்தினொளி திரண்டு ஒளியையுடைய திருமேனியிலே நிழ

லெழுகின்றது என்று சொல்லும்படி,—உயர் உத்திர விழவு அயர்வித்தார் - உயர்வாகிய திருவானியுத்திரத்திருவிழாவைச் செய்வித்தார்கள். எ - று. (௯௫)

அருணற் புரவல னெதிர்முற் கதைமுனி யறைவா னொ ருநிரு தனைவேறற், கிரணத் திறல்குரு விருளிற் றரவர விகலா னெனவெறி கயிறாலே, மரணத் தினையுற வருணற் கதுபழி வழியா வொருகடி வடிவாகிச், சரணத் திருகரம் விரவக் களமொடு சநதித் திடுநெறி பந்தித்து.

இ - ள். முனி அருள் நற்புரவலன் எதிர் முற் கதை அறைவான் - வியாக்கிரபாதமகாமுனிவர் அருளையுடைய நல்ல இரணியவன்மசக்கிரவர்த்திக்கு எதிரே ஒரு முற்கதையைச் சொல்வார்:—குரு ஒரு நிருதனை வேறற்கு இரணத் திறல் தர இருளில்வர - குருவானவர் ஓரசுரனை வெல்லும்பொருட்டு யுத்தஞ்செய்யும் உபாயத்தைக் கற்பிக்கும்படி (வருணனிடத்துக்கு) இருளிலே வர,—இகலான் என எறி கயிறாலே மரணத்தினை உற - (அவ்வருணன் அக்குருவைப்) பகைவனென்று (நினைந்து) விடுத்த பாசத்தினாலே (அக்குரு) மரணத்தினைப் பொருந்த,—வருணற்கு அது பழி வழியா ஒரு கடி வடிவு ஆகி - அவ்வருணனுக்கு அக்கொலைப்பாவங் காரணமாக ஒரு பிசாசுவடிவந்தோன்றி—சரணத்து இரு கரம் விரவக் களமொடு சந்தித்திடு நெறி பந்தித்து - இரண்டுகால்களிலும் இரண்டுகைகளும் பொருந்தக் கழுத்தோடு கூடும்படி கட்டி. எ - று. (௯௬)

காரார் கடலிடை நெடுநா ளிடுமிடர் கடிவா னொருவரின் முடியாதாய், நீரா யினபெற லரிதாய் மழைவிழ நினையா தல மரநிலன் வானோர், வீரா மடவர லருகா நடமிடு விரகா விரைவிரி தருகொன்றைத், தாரா வருணன துயர்பா தகவிடர் தவிரா யெனநனி தொழுதார்கள்.

இ - ள். கார் ஆர் கடலிடை நெடு நாள் இடும் இடர் கடிவான் ஒருவரின் முடியாதாய் - கருமை பொருந்திய சமுத்திரத்தினுள்ளே (கொண்டுபோய்) நெடுநாளிட்ட துன்பத்தை நீக்க ஒருவராலும் முடியாதாகி,—மழை விழ நினையாது அலமர - மழை பெய்ய நினையாது (வருணன்) வருந்திக் கிடப்ப,—நீர் ஆயின பெறல் அரிதாய் - சலங்கிடைத்தல் அரிதாகி,—நிலன் வானோர் - பூமியிலுள்ளவர்களும் சுவர்க்கத்திலுள்ளவர்களும்—வீரா - வீரரே—மடவரல் அருகா நடம் இடு விரகா - உமாதேவியார் பக்கத்திலே நிற்பத் திருநிருத்தஞ்செய்யும் வல்லவரே—விரை விரி தரு கொன்றைத் தாரா - மணம் விரிந்த கொன்றைமாலையையுடையவரே—வருணனது உயர் பாதக இடர் தவிராய் என நனி தொழுதார்கள் - வருணனுடைய மகாபாதகத்தாலாகிய துன்பத்தை நீக்கியருளும் என்று மிக வணங்கினார்கள். எ-று. (௩௭)

தேசிற் பொலிபொது நிறையற் புதனொலி செறிநற் கடலெதிர் திகழ்வுற்றுப், பாசத் தளையற வருளச் சலபதிபரவித் தினமிது படிவுற்றோர், ஆசற் றுயர்கதி யடையக் கடவுளு மணுகப் பெறவர மதுபெற்றான், மாசித் திருமக மெனமற் றதுதக மலிபொற் கொடியது பொலிவித்தான்.

இ - ள். தேசின் பொலி பொது நிறை அற்புதன் - ஒளியினாலே மிக்க கனகசபையின்கண்ணே நிறைந்த அற்புதராகிய சிவபெருமான்—ஒலி செறி நற்கடல் எதிர் திகழ்வுற்று - ஒலிபொருந்திய நல்ல சமுத்திரத்துக்கு எதிரே எழுந்தருளி—பாசத் தளை அற அருள - பாசக்கட்டு அற்றுப்போகும்படி அருள்செய்ய;—சலபதி பரவி - வருணன் துதித்து,—தினம் இது படிவுற்றோர் ஆசு அற்று உயர் கதி அடையக் கடவுளும் அணுகப் பெற வரமது பெற்றான் - இந்நாளிலே இந்தத் துறையிலே ஸ்நானஞ்செய்தவர் பாசநீங்கி உயர்ந்த முத்தியை அடைதற்கும் சிவபெருமான் எழுந்தருளப்பெறுதற்கும் வரம்பெற்றான்,—மாசித் திரு மகம்

என - இந்நாள் மாசித்திருமகம் என்று (வியாக்கிரபாதமகாமுனிவர்) சொல்ல,—மற்றது தக - அம்மாசிததிருமகம் பொருந்த,—மலி பொற் கொடியது பொலிவித்தான் - (இரணியவன்மர்) விளங்குகின்ற பொலிவாகிய கொடியேறறுவித்தார். எ-று. ()

எத்தன் மையினல முய்க்குஞ் சலபதி யிறைசேர் தர வர முறுநாளோர், பத்தொன் பதுவிழ வுய்க்கும் படிகளி பயிலுங் கயமுக னயிலுந்தேன், மொய்த்தங் கொளிர்கனி யப் பம் பயறவன் முதலா யினபல வுதவா வாழ், நித்தம் பொலி விழ வத்தன் றரமிக நெஞ்சார் கரைவுற நைஞ்சார்கள்.

இ - ள். எத்தன்மையின் நலம் உய்க்கும் சலபதி இறைசேர்தர வரம் உறு நாள் ஓர்பத்து - எவ்விதத்தாலும் இன்பத்தைக் கொடுக்கும் வருணன் சிவபெருமான் (கடற்கரைக்கு) எழுந்தருளும்படி வரம் பெற்ற நாள் பத்தாநாளாக—ஒன்பது விழவு உய்க்கும்படி-ஒன்பதுநாட்டிருவிழாவை (விக்கினமின்றி) நடத்தும்பொருட்டு—களி பயிலும் கயமுகன் - களிப்பைப் பொருந்திய யானைமுகக்கடவுளுக்கு—அயிலும் தேன் அஙகு மொய்த்து ஒளிர் கனி அப்பம் பயறு அவல் முதல் ஆயின பல உதவா - உண்கின்ற தேன் அநகே செறிந்து விளங்குகின்ற பழம் அப்பம் பயறு அவல் முதலியன பலவற்றை நிவேதித்து,—நித்தம் வாழ் பொலி விழவு அத்தன் தர - நித்தமும் வாழ்வுறுதற்கேதுவாகிய மிக்க திருவிழாக்காட்சியைச் சிவபெருமான் தந்தருள,—நெஞ்சு மிக ஆர் கரைவு உற நைஞ்சார்கள் - உள்ளத்திலே மிக நிறைந்த கசிவு பொருந்தத் தம்மை இழந்தார்கள். எ - று. (௩௧)

கண்ணு யிரமுடை யவன்மா தவன்மலி கமலா லயன்முத லெனலாகும், விண்ணு டையவர் வடமீ டணிமுலை விட வாள் விழியுடை மடவாரா, றெண்ணு யிரமுனி கணநா தரு மறை யிசைநா ரதரணி யெனையோரிம், மண்ணுள் பலருட னண்ணு வளர்திரு மன்று வருள்புரி யென்றார்கள்.

இ - ள். கண் ஆயிரம் உடையவன் மாதவன் மலி கமலால யன் முதல் எனல் ஆகும் விண்ணுடு உடையவர் - இந்திரன் விட்டுணு மிக்க பிரமா முதலெனத்தக்க தேவர்களும்—வட நீடு அணி முலை விட வாள் விழி உடை மடவார் - முத்துவடம் பொருந்திய அழகிய தனங்களையும் நஞ்சும் வாளும்போலுங் கண் களையுமுடைய அரம்பையர்களும்—ஆறு எண்ணுயிரம முனி - நாற்பத்தெண்ணுயிரமுனிவர்களும்—கணநாதரும் - கணநாதர்க ளும்—மறை - வேதபுருடர்களும்—இசை நாரதர் - கீதத்தை யுடைய நாரதரும்—அணி ஏனையோர் - நன்மையையுடைய மற் றையோர்களும—இம் மண் ஆள்பவருடன் நண்ணு - இப்பூமியி லுள்ள மனிதர்களோடு பொருந்தி—வளர் திரு மனமு அருள்புரி என்றூர்கள் - உயர்ந்த திருச்சபையையுடையவரே அருளசெய் யும் என்று வேண்டிக்கொண்டார்கள். எ - று. (சo)

புகழும் பவனிக ளகமின் புறுநெறி புனிதன் றரவிழி புனல்கொண்டிட், டிகழும் பரகதி யெனவந் தரன தெழுச் சிக் கமரர் பழிச் சிக்கைத், திகழுஞ் சலியொடு மிகுமங் கல வணி சேவித் தலர்தட மேவிச்சே, ரகமங் ககறா வமுதந் தருகுழி யாடிக் கடல்வழி கோடித்தார்.

இ - ள். புனிதன் அகம் இன்பு உறு நெறி புகழும் பவனி கள் தர - சிவபெருமான் (அன்பர்களுடைய) மனம் இன்பத்தை அடையும்படி (யாவராலும) புகழப்படுந் திருப்பவனிகளைத் தந் தருள;—அமரர் - தேவர்கள்—பரகதி இகழும் என - (இததரிச னத்தாலாகிய இன்பத்தை நோக்கும்போது) முத்தி இகழப்படும் என்று—அரனது எழுச்சிக்கு வந்து,—சிவபெருமானுடைய திரு வெழுச்சிக்கு வந்து,—சேர் அகம் அங்கு அகறா - (தங்களை) அடைந்த பாவம் அங்கே நீங்கும்படி—அலர் தடம் அமுதம் தரு குழி மேவி ஆடி - (பொற்றாமரைகள்) அலர்கின்ற சிவகங்கையை யும்முத்தியைக் கொடுக்கின்ற பரமானந்தகூபத்தையும் அடைந்து ஸ்நானஞ்செய்து,—விழி புனல் கொண்டிட்டுப் பழிச்சி - கண்

களினின்றும் நீர்த்தாரைகொண்டு துதித்து,—திகழ் அஞ்சலிக் கையொடு - விளங்குகின்ற அஞ்சலியத்ததோடு—மிகும் மங் கல அணி சேவித்து - மிக்க மங்கலமாகிய திருவிழாச் சிறப் பைச் சேவித்து,—கடல் வழி கோடித்தார் - சமுத்திரத்துக்கு எழுந்தருளும் வழியை அலங்கரித்தார்கள். எ - று. (சக)

ஆனைத் திரள்கட லடையக் கருமுகி லணியிற் பொலி வுற வரவஞ்சேர், சேனைத் தொகைநதி யோதத் தினுமிசை திகழப் புயறுயில் பயிறாழைக், கானத் திடையெழு காலு ய்த் தனவிழு கைதைத் துகள்வழை யெய்தக்குத், தேனக் கனவன மானப் பொழிமழை சேறும் வகைதரு திருவீதி.

இ - ள். ஆனைத் திரள் கடல் அடையக் கரு முகில் அணி யிற் பொலிவு உற - (திருப்பவனிக்கு முனை சென்ற) யானைக்கூட் டம் சமுத்திரத்தை அடைந்தபொழுது கரிய மேகபந்திபோலப் பொலிய,—அரவம் சேர் சேனைத் தொகை நதி ஓதத்தினும் இசை திகழ - ஒலி பொருந்திய காலாட்கூட்டம் ஆற்றுவெள்ளத் தினும் ஒலியினால் விளங்க,—புயல் துயில் பயில் தாழைக் கான த்திடை எழு கால் உய்த்தன விழு கைதைத்துகள் வழை எய்த- மேகங்கள் நித்திரை செய்கின்ற தாழைக்காட்டில் எழுகின்ற காற்றினாலே தள்ளப்பட்டனவாய் விழுகின்ற தாழம்பூவினீறு கள் சுரபுன்னைகளின் பூங்கொத்தைப் பொருந்த,—அக் கன வனம் மானக் குப் பொழி தேன் மழை - அம்மேகத்தின் நீர்போ லப் பூமியிலே பொழிகின்ற தேன்மழையினாலே—சேறு ஆம் வகை தரு திரு வீதி - சேறுகுந்தன்மையைத் தருகின்ற திருவீதி யிலே. எ - று. (சஉ)

கொத்தார் மலரளி குலவும் புள்ளொலி குழுமித் திசை தொறும் விழிமுத்தத், தொத்தார் துதிவளர் தொண்டத் திரளொடு சூலப் படைதிசை யடைகாவற், பத்தா யுதவுரு

வினர்சூழ் படையொடு பயிறா ரியமிக வுயர்வானோ, ரித்தாரணியின ருடனே விரவிமுன் னேவறகொடுபுடை சேவித்தார்.

இ - ள். கொத்து ஆர் மலர் அளி - திரளாகிய நிறைந்த பூக்களினுள்ள வண்டுகளின் இசையும்—குலவும் புள் ஒலி குழுமி - விளங்குகின்ற பறவைகளின் ஓசையுங்கூட,—திசை தொறும் - திக்குகடோறும்—விழி முத்தத் தொத்து ஆர் துதி வளர் தொண்டத் திரளொடு - கண்ணீராகிய முத்துக்களையுடைய பழமை பொருந்திய தோத்திரங்களை மிகச்செய்கின்ற அடியார் கூட்டத்தோடும்—சூலப்படை திசை அடை காவற பதது ஆயுத உருவினர் சூழ் படையொடு - சிவாஸ்திரத்தையும் (அதனைச் சூழ்ந்து) பத்துதிக்கினும் அடைந்த காவலாகிய தசாயுதருபிகளையும் சூழ்ந்த படைகளோடும்—பயில் தூரியம் மிக - பழகிய வாத்தியஙகள் மிக முழங்க,—உயர் வானோர் இத்தாரணியினருடனே விரவி - உயர்நத தேவர்கள் இப்பூமியிலுள்ள மனிதர்களோடு கலந்து—முன் ஏவறகொடு புடைசேவித்தார் - (தஙகளுக்கு) முன் விதிதத விதியைக் கைக்கொண்டு பக்கஙகளிலே சேவிததார்கள். எ - று. (சஙு)

வருமா தெரிபவ ரெனவான் மிசையெழ வளரா வளைதலை யினதாய்முத், தருமா மணிதிமி னுரைவாழ் சலசரமலையா வரைபுரை திரைமோதிப், பொருமா மிகவிரை தருமா கடலிடை புளினத் தலைதகு வெளியுற்றுத், திருமா லறிவரு பெருமா னணைவகை திகழுஞ் சலபதி யெதிர்கொண்டான்.

இ - ள். வருமா தெரிபவர் என - (சிவபெருமான்) எழுந்தருளிவருதலைக் காண்பவர்போல—வான் மிசை எழ வளரா - ஆகாயத்தின்கண்ணே உயர எழுந்து—வளை தலையினது ஆய் -

வணங்கிய தலையினையுடையதாகி—முத்து அரு மா மணி திமில் றுரை வாழ் சலசரம் அலையா - முத்துக்களையும் அரியபெரிய இரத்தினங்களையும் மரக்கலங்களையும் நுரைகளையும் (தன்னிடத்தே வாழ்கின்ற மீன்களையும் அலைத்துத் தள்ளி—வரை புரை திரை மோதி - மலையைப்போலுந்திரைகளினாலே (கரையை) மோதி—பொருமா மிக இரை தரு மா கடலிடை - பொரும்படி மிக ஒலிக்கின்ற பெரிய சமுத்திரதீரத்துள்ள—புளினத தலை தரு வெளி உற்று - மணற்குன்றினிடத்தே பொருந்திய வெளியைச் சேர்ந்து—திருமால் அறிவு அரு பெருமான் அணை வகை - விஷ்ணுவும் அறிதற்கரிய சிவபெருமான் எழுந்தருளுந்திறத்தை—திகழும் சலபதி எதிர்கொண்டான் - விளங்குகின்ற வருணன எதிர்கொண்டான. எ - று. (௪௪)

கட்டங் கியவொளி தெளியச் சலபதி காணும் பொழுதிடை யடைதுன்பக். கட்டங் கறவருள் சரணங் களிலலை கரமுன் புறவிழ மழுவும்பொற், கட்டங் கமுமுடை யவன்முன் பொலிமலி கடன்மண் டியவவர் களுமாயைக், கட்டங் கழிவுற மிகுமன் பிறையொடு கற்று வெனவருள் பெற்றார்கள்.

இ - ள். சலபதி கண் தங்கிய ஒளி தெளியக் காணும் பொழுது - வருணன் தன்னிடத்தே பொருந்திய ஒளிவடிவாகிய சிவத்தைச் (சகளவடிவமாகத) தெளியும்படி தரிசித்த பொழுது,—இடை அடை துன்பக்கட்டு அங்கு அற அருள் சரணங்களில் - இடையிலே (தன்னை) அடைந்த துன்பத்தை விளைவித்த பந்தம் அங்கே அறும்படி அருளிய திருவடிகளிலே—அலை கரம் முன்பு உற விழ - திரைகளாகிய கைகள் முன்னே பொருந்தும்படி நமஸ்கரிக்க,—மழுவும் பொற் கட்டங்கமும் உடையவன் முன் - மழுவையும் அழகிய கட்டுவாங்கத்தையும் உடைய சிவபெருமான் சந்நிதியிலே—பொலி மலி கடல் மண்டிய அவர்களும் - எழுகின்ற நிறைந்த சமுத்திரத்திலே ஸ்நானஞ்செய்த

அடியார்களும்—மாயைக் கட்டு அங்கு அழிவு உற - மாயாபந்தம் அங்கே அழிய—கற்ற என மிகும் அன்பு இறையொடு அருள் பெற்றார்கள் - கன்றையுடைய பசுப்போல மிக்க கருணையை யுடைய சிவபெருமானிடத்தே திருவருளைப் பெற்றார்கள். எ-று.

குரையார் கடல்குட கரைமே லொளிவளர் குணபா லுளவள னெடுநீளத், திரையார் கரமலி கலனு நவமணி திரண்மா நிதியகி றுகில்சீரை, நரையார் கவரிகள் விரையார் தரு மத நற்பூ நிறைபுனல் கர்ப்பூரம், வரையார் மதகரி நிரையா திகளொடு வாழ்பொற் றிருவடி சூழ்விப்ப.

இ-ள். குரை ஆர் கடல் குட கரை மேல் - ஒலி நிறைந்த சமுத்திரத்தினது மேலைக்கரையின்மேலே—ஒளி வளர் குண பால் உள வளன் - ஒளி வளர்கின்ற கீழைக்கரையிலுள்ள வளங் களை—நெடு நீளத் திரை ஆர் கரம் - மிக நெடுமையையுடைய திரைகளாகிய நிறைந்த கைகளினாலே—மலி கலன் ஆம் - நிறைந்த மரக்கலங்களினிடத்தனவாகிய—நவமணி - நவரத்தி னங்கள்—திரள் மா நிதி - திரண்ட பெரியபொன்—அகில் - அகிற்கட்டைகள்—துகில் - பட்டுக்கள்—சீரை - வஸ்திரங்கள்— நரை ஆர் கவரிகள் - வெண்மை பொருந்திய சாமரங்கள்—விரை ஆர் தரு மதம் - மணநிறைந்த கஸ்தூரி—நற்பூ - நல்ல குங்கு மப்பூ—நிறை புனல் - நிறைந்த பனிநீர்—கர்ப்பூரம் - கருப்பூ ரம்—வரை ஆர் மதகரி நிரை ஆதிகளொடு - மலைபோலப்பொருந் திய மதயானைநிரைகள் முதலியவற்றோடு—வாழ் பொற்றிருவடி சூழ்விப்ப - எங்கும் நிறைந்த பொன்போலுந திருவடிகளிலே (வருணன் காணிக்கையாக) இட. எ - று. (சகூ)

பாசத் தளையறு துறையுற் றிமையவர் படியிற் படிபவ ருடனாடிப், பூசற் றொழில்புரி திரைநற் பொலிவுயர் புளினத் தலைதரு வெளியுற்றுத், தேசத் தவரொலி கடலிற் பொலி

யொலி சின்னத் தொலிதிசை மன்னச்சீர், வாசப்பொழிலிடை
யாறிக் கணபர்கள் வானோ ரொடுகழி வழிவந்தான்.

இ - ள். பாசத்தளை அறு துறை உற்று - பாசபந்தமறுத்த துறையைப் பொருந்தி;—இமையவர் படியிற் படிபவருடன் ஆடி - தேவர்களோடும் பூமியிற்பொருந்திய மனிதர்களோடும் திருமஞ்சனஞ்செய்தருளி,—பூசற்றொழில் புரி திரை நற்பொலிவு உயர் புளினத் தலை தகு வெளி உற்று - பொருதற்றொழிலைச் செய்கின்ற திரைகளினாலே நல்ல பொலிவோடும் உயர்ந்த மணற் குன்றினிடத்தே பொருந்திய வெளியை அடைந்து,—தேசத்தவர் ஒலி - தேசத்தவர்களுடைய ஓசையும்—கடலிற் பொலி ஒலி - சமுத்திரத்தின் மிக்க ஓசையும்—சின்னத்து ஒலி - திருச்சின்னங்களினோசையும்—திசைமன்ன - திக்குகளைப் பொருந்த,—சீர் வாசப் பொழிலிடை ஆறி - சிறப்புப் பொருந்திய மணத்தையுடைய பூஞ்சோலையினிடத்தே ஆறி,—கணபர்கள் வானோரொடு கழி வழி வந்தான் - கணநாதர்களோடும் தேவர்களோடும் கழிவழியாக எழுந்தருளிவந்தார் சிவபெருமான. எ - று. ()

அன்றன் றலைகடல் வளனங் களவில படிகொண் டடியிணை தொழுதன்பா, லின்றென் றிடவர மென்றும் பெற வர மிறைதா வெனவிரை வுடனெய்தி, மின்றங் கியகழ றுதிகொண் டருளொடு விரவுஞ் சலதி விடைகொண்டான், புன்றண் கதிர்மதி புனையும் பரன்மிகு பொன்னம் பலமத னுள் புக்கான்.

இ-ள். அன்று அன்று அலை கடல் வளன் அங்கு அளவு இல கொண்டு - அப்போதப்போது அலைகின்ற சமுத்திரத்திலுள்ள வளங்களை அங்கே அளவில்லாத பிரகாரங்கொண்டு வந்து—அடி இணை தொழுது - (கழிக்கரையிலே காணிக்கையாக இட்டுத) திருவடிகளிரண்டையும் வணங்கி,—இறை - எம்பெருமானே—இன்று என்றிட என்றும் அன்பால் வரம் பெற - இந்த

மாசிமகம்போல எந்த மாசிமகத்தினும் அடியேனும மற்றையடி யார்களும் அன்பினேடும் (இவ்வாறே) வரம்பெறும்பொருட்டு—வரம் தாஎன - வரந்தருளும் என்று விண்ணப்பஞ்செய்து,—விரைவுடன் எய்தி - (அவ்வரத்தைச்) சடிதியிற்பெற்று,—மின் தங்கிய கழல் துதிகொண்டு - ஒளிபொருந்திய திருவடிகளைத் துதித்து,—அருளொடு விரவும் சலபதி விடைகொண்டான் - திருவருளோடு கூடிய வருணன விடைகொண்டு மீண்டான;—தண் கதிர்ப் புன்மதி புனையும் பரன - குளிர்மையாகிய கிரணத்தை யுடைய பாலசந்திரனை அணிந்த சிவபெருமான்—மிகு பொன் அம்பலமதனுள் புக்கான் - மிக்க கனகசபையினுள்ளே புகுந்தருளினார். எ - று. (௪௮)

என்றென் றிகழ்வறு மாதந் தருதினம் யாவும் புகழ்
விழ வெழவாழ்வுற் றொன்றும் புலிமுனி யுரகந் தருதவ
னொளிருங் கனகம துருவாகி, முன்றங் கியபுர வலனங்கிகள்
வளர் மூவா யிரவர்க ளேடாரு, மன்றங் கியதிரு மன்றந்
தொழுதுவ ரந்தான் விரவ விருந்தார்கள்.

இ - ள். என்று என்று - இப்படி இப்படி—இகழ்வு அறு மாதம் தரு தினம் யாவும் - குற்றமற்ற மாசநக்ஷத்திரங்களெல்லாவற்றினும்—புகழ் விழவு எழ - புகழப்படுகின்ற திருவிழாக் கொண்டருள,—வாழ்வு உற்று ஒன்றும் - வாழ்வைப் பொருந்தி ஒருப்பட்ட—புலிமுனி - வியாக்கிரபாதமகாமுனிவரும்—உரகந் தருதவன் - பதஞ்சலிமகாமுனிவரும்—ஒளிரும் கனகமது உரு ஆகி முன் தங்கிய புரவலன் - விளங்குகின்ற பொன்வடிவமாகி முனனே பொருந்திய இராசாவும்—அங்கிகள் வளர் மூவாயிரவர்கள் - அக்கினிகளை வளர்க்கின்ற மூவாயிர முனிவர்களும்—தே ஆரும் மன் தங்கிய திரு மன்றம் தொழுது - தெய்வத்தன்மை நிறைந்த சிவபெருமானை பொருந்திய திருச்சபையை வணங்கிக் கொண்டு—வரந்தான் விரவ இருந்தார்கள் - மேன்மைபொருந்த இருந்தார்கள். எ - று. (௪௯)

ஈரா றுயிருடன் மூவா றமரு மெழுத்துப் புகன்முதல் விரியென்றுந், தாரா தரமென வுலகோர் பலகலை தருமா விர ணிய வருமாமுற், சீரார் தரவரு திருநாள் படிமுதல் சில நாள் வழிசெல மிகநவ்விக், கூரார் படையின னருளா லரசர் கள் கொண்டா டிடுநெறி கண்டார்கள்.

இ - ள். ஈராறு உயிர் மூவாறு உடல் அமரும் எழுத்துப் புகல் முதல் விரி - பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யுமாகப் பொருந்திய எழுத்துக்களாலாகிய சொற்கள் முதலியவற்றினால் (ஆதியில்) விரித்துச் செய்யப்பட்ட நூல்கள்—என்றும் தார ஆதரம் என - எக்காலமும் மேலாகிய மூலமாயிருக்க—உலகோர் பல கலை தருமா - (பிற்காலத்துள்ள) பெரியோர்கள் (பின்னும்) பல நூல்களைச் செய்தல்போல,—முன் இரணியவருமாச் சீர் ஆர் தர வரு திரு நாள் படி முதல் - ஆதியில் இரணியவன்மராலே அழகு பொருந்த நடத்தப்பட்டு வந்த திருநாட்களும் படித்தரங்களும் மூலமாயிருப்ப,—சில நாள் வழிசெல - சிலகாலம் முறைமையோடு சென்றபின்,—நவ்விக் கூர் ஆர் படையினன் அருளால் - மானையும் கூர்மை பொருந்திய மழுப்படையையுமுடைய சிவபெருமானது திருவருளினாலே—அரசர்கள் கொண்டாடிடும் நெறி மிகக் கண்டார்கள் - (பிற்காலத்துள்ள) அரசர்கள் (யாவரும்) கொண்டாடும்வண்ணம் (பின்னும் திருநாட்களையும் படித்தரங்களையும்) மிகுதியாக நடத்தினார்கள். எ - று. (௫௦)

சொற்று னுமைபொரு ளரனை மிகுபொரு டுணிவாலவரு டொகுமாவிப், பொற்று மரைமலர் விரைசூழ் புனலணி புலியூர் வளநகர் புகழ்தாமங், கற்று ருரைசெயல் பெற்றுர் செவிகொடு கவர்வார் பொருள்விரி பகர்வார்சீ, ருற்றுரிருவினை யற்றுர் மிகுபரி வுடையார் திருவடி யடைவாரே.

இ - ள். சொற்றான் உமை பொருள் அரனு மிகு பொருள் துணிவால் - சொல் உமாதேவியும் பொருள் சிவபெருமானுமாக நிச்சயிக்கப்பட்ட மிக்க பொருட்டுணிவினாலே—அவர் அருள் தொகும் - அவர்களுடைய திருவருள் (இந்நூலின்கண்ணே) பொருந்தும்,—(ஆதலினாலே)—பொற்றாமரை மலர் விரை சூழ் புனல் அணி - பொற்றாமரைப்பூக்களின் மணம்பரந்த சிவகங்கையினால் அலங்கரிக்கப்பட்ட—புலியூர் வளநகர் புகழ் இத்தாமம் கற்றார் - வியாக்கிரபுரமென்னும் வளத்தையுடைய திருப்பதியைப் புகழும் இப்பாமாலையைப் படித்தவர்களும்—உரை செயல் பெற்றார் - வாசித்தற்றொழிலைப் பெற்றவர்களும்—செவி கொடு கவர்வார் - காதினாலே கேட்போர்களும்—பொருள் விரி பகர்வார் - பொருளை விரித்துச் சொல்வோர்களும்—சீர் உற்றார் - செல்வத்தை அடைந்தோராவர்கள்,—இருவினை அற்றார் - (நல்வினை தீவினை என்னும் இருவினைகளையும் நீங்கினோராவர்கள்,—மிகு பரிவு உடையார் - மிக்க அன்பையுடையோராவர்கள்,—திருவடி அடைவார் - திருவடிகளை அடைவர்கள். எ - று. (௫௧)

செடிசேர் பொழிலணி புலியூர் வளநகர் செல்வம் பெருகுக திருமன்றிற், கொடிசேர் விடையின னடிசே ரொளிதெளி குறிகூ டுகசுழு மறைசூழ்க, பொடிசேர் வடிவின ரடிசேர் முடியினர் புனல்சே ரிருவிழி யினராகி, யடியே னெனதுய ரகல்கூ டிடுநெறி யாள்வா னடியவர் வாழ்வாரே.

இ - ள். செடி சேர் பொழில் அணி புலியூர் வள நகர் செல்வம் பெருகுக - செடிகள் பொருந்திய சோலைகளினாலே அலங்கரிக்கப்பட்ட சிதம்பரமென்னும் வளத்தையுடைய திருப்பதியிலே செல்வம் தழைக்கக்கடவது;—திரு மன்றில் கொடி சேர் விடையினன் அடி சேர் ஒளி தெளிகுறி கூடுக-திருச்சபையின்கண்ணே நடித்தருள்கின்ற கொடியிலே பொருந்திய இடபத்தையுடைய சிவபெருமானுடைய திருவடியிலே பொருந்திய ஒளியைத் தெளி

யும் ஞானம் சித்திக்கக்கடவது;—சூழ்மறை சூழ்க - கூட்டமாகிய வேதங்கள் பரவக்கடவன;—பொடி சேர் வடிவினர்-விபூதியணிந்த திருமேனியையுடையவர்களும்—அடி சேர் முடியினர் - திருவடிகள் பொருந்தின தலையையுடையவர்களும்—புனல் சேர் இரு விழியினர் ஆகி - நீர் பொருந்திய இரண்டு கண்களையுடையவர்களுமாகி—அடியேன் என துயர் அகல் கூடும் நெறி ஆள்வான் அடியவர் வாழ்வார் - அடியேனாகிய என்னுடைய துன்பங்கள் நீக்கத்தைப் பொருந்தும்படி ஆண்டருளுஞ் சிவபெருமானுடைய திருத்தொண்டர்கள் வாழக்கடவர்கள். எ - று. (ருஉ)

வேறு.

மழைவ ழங்குக மன்னவ னோங்குக
பிழையில் பல்வளனெல்லாம பிறங்குக
தழைக வஞ்செழுத் தோசை தரையெலாம
பழைய வைதிக சைவம பரக்கவே.

இ-ள். மழை வழங்குக - மழை பெய்யக்கடவது;—மன்னவன் ஓங்குக - அரசன் ஓங்கக்கடவன;—பிழை இல் பல்வளன் எல்லாம் பிறங்குக - குற்றமில்லாத பலவகைப்பட்ட வளங்களெல்லாம் விளங்கக்கடவன;—அஞ்செழுத்து ஓசை தழைக - ஸ்ரீபஞ்சாக்ஷரத்தினொலி தழைக்கக்கடவது;—தரை எலாம் பழைய வைதிக சைவம் பரக்க - பூமியெங்கும் பழைய வைதிக சைவமார்க்கம் பரவக்கடவது. எ - று. (ருங)

திருவிழாச்சருக்கமுற்றிற்று.

ஆ செய்யுள் - சகரு.

# கோயிற்புராணவுரை முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேவன் திருவடிவாழ்க.

திருவிழாச்சருக்கத்தில் இருபத்தெட்டாஞ் செய்யுளில் தினகரன் முதலோர் கிழமை நண்ணிக் கொள் நலம் ஆர் நவமணி என்பதற்குப் பானுவார முதலிய ஏழுவாரத்திலும் பொருந்தி ஆராய்ந்து கொள்ளப்படும் நன்மை பொருந்திய நவரத்தினங்கள் எனப் பொருள் கூறலும் ஒன்று.

மாணிக்கம், முத்து, பவளம், மரகதம், புருடராகம், வச்சிரம், நீலம், கோமேதகம், வைடூரியம் என்னும் நவரத்தினங்களுள்ளும் மாணிக்கமுதலிய ஏழும் முறையே பானுவார முதலிய ஏழு வாரங்களிலும் பரீக்ஷிக்கற்பாலன. கோமேதகம் பானுவாரத்திலும், வைடூரியம் சோமவாரத்திலும், பரீக்ஷிக்கற்பாலன.

டாக்டர் உ. வே. சா. நூல்நிலையம்,
20826
சென்னை-90.